## அர்ப்பணம்...



இலங்கை வானொலி மற்றும் தமிழன் தொலைக்காட்சியில் அளித்த தேவச்செய்திகளை மீண்டும் புத்தகமாக வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகிறோம். இச்செய்திகள் தொடர்ந்து வெளிவர காரணமாயிருந்தவர் சகோதர் J.C.Choate அவர்கள். லட்சக்கணக்கானோர் இச்செய்தியைக் கேட்டு, பார்த்து பயனடைந்து வருகின்றனர். வேதமாணவர்கள், சபைபோதகர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் 'தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழின் வாசகர்கள் இச்செய்திகள் புத்தகமாக வெளிவரவேண்டுமென தொலைபேசி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும், கேட்டுக்கொண்டனர். ஆகையால் 60 தலைப்புச்செய்திகள் அடங்கிய Vol.3 புத்தகத்தை வெளியிடுவதில் சந்தோஷப்படுகிறோம்.

வானொலி சேவை ஆசிய முழுமைக்கும் சென்றடைகிறது. தற்போது உலக முழுமையும் கண்டு, கேட்கும் அளவிற்கு Internet வளர்ந்திருக்கிறது. மேலும் எமது Website மூலமாக 24 மணிநேரமும் உலகத்தின் எந்த பகுதியில் இருந்தாலும் செய்திகளைப் பார்க்கவும், கேட்கவும், முடியும். அதற்காக கர்த்தரை துதிக்கிறோம். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற பல வாசல்கள் திறக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அவைகளை பயன்படுத்தி தேவனை அறிகிற அறிவில் வளருவோம்.

"தேவன் அருளிய செல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" 2கொரிந்தியர் 9:15

கடந்த பலவருடங்களாக எங்களை கர்த்தர் எடுத்து பயன்படுத்தி வருகிறார். நமது வானொலிச் செய்திகள் வெளிவரும் இலங்கை கொழும்பு பகுதயில் உள்ள கிறிஸ்துவின் சபையில் செய்தி கொடுக்கவும், சகோதரி Linani குடும்பத்தை சந்திக்கவும் வாய்ப்பு கிடைத்தது. தேவம் நாம மகிமைப்படும்படி இப்புத்தகத்தை உங்களுக்கு அர்ப்பணிக்கிறோம். மற்றவர்களுக்கும் இப்புத்தகத்தை கொடுத்து உதவுங்கள். சத்தியத்தை அறிந்து கர்த்தருக்குள் வளருங்கள்.

ஆண்டவரின் பணியில்,
***B.Arjunan & Glory***


Order From
World Literature Publications
P.O.Box.5, Batlagundu -624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Website:thewordofchristindia.com
Our Phone:04543 263278,Mobile :9443558041

Sharon Print System, Madurai -2 Phone 98421-33357


ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2007 - 2008

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

# கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

## 2007 - 2008




செய்தியாளர்
B.அர்ஜுனன்

Published by
The Word of Christ

Vol.3

# THE WORD OF CHRIST

God's Message of Radio & Television is
Presented by
Church of Christ
2007 -2008

Preacher
**B.ARJUNAN**

Published by
**THE WORD OF CHRIST**

Copyright:2014
The Word of Christ Publications
First Printing, Tamilnadu -2014
This Printing -1000 Copies

# பொருளடக்கம்

1 ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் – Take Heed That Ye Despise Not Any One
2. மாதிரி – Example
3. பிரிவினை – Division
4. யாக்கோபு & லாபான் – Jacob & Laban
5. கிறிஸ்துவின் உண்மையான ஊழியன் – A Faithful Minister of Christ
6. கிறிஸ்து முழு அதிகாரம் படைத்தவர் – Christ Has Whole Power
7. கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான் – Blessed is that man who makes the Lord his trust
8. தூற்றுக்கூடை – Winnowing Fan
9. ஓ, தாகமாயிருக்கிறவர்களே! – O, Ye Thirsty!
10. நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் – I`ll Rejoice In The Lord
11. ஆரம்பம் – Beginning
12. எதைப்பார்க்கப் போனீர்கள்? – What Did You Go Out To See?
13. நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை – Remember Your Creator In The Days Of Your Youth
14. சமாதானம் – Peace
15. ஆவியிலே அனலாயிருங்கள் – Be Fervent In Spirit
16. அறியாமையுள்ள காலங்கள் – The Times of Ignorance
17. ஆறுதலின் தேவன் – God of Comfort
18. உன் வாயை விரிவாய்த்திற – Open your Mouth Wide
19. இயேசு கிறிஸ்து மாறாதவராயிருக்கிறார் – Jesus Christ is the Same
20. இயேசு மேன்மையுள்ளவர் – Jesus Is Preferred
21. திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் – Desire the sincere milk of the word
22. புதிய வானம் புதிய பூமி – New Heaven and New Earth
23. வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறீர்கள் – Ye do err, not knowing the scriptures
24. கொடிய வஞ்சகம் – Strong delusion
25. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது – Our sufficiency is of God
26. உலகம் – The world
27. முதல்வர் – Pre-emi`nent
28. அவர் உன்னை ஆதரிப்பார் – He Shall Sustain Thee
29. அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே – Add Thou Not Unto His Words

30. மேன்மையான உயிர்த்தெழுதல் – Better Resurrection
31. தேவனுடைய நாமம் – The Name of God
32. விக்கிரகம் – Idol
33. கிறிஸ்தவனும் உயிர்த்தெழுதலும் – A Christian And The Resurrection
34. எல்லாம் புதிதாயின – All Things Have Become New
35. எல்லோருக்கும் இரட்சிப்பு – Salvation To All
36. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன்– God Who Calls Those Things Which Be Not As Though They Where
37. கிறிஸ்துவுக்குள் வெற்றி – Triumph In Christ
38. எங்களுக்கு என்ன கிடைக்கும்? – What Shall We Have?
39. ஒத்தவேஷந்தரியாதிருங்கள் – Do Not Be Conformed
40. நல்லது – Good
41. தேவ பக்தியின் இரகசியம் – The Mystery of Godliness
42. நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்கள் – We Are Members of His Body
43. உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள் – Possess Your Souls
44. உன் தேவனை அறிந்துகொள் – Know Thy God
45. நியாயப்பிரமாணம் – கிருபையும், சத்தியமும் – The Law - Grace and Truth
46. விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது – Faith is Tested
47. நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம் – Why We are the Members in the Church of Christ
48. மகா பெரிய தீர்க்கதரிசி – A Great Prophet
49. இயேசு மனதிரக்கமுள்ளவர் – Jesus Is Compassion
50. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஏழுவிதமான ஆசீர்வாதங்கள் –Seven Blessings for Those Who are In Christ
51. காலை, மாலை, மதியம் – Evening, Morning, and Noon
52. என்னைப்போலாகுங்கள் – Become Like Me
53. ஆத்துமாக்களுக்கு மேய்ப்பர் – Overseer of Souls
54. பாவமும் அதன் விளைவும் – Sin and It`s Consequences
55. முதலிடம் யாருக்கு? – To Whom The First Place?
56. பாரம்பரியம் நம்மை இரட்சிக்குமா? – Will Tradition Save Us?
57. தேவன் நம்மை விட்டு ஏன் விலகுகிறார்? – Why Does God Leave Us?
58. நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? – Who Do You Say That I Am?
59. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் – Resist The Devil
60. நீதியின் கிரீடம் – The Crown Of Righteousness

# 1. ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்
## Take Heed That Ye Despise Not Any One

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உன்னதத்தின் குமாரன் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Take heed that ye despise not any one. ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மற்றவர்களை அற்பமாய் எண்ணுகிற கூட்டம் உலகத்தில் அநுதினமும் பெருகிக்கொண்டே வருகிறது. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மெல்லோரையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார். மனிதனோ அநேக உபாயதந்திரங்களை தேடிக்கொண்டு மனிதனுக்கு மனிதன் விரோதமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட மனிதனை சரிசெய்ய கன்னியின் வயிற்றில் உருவாகி மனித குமாரனாக, ஆண்டவராகிய இயேசு பெத்லகேமில் வெளிப்பட்டார். "மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார்" என பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறது (மத்.18:11).

ஒரு வீட்டில் உள்ள பெற்றோரை நாம் கவனித்துப் பார்ப்போமேயானால் அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளை பராமரிக்கும் விதத்தை அறிந்து கொள்ளலாம். ஒரு பிள்ளை அழகுள்ளதாக இருக்கலாம் மற்றொருபிள்ளை அழகில்லாமலோ அல்லது ஊனமாகவோ இருக்கலாம் அப்படியிருப்பதற்காக அந்த பெற்றோர் அப்பிள்ளையை வித்தியாசமாகவோ அல்லது அற்பமாகவோ எண்ணமாட்டார்கள் ஏனென்றால், அது அவர்களுடையபிள்ளை. அதைப்போல, நாமெல்லோரும் தேவனுக்குப் பிள்ளைகளாக இருக்கிறோம். நம்மை வேறொருவர் அற்பமாய் எண்ணுவதை கர்த்தர் விரும்பவில்லை. ஆகவே "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரம பிதாவின் சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.18:10). இவ்வசனத்தை கேட்கும்போது நமக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. இந்த உலகத்தில் நம்மை மற்றவர்கள் கண்டு கொள்கிறார்களோ இல்லையோ நம்மை நேசித்து நம்மில் அன்பு கூர்ந்து, தேவன் நமக்காக ஒரு தூதனையே காரியனாக ஏற்படுத்தி உள்ளார். இப்பேர்பட்ட தேவன் நமக்கு மட்டுமல்ல

நம்மைப்போல மாம்சத்தில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்தி உள்ளார். ஆகையால் தான் இந்தச்சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார்.

"ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (லூக்.16:19–23). இச்சம்பவத்தில் அற்பமாய் எண்ணப்பட்ட லாசரு என்பவன் ஐசுவரிய வானுடைய மிச்சமீதியை சாப்பிட ஆசையாய் இருந்த ஒரு தரித்திரன். 'அவனோ' தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான். அன்பானவர்களே, நாம் அநேகரைப் பார்த்து அற்பமாக எண்ணியிருக்கிறோம். பிச்சைக்கார நாயே என்றுகூட திட்டியிருக்கிறோம். இல்லையா? அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகில் உண்டு என வேதம் நமக்கு போதிக்கிறது. ஐசுவரியவானைப்போல பாதாளத்திற்கு போகாமலிருக்க மற்றவர்களை அற்பமாய் எண்ணாதிருப்போம்.

இயேசுவை ஒரு முறை சமாரியருடைய கிராமத்தார் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்களாகிய யாக்கோபும் யோவானும் "ஆண்டவரே, எலியா செய்தது போல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப்பார்த்து நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" என்றார் (லூக்.9:54–56). மூன்றரை வருடங்களாக ஆண்டவருடைய உபதேசங்களைக் கற்றுக் கொண்டிருந்த சீஷர்களே, தங்களை ஏற்றுக் கொள்ளாத மக்களை உடனே அழிக்க வேண்டும் என்று நினைத்தனர். நாமும் சில சமயங்களில் இப்படித்தான் கீழ்ப்படியாத மக்களை தேவன்



அழித்துப்போட்டால் நலமாயிருக்கும். அப்பொழுதாவது அவர்கள் விசுவாசிப்பார்கள் என்று நினைக்கிறோம். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கூறுகிறார்.

ஒரு முறை இயேசு எரிகோவுக்கு சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான். ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான். நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது, அவன், இயேசுவே தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார். அவன் கிட்ட வந்தபோது, அவர் அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ பார்வையடைவாயாக உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப்படுத்திக்கொண்டே, அவருக்குப் பின் சென்றான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள். இந்தக் குருடன் எப்படிப் பார்வையடைந்தான்? அவனுடைய விடாமுயற்சி, எப்படியாவது இயேசுவை சந்திக்க வேண்டும், அவரிடம் தன்னுடைய தேவையை தெரியப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம். ஜனங்களோ அவனைத் தடை செய்தார்கள். ஏன் தடை செய்தார்கள்? ஒரு வேளை அவனை அற்பமாய் எண்ணி தடை செய்திருக்கலாம். அவனோ அதிக சத்தமாய் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட ஆரம்பித்தான். இயேசு நின்று அவன் பார்வையடையும்படி செய்தார்.

இந்த உலகத்தார் உங்களை அற்பமாக எண்ணலாம். ஆனால் உங்களை உண்டாக்கின ஆண்டவராகிய இயேசு ஒருபோதும் உங்களைப் புறம்பே தள்ளுவதில்லை. அவர் மூலமாய் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குச் செய்வார். ஆகையால் யார் உங்களை தடை செய்து புறம்பே தள்ளினாலும் மனம் தளராமல் மேற்கண்ட குருடனைப்போல உங்கள் சத்தத்தை அதிகப்படுத்துங்கள், உங்கள் நம்பிக்கையை கிறிஸ்துவின் மீது வையுங்கள். அப்பொழுது உங்களை விசாரிக்கிற தேவனாகிய கர்த்தர் உங்களை எல்லா

இக்கட்டிலிருந்தும் விடுதலை செய்வார். சிலர் தங்களை நீதிமான்களென்றும் மற்றவர்களை பாவிகள் என்றும் எண்ணி அற்பமாய் நினைப்பார்கள். இதைக் குறித்து இயேசு ஒரு உவமையைச் சொன்னார். ''இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள். ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான்'' என்றார் (லூக்.18:10–14). பரிசேயன் தன்னைத்தான் பெருமையடித்துக் கொண்டு தேவாலயத்தில் ஜெபித்தான் அது மட்டுமல்லாது அங்கே வந்து ஜெபித்துக் கொண்டிருந்த ஆயக்காரனை அற்பமாக நினைத்து ஜெபித்தான். இந்த ஜெபத்தைக் கேட்ட தேவன் பரிசேயனை ஆசீர்வதிக்கவில்லை ஆயக்காரனையே ஆசீர்வதித்தார் என பார்க்கிறோம். நாம் மற்றவர்களை அற்பமாக எண்ணும் போது நம்முடைய ஜெபம், நாம் செய்த நன்மைகள் எல்லாம் ஒன்றுமில்லாமல் போய் விடும். ஆகவே இச்சிறியரில் ஒருவனையும் அற்பமாக எண்ணாதிருப்போம்.

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். இளையமகன் தன் தகப்பனுடைய ஆஸ்தியை பங்கிட்டு வாங்கிக் கொண்டு போய் துன்மார்க்கமாய் வாழ்ந்து எல்லாவற்றையும் அழித்துப் போட்டு பின்பு மனந்திரும்பி வந்தான். அவனை அவனுடைய தகப்பன் அன்போடு ஏற்று அவனுக்கு வஸ்திரம் தரித்து விருந்து செய்தான். அதை அறிந்த மூத்த மகன் கோபமடைந்தான். ''அதற்குத் தகப்பன்: மகனே நீ எப்பொழுதும் என்னோடிருக்கிறாய் எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது உன் சகோதரனாகிய இவனோ, மரித்தான் திரும்பவும் உயிர்த்தான் காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான். ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே என்று சொன்னான்''



(லூக்.15:31,32). ஆண்டவர் கூறும் இந்த உவமையிலே கூட கெட்டவன் கெட்டுப்போய் அழிந்தான் என்று கூறாமல் அவன் மனந்திரும்பி தகப்பனிடம் வந்தான் என்று கூறுகிறார். ஆம் பிரியமானவர்களே, நாம் எப்பேர்ப்பட்ட பாவியாக இருந்தாலும் நம்மை மன்னித்து ஏற்றுக் கொள்ள நம் தேவனாகிய கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் மனந்திரும்பி குணப்படுவீர்களா?

இச்செய்தியை கேட்கும் எனதருமை சகோதரனே, சகோதரியே ''இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தமல்ல'' (மத்.18:14). ஆகவே இப்பூமியில் உள்ள ஒருவனையும் அற்பமாக எண்ணாது நம்மால் முடிந்த உதவிகளை செய்து எல்லாரோடும் சேர்ந்து தேவனைத் துதித்து, அவர்களும் இரட்சிக்கப்பட பாடுபடுவோம்.

**கேள்வி நேரம்**

**மற்றவர்களுக்கு ஆசீர்வாதக்குறைச்சல் உண்டென்று கண்டு அவர்களை அற்பமாய் எண்ணலாமா?**

அப்படி எண்ணின ஒரு சகோதரியை பற்றி நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட அடிமைப்பெண் ஆகார் தன் நாச்சியாரைப்பார்த்து அற்பமாய் எண்ணினாள். ஆகையால் சாராய் ஆபிராமை நோக்கி: எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்; என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள்'' (ஆதி.16:5). அன்பானவர்களே, இந்த ஆகார் தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். ஆனால் இந்த ஆகாரின் சந்ததியை கர்த்தர் தெரிந்துகொள்ளவில்லை. மாறாக சாராளின் சந்ததியையே தேவன் தெரிந்துகொண்டு ஆசீர்வதித்தார். அற்பமாக எண்ணப்பட்டவள் ஆசீர்வதிக்கப்பட்டாள் என்று காண்கிறோம். பவுல் பிலிப்பிய சபையாருக்கு சொல்வதைப்போல ''ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்'' (பிலி.2:3) என்ற வசனத்தின்படி மேன்மையாக எண்ணுவோம்.

**"செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்;**
**துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப் பாழாக்கும்"**
**நீதிமொழிகள் 11:3**

## 2. மாதிரி – An Example

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தம்முடைய மாதிரியைப் பின்வைத்துப்போன நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

An example. மாதிரி. எந்த ஒரு காரியத்தை செய்வதற்கும் ஒரு மாதிரிப்படிவம் அவசியமாயிருக்கிறது. அதைப்போல, நாம் தேவனை ஆராதிப்பதற்கும், திருச்சபையை நிலைநாட்டுவதற்கும் அதற்குரிய மாதிரிபடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அது எதுவென்றால் பரிசுத்தவேதாகமம் ஆகும். ''பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றினதேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' (எபி.1:1,2). இக்கடைசி நாட்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலம் உலகத்தை இரட்சிக்க தேவன் திட்டமிட்டு பாவத்தைப் போக்கும் பலியாக அவரை சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். ''கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்'' என பேதுரு எழுதுகிறார் (1பேது.2:21). கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை. ஆக, கிறிஸ்துவே எல்லாருக்கும் எல்லாமுமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் பிறப்பு முதல் மரணம் வரை தம்மைத்தாமே தாழ்த்தி அதாவது அவர் மனுஷ குமாரனாக இருந்து பல பாடுகள் பட்டு நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரும் அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து தேவசித்தம் செய்ய வேண்டும். ''என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்கிறார். ஆகையால் இயேசு இல்லாமல் நமக்கு இரட்சிப்பு இல்லை.

முற்பிதாக்களின் காலத்தில் அக்கிரமம் பூமியில் பெருகினபோது, கர்த்தர் மனஸ்தாபப்பட்டு அப்பொழுது இருந்த உலகத்தை ஜலப்பிரளயத்தினால் அழிக்க திட்டமிட்டார். அந்த பொல்லாத நாட்களில் தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்த நோவாவை நோக்கி: ''நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை



உள்ளும் புறம்புமாகக் கீழ்பூசு'' என்றார் (ஆதி.6:14). நோவா, தேவன் தனக்கு கட்டளையிட்ட மாதிரியின்படியே பேழையை செய்து தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றிக் கொண்டான். அதைப்போல வானத்துக்கு ஏறி இறங்கின ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளின் மாதிரியை எடுத்துக் கொள்வோமென்றால் நோவாவைப்போல நாமும் நம்மைச் சார்ந்தவர்களும் காக்கப்படுவோம்.

மோசேயின் காலத்தில் தேவன் அவர்கள் நடுவிலே வாசம்பண்ண, நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக என்றார். அந்தப்படியே மோசே செய்து ஆசரிப்பு கூடாரத்தை உண்டாக்கினான். இன்றைய காலகட்டத்தில் இருக்கிற திருச்சபை இவ்விதமாக தேவன் கொடுத்த மாதிரிப்படி கட்டப்படுகிறதா என பார்க்கவேண்டும். இன்று யார் மூலமாக, யாரைவைத்து, தேவன் சபையை கட்டுகிறார். ''மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' (மத்.16:18). மேலும் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். மேற்கண்ட நோவா, மோசே போன்றவர்கள் அக்காலத்தில் தேவன் தங்களுக்குக் கொடுத்த மாதிரியின்படியே அவருடைய வேலையை செய்தார்கள். இன்று வாழ்கின்ற நமக்கு கிறிஸ்துவானவரை தேவன் முன்குறித்து, அவரை நமக்கு முன் மாதிரியாக வைத்துள்ளார். ஆகையால் ''இவர் என்னுடைய நேச குமாரன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று'' என்று லூக்.9:35–ல் வாசிக்கிறோம். இது தேவனுடைய சத்தம்.

கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மெல்லோரையும் ஒன்றாக இணைத்து ஒரே சரீரமாக அமைத்திருக்கிறார். ''எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார்... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவயங்களாயுமிருக்கிறீர்கள். தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது

போதகர்களையும் பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும் ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார் (1கொ.12:12; 27,28). இப்படி இணைக்கப்பட்ட நாம் ‘‘இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களு மாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்’’. தேவனுடைய திட்டத்தின்படியே கிறிஸ்துவை மூலைக்கல்லாக வைத்து அவர்மேல் நாமெல்லோரும் அவரைப்போல மாதிரிகளாக இணைக்கப்பட்டு பரிசுத்த ஆலயமாக எழுப்பப்படுகிறோம். இப்படி திருச்சபையில் இணைக்கப்பட்ட நாம் ‘‘ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்’’ என்ற 1பேது.4:11–ன்படி வேதவாக்கியங்களை மாதிரியாக வைத்துக் கொண்டு போதிக்க வேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது! சாலொமோனுக்கு பின்பு பிளவுபட்ட ராஜ்யத்தில் யோசபாத் என்ற ராஜா தோன்றினான். இவனுடைய நற்காரியம் என்னவென்றால், அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன் நாட்களில் நடந்த வழிகளில் நடந்து, தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனைகளின்படி நடந்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக் கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதிக்கும்படி செய்தான். நமக்கு முன் மாதிரியாக, அடிச்சுவடாக கொடுக்கப்பட்ட ஆண்டவராகிய கிறிஸ்துவும் இதைத்தான் சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். ‘‘நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்’’ என்றார் (மத்.28:20).

பவுலைப் போன்றோர் பிரசங்கிக்கும்போது ‘‘நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்’’ என்றார்கள் (2கொ.4:5). மேலும், பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும்,



கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்றான். இன்றைய நாட்களில் இருக்கிற ஊழியர்கள் சொல்வதொன்று செய்வது வேறொன்றுமாக இருந்து செயல்படுகிறார்கள். பிரியமானவர்களே, நாமோ அப்படியில்லாமல் ‘‘கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்’’ என்று சொன்ன பவுலைப்போல, கிறிஸ்துவையும் அவருடைய அன்பையும் தரித்துகொண்டு, ஊழியர்களாகிய நம் மூலமாக விசுவாசிகளும், புறஜாதி மக்களும் கிறிஸ்துவை காண வழி செய்வோம். நாம் அவரோடே கூட மரித்தோமானால், அவரோடே கூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடே கூடப்பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் என்ற வசனப்படி அவரை விசுவாசிக்கிற நீங்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவைப் போல மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். அப்படிப்பட்ட சிந்தையில் இருக்கும்போது உங்களை கர்த்தர் உயர்த்த வல்லவர். ஒரு சபையின் மூப்பர்களும் இப்படித்தானிருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். ‘‘கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும்’’ (1தீமோ.3:2). அந்தப்படியே உதவிக்காரர்களும் இரு நாக்குள்ளவர்களாயும் மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ள வர்களாயும் விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும். இப்படி ஒரு திருச்சபையின் மூப்பர் முதற்கொண்டு விசுவாசிகள் வரை கிறிஸ்துவை மாதிரியாக நோக்கும்போது, அச்சபையானது மலையின் மேல் இருக்கிற பட்டணத்தைப் போலவும், விளக்குத் தண்டின் மேல் வைக்கப்பட்ட விளக்கைப்போலவும் இருக்கும்.

நமதாண்டவராகிய இயேசுவைப் பாருங்கள்: அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். இன்றைய நாட்களில் அவருடைய நாமத்தை தரித்துக் கொண்டுள்ள சபை செய்யவேண்டியது என்ன? அவரைப்போல நன்மை செய்யவும், இவ்வுலகத்தில் பிசாசானவனால் மனக்கண்கள் குருடாக்கப்பட்டவர்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவும், அவருடைய மாதிரியை பின்பற்ற வேண்டியதும் அவசியமாயிருக்கிறது.

இவ்விஷயத்தில் பெண்களின் பங்கு என்ன? ''உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப் படுவார்கள்'' (1பேது.3:1,2). உங்களுடைய நடக்கையின் மாதிரியை பார்த்து அவர்கள் போதனையின்றி இரட்சிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்கிறார் பேதுரு. இப்படி ஒவ்வொரு சகோதரனும், சகோதரியும் இயேசுவின் மாதிரியை தொடர்ந்து ஜீவிப்போமானால் ''நான் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்'' 2கொ.6:18 என்ற வசனத்திற்கேற்ப ஆசீர்வதிக்கப்படுவோம்.

**கேள்வி நேரம்**

**மாதிரியுள்ள ஜீவியம் மக்கள் மத்தியில் மாற்றத்தைக் கொண்டுவருமா?**

நிச்சயம் கொண்டு வரும். எந்த ஒரு செயலை செய்யும்போதும் பொதுவாக மக்கள் மற்றவர்களைப் பார்க்கிறார்கள். புதிய புதிய கண்டுபிடிப்புகள் கூட முற்பிதாக்களின் காலத்திலிருந்த மாதிரிகள் தான். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பதில் தெசலோனிகேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாக பெரோயா பட்டணத்தார்கள் இருந்தார்கள் (அப்.17:11). கொடுத்தல் விஷயத்தில் மக்கெதோனியா நாட்டுச் சபையார் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களா யிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன் என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (2கொ.8:3). இப்படி அநேக மாதிரிகளை நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். இதன் மூலமாக வாசிப்பதிலும், கர்த்தருடைய ஊழியத்தை தாங்குவதிலும் கர்த்தருடைய மக்கள் வளர்ந்து பெருகியிருக்கிறார்கள். இந்த மாதிரியுள்ள ஜீவியம் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும். உங்களுடைய ஜீவியம் எப்படியிருக்கிறது?

**"திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்; கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்" – நீதிமொழிகள் 13:13**



## 3. பிரிவினை
## Division

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்க வல்லவராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Division. பிரிவினை. இந்நாட்களில் குடும்பத்திலும், சபையிலும் பிரிவினைகளை காணமுடிகிறது. இதற்கு வேதாகமம் கொடுக்கும் எச்சரிப்பையும் உபதேசத்தையும் இச்செய்தியின் மூலம் காண்போம். ''ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே'' என்று மாற்.3:25–ல் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். ஒரு குடும்பத்திற்கு கணவன் தலையாயிருக்கிறான். அவனுக்கு ஏற்ற மனைவியாக ஸ்திரீயானவள் இருக்கிறாள். இவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் விரோதமாகப் பேசவும், நடக்கவும் செயல்படவும் ஆரம்பித்தால் அக்குடும்பம் நிலைநிற்பது எப்படி? ''மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்...''. அதைப்போல ''புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...'' என எபே.5:22,25 வசனங்களில் வாசிக்கிறோம். இதை வாசிக்காத அல்லது திருமணத்தின்போது கேட்காத கிறிஸ்தவர்களே இருக்கமுடியாது. ஆகையால் எனக்கு அன்பானவர்களே, தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லை என வேதம் திட்டமாக போதிக்கிறது. இருவரும் ஒரே சரீரமாயிருக்கிறபடியால் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். மேலை நாடுகளில் குடும்பப் பிரிவினை சர்வ சாதாரணமாகிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். நாமும் பல செய்திகளின் வாயிலாகவும் கேள்விப்படுகிறோம். இதற்கு என்ன காரணம்? உங்கள் மனைவியினிடத்தில் அன்புகூருங்கள் என்ற தேவ வார்த்தையை புறக்கணித்து கணவனானவனோ அல்லது மனைவியானவளோ மற்றவர்களில் அன்புகூர்ந்து அதாவது மற்றவர்களுடைய செயல்பாடுகளில் கவரப்பட்டு மாயைக்குக் கீழ்ப்படிந்து போய்விடுகிறார்கள். இதுபோன்ற தொற்று வியாதி

நம் நாடுகளிலும் பரவிக்கொண்டிருக்கிறது. ‘‘தன் வீட்டைக் கலைக்கிறவன் காற்றைச் சுதந்தரிப்பான்’’ என்ற நீதி.11:29யைப்போலவும், ‘‘புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்’’ என்ற நீதி.14:1–யைப் போலவும், தன் வீட்டைக் கலைக்கவும், தன் வீட்டை இடிக்கவும் கணவனானவனுக்கும் மனைவியானவளுக்கும் சுயபெலன் உண்டு. ஆனால் ‘‘தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்’’ என்ற மத்.19:6–ம் வசனப்படி கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ அல்லது மூன்றாவது நபருக்கோ தேவனால் இணைக்கப்பட்ட ஒரு குடும்பத்தை பிரிக்க அதிகாரம் இல்லை. அப்படி மீறி குடும்பத்தை பிரிக்கிறவர்களை தேவன் தண்டியாமல் விடார். கூடிவாழ்ந்தால் கோடி நன்மைகள் உண்டு என்ற முதுமொழிக்கேற்ப கூடிவாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

சபையும் ஒரு குடும்பத்தைப்போலவே ஒரு கூட்டுக் குடும்பமாகும். இப்படிப்பட்ட சபையில் அதாவது நித்திய நித்திய காலமாக தேவனோடிருக்கப்போகிற அவருடைய ராஜ்யமாகிய சபையிலே பிரிவினைகள் காணப்படலாமா? ‘‘சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப்பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்’’ (1கொ.1:10). இங்கு கொரிந்திய சபையாருக்கு பவுல் சொல்லுகிறதான புத்திமதி பிரிவினைகளில்லாமல் சீர்பொருந்தி இருக்கவேண்டுமென்பதே. இந்த விதமான புத்திமதிகளை இன்றைய நாட்களில் உள்ள அநேக திருச்சபைகள் நிராகரித்துக்கொண்டு செயல்படுகின்றன. காரணம்? பாரம்பரியம், இழிவான ஆதாயத்திற்கு ஊழியம். சுயம், தற்பெருமை, முதன்மைத்துவம் போன்றவற்றிற்கு அடிமைகளாகி பிரிந்து செயல்படவே விரும்புகின்றனர். இப்படிப்பட்டவர்களைக் குறித்து வசனம், பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான் எனக்கூறுகிறது. நாம் கற்று நிச்சயித்துக்கொண்ட உபதேசத்திலே நிலைத்திருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. கலாத்திய சபைக்கு பவுல் எழுதும்போது ‘‘நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்’’ என்கிறார். அந்தப்படியே ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது ‘‘அன்றியும்



சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்கிறேன்’’ என்கிறார். இங்கு பிரிவினைகளை கொண்டுவருபவர்களை விட்டு விலகவேண்டுமென்று புத்தி சொல்லுகிறார். யோவான் எழுதும்போது; ‘‘ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தை கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்’’ என்கிறார் (2யோவா.10). இப்படியிருக்கிறபடியால் சபைகளில் பிரிவினைகளையும் இடறல்களையும் கொண்டுவரும் கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியம்.

கிறிஸ்துவை உடையவனே கிறிஸ்தவன். அப்படிப்பட்டவன் கிறிஸ்துவின் சபையைச் சார்ந்தவனாகவே இருக்கமுடியும். ‘‘கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?’’ என்ற கேள்வியை பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய கடிதத்தில் எழுப்புகிறார் (1கொ.1:13). பிரியாத கிறிஸ்துவை பிரிப்பது ஏன்? கிறிஸ்துவானவர் ஒரே ஒரு சபையையே ஏற்படுத்தினார். அது அவருடைய சபை. ‘‘மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்றார்’’. சபையில் என்ன இருக்கிறது? எந்த பெயரை வேண்டுமானாலும் சபைக்கு வைத்துக்கொள்ளலாம் என்பர். அன்பானவர்களே, இவர்களே பிரிவினை வாதிகள். இயேசு என்ற பெயர் யோசேப்பும் மரியாளும் இட்ட பெயர் அல்ல. மாறாக தேவனால் முன்குறிக்கப்பட்டு, தேவதூதனாலே சொல்லப்பட்டது. ‘‘இயேசு என்று பெயரிடுவாயாக’’ என்று மத்.1:21–ல் சொல்லப்பட்ட பிரகாரம் அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். இப்பெயரையே மாற்றுகிறவர்கள் எதைத்தான் மாற்ற மாட்டார்கள்? பரிசேயர், சதுசேயர் ஆகிய இரு கூட்டத்தாரும் உபதேச விஷயத்திலே பிரிந்தார்கள் என வாசிக்கிறோம். ‘‘என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும் தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்’’ இதைப்போல இன்றும் கிறிஸ்துவின் உபதேசங்களை தவறாக புரிந்துகொண்டு ‘தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்’ என்று பிரிந்து போகிறார்கள். ‘‘கடைசிகாலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர்

தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே, இவர்கள் பிரிந்துபோகிறவர்களும், ஜென்ம சுபாவத்தாரும், ஆவியில்லாதவர் களுமாமே'' என்கிறார் யூதா, யூதா18,19 வசனங்கள்.

கிறிஸ்துவுக்கு ஒரே சரீரம், அதைப்போல அவருக்கு ஒரே ஒரு சபைதான் உண்டு. ''எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். ஆகையால், சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூட மகிமைப்படும். நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். இப்படி நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள அவயவங்களாயிருக்கிறபடியால் கிறிஸ்துவில், இருந்த சிந்தையே நமக்கும் இருக்கவேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்துவின் சிந்தையில் இணைக்கப்படாத யூதாஸ் கிறிஸ்துவுக்கு விரோதமாக பிசாசானவனால் தூண்டப்பட்டு நிரந்தரமாக தேவனைவிட்டு பிரிந்துபோனதை நாம் வாசிக்கிறோம். அவனுடைய முடிவையும் அறிந்திருக்கிறீர்கள். பிரிவினை நம்மை நித்தியத்திற்கு கொண்டு செல்லாது. பிரிவு இருக்கிற இடத்தில் கர்த்தர் இரார். ''இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்கிறார் (மத்.18:20). எங்கே கூடினாலும் அவருடைய நாமத்தில் கூடிவரவேண்டும். அப்படிப்பட்ட இடத்தில் கர்த்தர் வந்து வாசம்பண்ணுவார்.

இச்செய்தியை கேட்கும் அன்பு நேயரே சகோதரனே, சகோதரியே குடும்பத்திலும், சபையிலும் பிரிவினை இல்லாது வேதம் போதிக்கிறதான வழியிலே நடந்து உங்கள் ஓட்டத்தை நிறைவேற்றப் பிரயாசப்படுங்கள். கர்த்தருடைய சந்நிதியிலே வளர்ந்த சாமுவேலைப்போலவும், தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்ட மரியாளைப்போலவும் உறுதியாயிருந்து பெலப்படுங்கள். அப்பொழுது வாடாத ஜீவகிரீடத்தை பெறுவீர்கள். பவுலைப்போல நாமும் சொல்வோம்: ''கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ,



பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லா வற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே, மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன்'' (ரோ.8:36–39). அன்பரே, நண்பரே கிறிஸ்துவின் அன்புக்கு ஈடேது, இணையேது. அப்பேர்பட்ட அன்பை முறிக்கலாமா? கூடாதே. உங்களுடைய குடும்ப அன்பில் பெலப்படவும், கிறிஸ்துவில் உள்ள ஐக்கியம் உறுதிப்படவும் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## கேள்வி நேரம்

### கணவன் மனைவி உறவில் கர்த்தருடைய கட்டளை என்ன?

பவுல் சொல்லுகிறார்: ''விவாகம்பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது; மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக்கூடாது'' என்று கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (1கொ.7:10). மேலும், உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள். இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன் என்கிறார்.

பவுலுடைய இந்த யோசனை மிகவும் நன்றாகவே இருக்கிறது. கணவன் மனைவி என்றாலே இருவரும் இணைந்தே இருப்பது மிகவும் நல்லது. ஒருவேளை சிலகாலம் பிரிந்து இருக்கலாம் என முடிவு எடுப்பார்களேயானால் அது உபவாசத்திற்கும் ஜெபத்திற்குமே ஒழிய மற்றொன்றிற்கும் அல்ல. ஏனெனில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராளியாக செயல்படும் சாத்தான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுடைய வாழ்க்கையில் கலங்கத்தை ஏற்படுத்திவிடுவான். ஆகையால் கூடி வாழுங்கள் என்ற புத்திமதியை சொல்லுகிறார். இந்த ஆலோசனையை ஏற்று செயல்படுங்கள்.

**"அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரையாடும்போலிருப்பாளாக" – நீதிமொழிகள் 5:19**

# 4. யாக்கோபு – லாபான்
## Jacob & Laban

தாவீது : என்ன யோனத்தான் இந்தப்பக்கமே ரொம்பநாளா வரலையே என்ன காரணம்?

யோன : ஆமா தாவீது, சபையிலே ரொம்ப வேலை. அதனாலதான் வரமுடியல

தாவீது : சரி... இன்னைக்கு யாக்கோபையும் லாபானையும் பற்றி தெரிந்துகொள்ளப்போறோம்

யோன : யாக்கோபுக்கு, லாபான் என்ன உறவுமுறை தாவீது?

தாவீது : சொந்த தாய் மாமன். தன் தாயினுடைய ஆலோசனைப்படி லாபான் வீட்டிலே பெண்கொண்டான். இந்த லாபானோ தந்திரமா தன்னுடைய மூத்த குமாரத்தியை யாக்கோபுக்கு கொடுத்தான். யாக்கோபோ இளையவள் ராகேல் மீது விருப்பமுள்ளவளா யிருந்தான். இவளுக்காக லாபானிடத்தில் ஏழு வருஷம் வேலைசெய்ய ஒப்புக்கொண்டான். அந்தப்படியாக ராகேல் மேலுள்ள பிரியத்தினால் அந்த வருஷங்கள் அவனுக்கு கொஞ்சநாட்களாக தோன்றியது நாட்கள் நிறைவேறினபோது லாபான் லேயாளை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். அதற்கு யாக்கோபு ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலை செய்தேன். ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணினீர் என்றான். அதற்கு லாபான்; மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல என்றான்.

யோன : அப்படியா? அப்புறம் என்ன நடந்தது தாவீது...

தாவீது : பரவாயில்லையே ரொம்பவும் ஆர்வமாயிருக்கிறாயே..., சொல்றேன்



யோனத்தான். முதலாவது லேயாளுடைய ஏழு நாட்களை நிறைவேற்று, பின்பு நீ ராகேலுக்காக ஏழு வருஷம் என்னிடத்தில் வேலை செய். அவளையும் உமக்குத்தருவேன் என்றான். அந்தப்படியே யாக்கோபு, ராகேலுக்காக பின்னும் ஏழுவருஷம் வேலைசெய்தான்.

யோன : இந்த யாக்கோபு அப்படி என்ன வேலை செய்தான் தாவீது?

தாவீது : தன் மாமனுடைய ஆடுகளை மேய்த்து வந்தான். லாபானுடைய இரண்டு குமாரத்திகளையும் திருமணம் செய்துகொண்டு அவர்கள் மூலமாகவும், அவர்களுடைய வேலைக்காரிகள் பில்காள் மற்றும் சில்பாள் மூலமாகவும் அநேக ஆண்பிள்ளைகளையும் தீனாள் என்ற ஒரு பெண் பிள்ளையையும் பெற்றான்.

யோன : அடேங்கப்பா... எத்தனை பிள்ளைகள்!

தாவீது : யோனத்தான், இதுதான் யாக்கோபின் சந்ததி, இவர்களோடே யோசேப்பின் பிள்ளைகள் எப்பிராயீமும், மனாசேயும் சேர்க்கப்பட்டு இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இப்படி யாக்கோபின் சந்ததி பெருகியவுடன் லாபனை விட்டு தனக்கு தரிசனமான தேவனை ஆராதிக்கவும், தன் தகப்பனை சந்திக்கவும் யாக்கோபு புறப்பட்டான். லாபனோ உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால் அறிந்தேன் உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல் நான் அதைத் தருவேன் என்றான். அதற்கு யாக்கோபு நீர் எனக்கு ஒன்னும் தரவேணாம்; நான் சொல்லுகிறபடி நீர் எனக்குச் செய்தால், உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்துக் காப்பேன். நான் இன்னைக்குப்போய், உம்முடைய மந்தைகளையெல்லாம் பார்த்து,

அவைகளில் புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்துவிடுகிறேன்; அவைகளே இனி எனக்குச் சம்பளமாயிருக்கட்டும் என்றான். லாபானும் நீ சொன்னபடியே ஆகட்டும் என்றான்.

யோன : ஆமா தாவீது, இப்படி லாபானிடத்திலே சொல்லிட்டானே அந்தப்படியாக வரியும் புள்ளியுமுள்ள ஆடுகள் கிடைச்சுசா?

தாவீது : யோனத்தான் நீ யாக்கோபைப் பற்றி என்ன நினைக்கிற அவன் பயங்கரமான திறமைசாலியாக்கும். ஆடுகள் தண்ணீர் குடிக்கவரும்போது பொலிவதுண்டு. அப்போது பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளை வெட்டி இடையிடையே வெண்மை தோன்றும்படி, பட்டையை உரித்து, தான் உரித்த கொப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும் தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராய் போட்டுவைத்தான். ஆடுகள் அந்தக் கொப்புகளுக்கு முன்பாக பொலிந்தபடியால், அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது. பலவீனமான ஆடுகள் பொலியும்போது அவைகளைப்போடாமலிருப்பான்; இதனால் பலவீனமானவைகள் லாபானையும், பலமுள்ளவைகள் யாக்கோபையும் சேர்ந்தன. இப்படியாக அவன் திரளான ஆஸ்திக்கு சொந்தக்காரனானான்.

யோன : ஆமா, இந்த லாபான் தன் குமாரத்திகளை யாக்கோபுக்கு மாற்றிக் கொடுத்ததுபோல, அவனை வேறுவழியில் ஏமாற்ற வில்லையா?

தாவீது : விட்டா நீயே அவனுக்கு ஆலோசனை சொல்லியிருப்ப போலிருக்கே யோனத்தான்: இந்த விஷயத்தில லாபான் ஒன்னும்



யாக்கோபுக்கு விட்ட ஆளுஇல்ல. பத்துமுறை சம்பளத்தை மாற்றினான். எப்படியினு கேட்கிறையா? புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று லாபான் சொன்னபோது, ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப்போட்டது; கலப்பு நிறமானவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று லாபான் சொன்னபோது ஆடுகளெல்லாம் கலப்பு நிறக் குட்டிகளைப்போட்டது. அதனால யாக்கோபை அவனால ஏமாற்றமுடியல

யோன : ஆமா, இந்த யாக்கோபு லாபானை விட்டுப்போக முக்கியமான காரணம் ஏதாவது இருக்கிறதா தாவீது?

தாவீது : ஓ, இருக்கே, தேவதூதன் ஒருவர் சொப்பனத்தில் காணப்பட்டு யாக்கோபே என்றார். அவன் சாமுவேலைப்போல இதோ, இருக்கிறேன் என்றான். நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே; இப்பொழுதும் நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டு புறப்பட்டு உன் இனத்தார் இருக்கிற தேசத்திற்கு திரும்பிப்போ என்று சொன்னார். இதைக் கேட்ட யாக்கோபு அப்படியே கீழ்ப்படிந்து தன் குடும்பம் முழுவதையும் அழைத்துக்கொண்டு சென்றான். இச்செய்தியை தன் மனைவிகளுக்கும் அறிவித்தான். அதைக் கேட்ட அவனுடைய மனைவிகள் தேவன் உமக்குச் சொன்னபடியெல்லாம் செய்யும் என்றார்கள் (ஆதி.31:16). இந்த விஷயத்தில் யாக்கோபின் மனைவிகள் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் பார்த்தாயா?. ஒரு மனிதனுடைய முன்னேற்றத்திற்கு அதாவது தேவனுடைய காரியங்களில் பெண்கள் தடையில்லாது இருக்கவேண்டும் அப்பத்தான் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். இந்த யாக்கோபு கர்த்தருடைய கட்டளையின்படி தான் சவதரித்த

பொருட்களோடும், குடும்பத்தோடும் லாபானிடத்தில் சொல்லாமல் ஓடிப்போனான். மூன்று நாட்களுக்குப் பின்பு இதைக் கேள்விப்பட்ட லாபான் அவனைப் பின்தொடர்ந்து வந்து நீ ஓடிப்போவதை மறைத்து எனக்கு அறிவியாமல், திருட்டளவாய் என்னிடத்திலிருந்து வந்துவிட்டது என்ன? நான் உன்னைச் சந்தோஷமாய், சங்கீதம் மேளதாளம் கின்னரமுழக்கத்துடனே அனுப்புவேனே, இந்த செய்கையை நீ மதியில்லாமல் செய்தாய் உங்களுக்குப் பொல்லாப்புசெய்ய எனக்கு வல்லமை உண்டு; ஆகிலும் உங்கள் தகப்பனுடைய தேவன், நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார். ஆகையால் நீங்கள் புறப்பட்டு போகிறதானால் போகலாம் என் தெய்வங்களை ஏன் திருடிக்கொண்டுபோகிறாய் என்று கேட்டான்.

யோன : அதற்கு யாக்கோபு ஒன்றும் சொல்லவில்லையா தாவீது?

தாவீது : சொல்லாமலிருப்பானா? யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களை நீ கண்டு பிடிக்கிறீரோ, அவனை உயிரோடே விடவேண்டாம் என்றான். அதை ராகேல் கொண்டுவந்ததை யாக்கோபு அறியாதிருந்தான். லாபானோ அதைத் தேடிக் கண்டுபிடிக்கவில்லை. பின்பு யாக்கோபினுடைய வார்த்தையைக் கேட்டு இருவரும் உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள். அந்தக் கற்குவியலுக்கு கலயெத் என்ற பெயர் வழங்கப்பட்டது. பின்பு லாபான் அவர்களை ஆசீர்வதித்து புறப்பட்டு தன் இடத்துக்குப்போனான். சரி யோனத்தான் மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம் – Bye Bye...

**"விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்" – நீதிமொழிகள் 16:20**



## 5. கிறிஸ்துவின் உண்மையான ஊழியன்
## A Faithful Minister of Christ

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

A faithful minister of Christ. கிறிஸ்துவின் உண்மையான ஊழியன் யார்? அவர் எங்கு இருக்கிறார்? என்ற கேள்வி எழும்புகிறது. இன்று உண்மையான ஊழியர்களைப் பார்ப்பது அரிதாயிருக்கிறது. ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் உண்மையுள்ள ஊழியக்காரர்கள் அநேகர் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் உண்மையுள்ள ஒரு ஊழியனைக் குறித்து எழுதும் போது ''எங்களுக்குப் பிரியமான உடன்வேலையாளும், உங்களுக்காக கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாபிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்'' என்று எழுதுகிறார் (கொலோ.1:7). இந்த எப்பாப்பிரா கொலோசெய சபைக்கு உண்மையுள்ள ஊழியக்காரனாயிருந்து கிறிஸ்துவின் உபதேசத்தைக் கற்றுக் கொடுக்கிறவனாக இருந்திருக்கிறான்.

மேலும் இவன் கர்த்தருடைய சபையின் வளர்ச்சிக்காக தேவனிடத்தில் யாக்கோபைப்போல போராடி ஜெபிக்கிறவனாகவும் இருந்தான். கொலோ.4:12–ல் நாம் வாசிக்கும்போது ''இவன், நீங்கள் தேவனுக்கு சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்''. இன்றைக்கு இப்படி போராடி ஜெபிக்கக்கூடிய உண்மையுள்ள கிறிஸ்துவின் ஊழியர்கள் சபைக்கு தேவை. சபை கட்டப்பட பணமோ, செல்வாக்கோ, இருந்தால் மட்டும் போதாது. ஜெபிக்கக்கூடிய தாகம் வேண்டும். மந்தையைக்குறித்த கரிசனை வேண்டும். உண்மையாக உழைக்கக்கூடிய ஊழியர்கள் எழும்பவேண்டும். உண்மையுள்ள ஊழியன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வான். அவன் போதிக்கக்கூடிய சபையும் ஆவிக்குரிய வளர்ச்சியுள்ளதாக இருக்கும். நமது ஆண்டவரும் ''ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப்

பிதாவானவர் கனம்பண்ணுவார்'' என்கிறார் (யோவா.12:26). கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் கிறிஸ்துவைப் பின்தொடரவேண்டும். அப்படி ஊழியஞ்செய்யும்போது பிதாவாகிய தேவன் அவனை கனம் பண்ணுவார்.

மோசேயைப் பாருங்கள்: ''விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்'' (எபி.11:24–26). தான் எதற்காக அழைக்கப்பட்டானோ அந்த அழைப்பை உறுதியாகப் பற்றிக்கொண்டு பார்வோனுடைய சகல சம்பத்துக்களையும் வெறுத்து தள்ளி தேவஜனங்களோடு துன்பத்தை அனுபவித்தான். நாம் சில வேளைகளில் கஷ்டப்படுகிறோம் அதைப் பொறுக்க முடியாமல் ஐயோ இந்தப்பாடுகள் ஏன்? தேவனை அறியாத மனிதன் மிகநன்றாக இருக்கிறான் என்று சொல்லி அங்கலாய்கிறோம். நாம் அவரோடு சேர்ந்து பாடுபட்டால் அவரோடு சேர்ந்து ஆளுகையும் செய்வோம் என்ற திருவசனத்தை மறக்கிறவர்களாயிராமல் ஆண்டவர் இயேசுவின் நிமித்தம் வரும் பாடுகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். பவுலும்கூட தீமோத்தேயுக்கு கொடுத்த ஆலோசனை இதுதான் ''நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'' என்றார். இன்றைக்கும் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் தீங்கநுபவிக்கவும், சுவிசேஷ வேலையைச் செய்யவும் அதை நிறைவேற்றவுமே பிரயாசப்பட வேண்டும். அதைவிடுத்து, எலிசாவின் வேலைக்காரன் கேயாசியைப்போல வாங்குவதிலே இருந்தால் எப்படி? ''பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோப்புகளையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?''என்று எலிசா கேட்டார் (2இரா.5:26). பிரியமானவர்களே, இயேசு எதை வாங்கினார்? எதை கட்டினார்? அவருக்கு ஊழியம் செய்யும் ஒரு சீஷன் எதை வாங்கவேண்டும்? எதைக் கட்டவேண்டும்? அதை முதலாவது செய்கிறோமா? என்பதை சிந்திக்கவேண்டும். சத்தியத்தை வாங்கவேண்டும். கர்த்தருடைய சபையைக் கட்டவேண்டும். இப்படிச்செய்கிறவனே கிறிஸ்துவின் உண்மையான



ஊழியன். பவுல் சொல்லுகிறார் ''அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்''. இந்தவிதமான எண்ணம் முதலாவது எல்லோருக்குள்ளும் இருக்கவேண்டும்.

ஊழியம் செய்தால் ஏதாவது ஒரு ஆதாயம் வேண்டும் என்று கேயாசியைப்போல நினைப்பவர்கள் உண்டு. அப்படிப்பட்டவர்களைக் குறித்து வேதம் எச்சரிக்கிறது. ''கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிற வர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டுவிலகு'' என்கிறார் பவுல் (1தீமோ.6:5). இன்றைக்கு ஊழியம் என்ற போர்வையில் அநேகரை வஞ்சித்து, உலககாரியங்களுக்கு அடிமைகளாக இருந்து கொண்டு ஊழியத்தை ஒரு ஆதாய தொழிலாக நினைத்து ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாயைப்போல உலாவருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து பிரிந்துபோன தேமாவைப் போன்றவர்கள்தான். ''அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறார்கள். ஒருச்சாண் வயிற்றுக்காக வாழ்கின்ற இவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஊழியம் மனுஷருக்கா? அல்லது கர்த்தருக்கா? இந்த இடத்தில் உலக வேலையில் உள்ள ஒரு ஊழியனைப் பற்றி கேட்கவில்லை. அநேக சமயங்களில் தேவ ஊழியர்களும் மனுஷர்களுக்கு அடிபணிந்து அவர்களுக்குப் பிரியமாக இருக்க நாடுகிறார்கள். ''மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாக பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்'' என்று வாசிக்கிறோம் (எபே.6:6–8). அதாவது கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியனாக இருந்த தீகிக்குவைப்போலவும் மற்றும் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள சாட்சியாயிருந்து மரித்த அந்திப்பா என்பவனைப்போல சமுதாயத்திலும் சபையிலும் உண்மையுள்ள ஊழியக்காரனாயிருக்க பிரயாசப்பட வேண்டும். மரணத்துக்கு சமீபமாயிருந்த எப்பாபிரோதீத்துவை அறிவீர்கள் அவன் வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாயிருந்தான் அதுவும் கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான் என பிலி.2:27,30 வசனங்களில் படிக்கிறோம். அந்தப்படியே கர்த்தருடைய ஊழியத்தினிமித்தம் தங்கள்

சரீரத்தைக்கூட கவனிக்காமல் உழைத்த அநேக முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றி அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் படிக்கிறோம். ஊழியர் என்றால் வியாதி வராது அவனுக்கு கஷ்டம் வராது என்பதல்ல. அவனும் பாடுள்ள மனுஷன்தானே இவையெல்லாம் ஒரு சாதாரண மனுஷனுக்கு வருவதுபோல வரக்கூடியதே. சொல்லப்போனால் பாடுகள் ஊழியனுக்குத்தான் அதிகம். இதை அறியாத சிலர் ஊழியர்களுக்கு என்னப்பா கவலை கார் இருக்கு, பங்களா இருக்கு, நல்ல சொகுசா அனுபவிக்கிறாரு என்று ஆளைப் பார்த்து எடைபோட்டு விடுவார்கள். ''மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'' (1சாமு.16:7).

தாலந்து பற்றிய உவமையை நாம் அறிவோம். அதில் அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக அவனவனுக்கு தாலந்துகளை பகிர்ந்து கொடுத்தார். ஐந்து தாலந்தை பெற்றவன் வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தான். இரண்டு தாலந்தை பெற்றவன் வேறு இரண்டு தாலந்தை சம்பாதித்தான். ஆனால் ஒரு தாலந்தை பெற்றவனோ அதை புதைத்துப்போட்டான். இதை அறிந்த எஜமான் ஒரு தாலந்தை புதைத்துப் போட்டவனை பாராட்டவில்லை புறம்பான இருளிலே அவனைத் தள்ளிப்போடுங்கள் என்றார். அதேவேளையில் ஐந்து தாலந்து பெற்றவனையும் இரண்டு தாலந்து பெற்றவனையும் ''நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி'' என்றார் (மத்.25:21). ஆம் பிரியமான சகோதரனே நீ எத்தனை தாலந்து கர்த்தரிடம் பெற்றுள்ளாய்! அதை இரட்டிப்பாக மாற்றி உள்ளாயா! அல்லது புதைத்துப்போட்டுள்ளாயா? நீ இந்த விஷயத்தில் கிறிஸ்துவில் உண்மையுள்ள ஊழியக்காரனாயிருந்தால் அவரோடேகூட நித்தியத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெறுவாய். ஆபிரகாம் பிறனுடைய சரட்டைகூட இச்சித்து எடுத்துக்கொள்ளவில்லை. இன்று கர்த்தருக்கு ஊழியம் செய்கிற நீ ஆபிரகாமைப்போல ஆசீர்வதிக்கப்படவும், நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் என்று கர்த்தராலே பாராட்டைப்பெறவும் விரும்புவாயானால் உன் ஊழியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு. ''நீ மரணபரியந்தமும் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத்தருவேன்'' என்று வெளி.2:10–ல்



திருவுளம்பற்றுகிறார். இச்செய்தியை கேட்கிற அன்பான நேயரே, கிறிஸ்துவின் ஊழியனே உன் ஊழியம் எப்படிப்பட்டது? ''அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்'' என்று பவுல் கொரிந்துசபைக்கு எழுதுகிறார் (1கொ.3:13). இதை நீர் அறிவீர் என்று எண்ணுகிறேன். தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்.

**கேள்வி நேரம்**

**கிறிஸ்துவின் உண்மையான ஊழியனை நாம் எதினால் அறிந்துகொள்ளலாம்?**

நம் ஆண்டவர் சொல்லுகிறார். ''அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்'' என்கிறார் (மத்.7:16,17). ஆண்டவரில் நிலைத்திருக்கிறவன் திராட்சச்செடியில் நிலைத்திருக்கிறான். ஆகையால் அந்தச்செடியின் பலனைக் கொடுப்பான். அவரில் நிலைத்திராதவன் எப்படி அவருக்கேற்ற கனிகளைக் கொடுக்கமுடியும். யாக்கோபு சொல்லுகிறார்; ''என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்'' என்ற யாக்.3:12,13–ன்படி அவர்களுடைய கிரியைகளினால் அறிந்து கொள்ளலாம். உண்மையானவர்களோடு சேர்ந்து கர்த்தரை துதியுங்கள்.

**"நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான்; தன் வழிகளில் தாறுமாறானவனோ அவரை அலட்சியம்பண்ணுகிறான்" – நீதிமொழிகள் 14:2**

# 6. கிறிஸ்து முழு அதிகாரம் படைத்தவர்
# Christ Has Whole Power

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்திலும் பூமியிலும் அதிகாரம் படைத்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Christ has whole power. கிறிஸ்து முழு அதிகாரம் படைத்தவர். நாம் வாழும் இப்புவியில் எத்தனையோ அதிகாரங்களுக்கு நாம் கீழ்ப்படிந்து வாழ்கின்றோம். இவைகள் யாவும் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது என்று ரோம.13:1–ல் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட அதிகாரங்களை உண்டாக்கிய தேவன் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கிறிஸ்துவுக்குக் கொடுத்துள்ளார். இந்த அதிகாரத்தினாலேயே இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குக் கட்டளை கொடுத்து அனுப்பும்போது "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" (மத்.28:18–20). அந்தப்படியே அன்று முதல் இன்று வரை அநேகர் சீஷர்களாக்கப்பட்டு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் சபையில் சேர்க்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பிதாவாகிய தேவனை, முழு அதிகாரம் படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறார்கள். உங்களுடைய தொழுகை எப்படிப்பட்டதாக இருக்கிறது? யாரை நோக்கி தொழுது கொண்டு வருகின்றீர்கள்?

மனிதனுடைய பாவங்களை மன்னிக்க இயேசுகிறிஸ்து ஒருவருக்கே அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் தன் பாவங்களைப் போக்க எந்த வழியை கையாடினாலும் அது அவனது பாவத்திற்குப் பரிகாரமாக இருக்காது. ஒருவேளை மனதிருப்தியை கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். அப்படி மனதிருப்தியடைவதினால் ஒருவருடைய ஆத்துமா



இரட்சிக்கப்பட முடியாது. முழு அதிகாரம் படைத்த ஆண்டவர் இயேசுவுக்கு தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கவேண்டும். இயேசு ஒருமுறை "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப்போனான். ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (மத்.9:6–8). இன்று இப்படிப்பட்ட அதிகாரம் படைத்த யாரையாவது உலகத்தில் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நிச்சயமாக முடியாது, இனிமேலும் பார்க்கவும் முடியாது. ஏனென்றால் கிறிஸ்துவானவரை அவருடைய சீஷர்களுக்கு பிதாவானவர் வெளிப்படுத்துகையில் "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. நோவா, மோசே, சாமுவேல் போன்ற முற்பிதாக்களின் மூலமாக திருவுளம் பற்றி வந்த தேவன் இந்தக் கடைசி நாட்களில் இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்குத் திருவுளம்பற்றுகிறார். "இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டும் உலகங்களையும் உண்டாக்கினார்" என்று எபி.1:2–ல் வாசிக்கிறோம்.

இன்றைக்கு அநேகர் மனித சக்திகளைக்கண்டு பயந்து ஏமாற்றமடைகின்றனர். வேதாகமத்தில் சீமோன் என்றுபேர் கொண்ட ஒரு மனுஷனைக் குறித்து படிக்கின்றோம். அவன் மாயவித்தைக்காரனாயிருந்து அந்தப் பட்டணத்திலே தன்னை ஒரு பெரியவனென்றுசொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக்கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்கு செவி கொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாக தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப் பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள். ஆனால் அவனோ தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்தபோது விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்பைப் பற்றிக் கொண்டான். இப்படி மாயவித்தை செய்தவர்களே தங்களுடைய மாயவித்தைகள் மாயாஜாலங்கள் அனைத்தும் பொய் என்று ஒத்துக்கொண்டு உண்மைக்குச் செவி கொடுத்து கீழ்ப்படிந்து

ஞானஸ்நானம் பெற்று இருக்கும்போது அப்படிப்பட்ட மாயவித்தைகளைக் கண்டு ஏமாற்றமடைந்தவர்கள் முழு அதிகாரம்படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவண்டை திரும்புவது எவ்வளவு அவசியமானது. ''குமாரனைக்கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது'' என்கிறார் நமது ஆண்டவர். இப்பூமியில் பிசாசினால் ஏமாற்றப்படாதவர்களே இல்லை என்று சொல்லலாம். ஏனென்றால் அவன் வஞ்சிக்கிறவனும் ஆதிமுதல் மனுஷ கொலை பாதகனாகவுமிருக்கிறான். இயேசுவையே பிசாசு ஒரு முறை ஏமாற்ற நினைத்து ''அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்கு காண்பித்து இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன். இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக எனக்குப் பின்னாகப்போ சாத்தானே. உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்'' (லூக்.4:5–8). இச்செய்தியை கேட்கிற அன்பான நேயரே, முழு அதிகாரம் படைத்த ஆண்டவர் இயேசுவையே பிசாசு, என்னைப் பணிந்து கொள் இவைகளை உமக்கு தருவேன் என்று சொல்லியிருக்கும்போது உறுதியில்லாத ஆத்துமாக்களை பிடிப்பது அவனுக்கு எவ்வளவு சுலபம். அந்தப்படியே யூதாசை பிசாசு தன் வலையில் சிக்க வைத்து, 30 வெள்ளிக்காசுக்கு அடிபணியச்செய்து, அவனைக் கொன்று போட்டான். என் அன்பு சகோதரனே, சகோதரியே உன் ஆத்துமா விலையேறப் பெற்றது அதை இழந்துபோகாதே மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்.

யோபுவினுடைய நாட்களில் தேவன் சில கேள்விகளைக் கேட்டார். ''மரணவாசல்கள் உனக்குத் திறந்ததுண்டோ? மரண இருளின் வாசல்களை நீ பார்த்ததுண்டோ? நீ பூமியின் விசாலங்களை ஆராய்ந்து அறிந்ததுண்டோ? இவைகளையெல்லாம் நீ அறிந்திருந்தால் சொல்லு'' என்றார் (யோபு38:17,18). யோபு என்ன சொல்லி இருப்பார் என்று நினைக்கீறீர்கள். யோபு கர்த்தருக்குப்



பிரதியுத்தரமாக; தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்... ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன் என்றான். முழு அதிகாரமும் படைத்த ஆண்டவர் நம்மிடத்திலே இப்படியொரு கேள்விகேட்டால் நாம் என்ன மறு உத்தரவு சொல்லுவோம். இன்றைக்கு தங்களுக்கு தாங்களே ஞானிகளாக இருக்கிறவர்களை பார்த்து இருப்பீர்கள். அவர்களெல்லாம் இந்த யோபுவைப்போல தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மாறாக நாங்கள் எல்லாவற்றையும் அறிவோம் எங்களுக்கு ஒருவரும் போதிக்க வேண்டிய அவசியமில்லை என்பார்கள். இவர்களைக் குறித்து வேதம்; ''இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகின்ற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள். இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனை காரிருளுக்கு நேரே வழிநடத்துவது தேவனுடைய பணியல்ல ''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்'' என்ற கொலோ.1:13–ன்படி பிதாவாகிய தேவன் இருளின் பிடியிலிருந்து ஒரு மனிதனை விடுவித்து குமாரனுடைய ராஜ்யத்திற்கு (கிறிஸ்துவின் சபைக்கு) உட்படுத்துகிறார்.

காற்றும் கடலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய அதிகாரத்திற்கும் கீழ்ப்படிகிறது. ஆனால் மனிதர்களில் பலர் கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கின்றனர். ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' (அப்.4:12). உலகத்தில் நம்மை பாவத்திலிருந்து இரட்சித்து பரிசுத்தமாக்கும் நாமம் இயேசுவின் நாமமே! அவருடைய நாமமே நமக்கு விடுதலையை கொடுக்க கட்டளையிடப்பட்டுள்ளது. இதை அறிந்த நீங்களும்

நானும் அந்த அதிகாரத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்தால் ஆசீர்வதிக்கப் படுவோம். குயவனுக்கு எப்படி மண்ணின் மீது அதிகாரம் இருக்கிறதோ அதைபோல நம்மை மண்ணினாலே உண்டாக்கிய கர்த்தருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. இச்செய்தியை கேட்கிற அன்பு சகோதரனே, சகோதரியே இந்த அதிகாரம் படைத்த ஆண்டவரை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளாயா? அப்படி ஏற்றுக்கொள்ளாவிட்டால் இன்றே ஏற்றுக்கொண்டு அந்த அற்புதவாழ்வை ஆண்டவர் இயேசுவோடு சேர்ந்து அநுபவியுங்கள்.

**கேள்வி நேரம்**

**தேவனுடைய பிள்ளைகள் உலக அதிகாரங்களுக்கு கீழ்ப்படிய வேண்டுமா?**

போர்ச்சேவகர் இயேசுவைப் பிடித்த போது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்'' (யோவா.18:10,11). இங்கு இயேசு மறைந்திருக்கலாம். ஆனால் அவர் அந்த அதிகாரத்தின் கீழாக வாழ்ந்தபடியாலும் பிதாவின் சித்தம் நிறைவேறும்படியாகவும் ஒப்புக்கொடுத்தார். ஆகையால் அன்பானவர்களே, ''எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான்; அப்படி எதிர்த்துநிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்'' என்று பவுல் நமக்கு விளக்குகிறார் (ரோம.13:1,2). எல்லா அதிகாரங்களும் தேவனாலே நியமிக்கப்படுகிறது. இந்த அதிகாரங்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

**"கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது" – நீதிமொழிகள் 15:3**



## 7. கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்

## Blessed is that man who makes the Lord his trust

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உலக இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Blessed is that man who makes the Lord his trust. கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான். இச்செய்தியை கேட்கிற அன்பு நேயரே உங்கள் நம்பிக்கையை யார் மீது வைத்துள்ளீர்கள். நம்பினவர் நட்டாற்றில் விட்டார் என்று சொல்ல கேள்விப்பட்டிருப்பீர்கள். ''மனுஷனுடைய உதவி விருதா'' என பரிசுத்த வேதாகமத்தில் உள்ள சங்கீதம் 60:11 கூறுகிறது. மனுஷனை நம்பி, நம்பி, ஏமாற்றமடைந்து போவதைவிட மாறாத தேவனாகிய கர்த்தரிடம் உங்கள் நம்பிக்கையை வையுங்கள். ''கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்'' என்று தாவீது தமது சங்.40:4–ல் தெரிவிக்கிறார். மேலும், அவன் சொல்லுகிறான்; கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தினார் என்கிறார். இந்தவிதமாக தாவீது கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த நம்பிக்கை உங்களில் உள்ளதா?

ஒரு முறை பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் நடந்தபோது பெலிஸ்திய பட்டாளத்திலே கோலியாத் என்னும் பேருள்ள ஒரு யுத்தவீரன், இஸ்ரவேலிலே தன்னோடே யுத்தம் பண்ணவும், என்னைக் கொல்லவும் சமர்த்தனானால் என்னோடே யுத்தம் பண்ண யாரையாவது அனுப்புங்கள் என்று காலையிலும், மாலையிலுமாக நாற்பது நாள் வந்து நிற்பான். அப்பொழுது இஸ்ரவேலிலே ராஜாவாக இருந்த சவுலும் அவனுடைய கூட்டத்தாரும் அந்த பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்டு,கலங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையிலே ஆடுமேய்ப்பனாக இருந்த தாவீது அங்கே வந்து கோலியாத்தின் வார்த்தைகளை கேட்டு சவுல் ராஜாவிடம் நான் போய் இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம் பண்ணுவேன் என்றான். அதற்கு

சவுல்: நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயது முதல் யுத்தவீரன் என்றான். அதற்கு தாவீது: ஒரு விசை ஒரு சிங்கமும், ஒரு விசை ஒரு கரடியும் வந்து மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன், அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து அதை அடித்துக்கொன்றுபோட்டேன். என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான், அப்பொழுது சவுல்ராஜா தாவீதைப் பார்த்து போ, கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக என்றான்.

தாவீது தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளைத் தெரிந்துகொண்டு, அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பப்பையிலே போட்டு தன் கவணைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு அந்தப் பெலிஸ்தனன்டையிலே போனான். கோலியாத் தாவீதைப் பார்த்து: நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் என்ன நாயா என்று சொல்லி அவன் தன் தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபித்தான். அதற்கு தாவீது: கோலியாத்தை நோக்கி, நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலினுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையிலே ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி கோலியாத் நெற்றியிலே பட எறிந்தான். அது அவன் நெற்றியிலே பட அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான்.

பின்பு தாவீது கோலியாத்தண்டை ஓடி அவன் பட்டயத்தை எடுத்து அதினால் அவன் தலையை வெட்டிப்போட்டான். இந்த தாவீது தன்னுடைய நம்பிக்கையினாலே கோலியாத்தை வீழ்த்தவில்லை, மாறாக கர்த்தருடைய நாமத்தின் மேல் வைத்த நம்பிக்கையினாலே ஜெயித்தான். இன்று நீங்களும் எல்லாவற்றிலும் வெற்றியடைய வேண்டுமானால் உங்கள் நம்பிக்கையை கர்த்தர் மீது வையுங்கள்.

"பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (சகரி.4:6). அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவனாலே எல்லாம் கூடும்.



கர்த்தரை நம்பினால் சோறு தானாக வந்திடுமா? என்று அநேகர் சொல்லக் கேட்டு இருப்பீர்கள். "அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார். அவர் மிருக ஜீவன்களுக்கும், கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங் கொடுக்கிறார். அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார்; வீரனுடைய கால்களில் பிரியப்படார்; தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்... அவர் உன் வாசல்களில் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்தில் உள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்" (சங்.147:9–14). இவ்வளவையும் செய்கிறவர் கர்த்தர், மனிதன் அல்ல என்பதை நாம் நினைவுகூரவேண்டும். உலகத்திலே உள்ள மரம், செடி, கொடி, புல் ஆகாயத்துப் பறவை முதற்கொண்டு அவைகளைக் கர்த்தர் போஷித்து மனிதனுக்கு வேண்டிய உச்சிதமான கோதுமை போன்ற தானியத்தைக் கொடுத்து அவனைத் திருப்தியாக்குகிறார். இப்பேர்பட்ட உன்னதமான "கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது". நீங்கள் இந்த தேவனை உங்கள் சொந்த தெய்வமாக கொண்டு இருக்கின்றீர்களா?

காகங்களைக் கவனித்துப்பாருங்கள் அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை அவைகளுக்குப் பண்டகசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் என்று ஆண்டவர் இயேசு குறிப்பிடுகிறார். மனிதனை உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் பறவைகள், மிருகங்கள் போன்றவைகளை விட மனிதனை விசேஷித்தவனாக படைத்தார். ஏனெனில் மனிதனை தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார். ஆகையால் அவனை அதிகமாக நேசித்தார். இப்படிப்பட்ட ஜீவனுள்ள தேவனை, அதாவது தன்னை உண்டாக்கினவரை மறந்து அவனுக்காக உண்டாக்கப்பட்ட பூமியில் உள்ளவைகளின் மீது தன் முழு நம்பிக்கையை வைக்கிறான். இது எத்தகைய அறியாமை! சிருஷ்டிகரை தொழுது கொள்ளாமல் சிருஷ்டிப்புகளைத் தொழுது கொள்கிறான். சிலர் காசுதான் கடவுள் என்கின்றனர். சிலர் தன்னுடைய பொருள்தான் கடவுள் என்று சதா வயல்வெளியை சுற்றி, சுற்றி வருகின்றனர்.

உலக சம்பாத்தியங்களோ, அல்லது உலகப் பொருள்களோ ஒரு மனிதனை இரட்சிக்காது.

ஆண்டவர் கூறும் ஒரு உவமையில் ‘‘ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார். உண்ணவும், உடுக்கவும் உண்டாயிருந்தால் போதுமென்றிருக்கக் கடவோம் என்ற ஆண்டவரின் வார்த்தையை நிராகரித்துவிட்டு தனக்காகவே பொக்கிஷங்களை சேர்த்த ஐசுவரியவானுடைய நிலைமையைப் பார்த்தீர்களா? அவன் நம்பின தானியத்தை அவனால் சாப்பிட முடியாமல் போய்விட்டது. இப்படித்தான் உலகபொருட்கள் மீது நாம் நம்பிக்கை வைத்தால் ஒரு நாள் அவைகளைவிட்டு எடுபடும்போது எல்லாம் ஒன்றுமில்லாமற் போய்விடும். தேவனுடைய வசனங்களுக்கு செவி கொடுத்து அவரிடத்தில் ஐசுவரியமுள்ளவர்களாக இருந்தால், சங்கீதக்காரனாகிய தாவீது சொல்வதுபோல; ‘‘கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்’’ (சங்.121:7).

ஆகையால், கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்க நான் என்ன செய்யவேண்டும்? என்ற கேள்வி உங்களுக்கு எழும்பலாம். பிதாவாகிய தேவன் இந்த உலகிற்கு அனுப்பின ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று உங்கள் வாயினாலே அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். தாவீது சொல்கிறார்; ‘‘உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை’’ (சங்.9:10). ஆம், எனக்கு அன்பானவர்களே அவரை தேடுகிறவர்களை அவர் ஒருபோதும் கைவிடுகிறதில்லை. அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். பிரபுக்களையும் இரட்சிக்க திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும். அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம். யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர் மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர். அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர். இந்த தேவன் உங்களை என்றுமே கைவிடாத தேவன். தம்மிடம் வருவோரை புறம்பே தள்ளாதவர். இவர்மேல் உங்களுடைய நம்பிக்கையை வைத்து நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



**கேள்வி நேரம்**

**காண்கிறதை நம்புகிறது நம்பிக்கையா?**

பவுல் சொல்லுகிறார்; ‘‘நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்’’ என்று எழுதுகிறார் (ரோம.8:24,25). பிதாவாகிய தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. ஆனால் அவர் இருக்கிறார். அவரே நம்மை உண்டாக்கினவர் என்று நாம் நம்புகிறோம். காணாத அவரை நாம் நம்பி அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறோம். இந்த உலகத்தின் முடிவில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின் அவரோடு நித்தியத்திலே நித்தியகாலமாக வாழுவோம் என நம்பிக்கையுள்ளவர்களாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கியுள்ளோம். மேலும் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது என எபிரெய ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

**"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" – நீதிமொழிகள் 16:25**

# 8. தூற்றுக்கூடை
# Winnowing Fan

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தமது களஞ்சியத்தை நன்றாய் விளக்கி தூற்றுகிற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Winnowing fan. தூற்றுக்கூடை. தூற்றுக்கூடையானது கோதுமையையும் பதரையும் தனித்தனியே பிரிக்க பயன்படுகிறது. பெரும்பாலும் இவைகளை கோதுமைக் களஞ்சியங்களிலும், நெற்களஞ்சியங்களிலும் நாம் காணலாம். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை முன் அறிவித்து சொல்லும்போது "தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" என்றான் (மத்.3:12). எந்த ஒரு விவசாயி தான் பயிரிட்டுள்ள தானியத்தை அறுவடை செய்த பின்பு, அதை அப்படியே கொண்டுபோய் களஞ்சியத்தில் சேர்க்கமாட்டான். அவைகளை தூற்றுக்கூடைகளைக் கொண்டு நன்கு தூற்றி, நல்லவைகளையும், ஆகாதவைகளையும் தனித்தனியே பிரித்து நல்லவைகளைத் தன் களஞ்சியத்தில் சேர்ப்பான். ஆகாதவைகளை சுட்டெரிப்பான். அதுபோல ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது சபையை அவருடைய வல்லமையுள்ள வசனத்தினாலே சுத்திகரிக்கிறார்.

இயேசு கிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினால், அவர் பிலதெல்பியா சபைக்கு எழுதசொல்லும்போது "தாவீதின் திறவுகோலை உடையவர்" சொல்லுகிறதாவது என்று வெளி.3:7–ல் சொல்லுகிறார். மேலும், இவருக்கு நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தையும் பிதாவாகிய தேவன் கொடுத்திருக்கிறார். "அன்றியும் பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். இவருடைய தீர்ப்பு அவருடைய வசனத்தின் படியிருக்கிறது. "என்னைத்தள்ளி என்



வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்றார் (யோவா.12:48).

ஒரே நிலத்தில் விளைந்த கோதுமைத்தாளில் கோதுமையும் பதரும் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு அறுவடைக்குப் பின்பு களத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அதை தூற்றுக்கூடை வைத்து தூற்றிப்பார்க்கும் போதுதான் பதர் இருப்பது தெரியவருகிறது. அதைப்போல ஒரே உலகத்தில் சிருஷ்டிக்கப்பட்ட நாம் தேவனால் உண்டாக்கப்பட்ட எல்லாவற்றையும் அனுபவிக்கின்றோம். அதே வேளையில் கர்த்தரால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளை எல்லோரும் ஏற்றுக்கொள்வதில்லை. அப்படி ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் கோதுமையில் ஒட்டிக்கொண்டிருக்கும் பதரைப்போல மாறிவிடுகின்றோம். இதை அவர் பிரித்தெடுக்கவே தூற்றுக்கூடையை பயன்படுத்துகிறார். "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவா.15:5). கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து அவர் மூலமாய் கிடைக்கும் ஆசீர்வாதங்களை அவ்வப்போது பெற்று வளருவீர்கள் என்றால் மிகுந்த கனிகளை கொடுப்பீர்கள். இன்றைக்கு கிறிஸ்தவம் வேண்டும், ஆனால் கிறிஸ்துவேண்டாம் என்கிற கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. பலருக்கு கிறிஸ்து வேண்டும். ஆனால் அவருடைய உபதேசம் வேண்டாம், அது மிக கடினம் என்று அவற்றை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவரையும் அவருடைய வர்த்தையையும் புறம்பே தள்ளும்போது ஆகாத பதராய் போவீர்கள். கிறிஸ்து இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கை இல்லை என்றே சொல்லலாம்.

நூற்றுக்கு நூறு கிறிஸ்தவர்களாக வாழமுடியுமா? ஏதோ, நூற்றுக்கு எழுபத்தைந்து சதவீதம் சரியா இருந்தா போதும் என்று சொல்லுவார்கள். ஆனால் அதேவேளையில் கடையில் ஒரு கிலோ அரிசிவாங்கும்போது கடைக்காரர் முக்கால்கிலோ அரிசியையும் கால்கிலோ மண்ணையும் சேர்த்துப்போட்டால் பரவாயில்லை என்று சொல்லுவோமா? அப்பொழுது மட்டும், அது எப்படி? என்று வாதிடுவோம். "கர்த்தர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்" என்று வாசித்தோம். அதிலே அவர் மண்ணையோ, கல்லையோ அல்லது பதரையோ சேர்ப்பவர் அல்ல, நூறு சதவீதம் கோதுமையையே சேர்ப்பார்.

ஆனபடியினாலே நாம் முழுவதும் சுத்தமாகவேண்டியது அவசியம். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். ஆனால் அவர் பாவங்களை அனுமதிக்கிறவரல்ல. ஏனென்றால் ''கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்'' (எபே.5:27). கிறிஸ்துவானவர் சபைக்காக இரத்தம் சிந்தினார். தம்முடைய இரத்தத்தை சிந்தி அதை பரிசுத்தப் படுத்தியிருக்கிறார். ஒருவேளை இச்சபையில் உள்ள ஒருவரை பிசாசு குற்றப்படுத்தக்கூடும். யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர் என்றான். யோபுவின் விசுவாசம் பரீட்சிக்கப்பட சாத்தானை அனுமதித்தார். யோபு சோதனையை சகித்தபடியினாலே வெற்றி கண்டு தேவனுக்கு துதியையும் மகிமையையும் செலுத்தினான். அதைப்போல் பிசாசானவன் தமது ஜனங்களை குற்றப்படுத்தாதிருக்க கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான ஜனங்களாக இருக்கும்படியாக நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து, மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்.

பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிக்க முடியாது. ஆகையால் ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக் கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும், பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' (1பேது.1:15,16). வெளியே மட்டும் பரிசுத்தம் இருந்தால் போதாது உள்ளும் புறம்பும் இருக்க வேண்டும். உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக என்று பவுல் எழுதுகிறார். அவர் நம்மில் வாசஞ்செய்யக் கூடியவராயிருக்கிறார். ஆகையால் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் சுத்தமாயிருக்க வேண்டும்.

''கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாக தம்மைத் தேடும்படிக்கு... அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே'' (அப்.17:27). ஆகையால்



அன்பானவர்களே, அவ்வப்போது கிடைக்கக்கூடிய தண்ணீரை உறிஞ்சி குடிக்காமல், விளைவின்போது பதராய்போகும் கோதுமைப் பதரைப்போல அநேகர் கர்த்தரைத் தேடவேண்டிய சமயத்திலும், அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய காலத்திலும் அதின்படி செய்யாமல், வருவது வரட்டும் என்று சொல்லுகிறவர்கள் கடைசியிலே பதராய்போவார்கள். அதன் முடிவோ சுட்டெரிக்கப்படுவதே! கோதுமை போரடிக்கிற களங்களிலும், நெல்லை சேர்க்கிற களங்களிலும் ஒதுக்கப்பட்ட பதரை அப்படியே விட்டுவிடமாட்டார்கள். அதை நெருப்பு வைத்து கொளுத்திவிடுவார்கள். அந்தப்படியே கீழ்ப்படியாதவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். ''அங்கே அவர்கள் புழுசாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்'' என வேதம் சொல்லுகிறது (மாற்.9:44).

இச்செய்தியை கேட்கிற அன்பு நேயரே, நீர் அவரால் சேர்க்கப்படும் கோதுமையாக இருக்கின்றாயா? அல்லது தூற்றுக்கூடையினால் தூற்றும்போது பதராய் பறந்துபோகும் பதரைப்போல இருக்கின்றாயா? ''ஒருவன் என்னிலே நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம்'' (யோவா.15:6). நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல எறியுண்டு உலர்ந்து போவீர்கள். ''எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற் கேற்றதாயு மிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு'' (எபி.6:7,8). இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களை பிரித்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். இதற்கு தப்புவித்துக்கொள்ள தூற்றுக்கூடையை வைத்திருக்கும் கிறிஸ்துவுக்கும் அவருடைய வசனத்திற்கும் செவிகொடுத்து அவரில் நிலைத்திருங்கள். அப்பொழுது அவரும் உங்களில் நிலைத்திருப்பார். நீங்களும் கோதுமை மணிகளாய் இருப்பீர்கள். இச்செய்தியின் மூலமாக உங்களை பயமுறுத்துகிறேன் என்று நினைத்துவிடாதீர்கள். நாம் பதராய்

போய்விடாதிருக்கவேண்டும் என்பதற்காகவே அவருடைய வார்த்தைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ளுகிறேன். நிலத்தில் விதைக்கப்பட்ட தானியம் நேர்த்தியாக வளர்ச்சியடைய வேண்டுமானால் அந்த விவசாயி என்ன செய்ய வேண்டும்? அதற்கு நீர் பாய்ச்சி, கொத்தி எருபோட்டு, வேலியடைத்து அதைப் பராமரிக்கவேண்டும். அதைப்போல ஒவ்வொரு ஆத்துமாவும் கர்த்தருக்கு ஏற்றவிதமாக வளர்ச்சியடைந்து ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்க வேண்டும். அவ்வப்போது அந்த ஆத்துமாக்களுக்கு ஏற்ற செய்தி கிடைக்கவில்லை என்றால் அவைகள் பதராய் போக வாய்ப்பு உள்ளது. பதரையோ தேவன் ஏற்றுக்கொள்ளார். நீங்கள் நல்ல கோதுமை மணிகளாக மாற வேண்டுமானால், கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து ஒவ்வொரு நாளும் திருவசனமாகிய கலங்கமில்லா ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.

**கேள்வி நேரம்**

**தேவன் கிருபையாய் மன்னித்து எல்லோரையும் அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடாதா?**

நம் எல்லோருடைய பாவத்தை தேவன் நினையாமல் கர்த்தராகிய இயேசுவைக் கொண்டு அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தை ஏற்படுத்தியுள்ளார். இதற்கு மேலும் நீங்கள் பாவஞ்செய்வீர்கள் என்றால் ‘‘பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்’’ என்று எபி.10:26,27 வசனங்களில் வாசிக்கிறோம். நாம் பாவம் செய்து கொண்டே போகலாம் தேவன் நம்மை மன்னித்துக்கொண்டே வருவார் என்பதல்ல. பேதுருவைப் பார்த்து கர்த்தர் சொல்லுகிற வசனத்தைப் பாருங்கள்; ‘‘சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்’’ (லூக்.22:31,32). நீங்கள் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திராமல் இதை நினைத்து நீங்கள் குணப்பட்ட பின்பு உங்கள் சகோதரரை ஸ்திரப்படுத்துங்கள்.

**"தன் வேலையில் அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன்" – நீதிமொழிகள் 18:9**



## 9. ஓ, தாகமாயிருக்கிறவர்களே!
## O, Ye Thirsty!

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய தாகத்தை தீர்க்க வந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

O,ye thirsty. ஓ, தாகமாயிருக்கிறவர்களே என்று அழைக்கும் கர்த்தருடைய சமுகத்திற்கு வாருங்கள். ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் தமது ஜனங்களுக்குக் கொடுத்த அழைப்பை கவனியுங்கள்: ‘‘ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காக பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவி கொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்’’ (ஏசா.55:1–3). இந்த அழைப்பு அவருடைய கரத்தினால் உண்டாக்கப்பட்ட உங்களுக்கும் எனக்கும் பொருத்தமான அழைப்பாகவே இருக்கிறது. நாம் வாழும் இந்த உலகத்திலே நம்மைப்போல பாடுள்ள மக்கள் ஏராளம், ஏராளம். ஒவ்வொரு நாளும் தன்னுடைய ஆசை இச்சைகளை நிறைவேற்ற மனுஷர்படும் பிரயாசத்திற்கு அளவே இல்லை. திருப்தி செய்யாத பொருளுக்காக தன் பிரயாசத்தை மனுஷன் செலவு செய்து கொண்டே இருக்கிறான். வாழ்க்கையில் தான் பட்ட பிரயாசமெல்லாம் வீணாகபோய், தொல்லை, கஷ்டம் போன்ற துன்பங்களை அனுபவித்து பின்பு வாடி வதங்கி, தண்ணீர் இல்லாமல் காய்ந்து கொண்டிருக்கும் செடியைப்போல் உள்ள உன்னை கர்த்தர் தம்முடைய அன்பின் வார்த்தைகளால் ‘‘ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்’’ என்று அழைக்கிறார். தேவன் எவ்வளவு நல்லவர் என்பதை எண்ணிப்பாருங்கள். மனிதனுக்கு வேண்டிய அனைத்தையும் கர்த்தர்

ஒருவரே நமக்குக் கொடுத்துவருகிறார். நாம் காற்றை சுவாசிப்பதற்கு எவ்வளவு பணம் கொடுத்தோம். அதைப்போல, அவருடைய இரட்சிப்பின் திட்டத்தைப் பாருங்கள். ‘‘பணமுமின்றி, விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்’’ என்று அழைக்கிறார். ஆனால் இன்று அநேகர் அங்குமிங்கும் ஓடி உஷ்ணகாலத்தில் காணப்படுகிற கானல்நீரை பார்த்து ஏமாற்றமடைந்து திரும்புவதைப்போல திரும்புகின்றனர். அழைத்த உன்னதமான தேவனைத் தேடாமல், அவரால் படைக்கப்பட்டவைகளைத் தேடித்தேடி அழுத்துப்போகின்றார்கள்.

பிரியமான சகோதரனே, சகோதரியே நீங்கள் எப்படி தேவனை தேடிக்கொண்டிருக்கிறீர்கள்? ‘‘நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்கு கவனமாய்ச் செவிகொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள்’’ என்று அழைக்கும் தேவனிடம் திரும்புங்கள். எகிப்தில் அடிமைத்தனத்திலே இருந்த இஸ்ரவேலரை கர்த்தர் அழைக்கும்போது பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பேன் என்றார். அந்த வார்த்தையை நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டவர்கள் அதில் பிரவேசித்து தாங்கள் கட்டாத வீடுகளில் குடியிருந்து, தாங்கள் நடாத திராட்சத் தோட்டங்களை அனுபவித்து, மகிழ்ச்சியோடிருந்தார்கள். இச்செய்தியை வாசிக்கின்ற நீங்களும் நானும் தேவனுக்கு கவனமாக செவி கொடுத்து அவரண்டை செல்லும்போது நம்முடைய ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். மேலும், பரலோக பாக்கியத்தையும் பெறுவோம். சாமுவேல் புஸ்தகத்தில் அன்னாளைப் பற்றி வாசிக்கிறோம். அவளை, அவளுடைய சக்களத்தி துக்கப்படுத்தும்படியாக மிகவும் விசனப்படுத்துவாளாம். அவளோ! தனக்கு குழந்தை இல்லாததை நினைத்து சாப்பிடாமல் அழுது கொண்டிருப்பாள். இப்படியிருக்கும் சமயத்தில் அன்னாள் தேவ சமூகத்திற்குப்போய், மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள். அதைப் பார்த்த ஏலி என்ற தேவமனிதன்: நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னை விட்டு விலக்கு என்றான். அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக; அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ: நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை: நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்றாள். இவளுடைய ஜெபம் தேவ சமுகத்தில் கேட்கப்பட்டு சாமுவேல் என்ற



பிள்ளையாண்டானை பெற்றாள். இப்படி தாகமுள்ள ஆத்துமாவையே கர்த்தர் ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். ‘‘தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல், ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்’’ என்ற ஏசா.44:3–ன்படி தாகமுள்ளவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

ஏலியின் காலத்தில் கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது. அப்பொழுது தேவ சமுகத்தில் வளர்க்கப்பட்ட சாமுவேலை கர்த்தர் அழைத்தார். சாமுவேலோ, ஏலிதான் தன்னை அழைக்கிறார் என நினைத்து ஏலியிடம் என்னைக் கூப்பிட்டீரோ என்றான். ஏலியோ கர்த்தர் சாமுவேலை கூப்பிடுகிறார் என்று அறிந்து உன்னை கூப்பிட்டால் ‘‘நீ: கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன்’’ என்று சொல் என்றான் (1சாமு.3:9). அந்தப்படியே சாமுவேல் கீழ்ப்படிந்தான். கர்த்தருடைய வார்த்தை அபூர்வமாயிருந்த காலத்தில் எப்படிப்பட்ட ஆவலோடு காத்து இருந்திருக்கிறார்கள் என்பதை தியானித்துப்பாருங்கள். அப்படி ஆவலோடு எதிர்பார்த்திருந்தபடியால் ‘‘வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளை ஊற்றுவேன்’’ என்ற வார்த்தைபடி சாமுவேல் தீர்க்கதரிசியைக் கொண்டு அந்நாட்களில் ராஜாக்களை எழுப்பி ஆசீர்வதித்தார். தேவனுடைய மனுஷனாகிய சிம்சோனை அறிவீர்கள். அவனை ஒருமுறை பெலிஸ்தர்கள் இரண்டு புதுக் கயிறுகளாலே கட்டி அவனுக்கு விரோதமாக ஆரவாரம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி அவன் கட்டுகள் அவன் கைளைவிட்டு அறுந்துபோயிற்று. உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத்தாடையெலும்பைக் கண்டு தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம்பேரைக் கொன்று போட்டான். பின்பு அவன் தாகமடைந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டு: தேவரீர் உமது அடியேன் கையினாலே இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, இந்த விருத்தசேதனம் இல்லாத பெலிஸ்தர்கையிலே விழ வேண்டுமோ என்றான். அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப் பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஓடி வந்தது; அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது; அவன் பிழைத்தான். ‘‘பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர்’’

சகரி.4:6–ல் உரைத்த வாக்கின்படியே கர்த்தருடைய ஆவியின் பெலத்தால் பெலிஸ்தரை முறியடித்தான்.

தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். அவர் கோபம் கொண்டாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். இதை அநேகர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, இரண்டு நினைவுகளால் எப்பொழுதும் குந்திக்குந்தி நடக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தர் கூறும் வார்த்தையைக் கேளுங்கள்: ''என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்'' (எரே.2:13). இன்றைக்கு அநேக கிறிஸ்தவ சகோதர சகோதரிகள் செய்கிற காரியத்தை அன்றைய நாட்களில் வாழ்ந்த தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்களும் செய்துள்ளார்கள். ''நம்முடைய தேவன் ஜீவதண்ணீர் ஊற்று'' அவரை நாம் விட்டு விடலாமா? ஆசீர்வாதத்தை பெற எலிசா எலியாவை விடாமல் பின் தொடர்ந்தான். எலியாவோ நீ இங்கே இரு கர்த்தர் என்னை அவ்விடம் போக அனுப்புகிறார் என்று மூன்று முறை அவனை கேட்டுக்கொண்டான். எலிசாவோ நான் உம்மை விடுகிறதில்லை என்று பிடிவாதமாய் அவனை விட்டு பிரியாதிருந்தான். அப்படியிருந்தபடியால் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான். நாமும் ஜீவஊற்றாகிய கர்த்தரை விடாது பற்றிக்கொள்ளும் போது வற்றாத நீரூற்றைப்போலிருப்போம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சமாரியா ஸ்திரீயினிடத்தில் பேசுகிறபோது'' நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார் (யோவா.4:10). கர்த்தர் தம்மிடத்தில் வருகிறவர்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் தேவையான ஆசீர்வாதத்தைக் கொடுக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆகையால் தான் ''நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்'' என்றார் (யோவா.4:14). இந்த ஜீவதண்ணீரை அதாவது அவருடைய ஜீவனுக்கு ஏதுவான உபதேசத்தை இன்று நீங்கள் பெற்றுக்கொண்டால் ஜீவகாலமெல்லாம் அவரோடு வாழும் நித்திய பாக்கியத்தைப் பெறுவீர்கள். ''ஒருவன்



தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்'' என்று அழைக்கும் இயேசுவண்டை வந்து அவர் கொடுக்கும் இலவசமான ஜீவதண்ணீரைப் பெற்றுக்கொள்ளுங்கள். ''நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்'' என்று வெளி.21:6–ல் திருவுளம்பற்றுகிறார். இதோ தாகமாயிருக்கிற உங்களுக்கு இலவசமான ஜீவத்தண்ணீரை கொடுக்க ஆயத்தமாயிருக்கிற கர்த்தரண்டை வந்து பணமுமின்றி, விலையுமின்றி வாங்கி பருகுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா மகிழ்ச்சியாகும். உங்கள் செவியை சாய்த்து அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படியுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். வெடிப்புள்ள தண்ணீர் நிற்காத தொட்டிகளை உங்களுக்கு நீங்களே வெட்டிக்கொள்ளாதிருங்கள். கர்த்தர் தாமே உங்கள் தாகத்தைத் தீர்ப்பாராக!

**கேள்வி நேரம்**

**தண்ணீர் மட்டும் மனிதனுடைய தாகத்தை தீர்த்துவிடுமா?**

தண்ணீர் மனிதனுடைய தாகத்தை தற்போதைக்கு மட்டுமே தீர்க்கிறது. அது நிரந்தரமாக மனிதனுடைய தாகத்தை தீர்ப்பதில்லை. முதலாவது ஒவ்வொருவரும் பூரணமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஆண்டவர் இயேசுவண்டை வரவேண்டும். அவர் ஒருவரே மனிதனுடைய தாகத்திற்கு நிரந்தர பரிகாரர். அவரிடத்தில் பணமுமின்றி விலையுமின்றி பெற்றுக்கொள்ளலாம். அவர் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.

அவர் கொடுக்கிற தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது என்கிறார். மேலும், நான் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும் என்கிறார். நித்திய நித்திய காலமாக ஊறுகிற ஜீவத்தண்ணீரை ஆண்டவர் இயேசுவண்டை வந்து பெற்றுக்கொள்ளுங்கள். உலகத்தில் கொஞ்சகாலம் திருப்திசெய்யக்கூடிய வாழ்வை நாடாது, நித்தியத்திற்கு கொண்டுசெல்லும் கர்த்தருடைய வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**"என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதகங்களை நீ கேளாதே" – நீதிமொழிகள் 19:27**

# 10. நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்
# I`ll Rejoice In The Lord

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வருடத்தின் துவக்கத்தில் இருக்கிற நாம், **நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்** I`ll Rejoice in the Lord என்று வாய்விட்டு சொல்லுவோம். அப்பொழுது நம் கவலைகள் நம்மை விட்டுபோகும். கடந்த வருடத்திலிருந்து நீங்கள் எதிர்பார்த்தது கிடைக்காமலிருக்கலாம் அல்லது பல வருடங்களாக காத்திருந்து இதோ! புதிய வருடம் பிறந்துவிட்டது இன்னும் நான் நினைத்தது நடக்கவில்லையே என்ற ஏக்கம் இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் நீங்கள் கர்த்தருக்குள் இருந்தால் மகிழ்ச்சியாயிருக்கலாம். ''மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைசெய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்'' என பிர. 3:12– ல் பிரசங்கி கூறுகிறான்.

மகிழ்ச்சி மனிதனுக்கு பல வகையில் வருகிறது. வேலை கிடைத்த மகிழ்ச்சி, பரிட்சையில் தேர்ச்சி பெற்ற மகிழ்ச்சி, விளையாட்டில் வெற்றிபெற்ற மகிழ்ச்சி, பணம் கிடைத்த மகிழ்ச்சி, திருமண மகிழ்ச்சி, குழந்தை பிறந்த மகிழ்ச்சி இப்படி மகிழ்ச்சி மனிதனை பல வகையில் மகிழச்செய்கிறது. இப்படிப்பட்ட மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம் எனவேதம் கூறுகிறது. ''நகைப்பிலும் மனதுக்குத் துக்கமுண்டு, அந்த மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம்'' (நீதி . 14:13). ஆக இவ்விதமான மகிழ்ச்சியை அனுபவித்த மனுஷன் முடிவிலே சஞ்சலத்தோடு செல்கிறான். மகிழ்ச்சி மனிதனுக்கு பல வகையில் வந்தாலும் கர்த்தருக்குள் கிடைக்கும் மகிழ்ச்சி என்பது நிறைவானது. இந்த மகிழ்ச்சியை, கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் அநுபவிக்கிறது. அது உலகப்பிரகாரமான ஆசீர்வாதமல்ல ''அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை



மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்'' (ஆபகூக் 3:17–19). ஒன்றுமே இல்லாமற்போனால் எங்கிருந்து வரும் மகிழ்ச்சி என்று நினைக்கிறீர்களா? இது கர்த்தருக்குள் வரும் மகிழ்ச்சி. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல மாற்றுகிறவர் கர்த்தர். அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற எந்த மனுஷனும் எது குறைவானாலும் அதைக்குறித்து கவலை கொள்ளாமல் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பான்.

இயேசுவின் நாட்களில் திரளான ஜனங்கள் மூன்று நாட்களாக அப்பம் புசியாமல் வனாந்தரமான இடத்திலே தங்கியிருந்து இயேசுவின் போதகத்தை கேட்டனர். ஆண்டவர் அவர்களை பட்டினியாய் அனுப்பிவிட மனதில்லை என்று தம்முடைய சீஷர்களைப் பார்த்து சொன்னார். ''அதற்கு அவருடைய சீஷர்கள் இவ்வளவு திரளான ஜனங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி கிடைக்கும் என்றார்கள். அதற்கு இயேசு: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார் அவர்கள் ஏழு அப்பங்களும் சில சிறு மீன்களும் உண்டு என்றார்கள். அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் அந்த மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள் எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடைநிறைய எடுத்தார்கள், ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள்'' (மத்.15:33–38).

சீஷர்களோ இந்த வனாந்தரத்தில் இவ்வளவு திரளான ஜனங்களுக்கு அப்பங்கள் எப்படி கிடைக்கும் என்றார்கள். கர்த்தரோ! அந்த ஜனங்களை அற்புதமாக போஷித்தார். அங்கு அப்பம் சுடப்படவில்லை, மீன் சமைக்கப்படவில்லை, ஆனாலும் போஷிக்கப்பட்டார்கள். கர்த்தர் நம்மை நேசிக்கிறவரும் போஷிக்கிறவருமாயிருக்கிறார். ஆதலால் கர்த்தருக்குள் இருக்கிறவர்கள் எதை இழந்தாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பார்கள், இதை ஒருவரும் எடுத்துப்போட முடியாது. கர்த்தர் அவர்களோடிருக்கிறார் அவர்கள் கர்த்தரோடிருக்கிறார்கள். ''ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் '' (யாக். 5:13). துன்பம் வரும்நேரத்தில் விசுவாச குறைவு ஏற்படும். தேவன் கைவிட்டு விட்டாரோ என்ற கவலை உண்டாகும். யோபு என்ற தேவதாசனை

நாம் அறிவோம். அவனுக்கு ஏழுகுமாரரும், மூன்று குமாரத்திகளும், ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமின்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். இவ்வளவு திரளான ஆஸ்தியுள்ள யோபுவின் வாழ்க்கையில் சோதனைக்காரன் வந்து யோபுவை சோதிக்க ஒரே நாளில் அவனுக்குள்ள எல்லாவற்றையும் பறித்துக்கொண்டான். யோபுவோ! **கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்(யோபு1:21).** இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை தேவனைப்பற்றி குறைசொல்லவுமில்லை, மாறாக ஜெபம் பண்ணினான் " கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார், யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குக் தந்தருளினார்". (யோபு. 42:10). இந்த யோபுவைப்போல துன்பம் வரும் வேளையில் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் வாழ்க்கையை இன்பமாக மாற்றுவார். ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம்பாட வேண்டும்.

வேதாகமத்தில் சொல்லப்பட்ட தேவதாசர்களில் அதிக சந்தோஷமாக இருந்தவன் யாரென்றால் அவன் தாவீதாகத்தானிருக்க வேண்டும். அவனே அதிகபாடல்களை எழுதியுள்ளான். அவன் சொல்லி முடியாத மகிழ்ச்சியில் மூழ்கி இருந்தபடியால் இத்தனை சங்கீதங்களையும் பாடமுடிந்தது. "நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது" ஆடுகளின் பின்னே சென்ற இந்த தாவீதை கர்த்தர் தமக்கு ஏற்ற தாசனாக தெரிந்து கொண்டார். செம்மையான இருதயத்தோடும், மகிழ்ச்சியோடும் கர்த்தரை துதித்து பாடினான். "மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்". மேல் நாட்டவர்களின் போட்டோக்களையும் நம் நாட்டவர்களின் போட்டோக் களையும் ஒப்பிட்டுப் பாருங்கள் அவர்கள் எப்போதும் சிரித்த முகத்துடன் மகிழ்ச்சியாக காணப்படுவார்கள். ஆனால் நம் நாட்டவர்களின் போட்டோக்கள் பார்ப்பவர்களை முறைப்பது போலவும், பல்லை கடிப்பது போலவும் இருக்கும். " கர்த்தரை தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக " என்று சங். 105 :3–ல் தாவீது எழுதுகிறான். மேல் நாட்டவர்கள் கர்த்தரைத் தேடுகிறதில் கைதேர்ந்தவர்கள். வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்து அவருடைய விருப்பத்தையும் செய்கைகளையும் பூமியிலே நிறைவேற்றுகின்றனர் ஆதலால் அவர்களுடைய இருதயம் மகிழ்கிறது.



வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுபோகும் என்பார்கள். வேதம், "மன மகிழ்ச்சி நல்ல ஔஷதம்" என நீதி. 17:22 கூறுகிறது. மனமகிழ்ச்சி சிறப்பான மருந்தாகும் . கண்ட கண்ட மருந்துகளை உட்கொள்வதை விட வேதம் கூறுகிற விதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கக் கற்றுக் கொள்ளுங்கள், அப்போது குணப்படுவீர்கள்.

கர்த்தரை ஆராதிக்கும்போது கடனுக்கு ஆராதிக்காமல் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் தேவனை ஆராதிக்க வேண்டும். குறிப்பாக சொல்லப்போனால் முந்தின நாளிலே ஆயத்தப்படுவது மிகவும் நல்லது. பலர் ஞாயிற்றுகிழமை விடுமுறை என்று எண்ணி காலை 8 மணி வரை தூங்கிக்கொண்டு இருப்பார்கள். இன்று ஒருநாள் தான் விடுமுறை அந்த நாளிலும் ஏன் தான் இப்படி தொல்லை கொடுக்கிறார்களோ! என்று சலித்துக் கொள்ளுவார்கள். ஞாயிற்று கிழமையை தேவன் ஓய்வுக்காக கொடுக்கவில்லை. அது கர்த்தருடைய நாள், அதிலே கர்த்தருடைய காரியங்களை நாம் சிறப்பாக செய்யவேண்டும். மற்ற ஆறு நாட்களும் நமக்கு கொடுக்கப்பட்டவை அதிலே நம் வேலைகளை பார்த்துக்கொள்ளலாம். தாவீது சொல்வதை இங்கு கவனியுங்கள் "மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள்" (சங்.100:2). கர்த்தர் நமக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறார் அதையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்கும் போது நமக்கு மெய்யாகவே ஆனந்த சந்தோஷம் உண்டாகும்.

பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்கு போகும் பொழுது வாசலண்டையிலே தன் தாயின் வாயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷன் அவர்களைப் பார்த்து பிச்சை கேட்டான்" அப்பொழுது பேதுரு : வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி ; வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கி விட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்து எழுந்து நின்று நடந்தான்; நடந்து குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு , அவர்களுடனே கூட தேவலாயத்துக்குள் பிரவேசித்தான். இந்த சப்பாணிக்கு கர்த்தர் செய்த காரியத்தை நினைத்து அவனுடைய மனது எத்தனை சந்தோஷமடைந்தது! நாமும் தேவனிடமிருந்து பெற்ற நன்மைகளை நினைத்து ஒவ்வொரு வாரமும் தேவனை ஆராதிக்க மகிழ்ச்சியோடும், ஆனந்த சத்தத்தோடும் அவர் சமூகத்திற்கு செல்வோம்.

இச்செய்தியை கேட்கும் அன்பு நண்பனே, சகோதரனே, சகோதரியே உன்னுடைய மகிழ்ச்சி எப்படிப்பட்டதாயிருக்கிறது? கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்குள் இருக்கும் மகிழ்ச்சியைப் பெற்று சந்தோஷமாயிருங்கள்.

**கேள்வி நேரம்**

**மகிழ்ச்சி மாயையான ஒன்றா?**

''மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளிளெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்க வேண்டும்; அவைகள் அநேகமாயிருக்கும்: வந்து சம்பவிப்பதெல்லாம் மாயையே'' (பிர. 11: 8) என வேதம் கூறுகிறது. மாயையான மகிழ்ச்சிக்கு அடிபணிந்து மாறாத ஆண்டவரை தெரிந்து கொள்ளாமலும், அவருக்குள் இருக்கின்ற மகிழ்ச்சியை அநுபவிக்காமலும், போனால் பயன் என்ன? ''வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி'' (பிர. 11:9).

ஆளில்லாத தோட்டத்தின் வழியாக கடந்து செல்லுகிறவன் பழுத்த பழங்களைக் கண்டு இச்சித்து பறித்துக்கொண்டு பின்பு சந்தோஷப்படுவான். காவலாளியைக் கண்டவுடன் அவன் படும் பயத்திற்கு அளவே இருக்காது. அதைப்போல எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என வாழ்கிறவர்கள், ஒருநாளில் நம்மை உண்டாக்கிய தேவனுக்கு கணக்குக்கொடுக்க வேண்மென்பதை ஒருநாளும் மறந்துபோகாதிருக்கவேண்டும். தேவன் எல்லாவற்றையும் நியாயத்திலே கொண்டுவருவார்.

ஆகையால், மாயையான மகிழ்ச்சிக்கு அடிபணியாமல், கர்த்தருக்குள் இருக்கிறதான மெய்யான மகிழ்ச்சியைப் பெற்று அநுபவியுங்கள். கர்த்தருக்குள் வருகிறதான மகிழ்ச்சியை ஒருவரும் உங்களிடமிருந்து பறித்துக்கொள்ளமுடியாது. அது ஜீவகாலமெல்லாம் உங்களுக்குள்ளே ஊறுகிற நீர் ஊற்றாயிருக்கும்.

**"தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்" – நீதிமொழிகள் 28:26**



## 11. ஆரம்பம்
## Beginning

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆதியும் அந்தமுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வருட துவக்கத்தில் 'ஆரம்பம் – Beginning' என்ற செய்தியின் மூலம் நான் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்ப நிகழ்ச்சிகளை நாம் யாரும் மறக்கமுடியாது. ஒவ்வொருவரும் ஆரம்பத்தில் பல தீர்மானங்களை எடுப்பார்கள். ஆரம்ப தீர்மானம் அருமையாயிருந்தாலும் அதை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக் கொண்டு நிலைத்திருப்பதே மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும், ''ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு'' என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம் (பிர.3:1). இக்காலங்களை நாம் சரியாக பயன்படுத்தி ''விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'' (எபி.12:1). நம்மிலே விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. ஆகையால்அவர் மேல் நாம் நம்பிக்கை வைத்து நமது ஆரம்பத்தை துவக்குவோம்.

இவ்வருடத்தின் முதலாம் மணிவேளையை ஆண்டருக்கு கொடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ''இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்; அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது'' (1பேது. 2:6). ஆம், பிரியமானவர்களே, அந்தக்கல் கிறிஸ்துவே! அவரில், நீங்கள் விசுவாசம் கொள்ளும்போது வெட்கப்பட்டுப்போவதில்லை. அவருக்குக் காத்திருக்கிறவர்கள் கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். நீங்கள் எடுத்த தீர்மானத்தில் உறுதியாயிருங்கள். உங்களுடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும் முடிவிலே சம்பூரண ஆசீர்வாதம் பெறுவீர்கள். ஆகையால் நம்பிக்கையில் தளர்ந்து போகாதிருங்கள். நீங்கள் எடுத்த தீர்மானங்களை நான் அறியேன் ஆனால் கர்த்தர் நிச்சயம் அறிவார்.

உங்களுடைய விசுவாசத்தின் ஆரம்பம் உங்கள் மாணவ பருவத்தில் ஏற்பட்டிருக்கலாம், தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஏற்பட்டிருக்கலாம், அல்லது திருமணத்தில் ஏற்பட்டிருக்கலாம் . நீங்கள் எங்கே உங்களுடைய விசுவாசத்தை துவக்கினாலும் அதை முடிவுபரியந்தம் காத்துக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால்; ‘‘நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப் போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்’’ என எபி.3:14–ல் வாசிக்கின்றோம். விசுவாசத்தை நம்மில் துவக்கினவர் அந்த விசுவாசம் முடிவுபரியந்தமுமிருக்க எதிர்பார்க்கின்றார். அதிலே நாம் நிலைத்திருக்கும்போது அவரிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள் என்கிறார். மேலும், வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் உள்ள எபேசு சபைக்கு கர்த்தர் எழுதும்போது ‘‘நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு’’ என்கிறார் (வெளி.2:4). பொதுவாக ஆரம்ப விசுவாசம், அன்பு இவை எல்லாமே மிக நன்றாகத்தானிருக்கும். போகப்போக நாளடைவில் எல்லாம் குறைய காணப்படும். இதற்கு என்ன காரணம்? நாம் ஆராய்ந்து பார்க்கும்போது நம்பிக்கை இல்லாமையே என அறிந்து கொள்கிறோம். நம்பினவர் நட்டாற்றில் விட்டார் என சொல்வார்கள் அது உண்மையிலும் உன்மை. ஏன் மனிதனை நம்பவேண்டும்? ‘‘மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்’’ என சங்.118:8–ல் வேதம் நமக்குப்போதிக்கிறது. அதுமட்டுமல்ல ‘‘கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல இருப்பார்கள்’’ எனவும் வாசிக்கிறோம் (சங்.125:1).

ஆரம்பத்திலேயே ஆசீர்வாதங்களை அளவில்லாமல் பெற வேண்டும் என்றிருக்கிறவர்கள் அநேகர். ஆனால் வேதம் சொல்லுகிறது ‘‘ஆரம்பத்திலே துரிதமாகக் கிடைத்த சுதந்திரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது’’ (நீதி.20:21). இதைக் குறித்து கர்த்தர் விளக்கமாக ஒரு உவமையின் மூலம் நமக்கு விளக்குகிறார். என்னவென்றால் ‘‘கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்



கொள்ளாதபடியினாலே, கொஞ்சகாலமாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்’’ (லூக்.8:13). அந்தப்படியே ஆரம்பத்தில் துரிதமாய் ஆசீர்வாதம் பெற்றவர்களும் சோதனை காலத்தில் பின்வாங்கிப்போய், முடிவிலே ராஜ்யத்திற்கு தூரமாவார்கள். ஆகையால் பிரசங்கி எழுதும்போது ‘‘ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது’’ ( பிர.7:8 ) என்கிறார். இதைக்குறித்து பவுல் குறிப்பிடும்போது ‘‘ நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்... சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டே னென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்’’ என்கிறார் (பிலி.3:12–14). ஆரம்பத்திலே ஆசீர்வாதத்தை பெற்றுவிட்டோம் என்று இல்லாதபடி முடிவான ஆசீர்வாதத்தை நோக்கி நாம் வெற்றி நடை போடவேண்டியது மிக அவசியம். பவுல் சொல்வதைப்போல பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுங்கள்.

துவக்கத்தை தடுக்க தூங்காமல் விழித்திருப்பவன் பிசாசு. ஆகையால் ‘‘தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்’’(1பேது.5:8). பிசாசானவன் யூதாசுக்குள் புகுந்ததுபோல, சத்தியத்திற்கு செவிகொடாத மனுஷருக்குள்ளும் புகுந்து எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆரம்பத்திலே கலாத்திய சபையாரையும் விழுங்கப்பார்த்தான். இதை அறிந்த பவுல் அவர்களுக்கு பரிசுத்தஆவியானவரின் உதவியோடு எழுதும்போது ‘‘நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்கு கீழ்படியாமற்போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்?’’ (கலா.5:7) மேலும் ‘‘புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்படியாமற்போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே... ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்போது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களா? அவைகள் வீணாய்போயிற்றே’’ என்று எழுதுகிறார்

(கலா.3:1–4). **நீங்கள் இப்புத்தாண்டை ஆவியில் ஆரம்பம் பண்ணப்போகிறீர்களா? அல்லது மாம்சத்தில் ஆரம்பம் பண்ணப்போகிறீர்களா?** மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது என்பதை நாம் அறிவோம், வேதமும் இதைக்குறித்து எச்சரிக்கிறது. "தன் மாம்சத்திற்கென்று விதைவிதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைவிதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்" (கலா.6:8). நீங்கள் எதற்கென்று விதை விதைக்கப்போகிறீர்கள்?

ஐசுவரியவான் ஒருவன்: "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்.... தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்". தன் மாம்சத்திற்கென்று வாழ்கிறவனுடைய முடிவு மேற்கண்ட ஐசுவரியவானுடைய முடிவைப்போலிருக்கும். ஆவிக்கென்று விதைவிதைத்த ஸ்தேவானுடையகுடும்பத்தைப் பற்றி 1கொரி.16 ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம்.

ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற் பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே..... அவர்கள் என் ஆவிக்கும் உங்கள் ஆவிக்கும் ஆறுதல் செய்தவர்கள். இப்படிப்பட்டவர்களை அங்கிகாரம் பண்ணுங்கள் என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார். மேலும், ஆவிக்கென்று விதை விதைத்த வைத்தியனாகிய லூக்கா மகா கனம் பொருந்திய தேயோப்பிலுவுக்கு எழுதும்போது, "ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக்குறித்து சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று,



அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" என்று எழுதுகிறார் (லூக்.1:2–4). பரிசுத்த வேதாகமம் மட்டுமே ஆரம்பமுதல் பேசுகிறது. மற்றவைகள் முதலுமில்லாமல் முடிவுமில்லாமல் தோற்றமளிக்கின்றன. உங்களுடைய நம்பிக்கையை முதலாவது பரிசுத்த வேதாகமத்தில் துவக்குங்கள். ஏனென்றால் ஆதிமுதலாய் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த லூக்கா எழுதுவதுபோல வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்ட ஒன்று. இதை தொடர்ந்து படிக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமத்தை ஒருமுறை முழுமையாக நீங்கள் படிக்கவில்லையென்றால்; இம்மாதமே உங்கள் வாசிப்பை துவக்குங்கள். இவ்வருடத்தில் வேதம் வாசிக்கும் பழக்கம் உங்களுக்கு ஆரம்பமாகட்டும்.

**கேள்வி நேரம்**

**உலகத்தோற்றத்திற்கு ஆரம்பம் உண்டா?**

உலகத்தோற்றத்திற்கு ஆரம்பம் உண்டு. "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"(ஆதி.1:1). அதைப்போல மனிதனுடைய தோற்றத்திற்கும் ஆரம்பமுண்டு. உலகத்தில் ஆரம்பமில்லாமல் ஒன்றுமில்லை. **இப்புத்தாண்டில் புதிய தீர்மானத்தோடு ஆரம்பிக்கப்போகிற உங்களை நான் வேண்டிகொள்வதென்னவென்றால் நீங்கள் எதைச்செய்தாலும் அதை கர்த்தருடைய நாம மகிமைக்கென்றே செய்யுங்கள்.** அற்பமான ஆரம்பமாக இருந்தாலும் அது அநேக ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். நாம் யாவரும் பிறக்கும்போதே அனைத்து ஆசீர்வாதங்களோடும் கூட பிறப்பது இல்லை. மாறாக படிப்படியாக ஒவ்வொன்றையும் பெற்றுக்கொள்கிறோம். அதைப்போல உங்களுடைய எதிர்பார்ப்பை நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் ஆரம்பியுங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

**"அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்ளுவார், நீ பொய்யனாவாய்" – நீதிமொழிகள் 30:6**

## 12. எதைப்பார்க்கப் போனீர்கள்?
## What Did You Go Out To See?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உலகத்தோற்றத்திற்கு முன்னே முன்குறிக்கப்பட்ட ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எதைப்பார்க்கப் போனீர்கள்? – What did you go out to see? இயேசுவுக்கு முன்னோடியாக "அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்" என்பதை நாம் அறிவோம். ஆதிமுதல் யூதேயாவில் உள்ள எருசலேமை தேவன் தெரிந்துகொண்டார். ஆதலால் எருசலேம் துவங்கி மனந்திரும்புதலின் செய்தியானது சகல தேசத்தாருக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. யோவான்ஸ்நானன் இங்கு தமது முதல் பணியை துவக்கினான், அவனுக்கு பின்பு வந்த ஆண்டவர் இயேசுவும் தமது ராஜ்யமாகிய சபை பணியை இங்கு துவக்கி சகல தேசத்தாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற மாபெரும் கட்டளையைக் கொடுத்தார்.

"இயேசுவானவர் யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையா? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள் அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அதெப்படியெனில்; இதோ நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன் தான். ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன்ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" என்றார் (மத்.11:7–11). இன்று சுவிசேஷத்தை கேட்க வருகிறவர்களையும்,



சுவிசேஷத்திற்கு கீழ்படிகிறவர்களையும், சபைக்குச் செல்லுகிறவர்களையும் பார்த்து ஆண்டவர் கேட்ட அதே கேள்வியை நாம் கேட்போமானால் எப்படியிருக்கும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அன்று வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலேகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். ஆண்டவர், இதைக் கேட்க கடந்து சென்ற ஜனங்களைப் பார்த்து எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள் காற்றினால் அசையும் நாணலையோ? என்று கேட்டார். ஆக, மனந்திரும்புதலுக்கு ஏற்ற செய்தியை கேட்கப் போகாமல் காற்றினால் அசையும் நாணலை பார்க்க கடந்து சென்றிருக்கிறார்கள். ஆகையினாலே அவர் இக்கேள்வியைக் கேட்டிருக்கக் கூடும். அதைப்போலவே இன்று சுவிசேஷத்தைக்கேட்க வருகிறவர்கள், சுவிசேஷ வசனங்களைக் கேட்டு கீழ்படிவதை விட்டு விட்டு, அங்குள்ள அலங்காரப் பொருட்களையும், ஜனக்கூட்டத்தையுமே காண்கிறார்கள். தேவன் எதை முக்கியப்படுத்தி இருக்கிறாரோ அதை அசட்டை செய்து விட்டு கண்களின் காட்சிக்கு தங்களை ஒப்புக்கொடுத்து, சுவிசேஷ வசனத்தைக் கேட்டு மனந்திரும்பி தங்களை ஒப்புக்கொடுக்க மறுக்கிறார்கள்.

**இரண்டாவது முறையும் கர்த்தர் கேட்ட கேள்வி:** அல்லவென்றால், எதைப்பார்க்கப் போனீர்கள் மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள் என்றார். யோவான்ஸ்நானன் வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் சாப்பிட்டு ஒட்டகத்தோளை உடுத்தியிருந்தான். அவனிடத்தில் ஆடம்பரம் காணப்படவில்லை. ஆனால் ஜனங்களுடைய எண்ணம் அவன் உயர்ந்த வஸ்திரம் தரித்திருப்பான் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருப்பான் என்றெல்லாம் கனவு கண்டு அவனை பார்ப்பதற்கு முன்டியடித்துக் கொண்டு சென்று இருப்பார்கள். அவர்களுக்கு கர்த்தர் கூறுகிற காரியம் மெல்லிய வஸ்திரம் தரித்தவர்கள் அரசர் மாளிகைகளில் இருப்பார்கள். இன்றைக்கு அநேக திருச்சபைகளில் அநேகர் தங்களுடைய உயர்ந்த வஸ்திரத்தை, செல்வாக்கை காண்பிக்கவே கடந்து செல்லுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் தேவனை ஆராதிக்க கடந்து செல்லவில்லை தங்களுடைய ஆடம்பரத்தைக் காண்பிக்கவே கடந்து செல்கின்றனர். இதிலே சில ஊழியக்காரர்களும் வீழ்ந்துபோய், தங்களுடைய மேலான வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, மற்றவர்களை அசட்டை செய்து, ராஜாக்களைப்போல உயர்வான சிம்மாசனங்களை போட்டு அமரவுமே

விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட சபைகளுக்கு செல்லுகிறவர்கள் எங்களுடைய சபை இவ்வூரிலே பெரியது, எங்களுடைய சபைக்கு கல்லறை இருக்கிறது. மேலும் பெண் கொடுக்கவும், பெண் எடுக்கவும் வசதியிருக்கிறது என்று பெருமையடித்துக் கொள்வார்கள். எருசலேமில், மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்று பார்க்கிறோம். நமது ஆண்டவர் கட்டடத்தையும், கல்லறையையும் சம்பாதிக்கவில்லை. தம்முடைய ரத்தத்தினாலே சபையை சம்பாதித்தார். இதை அறியாத, புரியாத யோவான்ஸ்நானன் காலத்து ஜனங்களைப்போல இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். நீங்கள் எதைப் பார்க்க செல்லுகிறீர்கள்?

**மூன்றாவது முறையும் கர்த்தர் கேட்டகேள்வி:** அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள் தீர்க்கதரிசியையோ? ஆம் தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனும் எழும்பினதில்லை என்று சொல்லுகிறார். அதே வேளையில் மனந்திரும்பி சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு பரலோகராஜ்யமாகிய சபையில் அங்கமாக இருக்கிற ஒருவன் அவனிலும் பெரியவனாக இருக்கிறான். மேலான சத்தியத்தை அறிவிக்க சுவிசேஷகர்கள் ஏற்படுத்தப்படுகிறார்கள். அந்த சுவிசேஷத்தை கேட்கிற ஜனங்களோ கீழான (அதாவது) அழிந்துபோகக் கூடிய காரியங்களையே உற்று நோக்குகிறார்கள். நம் ஜனங்கள் காப்பி அடிப்பதில் கைதேர்ந்தவர்கள். சுவிசேஷத்தையல்ல, அதைத்தவிர எல்லாவற்றிலும். ஒருவர் வீடுகட்டினால் நாமும் அதைப்போல வீடுகட்டவேண்டும், ஒருவன் வசதியுள்ள இடத்தில் திருமணம் செய்தால் நாமும் அதைப்போல செய்யவேண்டும். ஒருவன் அமெரிக்கா போனால் நாமும் அமெரிக்கா போக வேண்டும். இப்படிபட்ட எண்ணத்திலே முன்னேறு கிறார்களே ஒழிய ஆவிக்குரிய காரியங்களில் முன்னேற்றம் இல்லை. இவர்கள் கற்றுக்கொண்டதெல்லாம் மற்றவர்களுடைய அழிந்து போகும் காரியங்களையே. “மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினா லுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம்: தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்”(1யோவா.2:16,17). நீங்கள் உலக காரியங்களை கற்றும் அதில் நிலைத்திருந்து சகல நன்மைகளையும் அனுபவித்தாலும்



ஒன்றுமில்லை. அவைகள் மண்ணிலிருந்து வந்தது மண்ணுக்கே திரும்பும் . ஆனால் தேவனுடைய திருசித்தமோ பரத்திலிருந்து சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகின்றது.

ஒரு விசுவாசி, மற்றவிசுவாசிகளையோ அல்லது ஊழியர்களையோ பார்த்துவிட்டு திரும்பும்போது அந்த நபர் எப்படிப்பட்டவர் என்று கேட்டால் இந்த நபர் கூறும் முதல் பதில் அவருக்கென்னப்பா சொல்லவா வேணும் நல்லா சொகுசாக வாழ்கிறார் என்பார். அப்படியென்றால் இந்த நபர் அவனிடம் எதைப் பார்க்கப்போனார்? அவனுடைய வார்த்தைகளையோ அல்லது அவனது ஆவிக்குரிய ஜீவியத்தையோ பார்க்காமல் அழிந்து போகும் உடமைகளையே முதலாவது பார்க்கிறான்.

ஆனால், இயேசுவைப் பார்க்க திரளான ஜனங்கள் செல்லுமிடமெல்லாம் சென்றார்கள் என்பதை நாம் வேதத்தின் வாயிலாக அறிகிறோம். ஒரு சமயம் சகேயு என்றவன் இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்கவகைதேடினான். பின்பு அவரைப் பார்த்தவுடன் அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு போய் அவருடைய உபதேசங்களை கேட்டு கீழ்படிந்து என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்ப செலுத்துகிறேன் என்றான். இயேசுவைப் பார்க்கப்போன இவன் இயேசுவினுடைய உபதேசத்தை பற்றிக் கொண்டு அவருக்கு உண்மையுள்ள சீஷனாக மாறினானே தவிர, அவரைப்போல அற்புதங்கள் செய்யவேண்டும் தன்னை எல்லாரும் பின்பற்றவேண்டும். தானே எல்லாருக்கும் மேலானவனாக இருக்கவேண்டும் என்று விரும்பவில்லை. ஒரு சீஷனுக்கு இருக்கவேண்டிய குணம் மற்றவர்களை பாராது இயேசுவை வேதாகமத்தின் வாயிலாக பார்த்து அவருடைய சிந்தையில் வளருவதுதான். “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது” என்கிறார் பவுல் (பிலி.2:5). இன்றைக்கு சிலர் இவைகளை நோக்காமல் வீண் சிந்தையில் வீணராகி வீழ்ந்துபோய் விடுகின்றனர். கர்த்தர் அவனவனை அழைத்தபடியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன்”(1கொரி.7:17). இதை விட்டுவிட்டு வெள்ளாடுகளைப்போல அங்குமிங்கும் பார்ப்போமேயானால் இடது புறத்தில் நிற்கிற ஜனங்களாவோம். உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது என்கிறார் சாலொமோன் (நீதி.4:25). உடுத்தி கெட்டவர்களையும், தின்று கெட்டவர்களையும், பார்த்துக் கெட்டவர்களையும் யாவரும் அறிவார்கள்.

நம்முடைய கண்கள் சரியாய் பார்க்குமேயானால் தவறு ஒன்றுமில்லை. நேராய் நோக்கும் போது தவறு ஏற்பட வாய்ப்பில்லை. நம்முடைய பார்வை தவறுமேயானால் கர்த்தரிடம் கலிக்கம் வாங்கி போட்டுக் கொள்ளுங்கள், இதைக் குறித்து வெளி.3:18 ல் வாசிக்கின்றோம். நல்லதை பார்க்கவும், நல்லதைச் செய்யவும் நமக்கு தேவன் கண்களைக் கொடுத்திருக்கிறார். இதைக் கொண்டு பார்க்கவேண்டியதைப் பார்த்து, வளரவேண்டியதில் வளருங்கள்.

**கேள்வி நேரம்**

**வெற்றி தோல்வி நம்முடைய பார்வையில் அடங்கியிருக்கிறதா?**

ஆம். இஸ்ரவேலர்களில் சிலர் கானானை 40 நாள் வேவு பார்த்து திரும்பி வந்து துர்ச்செய்தியை அறிவித்தார்கள். ஆனால் காலேபோ மோசேக்கு முன்பாக நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என்ற நற்செய்தியை கொண்டுவந்தான். அனைத்தும் பார்வையில் தான் அடங்கியிருக்கிறது. தாவீது கோலியாத்தை ஜெயிப்பதற்கு முன்பு எல்லாரும் பார்த்து பயந்து அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். தாவீதோ பயந்து ஓடாமல் நான் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறேன் என்று அவனை மேற்கொண்டான். இன்றைக்கு வெற்றியும் தோல்வியும் உங்கள் பார்வையில் அடங்கியிருக்கிறது. உலகம் பார்க்கிற பிரகாரம் நாமும் பாராமல் கர்த்தருடைய பார்வையில் சிறப்பானவர்களாயிருக்க மேலானவைகளை நாடுவோம்.

## 13. நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை

## Remember Now Your Creator In The Days Of Your Youth

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவரையும் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கிய நமதாண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகிறோம்.

நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை – Remember now your creator in the days of your youth. மனிதன் மூன்று காலக்கட்டங்களில் வாழ்கின்றவனாயிருக்கிறான். குழந்தைப் பருவம்,



வாலிபப் பருவம், வயோதிப பருவம். இம்மூன்றில் வாலிபப் பருவம் மிகவும் முக்கியமானதே. ஏனென்றால் அவனது வாழ்க்கையின் ‘turning point’ (திருப்பு முனை) அங்கே அமைகிறது. இதிலே மனிதனுடைய எதிர்கால நிலை அடங்கியிருக்கிறது. இங்கே சிந்திக்க வேண்டியவனாகவும், எதிர்காலத்தைப்பற்றி திட்டமிடுகிறவனாகவும் சகலத்தையும் செய்து முடிக்க திராணியுள்ளவனாகவுமிருக்கிறான். இப்பிராயத்தில் உள்ள வாலிபனைப் பார்த்து பரிசுத்தவேதாகமம் இப்படியாக கேட்கிறது **“நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை”(பிர.12:1).**

இது என்ன புது உபதேசமாயிருக்கிறது. நான் சிறுபிராயத்திலிருந்தே போகாத கோயில் இல்லை, படிக்காத வேதமில்லை என்ற எண்ணம் உங்களுக்கு ஒருவேளை எழக்கூடும். மேற்கண்ட வசனத்தை சற்று கவனத்தோடு வாசியுங்கள். “வாலிபப்பிராயத்திலே” என்ற வார்த்தையைப் படிக்கிறோம். அப்படியென்றால் குழந்தைப் பருவத்தில் குழந்தைக்கேற்ற காரியங்களையே நாம் சிந்தித்திருப்போம், செய்திருப்போம். வாலிபப்பிராயம் என்பது யோசித்து நல்ல பல தீர்மானங்களை எடுக்கும் வயது. இப்பிராயத்திலே நாம் நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறியும் பக்குவத்திற்கு வருகிறோம். அதாவது சிந்தித்து செயலாற்றும் திறனைப் பெறுகிறோம். ஆகையால் நாம் நம்மை உண்டாக்கின சிருஷ்டிகரை நினைக்க வேண்டிய பருவமும் இதுவே. இவ்வளவு காலமாக யார், யாரோ சொன்னதை தெய்வங்களாக ஏற்றுக்கொண்டு கீழ்படிதலோடு ஆராதித்து வந்திருப்பீர்கள். இப்போது நீங்கள் சிந்தித்து தீர்மானம் எடுக்க தகுதியுடையவர்களா யிருக்கின்றீர்கள். நம்மை உண்டாக்கிய சிருஷ்டிகரை நினைக்கும்போது அவர் நமக்காக ஏற்படுத்திய அற்புதமான திட்டம் வெளிப்படும். இப்பூமியிலே நீ நடக்க வேண்டிய வழியை அவர் உனக்கு கற்றுக்கொடுப்பார். உன்னை சிருஷ்டித்த கர்த்தர் ஒருபோதும் கைவிடாதவராயிருக்கிறார். அவர் உனக்கு கொடுக்கும் உபதேசத்தை கேட்டு நீ உன் வாலிபப்பிராயத்திலே அவர் வழி நடப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் நீ ஆசீர்வாதம் பெறுவாய்.

“அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும். கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய். உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழுஇருதயத்தோடும் கர்த்தரில்

நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்''(நீதி.3:2–6). ஆறு லட்சத்திற்கு மேற்பட்டவர்களை பொறுப்பேற்று வழிநடத்தின மோசே என்பவன் குழந்தைப் பருவத்தில் பார்வோனுடைய குமாரத்தியினால் ராஜ சமூகத்தில் வளர்க்கப்பட்டான். வாலிப வயதில் தான் யார்? தன்னை சிருஷ்த்த தேவன் யார்? என்பதை அறிந்த அவன் சற்றும் தாமதமில்லாமல் விசுவாசத்தினாலே பெரியவனானபோது ''பார்வேனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையேதெரிந்து கொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்''(எபி.11:25). இந்த மோசேயைப்போல தேவனையும், தேவனுடைய ஜனங்களையும் அடையாளம் கண்டு கொண்டு அவர்களோடு சேர்ந்து வாழப் பிரயாசப்படுங்கள்.

**மனிதன் முன்னேற்றமடைவதும் வீழ்ந்து போவதும் இந்த வாலிபப்பிராயத்திலேதான்!**

ஒரு புத்தியீன வாலிபனைக் கண்டு அவனைக் கவனித்தேன் என்று சாலமோன் ஞானி குறிப்பிடுவதை கவனியுங்கள் ''அவன் மாலை மயங்கும் அஸ்தமனநேரத்திலும், இரவின் இருண்ட அந்தகாரத்திலும், அவள் இருக்கும் சந்துக்கடுத்த தெருவில் சென்று, அவள் வீட்டுவழியாய் நடந்துபோனான். அப்பொழுது இதோ, வேசியின் ஆடையாபரணந்தரித்த தந்திரமனமுள்ள ஒரு ஸ்திரீ அவனுக்கு எதிர்ப்பட்டாள். அவள் வாயாடியும் அடங்காதவளுமானவள்; அவள் கால்கள் வீட்டிலே தரிக்கிறதில்லை. சிலவேளை வெளியிலிருப்பாள், சிலவேளை வீதியிலிருப்பாள், சந்துகள்தோறும் பதிவிருப்பாள் அவள் அவனைப் பிடித்து முத்தஞ்செய்து, முகம் நாணாமல் அவனைப்பார்த்து சமாதானபலிகள் என்மேல் சுமந்திருந்தது, இன்றைக்குத்தான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன்...... வா, விடியற்காலம் வரைக்கும் சம்போகமாயிருப்போம், இன்பங்களினால் பூரிப்போம். புருஷன் வீட்டிலே இல்லை, தூரப்பிரயாணம் போனான்.....தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவனை இணங்கப்பண்ணினாள். உடனே அவன் அவள் பின்னே சென்றான். ஒரு மாடு அடிக்கப்படுவதற்கு செல்வதுபோலும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டு தண்டனைக்குப்



போவதுபோலும்,......அவளுக்குப் பின்னே போனான்; ..... ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்: என் வாயின் வார்த்தைகளைக் கவனியுங்கள். உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித்திரியாதே .... அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி; அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்'' என்கிறார் சாலொமோன் (நீதி.7:8–27). இன்றைக்கு அநேகவாலிபர்கள் அடிக்கப்படும் மாடுகளைப்போல சென்று பாவத்தில் வீழ்ந்து **எய்ட்ஸ்** போன்ற நோய்களுக்கு ஆளாகிறார்கள். இவ்வழி மரண வழி என்று அன்றே சாலமோன் ஞானி தேவ ஆவியின் ஏவுதலால் எழுதிவைத்திருக்கிறார். தேவனால் நேசிக்கப்படுகிற வாலிப சகோதரனே! சற்று சிந்தித்துபார். என் தலையெழுத்துபோல ஆகட்டும் என்று சொல்லாதே. வாழ்க்கையில் நீ முன்னேறுவதும், வீழ்ந்து போவதும் உன் கையில் உள்ளது. நீ எதை தெரிந்தெடுக்கிறாயோ அதைப் பொறுத்தே உன் வாழ்க்கையானது அமையும். பவுல் தீமோத்தேயு என்ற வாலிப சகோதரனுக்கு கூறும் அறிவுரையைப் பாருங்கள்: **''அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு, புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு''** என்கிறார் பவுல் (2தீமோ.2:22,23). பாலியத்துக்குரிய இச்சைகள் பாதாளம் வரை கொண்டு செல்லும். இவைகளை விட்டு விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரை தொழுது கொள்கிறவர்களுடனே சேர்ந்து தொழுது கொள்ளுங்கள்.

யோசேப்பு என்ற இளைஞன் தன்னுடைய பதினேழாம் வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்து வந்தான். இந்த யோசேப்பு தன் சகோதரர்கள் செய்து வந்த துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான். இப்படி பல காரியங்களை வைத்து அவன் சகோதரர்கள் அவனைப் பகைத்தார்கள். பின்பு சமயம் பார்த்து அவனை தூக்கி இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அதன்பின் போத்திபார் என்பவன் இஸ்மவேலர் கையில் இவனை விலைக்கு வாங்கி தன் வீட்டு விசாரணைக்காரனாக்கினான். போத்திபாரின் மனைவி இவன்மேல் கண்போட்டு விரும்பினாள். இவனோ அதற்கு இணங்காமல் மறுத்து நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன் பட்டு தேவனுக்கு விரோதமாய்

பாவஞ்செய்வது எப்படி என்று விலகியோடினான். பின்பு, தேவன்மேல் கொண்டிருந்த பயபக்தியினிமித்தம் இவன் எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக மாற்றப்பட்டான். இந்த யோசேப்பைப் போல தேவனுக்கு பயந்து உன் வாலிபப்பிராயத்திலே பாவத்துக்கு விலகியோடும் போது யோசேப்பைப்போல நீயும் ஆசீர்வதிக்கப்படுவாய். இங்கே தாவீது சொன்ன வசனத்தை நினைவு கூருவோம்: ''வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே''(சங்.119:9). ''கர்த்தர் நன்மையானதைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்''(நீதி.2:6). கர்த்தரைப் பற்றிக் கொள்ளுகிறவர்களுக்கு கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்.

தாவீது ராஜா இளைஞனாக இருந்தபோது சவுல் ராஜா தாவீதைப் பார்த்து ''நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம்பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயது முதல் யுத்தவீரன் என்றான் ....அதற்கு தாவீது என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான். அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து: போ, கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக என்றான்''(1சாமு.17:33–37). அந்தப்படியே கர்த்தர் கொடுத்த ஞானத்தினால் ஐந்து கூழாங்கல்லுகளைத் தெரிந்து கொண்டு அவைகளில் ஒன்றை பெலிஸ்தியனுடைய நெற்றியிலே பட கவணிலே வைத்து எறிந்தான். அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால், அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான். கர்த்தரையே தன் தஞ்சமாக கொண்ட தாவீது வெற்றிமேல் வெற்றியடைந்தான். உங்களுடைய வாழ்க்கையில் வெற்றியடைய கர்த்தர் கொடுக்கிற ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது தாவீதைப் போல நீங்களும் வெற்றியடைய முடியும். வாலிபப்பிராயத்தில் இருக்கிற சகோதரனே, சகோதரியே உன் வாலிபப்பிராயம் நிலையான ஒன்றல்ல. குழந்தை பருவத்தில் இருந்த நீ எப்படி வாலிபப்பருவத்திற்கு வந்தாயோ அப்படியே முதிர்ந்த பருவத்திற்கும் கடந்து போவாய். தென்னை மரத்தின் மேலே உள்ள பச்சை மட்டை கீழே உள்ள பழுத்த மட்டையை பார்த்து சிரித்து சொன்னதாம் நீ பழுத்துவிட்டாய் கீழே விழப்போகிறாய் என்று அதற்கு பழுத்த மட்டை பச்சை மட்டையை பார்த்து எனக்கு வந்த கெதி உனக்கும் வரும் காத்திரு என்றதாம். ஆம் பிரியமான வர்களே ''இளவயதும் வாலிபமும் மாயையே'' என பிரசங்கி சொல்லுகிறான். மாயையான இந்த வாலிபத்திலே நீ உன் சிருஷ்டிகரை நினைக்க மறந்து போகாதே!



**கேள்வி நேரம்**

**வயதான காலத்தில் கர்த்தரை ஏற்றுக்கொள்ளக்கூடாதா?**

கர்த்தரை ஏற்றுக்கொள்வதற்கு வயது ஒரு தடையல்ல. ஆனால், வாலிபத்தில் ஏற்றுக்கொண்டால் பல காரியங்களை செய்வதற்கு அது மிகவும் ஏற்றதாக இருக்கும். வயதான காலத்தில் ஏற்றுக்கொள்வதால் வரும் பிரச்சனைகளை பற்றி பிரசங்கி கூறுவதைக் கவனியுங்கள்; ''வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி, இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை'' என்று பிரசங்கி12:6,7–ல் வாசிக்கின்றோம். நாம் கர்த்தரை நினைக்கவேண்டிய வயது வாலிபமே! ஆகையால் சிந்தியுங்கள் செயல்படுங்கள். வாலிபம் ஒரு சரியான பருவம். இந்த பருவத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். எடுத்துக்காட்டாக, யோசேப்பைப்போவும், தாவீதைப்போலவும் ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 14. சமாதானம்
## Peace

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சமாதானத்தைக் கொடுக்கும் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சமாதானம் – Peace. இன்றைக்கு சமாதானமில்லாமல் சமாதானத்தைத் தேடி மனிதன் அங்கும் இங்கும் அழைகிறான். பலருக்கு வசதி வாய்ப்புகள் இருந்தும் சமாதானமில்லை. சிலருக்கு வசதிவாய்ப்புகள் இல்லாமலிருந்து சமாதானமில்லை. ஆக சமாதானம் யாவருக்கும் தேவையான ஒன்றாயிருக்கிறது. சமாதானம் என்பது வாங்கக் கூடிய ஒரு பொருளல்ல அது விற்பனைக்காக எங்கும் வைக்கப்படவுமில்லை. இதைப் பெற்றுக் கொள்ள சமாதானக்காரரை நாட வேண்டும். யார் அந்த சமாதானக்காரர்? அவர் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவர். ''நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர்,

ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்''(ஏசா.9:6). இந்த சமாதானப்பிரபு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. இவர் ஒருவராலே மனிதனுக்கு சமாதானத்தைக் கொடுக்கமுடியும். அவர் பிறப்பின்போது ''அந்தஷணமே (அந்நேரமே) பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்''(லூக்.2:13,14). அன்றே பூமிக்கு சமாதானகர்த்தரை முன்வைத்து சமாதான வார்த்தைகளை தேவன் தம்முடைய பரமசேனையின் திரள் மூலம் பொழிந்தருளினார். அவருடைய பிறப்பு உலகத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவந்தது. தொடர்ந்து இயேசுவும் தம்முடைய சீஷர்களோடு சமாதானத்திற்குரிய சுவிசேஷத்தை பிரசங்கித்துக்கொண்டுவந்தார். மரணத்திற்கு பின்பும் கூட தம்முடைய சீஷர்களைப் பார்க்கும்போது உங்களுக்குச் சமாதானம் என்றார்.

அவருடைய ஊழியநாட்களில் தம்முடைய சீஷர்களைப் பார்த்து: ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக''என்றார் (யோவா.14:27). உலகத்தார் தம் ஜனங்களுக்கு விட்டுசெல்வது அவர்களது ஆஸ்திகளையே! கர்த்தரோ தம் ஜனங்களுக்கு விட்டு சென்றது எருசலேமில் உள்ள அரண்மனைகளையோ அல்லது அங்குள்ள அசையா சொத்துக்களையோ அல்ல, சமாதானத்தையே விட்டு சென்றார். அவர் ஒருபோதும் உலகப்பிரகாரமான காரியத்தை தம்முடைய சீஷர்களுக்கு வாக்குப்பண்ண வில்லை. இன்று நாட்டிலும், வீட்டிலும், சமுதாயத்திலும், ஸ்தாபனத்திலும், தனிப்பட்ட விதத்திலும் சமாதானமில்லை. இதற்கு என்ன காரணம்? உலகப்பிரகாரமான காரியத்தை மையமாக வைத்து மனிதன் போட்டி போட்டுக்கொண்டு செயல்படுவதால் சமாதானம் அற்றுப்போகிறது. இதனால் பயன் என்ன? இதன் முடிவுதான் என்ன? என்று நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் அழிவுதான் மிஞ்சும். சமாதானம் இல்லாததினாலே சண்டைகளும், பிரிவினைகளும், ஏமாற்றங்களும், தற்கொலைகளும், வன்முறைகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. இப்படியே போகுமானால் மனிதனுடைய நிலை மிகமோசமாக மாறிவிடும். தேவன் இதற்காகவா மனிதனைப் படைத்தார்? அவன் சமாதானத்தோடும்



சந்தோஷத்தோடும் இருக்கவே சிருஷ்டிக்கப்பட்டான். பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது ''....சமாதானமாயிருக்கும் படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்''(1கொரி.7:15) என்கிறார். ஆனால் பல குடும்பங்கள் சமாதானக் குறைவோடு வாழ்கிறதை நாம் காணமுடிகிறது. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் எப்போது பார்த்தாலும் சண்டையும் சத்தமுமாக காணப்படுகிறது. இதற்கு மூலகாரணமாயிருப்பது அவிசுவாசம்தான். இந்த அவிசுவாசத்தைக் களைந்து போட்டு கர்த்தரில் விசுவாசம் கொள்ளும்போது அவர் விட்டு சென்ற சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு ''தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை; தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்'' என்ற நீதி.16:17–ன் படி உங்களுடைய நடையைக் கவனித்து உங்களுடைய ஆத்துமாவைக் காக்க முற்படுங்கள்.

பலருக்கு தீமையை விட்டு விலகுவது என்பது முடியாத ஒன்றாகவும் அது கசப்பான கீரையைப்போலவும் இருக்கும். ஒரு புற்று நோயாளி மருத்துவரை சந்திக்கும்போது மருத்துவர் கொடுக்கும் ஆலோசனை என்னவாயிருக்கும்? ஐயா வெற்றிலை பாக்கு போடுவீர்கள் போல் தெரிகிறதே இதெல்லாம் போட்டால் வாய் புற்றுநோய் வரும் என்பார். ஆனால் நோயாளியோ! சார் என்னால் வெற்றிலை பாக்கு போடாம இருக்கமுடியாது வேறுமாற்று மருந்து இருந்தா சொல்லுங்க என்பார். இதைப்போல் இன்று பலருக்கு தீமையை விட்டு விலதுவது என்பது முடியாத ஒன்றாகவே இருக்கிறது. ஆத்துமா காக்கப்பட வேண்டுமானால் தீமையை களைந்தே ஆகவேண்டும். மேற்பூச்சாய் குணமாக்கும் போதகர்கள் இன்றைய நாட்களில் பெருகியிருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் உரைக்கும்போது ''சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்கு கிறார்கள்''என்றார் (எரே.6:14). ஆம், கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி புத்திசொல்லாத ஊழியர்கள் ஆசீர்வாதத்தை பெற அழைந்தோடும் மக்களை சந்தித்து அவர்களை மேற்பூச்சாய் குணமாக்குகிறார்கள். உள்ளேயோ புரை ஓடிக்கொண்டிருக்கும். கடிந்து கொண்டு போதிக்கும் ஊழியர்களை ஏற்றுக்கொள்ளாத புரை ஓடின ஜனங்கள் மேற்பூச்சாய் குணமாக்கும் வைத்தியர்களையே நாடுகிறார்கள். ''ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும்'' (நீதி.15:31). கடிந்து கொள்ளுதல் என்பது ஜீவனுக்கேதுவானது. நமது

ஆண்டவரும் கடிந்து கொண்டே போதித்தார். பரிசேயரையும் வேதபாரகரையும் பார்த்து உங்களுக்கு ஐயோ, "மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை" என்றார் (மத்.23:13).

சமாதானத்தை கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன"(ஏசா.52:7). இப்படி அழகாக வர்ணிக்கப்பட்ட சுவிசேஷகன் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும்? அவன் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவனாயிருந்து, அவன் செல்லுகிற குடும்பத்தில் சமாதான கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டும். அப்பொழுது அந்த குடும்பத்திற்குச் சமாதானம் வரும். அநேக குடும்பங்களில் சமாதானமில்லாமல் தங்களை தாங்களே மாய்த்துக்கொள்கிறார்கள். "சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்". தற்கொலை ஒரு கோழைத்தனமான செயல். மனிதன் வாழ படைக்கப்பட்டவன். கொடைக்கானலுக்கு சுற்றுலாபயணியாக வருகிறவர்களில் சிலர் தேவனால் படைக்கப்பட்ட சகல இயற்கை காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சியுற்று பின்பு தங்களுடைய வாழ்க்கையின் தோல்வியை நினைத்து தற்கொலைபாறை சென்று குதித்து தற்கொலை செய்து கொள்கின்றனர். மனிதன் தன்னைத்தான் அழித்துக்கொள்வதை தேவன் விரும்பவில்லை. மனிதன் ஏன் சாகவேண்டும்? அப்படி என்னதான் நடந்தது? யார் கைவிட்டாலும் நான் உன்னை கைவிடுவதில்லை என்று வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் நம்மோடு இருக்கும்போது நாம் ஏன் கலங்கவேண்டும்? "நான் சாவாமல், பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்"என்று சங்.118:17–ல் சொன்ன சங்கீதக் காரனைப்போல நாம் இருக்க வேண்டாமா? அப்படியொரு நல்ல தீர்மானத்தை எடுங்கள்.

ஆவியின் கனிகளில் ஒன்று சமாதானம். ஒவ்வொரு தேவமனிதனும் ஆவிக்குரிய கனிகள் நிறைந்தவனாக காணப்படவேண்டும். தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளை நோக்குவானாக என்ற வசனப்படி மற்றவர்களை சமாதானப்படுத்த முயற்சிக்கவேண்டும்.



"நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்" (எபே.2:10). ஒவ்வொரு கிறிஸ்தவனும் சமாதானம் பண்ணுகிறவனாய் இருக்கவேண்டும். "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" என்று யாக்.3:18–ல் தெளிவாக யாக்கோபு கூறுகிறார். சமாதானத்தைக் கூறுகிறவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும்? அநேக பிரிவினை சபைகள் இப்படித்தான் இருக்கின்றன. இச்சபைகள் எப்படி சமாதானத்தைக் கூற முடியும்? இதனாலே இச்சபையை சேர்ந்தவர்கள் ஆபாசபட மெடுப்பவர்களாகவும், கொலைகாரர்களாகவும், திருடுகிறவர்களாகவும் இருந்து கொண்டு மென்மேலும் சபைக்கு கெட்டபெயரை உண்டாக்குகிறார்கள் இவர்கள் நிமித்தமே சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இவர்கள் கர்த்தரின் நாமத்தை தரித்துக்கொண்டு இருக்கிறார்களே தவிர கர்த்தர் இவர்களை இரட்சிக்கவும் இல்லை தம்முடைய சபையில் இவர்களை சேர்க்கவும் இல்லை. சமாதானத்தை நடப்பிக்கிற தம்முடைய சபையின் மூலமே கர்த்தர் கிரியை செய்து வருகிறார். ஆபிரகாமைப்பார்த்து கர்த்தர் "நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே அடக்கம் பண்ணப்படுவாய்" என்றார் (ஆதி15:15). இவ்விதமான மரணத்தை யாவரும் விரும்புவார்கள். நல்லதுதான்! அதே வேளையில் ஆபிரகாமுடைய விசுவாசத்தை நாம் பற்றிக்கொள்வோமானால் சமாதானத்தோடே மரிக்கும் பாக்கியத்தையும் பெறுவோம். "அவர் உன் எல்லைகளை சமாதானமுள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னை திருப்தியாக்குகிறார்" (சங்.147:14). நாமோ அவர் செய்த நன்மைகளை மறந்தோம். இனியாவது கர்த்தர் செய்த நன்மைகளை நினைவுகூருவோம். "அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்". சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக! ஆமென்.

### கேள்வி நேரம்

**ஒருவருக்கு சமாதானம் எப்பொழுது கிடைக்கும்?**

சமாதானம் என்பது கடையில் விற்கப்படும் ஒரு பொருள் அல்ல. அப்படிவிற்கப்படுமானால் உடனே விலை கொடுத்து வாங்கிவிடுவார்கள். சமாதானம் ஒருவரது வாழ்க்கையில் ஏற்படவேண்டுமானால் அவர்

முதலாவது கர்த்தருக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அவர் கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து கர்த்தரைத்தேடும்போது சமாதான கர்த்தர் அங்கு இருப்பார். கர்த்தருக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டு சமாதானம் வேண்டுமென்று விரும்பினால் எப்படி சமாதானம் கிடைக்கும்? ‘‘வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்’’ (எரே.6:16). உலகத்திலே சமாதானத்தை அடைய ஒரே ஒரு வழிமட்டுமே உண்டு. அது எதுவென்றால், இயேசு கிறிஸ்து ஏற்படுத்தின ஜீவனுள்ள மார்க்கம். அம்மார்க்கத்தைக் கண்டு அவ்வழியே செல்லுங்கள் அப்பொழுது உங்களுக்கு சமாதானம் கிடைக்கும்.

## 15. ஆவியிலே அனலாயிருங்கள்
## Be Fervent In Spirit

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆவியிலே அனலாயிருங்கள் – Be fervent in spirit. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமா புரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதும்போது ‘‘ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்’’(ரோம.12:11) என்று எழுதுகிறார். இப்படி பவுல் எழுதுவதின்நோக்கம் என்ன? என்று நாம் ஆராய்ந்து பார்க்கும்போது ஒருவேளை ரோமாபுரியார் ஆவியில் அனலற்று இருந்திருப்பார்கள். இன்றைக்கும் பல சபைகள் ஆவியில் அனலற்று இருப்பதை நாம் காண்கின்றோம். ஆவியில் அனலாயிருப்பது எப்படி? ஆவியிலே அனலாயிருப்பதால் வரும் ஆசீர்வாதம் என்ன? என்பதைப்பற்றி நாம் தியானிக்கும் முன் வெளிப்படுத்தின விசேஷத்திற்கு நாம் செல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது. இங்கு லவோதிக்கேயா சபைக்கு கர்த்தர் சொல்லும்போது ‘‘உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால்



உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்’’என்கிறார் (வெளி.3:15,16). ஒரு பொருள் அனலாயிருந்தால் பத்திரமாக இருக்கும் அதைப்போல் குளிராயிருந்தாலும் பத்திரமாகயிருக்கும். இரண்டுமில்லாமல் வெதுவெதுப்பாக இருந்தால் அது கெட்டுப்போய்விடும். அதேபோல் நாம், ஒன்று அனலாக இருக்கவேண்டும் இல்லையேல் குளிராக இருக்கவேண்டும் அப்படி இருந்தால் நலமாயிருக்கும் இல்லையேல் நான் உன்னை வாந்திபண்ணிப்போடுவேன் என்று கர்த்தர் எச்சரிக்கிறார். கர்த்தர் லவோதிக்கேயா நாட்டு சபைக்கு இப்படி சொல்வதற்கான காரணம் ஒன்று இருப்பதாக வரலாற்று ஆராய்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். என்னவென்றால் லவோதிக்கேயா நாட்டை சுற்றி ஓடும் நீர்கால்களின் தண்ணீர் சூடாக குடிப்பதற்கும், குளிராக குடிப்பதற்கும் நன்றாக இருக்குமாம். வெதுவெதுப்பாக குடித்தால் மிகவும் கசப்பாக இருக்குமாம். அதை வாயில் ஊற்றியவர்கள் உடனே துப்பிவிடுவார்களாம். ஆகவே இதன் காரணமாக கர்த்தர் இந்த திருச்சபைக்கு இவ்வாறாக திருவுளம்பற்றுகிறார் என்று கூறுகின்றனர். ஆம், கர்த்தரும் விதை விதைக்கிறவனைப்பற்றிய உவமை, மற்றும் பரலோக ராஜ்யம் கடலிலே போடப்பட்டு சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது போன்ற உவமைகள் எல்லாமே பூமியிலே உள்ள ஒரு பொருளை மையமாக வைத்தே பேசியிருக்கிறார். இது நமக்கு புரிந்து கொள்வதற்கும் வசதியாக இருக்கிறது.

**ஆவியிலே அனலாயிருப்பது எப்படி?**

நம்முடைய ஆவியும் சரீரமும் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதாக வேதம் நமக்கு விளக்குகிறது. ‘‘மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது’’(கலா.5:17). ஆனபடியினாலே நாம் மாம்சத்திற்கு அடிமையாகிவிடலாமா? கூடாதே ‘‘மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்’’ என்ற ரோம.8:13 –ன்படி ஆவியை அனலுள்ளதாக மாற்றி மாம்சத்தின் செய்கைகளை அழிக்க முற்படவேண்டும். ஆவியிலே அனலாயிருப்பது என்பது குதிப்பதோ அல்லது ஏதோ ஒரு வித்தியாசமான சப்தத்துடன் துள்ளுதோ அல்ல. தேவனை அறியாத அஞ்ஞானிகள் அருள்வந்ததாக ஆடுகிறார்களே அதைப்போலவும் அல்ல. எப்படியென்றால்,

“தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்”(நீதி.25:28) மேலும் “அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்”(ரோம.8:5). ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரிய காரியங்களை சிந்திக்கவேண்டும். மேலும் “ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்;” (1கொரி.2:15). நாம் ஆவிக்குரியவர்கள் என்றால் ஆவிக்குரிய வசனங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். வேதாகமத்தை மூடிவிட்டு கண்களை மூடிக்கொண்டு உணர்ச்சி வசப்பட்டு நம்மைநாமே அனலுண்டாக்க செய்வோமானால் அவ்விதமான பக்தி நம்மை நாமே வஞ்சிக்கச்செய்யும். பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினாலே, தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். கர்த்தரும் “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே”என்றார் (யோவா.5:39).

“ஆவியினாலே நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல”(கலா.5:18). ஆனபடியினாலே நாம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். எப்படியென்றால் “புது உடன் படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது”(2கொரி.3:6). நீங்கள் இப்படிப்பட்டதான உடன்படிக்கையின்படி மீட்கப்பட்டவர்களானால் ஆவிக்குரியவர்களாயும், பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயுமிருப்பீர்கள். “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்று உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?”(1கொரி.6:19). நாமே தேவனுடைய ஆலயமாக இருக்கிறபடியால் நாம் ஆவியிலே அனலுள்ளவர்களாயிருக்கவேண்டியது அவசியம்.

தேவன் பழைய உடன்படிக்கையின் காலத்தில் ஆசரிப்புக் கூடாரத்தில் “குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்படி இடித்துப்பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி



இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக. ஆசரிப்புக்கூடாரத்தில் சாட்சி சந்நிதிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன் குமாரரும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம் மட்டும் கர்த்தருடைய சந்நிதானத்தில் அந்த விளக்கை எரியவைக்கக்கடவர்கள்; இது இஸ்ரவேல் புத்திரருக்கு தலைமுறை தலைமுறையாக நித்திய கட்டளையாயிருக்கக் கடவது”என்றார் (யாத்.27:20,21). இஸ்ரவேலின் மத்தியில் தேவன் இருக்குமிடத்தில் எப்பொழுதும் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கவேண்டுமென்று ஆசாரியர்களுக்கு நித்திய கட்டளையை கொடுத்தார். அந்தப்படியே சாமுவேலும் கர்த்தருடைய ஆலயத்தில் பணிவிடை செய்தான் என்று 1 சாமுவேல் 3–ம் அதிகாரம் 3–ம் வசனத்தில் வாசிக்கின்றோம். இஸ்ரவேலின் மத்தியில் வாசம் செய்த தேவன் இப்புதிய உடன்படிக்கையின் காலத்தில் நம் எல்லோருக்குள்ளும் வாசம் செய்கிறவராயிருக்கிறார். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?”(1கொரி.3:16). அவர் நமக்குள்ளே வாசம் செய்கிறபடியால் அன்று ஆசரிப்புக்கூடாரத்தில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டதுபோல இன்று நாம் ஆவியில் அனலுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அன்று ஆசாரியர்கள் தேவனுக்கு பணிவிடைசெய்தார்கள் இன்று “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்”(1பேது.2:9). ஒவ்வொருவரும் அவருக்கு ஊழியஞ் செய்யத்தக்கதாக அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்தஜாதியாயும் அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கின்றோம். அதை அறிந்து புரிந்து நாம் ஆவியிலே அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியஞ் செய்யக்கடவோம்.

**ஆவியிலே அனலாயிருந்தால் வரும் ஆசீர்வாதம் என்ன?**

ஆவியிலே அனலுள்ளவர்களாயிருப்பதால் வரும் ஆசீர்வாதம் அநேகம் அதில் ஒரு சிலவற்றை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1. “கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்

தீர்ப்பில்லை''(ரோம.8:1). ஆண்டவருக்குள் இருந்து கொண்டு மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடந்தோமானால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என வாசிக்கின்றோம்.

2. ''அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்''(ரோம.8:11). நீங்கள் தேவனுடைய ஆலயமாகவும், தேவன் உங்களோடும் இருந்தால் சாவுக்கேதுவான உங்களுடைய சரீரங்கள் உயிர்ப்பிக்கப்படும்.

3. ''மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்''(ரோம.8:6). மாம்சத்திற்குரியவன் மாம்சத்திற் குரியவைகளை சிந்திக்கிறான். ஆவிக்குரியவனோ ஆவிக்குரியவைகளை சிந்திக்கிறான். இப்படிப்பட்டவர்களுக்கு ஜீவனும் சமாதானமும் அருளப்படுகிறது.

4. ''தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்''(கலா.6:8). தன் மாம்சத்திற்கென்று செய்கிற காரியங்கள் மாம்சத்தை பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றுக்கும் பிரயோஜனப்படாது அதன் முடிவோ மரணம்! ஆனால் ஆவிக்கென்று நாம் செய்யக்கூடிய காரியங்கள் நித்திய ஜீவனுக்கேதுவான காரியங்களை செய்யத் தூண்டும். அதனால் நமக்கு கிடைக்கும் பலன் அழியாத வாழ்வு (நித்தியஜீவன்). மேற்கண்ட ஆசீர்வாதங்களை நாம் ஆவியில் அனலாயிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

**கேள்வி நேரம்**

**ஒரு மனிதன் ஆவியை அவித்துப்போடலாமா?**

1தெச.5:19–ல் சொல்லப்பட்டபடி எச்சூழ்நிலையிலும் உங்களுடைய ''ஆவியை அவித்துப்போடாதிருங்கள்'' அதை அனல் மூட்டி எழுப்பிவிடும்படி பிரயாசப்படுங்கள். ஆவியை அவித்துப்போடுவதினால் ஒரு ஆசீர்வாதமும் இல்லை என்பதை நாம் முதலாவது உணரவேண்டும். ''கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா.5:24). இப்படிப்பட்டவர்களே ஆவிக்குரியவர்களும் கிறிஸ்தவர்களுமா யிருக்கிறார்கள். இவர்கள் பிதாவாகிய தேவனை ஆவியோடும்



உண்மையோடும் தொழுதுகொள்ளக்கூடியவர்கள். (எ.டு) வீட்டிற்கு வெளிச்சம் கொடுக்கும் விளக்கை அணைத்துவிட்டால் வீடு இருண்டுவிடும். அதைப்போல ஆவியை அவித்துப்போட்டவர்களுடைய நிலைமையும் இருண்டு போய்விடும். தேவன் உங்களுக்கு கொடுத்த ஆவியில் அனலாயிருந்து அவரைத் துதித்துப்பாடுங்கள்.

## 16. அறியாமையுள்ள காலங்கள்
## The Times of Ignorance

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அறியாமையுள்ள காலங்கள் – The times of ignorance. நம்நாடும் உலகமும் படிப்படியாக வளர்ச்சியடைந்தபோதிலும் இன்னும் அறியாமையிலே மூழ்கித்தான் இருக்கிறது. ஆதிமனிதன் கல்லோடு கல்லை உரசி நெருப்பைக் கண்டறிந்தான். ஆனால் இன்று சோலார் மூலம் சூரிய ஒளியிலிருந்து அனைத்து வேலைகளுக்கும் மின்சாரத்தை பெறுகின்றான். இந்த அளவிற்கு அறிவுத்திறமையும் நவ நாகரீகங்களும் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. இருந்தபோதிலும் தன்னை உண்டாக்கின தேவனைப்பற்றிய விஷயத்தில் அவரை கண்டு கொள்ளாமல் தன்னுடைய மனதின் யோசனையின்படி பூமியிலே உள்ளவைகளுக்கு ஒப்பாகவும், வானமண்டலங்களில் உள்ளவைகளுக்கு ஒப்பாகவும் அல்லது பூமியின் கீழ் தண்ணீரில் உள்ளவைகளுக்கு ஒப்பாகவும் ஏதோ ஒரு உருவத்தைவைத்து இதுதான் தேவன் என்று நமஸ்கரித்துக் கொண்டுவருகிறான். இப்படிப்பட்ட மனுமக்களைப் பார்த்து பரிசுத்த வேதாகமம் ஒரு எச்சரிப்பின் சத்தத்தை வெளிப்படுத்துகிறது. ''அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்''(அப்.17:30). இக் கட்டளையை இப்புவியில் இருக்கிற ஒவ்வொருவரும் ஏற்று மனந்திரும்ப வேண்டியது அவசியம். முதலாவது நாம் யார்? அறியாமையுள்ள காலங்கள் என்பது எது? தேவனை நாம் அறிந்து கொள்வது எப்படி? என்ற இக்கேள்விகளுக்குரிய பதிலை நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணை

கொண்டு அறிவோம். அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்தை பார்க்கும் பொழுது அந்தப்பட்டணத்தார் நூதனமான காரியங்களை கேட்பதிலும், நவமான காரியங்களை பேசுகிறதிலும் தீவிரமாக இருந்தார்கள். எல்லா தேவர்களுக்கும் பலி பீடங்களை கட்டியும் அறியப்படாத தேவன் ஒருவர் இருப்பாரானால் அவருக்கும் ஒரு பலிபீடம் தேவை என்று கருதி அந்த 'அறியப்படாத தேவனுக்கு' என்று எழுதி ஒரு பலிபீடத்தைக் கட்டி ஆராதித்து வந்தார்கள். இதைப் பார்த்த பவுல் அங்கே உள்ள மார்ஸ் மேடையில் நின்று பிரசங்கித்தபோது; "நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" என்றார் (அப்.17:29). ஆம், நாம் தேவனுடைய சந்ததிகள். ஒவ்வொரு இனமும் அதினதின் இனத்தை அறியும். அதைப்போல தேவ சாயலைப் பெற்றிருக்கிற நாம் தேவனை அறியாது மனுஷருடைய சித்திரவேலைகளினால் செய்யப்பட்டவைகளுக்கு அவரை ஒப்பிடலாமா?

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்"(ஆதி.1:27). இப்படி தேவனால் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நாம் ஒருக்காலும் அவரை உண்டாக்கலாகாது. தேவன் இஸ்ரவேலருக்கு கட்டளை கொடுக்கும்போது "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்" என்றார் (யாத்.20:23). ஆனால் எதை உண்டாக்கக் கூடாது என்றாரோ அதையே இன்றைய சமுதாயம் உண்டாக்கி அதை ஆராதித்து வருகிறது. இவ்வுலகத்திலே நம்மைப் பெற்றெடுத்த தகப்பன் உயிரோடிருக்கும் போது அவரைக் கண்டுகொள்ளாமல் அவர் சவதரித்து வைத்த பொன், பொருட்களிலேயே நாம் கவனம் செலுத்துவோமானால் நம்மை பெற்றெடுத்த தகப்பனுக்குத்தான் எவ்வளவு வருத்தம் நேரிடும்; அவருடைய ஆசைக்கனவுகளை நிறைவேற்றவேண்டாமா? அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற அவருக்கு நாம் செவிகொடுத்து கீழ்ப்படிய வேண்டியது எத்தனை அவசியம். கீழ்படியாமையினால் மனிதன் தேவனையும் அவருடைய உபதேசத்தையும் உதாசினம் செய்கிறான். இதை நாம் என்னவென்று சொல்வது அறியாமை என்றே சொல்ல வேண்டும். இந்த அறியாமையை அறவே ஒழிக்க அநேகர் எழும்புகிறார்கள். ஆனால் இன்றுவரை ஒழித்தபாடில்லை. இப்படி



அறியாமையில் மூழ்கி இருக்கின்ற ஜனங்களைப்பார்த்து பவுல் "நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்"என்றார் (அப்.17:23). எவன் ஒருவன் தேவனை அறியாமல் கல்லுக்கும், மரத்துக்கும், வானசேனைகளுக்கும் ஆராதனை செய்கிறானோ, அவன் தேவனை அறியாமல் இருக்கிறான். இப்படிப்பட்டவர்கள் இன்னும் அறியாமையுள்ள காலங்களிலே ஜீவிக்கின்றனர். நம்முடைய மூதாதையருக்கு சிலைகள் வைத்து அதை தொழுது கொண்டுவரும் பழக்கம் ஆதிமுதற்கொண்டே இருந்து வருகிறது. நம்முடைய பிள்ளைகளை பார்த்து அது என்ன என்று கேட்டால் சாமி என்றுதான் சொல்வார்கள். ஆனால் அது எப்படிவந்தது என்று அவர்களுக்கு தெரியாது, பெரியவர்களுக்கு தெரியும். இப்படி அறியாபருவத்தில் இருப்பவர்கள் அறியாமையுள்ள காலத்திலே இருக்கிறார்கள்.

"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்" என அப்.17:30–ல் வாசிக்கின்றோம். அதேவேளையில் இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மனந்திரும்ப கிடைக்கப்பெற்ற இந்த அருமையான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீங்கள் மனந்திரும்பி ஆவிக்குரியதேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்து அவர் தந்தருளின வேதத்தின் படி நடந்தால் இரட்சிக்கப்படுவீர்கள். இல்லையேல் நம்முடைய முற்பிதாக் களைப்போல கீழ்ப்படிய மனதாயிராமல், மோசேயை தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி "ஆரோனை நோக்கி: எகிப்துதேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டு பண்ணும் என்று சொல்லி, அந் நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டு பண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள். அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி. வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக் கொடுத்தார்"(அப்.7:39–42).

அறியாமையை விட்டு மனந்திரும்பவேண்டிய நாம் மீண்டும் விக்கிரகாராதனைக்கு செல்வோமானால் தேவன் இஸ்ரவேலர்களை வானசேனைக்கு ஆராதனை செய்ய ஒப்புக்கொடுத்தது போல நம்மையும் ஒப்புக்கொடுப்பார். நாம் காண்கிற வானங்களும் பூமியும் அதிலுள்ளவைகளும் ஒரு நாள் எரிந்து அழிந்து போகும். என்றென்றும்

அழியாமலிருக்கும் நித்தியமானதேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க முற்படுவோம். இன்றைக்கு நம்முடைய கைகளில் இருக்கின்ற இந்த வேதாகமத்தை நாற்பது எழுத்தாளர்கள் பல சிரமத்தின் மத்தியில் ஆயிரத்து ஐந்நூறு வருடங்களாக எழுதினார்கள். இன்று ஏறக்குறைய இரண்டாயிரத்து இரு நூற்று முப்பத்து மூன்று மொழிகளில் உலக அளவில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. அனைத்து வேதாகமத்திலும் யாத்திராகமம்20:23–ம் வசனம் மாறாமல் அப்படியே அச்சிடப்பட்டுள்ளது. ஏன் என்றால் அதை மாற்றவோ அல்லது திருத்தி அச்சிடவோ ஒருவருக்கும் உரிமையில்லை. இப்படியிருக்க, உலக அளவில் தேவனையும் கிறிஸ்துவையும் அறியாதவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் ஒரு உருவத்தை தேவாலயங்களில் வைத்தும் வீடுகளில் அவருக்கு ஒப்பாக படங்களை, விக்கிரகங்களை வைத்தும் நமஸ்கரித்து வருகிறார்கள்.

பிரியமானவர்களே, ''கர்த்தருக்குள் நான் உங்களுக்கு சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக் கிறார்கள்''(எபே.4:17–19). புறஜாதி மார்க்கத்தார்கள் வீணான சிந்தையிலும், புத்தியிலும் அந்தகாரப்பட்டு, தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுக்கு அந்நியர்களாயிருக்கிறார்கள். நாமோ அவர்களைபோல நடவாமலிருந்து தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய வேண்டும். ''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்''(1தீமோ.2:4), ஒருவரும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல, எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று நம்மில் நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார்.

தேவனை அறியக்கூடிய அறிவு சுயபக்தியினாலோ அல்லது ஆழ்ந்த சிந்தையினாலோ வராது. வேதாகமத்தை முறைப்படியாக பெரோயா பட்டணத் தார்களைபோல மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ''ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய



நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக'' என்கிறார் பவுல் (ரோம.11:33–36). ஆகையால் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாக இருங்கள் ''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர் களாகும் பொருட்டு,மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது''(2பேது.1:3,4). இவைகளைப்பற்றிக்கொண்டு, கர்த்தரை அறிகிற அறிவிலே பெருகுங்கள்.

**கேள்வி நேரம்**

**அறியாமையில் மூழ்கியுள்ள மக்களை தேவன் அப்படியே விட்டுவிடுவாரா?**

''ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' என்று பேதுரு தமது நிருபத்தில் எழுதியிருக்கிறார் (2பேது.3:9). அறியாமை முற்றிலும் அகற்றப்படவேண்டிய ஒன்று. நாம் அறியாமையுள்ள காலங்களில் கண்போனபோக்கிலும், கால் போன போக்கிலும் சென்று விக்கிரகாராதனை செய்து கொண்டுவந்தோம். இப்பொழுதோ, யாவருக்கும் தேவனுடைய இரக்கத்தினாலே மீட்பின்செய்தி கொடுக்கப்பட்டு உள்ளது. எனவே, காலம் கடத்தாது மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். ''கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே'' (அப்.17:27). ஆகையால், உங்களுடைய அறியாமையை நீக்கி நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

# 17. ஆறுதலின் தேவன்
# God of Comfort

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆறுதல் கொடுக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆறுதலின் தேவன் – God of comfort . ஆறுதல் இல்லாமல் அலைமோதும் மக்களை அநுதினமும் காண்கிறோம், மனிதனுக்கு ஆறுதல் சொல்ல ஒருவர் வேண்டும் இல்லையேல் அவனுடைய யோசனைகள் அவனை மரணத்திற்கு கொண்டுபோய்விடும். எனக்கு யாரும் ஆறுதல் சொல்லத்தேவையில்லை என்று எவரும் சொல்லிவிட முடியாது. அப்படி ஒருவர் சொல்வாரேயென்றால் அவர் யானை தன்மீது மண்ணைவாரி போட்டுக்கொள்வதுபோல தன்மீது மண்ணை வாரிபோட்டுக்கொள்கிறார். ஏனென்றால் மனிதன் ஒருவரையொருவர் சார்ந்தே வாழ வேண்டியவனாயிருக்கிறான். ஆறுதலின் பிறப்பிடம் எதுவென்றால் அது அன்பு. ''தேவன் அன்பாகவே இருக்கிறார்'' என பரிசுத்தவேதம் 1யோவா.4:8–ல் விளக்குகிறது. ஆண்டவர் தம்மிடம் வரும் ஒருவரையும் புறம்பே தள்ளுவதில்லை எல்லோருக்கும் அவர் ஆறுதல் தருகிறார்.

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வந்த ஆண்டவரகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்ட பெரும்பாடுள்ள ஸ்திரீ ''நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்''(மத்.9:21). அவளுக்குத்தான் எத்தனை அதிகமான விசுவாசம் பாருங்கள்! பன்னிரண்டு வருஷமாக கஷ்டப்பட்ட அவள், தனக்கு ஆறுதல் கொடுக்கும் ஆண்டவர் இயேசு என்பதை தன் உள்ளத்தில் எண்ணி அவருடைய வஸ்திரத்தை தொட்டாலே போதும் என்று எண்ணினாள். இதை அறிந்த கர்த்தர் ''அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம்முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்''(மத்.9:22). இன்றைக்கு கர்த்தர் சுகம் கொடுக்கட்டும் பின்பு அவரைப் பின்பற்றுவோம், தேவனை தொழுதுகொள்வோம் என்று சொல்லும் மக்கள் ஏராளம். ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது? ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது



இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்''(மத்.6:33). ஒரு முறை இயேசு தேவாலயத்தை விட்டு அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப்பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான் என்றார். அநேகர் இப்படித்தான் சரீரத்தில் ஏதாவது ஒரு குறைபாடோடு இருந்தால் போதும் அதைப் பிடித்துக்கொண்டு அதனால்தான் நீ இப்படி பிறந்திருக்கிறாய், நீ செய்த பாவம் உன்னை பிடிச்சு ஆட்டுது என்று வாய்க்கு வந்தபடி பேசுவார்கள். ஆனால், குறைபாடுள்ளவர்கள் தங்களில் இருக்கும் குறையை எண்ணி தேவனிடம் முறையிட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படி இருக்கக்கூடியவர்களுக்கு கர்த்தர் சொன்ன இந்த பதில் ஆறுதல் அளிக்கக்கூடியதாயிருக்கிறது அல்லவா?

ஒரு சமயம் உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயரில் சிலர் இயேசுவினிடத்தில் வந்து ''போதகரே, ஒருவன் மனைவியையுடைவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்து போனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்க வேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம் பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்து போனான், மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம் பண்ணினான். அப்படியே ஏழு பேரும் அவளை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்து போனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்து போனாள். இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு

ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்'' என்றார் (லூக்.20:28–36). இன்றைய சமுதாயம் பெண்களுக்கு குழந்தை இல்லை என்றால் அவளை மலடி என்று சொல்லி பட்டம் சூட்டிவிடுகிறது. ஆனால் அவளும் ஆபிரகாமின் குமாரத்தியே! வேதம் அவளைப் பார்த்து ''அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது''(கலா.4:27). ஆண்டவரும் அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள் என்று ஆறுதலின் வார்த்தைகளை கூறுகிறார். ''என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது'' என்ற சங்கீதக்காரனுடைய வார்த்தையின்படியே ஆறுதல் அடைகிறார்கள் (சங்.94:19).

அநேக தேவதாசர்கள் தங்களுடைய ஜீவியநாட்களில் துன்பத்தை அநுபவித்திருக்கிறார்கள். அதில் குறிப்பாக யோபுவைப் பற்றி படிக்கிறோம். பிசாசு அவனை கொடிய பருக்களால் வாதித்தான் அப்பொழுது உருத்தெரியாமல் இருந்தான். அவனைப் பார்க்கவந்த மூன்று சகோதரர்கள் ஏழு நாள் அமைதியாக இருந்து துக்கித்து அவனைப்பார்த்து ''உம்முடைய பொல்லாப்பு பெரியதும், உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாதவைகளுமாய் இருக்கிறதல்லவோ? முகாந்தரமில்லாமல் உம்முடைய சகோதரர்கையில் அடகுவாங்கி, ஏழைகளின் வஸ்திரங்களைப் பறித்துக் கொண்டீர். விடாய்த்தவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடாமலும், பசித்தவனுக்கு போஜனம் கொடாமலும் போனீர்'' என்று சொல்லி அவன் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போனார்கள் (யோபு22:5–7). அதற்கு யோபு: உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் தயை கிடைக்கவேண்டும்; அவனோ சர்வவல்லவருக்குப் பயப்படாதே போகிறான். என் சகோதரர் காட்டாறுபோல மோசம் பண்ணுகிறார்கள்; ஆறுகளின் வெள்ளத்தைப்போலக் கடந்து போகிறார்கள் என்றான். மேலும், யோபு ''அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்'' என்றான் (யோபு23:10). நீங்கள் வீணான ஆறுதலை எனக்குச் சொல்லுகிறது என்ன? உங்கள் மறுமொழிகளில் உண்மைக்கேடு இருக்கிறது என்றான். வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல அவர்களுடைய வார்த்தைகள் இருந்தது. இதைப் பார்த்த ஆறுதலின் ''கர்த்தர் தேமானியனாகிய



எலிப்பாசை நோக்கி: உன் மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்கு கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை'' என்றார் (யோபு42:7).

வேதாகமத்திலே பதினான்கு நிருபங்களை எழுதிய அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது எனக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது ''என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்''(2கொரி.12:7–9) என்கிறார். பரிசுத்தவான்களுக்கு பாடுகள் பல வழிகளில் வருகிறது. ஆனால் அவை எல்லாவற்றினின்றும் கர்த்தர் ஆறுதலைக் கொடுத்து விடுவிக்கிறார். ''எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது''என்கிறார் பவுல் (2கொரி.1:5). யோபுவைப் போலவும், பவுலைப் போலவும் ஒரு கிறிஸ்தவனுக்கு பாடுகளின் வழியே குறைபாடு இருக்குமானால் அது அவன்செய்த பாவம் என்ற முடிவுக்கு வந்து அவனை தூற்றக்கூடாது. அந்த குறைபாடுகளிலும் அவன் மனரம்மியமாக இருந்து கொண்டு கர்த்தரைத் துதிப்பதை நினைத்து நாம் தேவனுக்கு நன்றி சொல்லி அப்படிப்பட்டவனுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும். பாருங்கள்: லாமேக்கு, ''கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டானவேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத்தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்'' என்று வாசிக்கிறோம் (ஆதி.5:29). அந்தப்படியே நோவா அநேகருக்கு ஆறுதலாக இருந்தான். யோசேப்பை அவன் சகோதரர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள். தேவனோ அவனுடனே கூட இருந்து எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமூகத்திலே அவனுக்கு கிருபையையும் ஞானத்தையும் அருளினார். பழைய குரோதத்தை வைத்துக்கொள்ளாமல் தன்னிடம் வந்த சகோதரர்களை ஏற்றுக்கொண்டு பயப்படாதிருங்கள் நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான் என்று

வாசிக்கிறோம். யோபின் குடும்பத்தார்களும் அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனிடத்தில் வந்து, அவன் வீட்டிலே அவனோடே போஜனம்பண்ணி, கர்த்தர் அவன்மேல்வரப்பண்ணின சகல தீங்கினிமித்தம் அவனுக்காக அங்கலாய்த்து, அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் ஒவ்வொரு பொன்ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்'' என்று யோபு42:11–ல் வாசிக்கிறோம். ஆறுதல் சொன்னவர்கள் வார்த்தையோடு நின்றுவிடாமல் கிரியைகளினாலும் காண்பித்தார்கள் என காண்கிறோம்.

இச்செய்தியை கேட்கிற நேயரே உங்களால் முடிந்த உதவியை மற்றவர்களுக்குச் செய்து அவர்களை ஆறுதல் படுத்துங்கள் அப்பொழுது அறுதலின் தேவன் நம்மோடு இருப்பார்!

**கேள்வி நேரம்**

**ஒரு மனிதனுக்கு ஆறுதல் எப்பொழுது கிடைக்கும்?**

அவன் இழந்த பொருள் மீட்கப்படும்போது அவன் ஆறுதல் அடைவான். இழந்த ஒரு பொருளை மீட்டுக்கொடுக்க வல்லவர் இயேசு ஒருவரே. இயேசு ஒருமுறை நாயீன் என்னும் ஊருக்குப்போனார். அங்கே ஒரு விதவையின் மகனை அடக்கம்பண்ணும்படியாக கொண்டுவந்தார்கள். அந்த விதவையோ ஒரேமகனும்போய்விட்டானே என்ற ஏக்கத்தோடு அழுதுகொண்டு வந்தாள். அவளை இயேசு பார்த்து அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி கிட்டவந்து பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். என்ன நடந்தது தெரியுமா? மரித்துப்போன வாலிபன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார் (லூக்.7:11–15). இப்படிப்பட்ட ஆறுதலை எந்த ஒரு மனிதனும் செய்யமுடியுமா? ஒருக்காலும் முடியாது. அந்த அதிகாரத்தை பெற்றவர் இயேசு ஒருவரே. அவரை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். நீங்கள் அவரை விசுவாசியுங்கள். அப்பொழுது அவரால் ஆறுதல் படுத்தப்படுவீர்கள்.

**"ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்"**
**நீதிமொழிகள் 16:7**



## 18. உன் வாயை விரிவாய்த்திற
## Open your Mouth Wide

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்மை திருப்தியாக்குகிற ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உன் வாயை விரிவாய்த்திற – Open your mouth wide. ''உன்னை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன்'' என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார் (சங்.81:10). இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, 40வருஷம் வனாந்தரத்திலே தேவ தூதர்கள் சாப்பிடுகிற மன்னாவினாலே போஷித்த கர்த்தர், உன் வாயை விரிவாய்த்திற நான் அதை நிரப்புவேன் என்கிறார். இவ்வசனத்தை வாசிக்கும்போது எங்களுடைய வீட்டின் ஓரத்தில் உள்ள ஒரு கொய்யாமரத்தின் மீது கூடுகட்டி குஞ்சுபொரித்த குருவிகளின் ஞாபகம் வருகிறது. ஒரு ஆண்குருவியும் பெண்குருவியும் சேர்ந்து தங்களுடைய அலகுகளால் சிறு சிறு துரும்புகளை கொண்டு வந்து ஒரு கூட்டைகட்டி உட்புறம் பஞ்சுபோல் உள்ள சாதனங்களால் மெத்தைபோல் விரித்து அக்கூட்டிற்கு செல்ல ஒரே வழி மட்டும் அமைத்து பின்பு முட்டையிட்டு அடைக்காத்துவந்தது சில நாட்கள் கழிந்தன குஞ்சுகளின் சத்தம் கேட்கஆரம்பித்தது. அந்த குருவியின் குஞ்சுகள் தன் தாய் தகப்பன் எப்பொழுது தங்களுக்கு ஆகாரம் கொண்டுவருவார்கள் என்ற ஆவலோடு தங்களுடைய அந்த சிவப்பான அலகை ஆ.... ஆ.... வென்று விரிவாய்த் திறப்பதைப் பார்க்க பார்க்க அவ்வளவு அழகாயிருந்தது. அவைகள் தங்கள் தாய் தகப்பன் மீதுகொண்டுள்ள நம்பிக்கையையும், தேவனிடமிருந்து அவைகளுக்கு கிடைக்கப்பெற்ற இரக்கத்தையும் நாங்கள் எங்கள் வீட்டு சன்னல் வழியாக பார்க்க ஒரு தருணம் கிடைத்தது.

நாமும் தேவனுடைய பார்வையில் இந்த குருவிக் குஞ்சுகளைப்போல இருந்து கொண்டு நம்முடைய வாயை விரிவாய்த்திறக்கும்போது அதை அவர் நிரப்புகிறார். ''அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார்'' என்று சங்கீதக்காரன் குறிப்பிடுகிறார் (சங்.147:9).

இச்செய்தியை கேட்கிற அன்பு நேயரே, **உன் வாயை விரிவாய்த் திறக்கும்பொழுது கர்த்தர் உன்னை போஷிக்கிறார்.** "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" என அப்.2:47–ல் வாசிக்கின்றோம். அவர் இரட்சிக்கிறவர் மட்டுமல்ல போஷிக்கிறவரும்கூட. இஸ்ரவேலை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அழைத்த தேவன் அவர்களை எப்படிபோஷித்தாரோ, அதைப்போல இன்று பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, புதுஉடன்படிக்கையின் ஜனங்களை போஷிக்கிறார். "கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல" என்று எபேசியர் புத்தகத்தில் வாசிக்கிறோம் (எபே.5:29). இயேசுவைப் பின்பற்றின திரளான ஜனங்களில் அநேகர் போஜனத்திற்காகவே பின்பற்றினதாக வாசிக்கிறோம். "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்" என்றார் (யோவா.6:26–27).

ஆம், சதா அழிந்து போகிற போஜனத்திற்காகவே வாழக்கூடாது. அழியாத வாழ்வாகிய நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கக்கூடிய ஆவிக்குரிய போஜனத்தைப் பெற்று ஆவியில் வளரவேண்டும். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பார்கள் உண்மைதான் அழுதால்தான் பிள்ளைக்குப் பால் கிடைக்கும் அதைப்போல நம் தேவனை நோக்கி வாயை விரிவாய்த்திறந்து அழுது ஜெபிக்கும்போது தேவன் நம்முடைய பசியைப் போக்கக்கூடியவராயிருக்கிறார். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளு கிறவர்களுக்கு நன்மையானவைகளை கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" என்கிறார் (மத்.7:7–11). அவர்



தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக்கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். தேவனுக்கு பயந்தவர்களை "உச்சிதமான கேதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உங்களைத் திருப்தியாக்குவேன்" என்கிறார் (சங்.81:16).

**உன் வாயை விரிவாய்த்திறக்கிறபோது கர்த்தர் சுகம் கொடுக்கிறவரும்கூட.** "அவர் எரிகோவுக்கு சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான். ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான் நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார். அவன் கிட்டவந்தபோது, அவர் அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்" (லூக்.18:35,42). மற்றவர்கள் இந்த பிறவிக்குருடனை அதட்டியபோதிலும் அவன் தன் சத்தத்தை குறைக்கவில்லை இன்னும் அதிகமாய் கூப்பிட்டான் என்று வாசிக்கின்றோம். சுகம் கிடைக்க வேண்டுமென்றால் நம் வாயை விரிவாய் திறக்கவேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது.

எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான் அப்பொழுது "ஏசாயா தீர்க்கதரிசி வந்து நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்" (2இரா.20:1). நமக்குத் தெரியும் கர்த்தர் தீர்க்கதரிசிகள் மூலமாக சொன்னால் சொன்னதுதான் அதை மாற்ற மாட்டார். ஆனால் இந்த எசேக்கியா ராஜாவின் விஷயத்தில் அவனுடைய கண்ணீரின் விண்ணப்பத்தைக் கேட்டு உடனே அவன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன் என்று அதே தீர்க்கதரிசியின் மூலம் சொல்லி, அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து பிளவையின் மேல் பற்றுப்போட்டபோது எசேக்கியா பிழைத்தான். ஆம் பிரியமானவர்களே, இந்த

எசேக்கியாவைப்போலும், பிறவிக்குருடனைப் போலும் நாம் வாயை விரிவாய்த்திறக்கும்போது சுகத்தை கர்த்தரால் பெற்றுக்கொள்வோம்.

**உன் வாயை விரிவாய்த்திறக்கிறபோது கர்த்தர் விடுதலை கொடுக்கிறவரும்கூட.** ''ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்'' (சங்.50:15). ஆபத்திலே மாட்டிக்கொண்டு அல்லல் படுகிறவர்களுக்கு இது ஒரு நற்செய்தியாகும். பவுலையும் சீலாவையும் அநேக அடி அடித்த பின்பு சிறைச்சாலையில் வைத்து அவர்களைப் பத்திரமாக காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தார்கள். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று'' (அப்.16:23–26). கர்த்தர் ஒரு பெரிய அசைவை ஏற்படுத்தினார். தாங்கள் இந்நிலைமையில் இருக்கிறோம் என்ற கவலை அவர்களுக்கு இல்லை மாறாக வாயை விரிவாய் திறந்து தேவனை துதித்தார்கள். நடந்தது என்ன? சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

**உன் வாயை விரிவாய்த் திறக்கும்பொழுது வெற்றியையும் கட்டளையிடுகிறவர் நம் கர்த்தர்.** இஸ்ரவேலர், கர்த்தர் கொடுத்த கட்டளைப்படி எரிகோவை ஆறுநாளும் ஒரு முறை சுற்றிவந்து ஏழாம் நாளிலே ஏழுமுறை சுற்றிவந்து எக்காள தொனியுடன் ஆர்ப்பரித்தார்கள். (யோசு.6:15,16). இஸ்ரவேலரின் ஆர்ப்பரிப்பிலே அலங்கங்கள் இடிந்து விழுந்தது. அவர்கள் எரிகோவை வெற்றி கொண்டார்கள். நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்று பவுல் குறிப்பிடுகிறார் (2தீமோ.4:7,8). இம்மையிலும் மறுமையிலும் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழ வாயை விரிவாய் கர்த்தருக்கு நேரே திறப்போம். நம் வாயை விரிவாய் திறக்கும்போது அதை நிரப்புவேன் என்று



கர்த்தர் சொல்லுகிறார். நிறைவு என்பது திருப்தியை குறிப்பதாகும். திருப்தியுள்ளவன் தேன் கூட்டையும் மிதிப்பான் என்ற வசனத்தின்படி நம்மை ஆசீர்வதிக்கக் கூடியவராயிருக்கிறார். தாவீதைப்போல ஒப்புக்கொடுப்போம். '' என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன். நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்'' (சங்.63:4,5). நம்மை போஷித்து, சுகப்படுத்தி, விடுவித்து, வெற்றியைக் கொடுக்கும் கர்த்தர் ''என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப் பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதை களுக்குள்ளும் நடத்துகிறேன்'' என்கிறார் (நீதி.8:20,21). உங்களுடைய களஞ்சியங்கள் நிரம்ப வாயை விரிவாய் திறந்து ஜெபியுங்கள், துதியுங்கள். கர்த்தர் உங்களை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நிரப்புவாராக!

**கேள்வி நேரம்**

**நம்தேவைகளுக்காக உயர்வான மனிதர்களை நோக்கி காத்திருக்கலாமா?**

''எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை'' என்று ரோம.13:1–ல் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட அதிகாரத்தின் கீழ் இருந்த ஆபிரகாமைக்குறித்து வாசிக்கிறோம். ''ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்'' என்றார் (ஆதி.14:22,23). இப்பொழுது சொல்லுங்கள் நாம் மனிதர்களை நோக்கி தேவைகளுக்காக காத்திருக்கலாமா? அதிகாரங்களுக்கு நாம் கீழ்ப்படிந்து இருக்கவேண்டும். அது வேதாகம போதனையாக இருக்கிறது. ஆனால் நாம் அவர்களுக்கு அடிமைகள் அல்ல. பிதாவாகிய தேவனுக்கு அடிமைகள். அவரே நம்மை போஷிக்கிறவர், சுகப்படுத்துகிறவர், விடுவிக்கிறவர், வெற்றியை கொடுக்கிறவர் அவருக்கு நேரே ஆபிராமைப்போல கையை உயர்த்துவோம்.

**"கர்த்தர் ஞானத்தை தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" – நீதிமொழிகள் 2:6**

## 19. இயேசு கிறிஸ்து மாறாதவராயிருக்கிறார்
## Jesus Christ is the Same

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இயேசு கிறிஸ்து மாறாதவராயிருக்கிறார் – Jesus Christ is the same. மாறிவரும் உலகத்தில் என்றுமே மாறாத ஒரு இரட்சகர் இருக்கிறார் என்றால் அது ஆண்ட வராகிய இயேசுகிறிஸ்துவாகத்தான் இருக்க முடியும். அவர் ஆதியும் அந்தமுமானவர். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி.13:8). சிலர், இயேசுவானவர் தோன்றி இரண்டாயிரம் வருடங்கள்தான் ஆகிறது, அதற்கு முன்பு இருந்தாரா? என்பர். ஆம், இருந்தார். எப்படியென்றால், "அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" என்று அப்போஸ்தலனாகிய யோவான் எழுதி தெளிவுபடுத்துகிறார் (யோவா.1:2,3). இயேசுகிறிஸ்து நேற்றும் சரி இன்றும் சரி என்றும் சரி அவர் மாறாதவராகவேயிருக்கிறார். அப்படியென்றால் அவருடைய செயல்பாடுகள் என்றுமே மாறாதவையாக இருக்கின்றது. **அவர்அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு.** "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" என திருமறை விளக்குகிறது (எண்.23:19). என்றுமே மாறாத அவரை, இன்று இருந்து நாளை வாடிப்போகும் பூவிற்கு ஒப்பான மனுஷனுக்கு ஒப்பிடலாகாது. மனிதன், கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி. ஆனால், வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். "கர்த்தவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப் படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளா யிருக்கிறது; அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழமையாய்ப்போம்; ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்;



நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை" (எபி.1:10–12). ஆம், அவருடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாயிருக்கிறார். "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என மாற்.10:45–ல் வாசிக்கிறோம். பவுல் தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிடும் போது "தாவீதுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப் பண்ணினார். இவர் வெளிப்படுவதற்கு முன்னே மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து யோவான் இஸ்ரவேலர் யாவருக்கும் பிரசங்கித்தான். யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது; நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல, இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றான்" (அப்.13:23–25). பவுல் இங்கு யோவான் சொன்னதை நமக்குத் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

இச்செய்தியை கேட்கிற உங்களுக்கு நாங்கள் சொல்லுகிற தென்னவென்றால், "கிறிஸ்து உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள், கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்" (ரோம.8:10,11). பவுல் கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல என்கிறார். பரிசுத்த ஆவியைப் பற்றி பேசுகிறவர்கள் இவ்வசனத்தை விட்டுவிடுகிறார்கள். இவர்களைப் பற்றி யோவான் அப்போஸ்தலன் "மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" என்று எழுதுகிறார் (1யோவா.4:3). மாறாதவருடைய இரட்சிப்பு வேண்டுமென்றால் நாமும் மாறாதிருக்க வேண்டியது அவசியம். இன்று பரிசுத்தஆவியை பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா? என்று கேட்கும் கூட்டத்தைப் பார்த்து இருப்பீர்கள். ஆவியை கொடுப்பதற்கும் அதை எடுப்பதற்கும் கர்த்தர் ஒருவருக்கே அதிகாரம் இருக்கிறது. காத்திருப்பதினாலோ அல்லது ஒரு

பெரிய ஊழியர் கைகளை வைப்பதினாலோ பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ள முடியாது. மாறாக வசனம் மிகத் தெளிவாக சொல்லுகிறது, "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக்கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே.1:13,14). இந்த விஷயத்தில் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. மாறாத அவரை ஏற்றுக்கொள்ளும்போது இரட்சிப்பு வீடுதேடி வருகிறது. சகேயுவின் சம்பவத்தில் அவன் இயேசுவைப் பார்க்க வகைதேடினான். "இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்" (லூக்.19:9,10). இன்று முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள் என்றால். அவர்கள் சொல்லுகிற பதில்: முதலாவது கர்த்தர் எங்களுக்கு நன்மை செய்யட்டும் பின்பு அவரையும் அவருடைய ராஜ்யத்தையும் தேடுகிறோம் என்பார்கள். ஆதாமை உண்டாக்கின தேவன் அவனுக்கு எல்லாவற்றையுங் கொடுத்து, சகலத்தையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றார். இன்னும் என்னதான் அவர் உங்களுக்கு கொடுக்கவேண்டும்? மனிதனுக்கு சாகும் வரை ஏதாவது ஒன்று தேவைப்பட்டுக்கொண்டே தான் இருக்கும். அதையே நினைத்து ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாதிருக்கும்போது கர்த்தருடைய ஆசீர்வாதத்தை இழக்க நேரிடும். சகேயுவைப்போல இயேசுவை நோக்கிப் பாருங்கள். "இதோ,வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி.3:20). நீங்கள் முதலாவது அவருக்குச் செவிகொடுங்கள். அப்பொழுது அவர் உங்களுக்குச் செவிகொடுப்பார்.

இரட்சிப்பு கர்த்தருடையது. இன்று நீங்கள் அவரை விசுவாசிப்பீர்கள் என்றால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். காலம் தாழ்த்தாது உடனே அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படியுங்கள். "தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம். அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச்



செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணியநாள்" (2கொரி.6:1,2). இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்த்து வருகிறார். இன்றே இரட்சணியநாள், கீழ்ப்படிந்து கிறிஸ்துவினுடைய மந்தையில் சேர்க்கப்படுங்கள். இயேசுகிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படியே என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார். பிரதான ஆசாரியருடைய பணி தன்னுடைய பாவங்களுக்காகவும், ஜனங்களுடைய பாவங்களுக்காவும் பலியிட வேண்டியது. மேலும், "அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்" (எபி.7:23). ஆனால் கிறிஸ்துவோ "என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப் போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். **மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.** பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (எபி.7:24–26). நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகிய இயேசுகிறிஸ்து மாறிப்போகாத ஆசாரியத்துவ முள்ளவராயிருக்கிறார்.

அது மட்டுமல்ல தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யக் கூடியவராயுமிருக்கிறார். அவர் உயிரோடிருக்கிறவராகையால் அவரைப் பற்றிக்கொள்ளுகிறவர்களும் உயிரோடிருப்பார்கள். மேலும் "பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு" (எபி.8:2). நீங்கள் யார் மூலமாக தேவனிடத்தில் சேர்க்கப்பட்டுள்ளீர்கள்? யாரால் ஸ்தாபிக்கப்பட்ட சபையில் அங்கமாயிருக்கிறீர்கள்? மேற்கண்ட வசனத்தின்படி அவர் மூலமாய் தேவனிடத்திலும், கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட அவருடைய திருச்சபையிலும் இருக்கவேண்டும். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்கிறார் (யோவா.14:6).

இந்த உலகத்தில் மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழி இயேசுவே. அவர் சத்தியமாகவும் ஜீவனாகவுமிருக்கிறார். அவர் மாறாதவர், அவருடைய வசனம் மாறாதது, அவருடைய சபை மாறாதது, அவருடைய வாக்குதத்தங்கள் மாறாதது. நீங்களும் மாறாதவர்களாக இருந்துகொண்டு அவரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் மாற்றாமல் பற்றிக்கொள்வீர்கள் என்றால். வாக்குத்தத்தமான ஜீவகிரீடத்தைப் பெறுவீர்கள். நேற்றும் இன்றும் என்றுமே மாறாத அவரையும் அவருடைய வல்லமையுள்ள வார்த்தைகளையும் அன்றும் இன்றும் பலர் மாற்றிவருகிறார்கள்.

இச்செய்தியை கேட்கிற அன்பான தேவ ஜனமே அவருடைய சிருஷ்டிப்பை பார் அவைகளெல்லாம் அதினதின் வேலைகளை காலத்திற்கேற்ப சரியாய் செய்கிறது ஆனால் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் மட்டும் அநுதினமும் மாறிக்கொண்டே போகிறான். இப்படியே போனால் மனிதனுடைய நிலைமை என்னவாகும்? இந்நிலை மாற, மாறாத கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் தொடர்ந்து செவிகொடுங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி நேரம்**

**மனிதனுடைய நிலை மாறுவதற்கு என்ன காரணம்?**

தன்னை சிருஷ்டித்த தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமற்போனான். தேவசாயலை இழந்தான். ஆகையால் பாவம் அவனை ஆண்டுகொண்டது. இந்தப்பாவப்பிடியிலிருந்து அவன் மீட்கப்பட மீட்பர் இயேசுவின் சத்தம் கேட்டு, அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். இதுவே மறுபிறப்பிற்கான அடையாளம். மறுபிறப்பு என்பது ஆவிக்குரிய பிறப்பு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல். இப்படி ஒரு மனிதன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தேவசாயலை மீண்டும் பெற்றுக்கொள்ளும்போது புதுசிருஷ்டியாக மாற்றப்படுகிறான். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" என்ற வசனத்தின்படி நடக்கிறது (2கொரி5:17). நீங்கள் இந்நிலையை அடைவதற்கு மாறாத கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுங்கள். அப்பொழுது நீங்களும் புதுசிருஷ்டியான மாற்றப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 20. இயேசு மேன்மையுள்ளவர்
## Jesus Is Preferred

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்திற்கும் பூமிக்கும் மேலான நம்முடைய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இயேசு மேன்மையுள்ளவர் – Jesus is Preferred. இன்று உலகத்திலே நான் பெரியவன் நீ பெரியவன் என்று அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். சர்வலோகத்திற்கும் ஒரு பெரியவர் இருக்கிறார் என்பதை மறந்து போய்விடுகின்றனர். உலத்திலே எத்தனையோ தீர்க்கதரிசிகள் தோன்றினார்கள். ஆனால் "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை;" (லூக்.7:28). இந்த யோவான்ஸ்நானன் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன். யோவான்ஸ்நானன் இயேசுவைக் குறித்து சாட்சி கொடுக்கும்போது, "எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்" (யோவா.1:15). அநேகர், இயேசு கிறிஸ்து வந்து 2000 வருடங்கள்தானே ஆகிறது என்று லேசாக பேசிவிடுகின்றனர். இங்கு இயேசுவுக்கு முன்னோடியாகவும் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படியாகவும் வந்த யோவான்ஸ்நானன், எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று சொல்லி சாட்சி பகருகிறான்.

சிலர் யோவன்ஸ்நானனையே கிறிஸ்து என்று நினைத்தனர். இன்றும்கூட அநேகருக்கு அறிமுகமான ஊழியர் ஒருவர் வந்துவிட்டால் போதும் அவர் தேவனுக்கு நிகரானவர் என்று கூறிவிடுவார்கள். ஆனால் இங்கு எருசலேமிலிருந்த யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவான்ஸ்நானனிடம் அனுப்பி நீர் யார் என்று கேட்ட பொழுது அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். மேலும் "அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்" (யோவா.1:27). எந்த அளவிற்கு இயேசுவுக்கு முன் தான் தகுதியற்றவன் என்பதை ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்த யோவான்ஸ்நானன் அறிக்கையிடுகிறான்

என்பதைப் பாருங்கள். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு தீர்க்கதரிசியே இவ்விதமாக தாழ்த்துவானேயானால் நாமெல்லாம் எம்மாத்திரம்! ஆகையால்தான் நூற்றுக்கு அதிபதியும் கூட தன் வேலைக்காரனுடைய சுகத்துக்காக இயேசுவை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்றான் (லூக்7:7). இயேசு ஆண்டவர் இதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். ஆம் பிரியமானவர்களே, இயேசு எல்லாரிலும் மேன்மையானவர். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

"யோவான்ஸ்நானன் வனாந்தரத்தில் ஞானஸ்நானங் கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான்நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (மாற்.1:4,5). இங்கு யோவானால் யூதேயா, மற்றும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வாசிக்கிறோம். இந்த யோவன்ஸ்நானன் அவரைக் குறித்து ஜனங்களிடத்தில் சொன்னது "இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான். நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்க வந்தேன் என்றான்" (யோவா.1:29–31). பின்னும் அவன் சாட்சியாக சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர் மேல் தங்கினதைக் கண்டேன் ...ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்" (யோவா.1:32–34).



பிரியமான சகோதரனே, சகோதரியே நீயும் இயேசுவை பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறாயா? இன்றைக்கு இருக்கும் தலைவர்களை நீ பின்பற்றினால் அவர்கள் தலை இருக்கும்வரை நீ அவர்களின் வழியே நடக்கலாம். அதற்கு பின்பு நீ யாரைப்பின்பற்றுவாய்.! நீ பின்பற்றும் தலைவன் உனக்காக தலையை கொடுக்கமாட்டான். மாறாக உன் தலையை வாங்கிவிடுவான். ஆனால் உனக்காக ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்க வந்தவர் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து. அவர் இன்றும் ஜீவிக்கிறார். அவரை தேவன் முத்திரித்திருக்கிறார். அவரைக்குறித்து கேள்விப்பட்டவர்கள் அநேகர். அதில் ஒருவராக நீ இருக்கிறாயா? ஒரு முறை பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ண வரவேண்டுமென்று இயேசுவை வேண்டிக்கொண்டான். அவர் அந்தப்படியே பரிசேயனுடைய அழைப்பை ஏற்று அங்கு சென்று பந்தியிருந்தார். அப்பொழுது இயேசுவை கேள்விப்பட்ட பாவியாகிய ஒரு ஸ்திரீ அந்த பரிசேயன் வீட்டிற்குச் சென்று இயேசுவின் பின்னாக நின்று அழுதுகொண்டு அவருடைய பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து பரிமளதைலத்தைப் பூசினாள். பெண்களுக்கு கூந்தல் மகிமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மகிமையான கூந்தலைக்கொண்டு தன் கண்ணீரினால் நனைத்து இயேசுவின் பாதங்களை துடைத்தாள். தான் பாவி என்பதை ஒப்புக்கொண்ட அந்த ஸ்திரீ, ஆண்டவர் இன்னார் என்பதை அறிந்தபடியால் அவருக்கு மேன்மையான பரிமளதைலத்தைப் பூசவும் தன் மேன்மையான, மகிமையான கூந்தலினால் அவருடைய பாதங்களை துடைக்கவும் முத்தம் செய்யவும் முந்திக் கொண்டாள்.

இன்றைக்கு ஆண்டவருடைய கற்பனைகளை ஒத்துக்கொள்வார்கள். ஆனால் தங்களுடைய இருக்கையைவிட்டு சற்றும் இறங்கமாட்டார்கள். பரிசேயரும் கூட அப்படித்தான் உயிர்த்தெழுதல், தேவ தூதன், ஆவி எல்லாவற்றையும் ஒத்துக் கொள்வார்கள். உள்ளான மனதில் தொடாதே, தீண்டாதே, ருசிபாராதே என்கிற காரியங்களை வைத்துக்கொண்டு பாரம்பரியமாக வாழ்ந்துவந்தார்கள். இந்த பரிசேயனை கர்த்தர் பார்த்து "நீ என் கால்களுக்கு தண்ணீர்தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய்

பூசவில்லை, இவளோ, என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே என்றார்'' (லூக்.7:44–47). மேன்மையானவரை நம்சொந்த இரட்சகராக பெறவேண்டுமானால், நாம் முதலாவது நம்முடைய மேன்மையை விட்டுக்கொடுக்க வேண்டும். அவர் நமக்காக தம்மைத்தாமே தாழ்த்தி சிலுவையில் அறையுண்டிருக்கும்போது நமக்கு எதற்கு மேன்மை. அவரை சுமக்கும் கழுதையாக நாம் மாறவேண்டும். அது ஒரு பெரிய பாக்கியமே. மாபெரும் தீர்க்கதரிசியே அவருடைய பாதரட்சையின்வாரை அவிழ்ப்பதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொல்லியிருக்கும்போது, நாம் எம்மாத்திரம்?

ஆண்டவர் இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை அறியாத மக்கள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். கப்பர் நகூமுக்கு இயேசு சென்றபோது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள் ''இயேசு அவர்கள் விசுவசாத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அங்கே உட்கார்ந்திருந்த வேத பாரகரில் சிலர்: இவன் இப்படி தேவ தூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கதக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, அல்லது உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன்வீட்டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மாற்.2:5–11). அவர் மேன்மையுள்ளவராக சகல அதிகாரமும் பெற்றவராகையால் இப்படி சொல்லி அவனை சுகப்படுத்தினார். பிசாசுகளும் அவருக்கு பயந்து நடுங்கின. ''இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு தேவன் பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டு சொன்னது''



(மாற்.5:7). ஆனால் அவருடைய சொந்த ஊராரும் சொந்த ஜனங்களும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பார்க்கிறோம். ''இவன் தச்சன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்'' (மாற்.6:3,4). ஆம், அந்தப்படியே இன்று கிறிஸ்தவர்கள்தான் சில சமயங்களில் யூதாசைப்போல, கிறிஸ்துவுக்கு விரோதமாக செயல்படுகிறவர்களாக மாறிவிடுகிறார்கள். இச்செய்தியை கேட்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, உனக்காக ஜீவனை கொடுக்க வந்த ஆண்டவர் இயேசுவை குறித்து நீ என்ன நினைக்கிறாய்? அவர் உன்னை ஒருபோதும் தள்ளாதவர். அவர் உனக்காக பிதாவினிடம் பரிந்து பேசுகிறவர். யார் உன்னை கைவிட்டாலும் அவர் உன்னைக் கைவிடாதவர். அவர் மேன்மையுள்ளவர். அவரை நீ மேன்மைப்படுத்துவாயானால் அவர் உன்னை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டுவார்.

**கேள்வி நேரம்**

**தன்னை மேன்மையாக பாராட்டுகிறவர்களின் நிலை என்ன?**

ஏரோதுவை நீங்கள் அறியவேண்டும். அவன் ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான். ''விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை'' என்று நீதி.16:18–ல் வாசிக்கிறோம். அந்தப்படியாக ஏரோது ஜனங்களுடைய சத்தத்தைக்கேட்டவுடன் மனமேட்டிமை கொண்டு புழுப்புழுத்து இறந்தான். கர்த்தர் ஆறு காரியங்களை வெறுக்கிறார் ஏழும் அவருக்கு அருவருப்பு அவைகளில் ஒன்று மேட்டிமையான கண். உங்களுக்குள்ளாக இந்தவிதமான சிந்தை இருக்குமானால் இன்றே அவைகளைக் களைந்துபோட்டு மேன்மையானவரை மகிமைப்படுத்துங்கள். ''மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்'' (2கொரி.10:17). உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**" உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு" – நீதிமொழிகள் 4:3:9**

# 21. திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்
# Desire the sincere milk of the word

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தாம் ஒருவரே ஞானமுள்ளவராகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் – Desire the sincere milk of the word. அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும்போது "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" என்கிறான் (1பேது.2:3). நாம் ஆவிக்குரிய வளர்ச்சியடைய வேண்டுமானால் ஆவிக்குரிய வசனங்களைக்கேட்டு, ஆவியில் பெலப்படவேண்டும். நம்முடைய சுய ஞானத்தினாலோ, சுய பக்தியினாலோ அல்லது சுய பெலத்தினாலோ வளருவோமானால் நாம் ஆவிக்குரியவர்களல்ல, மாம்சத்துக்குரியவர்களே. திருவசனத்தில் வளர குழந்தைகளைப்போல களங்கமில்லாத ஞானப்பாலாகிய வசனத்தின்மேல் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கவேண்டும். உங்களுடைய வாஞ்சை எப்படிப்பட்டது?

"கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி" என சாலொமோன் குறிப்பிடுகிறார் (நீதி.6:23). வேதாகமம் இருள் உள்ள ஸ்தலத்தில் வெளிச்சம் கொடுக்கிற விளக்கைப்போன்றது. நம்முடைய வாழ்க்கையில் உள்ள இருளை அகற்றி வெளிச்சத்தை கொடுக்கிறது. வேதாகமத்தை பெற்றுக்கொண்டவர்கள் வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டவர்கள். ஆகையால், "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத்தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்றார் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து (மத்.5:14–16).



நாம் மலையில் இருக்கிற பட்டணத்தைப்போலவும், விளக்குத்தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்கைப்போலவும், நம்முடைய நற்கிரியைகள் மூலமாக வெளிச்சம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் திருவசனத்தில் வாஞ்சையாயிருப்போமானால் வேதம் கொடுக்கிற வெளிச்சத்தைப் பெற்று வெளிச்சம் கொடுக்கிறவர்களாயிருப்போம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கின்றனர். ஒரு குருடன் மற்றொரு குருடனை வழிநடத்த முடியாது. அதுபோல வேதாகமம் இல்லாமல் ஒருவர் மற்றொருவரை வழிநடத்த முடியாது. "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" 1பேது.4:11–ன்படி, வேதாகமம் இல்லாமல் இருளுள்ள ஸ்தலத்தில் நாம் ஒன்றும் செய்யமுடியாது. சங்கீதக்காரன் சொல்வதைப்போல "ஆண்டவருடைய வசனம் நம் கால்களுக்குத் தீபமும், நம் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது". ஆம், கர்த்தருடைய வசனம் நம்முடைய கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. இந்த வெளிச்சத்திலே நாம் வெளிச்சம் காண்கிறோம். இவைகளைப் பற்றிக் கொள்ளாத ஒருவன் இப்பூமியிலே இடறுவான். அது மாத்திரமல்ல, அவனுடைய கால்கள் மரணத்தை நோக்கி தீவிரிக்கும். சமாதானமில்லாமல், நோயுற்று, அலைகிறவனாயிருப்பான். காயீன் பாவம் செய்தபோது கர்த்தர் அவனுக்கு இட்டதண்டனை இப்படிப்பட்டதாகத்தானிருந்தது. உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். தேவ சித்தத்திற்கும் அவருடைய கட்டளைக்கும் கீழ்ப்படியாதிருக்கும்போது இவ்விதமான சூழ்நிலைக்குள் தள்ளப்படுவோம்.

இந்த சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அநேகருக்கு கிடைப்பதில்லை. காரணம் என்னவென்றால்; "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"(2கொரி.4:4). இப்படி பிசாசு அவர்களை குருடாக்கிப் போட்டபடியால் மெய்யான சுவிசேஷத்தின் ஒளியை அவர்களால் பார்க்கமுடியவில்லை. "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற

விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக் கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப் போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்''(1யோவா.1:5–7).

வேதம் நம்முடைய வாழ்க்கையில் மனமகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது. வேதாகமம் இருக்கிற இடத்திலே தேவன் இருப்பார். வேதாகமத்தை ஒதுக்குகிறவர்களும் வெறுக்கிறவர்களும் நாசமடைவார்கள். ''மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத்தரும்; மனோதுக்கத்திலே ஆவி முறிந்துபோம்''(நீதி.15:13). மனமகிழ்ச்சி ஒருவருடைய வாழ்வில் முகமலர்ச்சியைக் கொடுக்கிறது. ஒருவர் மனமகிழ்ச்சியாயிருக்க வேதாகமத்தை நாட வேண்டும். தாவீது சொல்லும்போது ''உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்'' என்கிறான் (சங்.119:92). துன்பங்களோ, பாடுகளோ, வரும்போது வேதாகமத்தை அநேகர் எடுத்து வாசிப்பதில்லை. அந்தவிதமான சமயத்திலே நாம் வேதாகமத்தை வாசிப்போமென்றால் மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். துன்பம் வரும் சமயத்தில் அநேகர் பொதுவாக நண்பர்களையும் உறவினர்களையும் நாடுவர். அது தவறு என்று சொல்லவில்லை. மனிதனை நம்புவதைவிட தேவன் பேரில் பற்றுதலாயிருப்பது நலம். சிலர் கஷ்டத்தைப் போக்க மாற்று மருந்தாக போதை வஸ்துக்களுக்கு அடிமைகளாகிவிடுகின்றனர். இது ஒரு நிரந்தர தீர்வை தரும் என நம்புகின்றனர். ''மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும் போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும் முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்'' என எச்சரிக்கப்படுகிறோம் (நீதி.23:31,32). நண்பனே எதை நாடுகிறாய்!

ஒருவனுடைய மகிழ்ச்சியைக் கெடுப்பது அவனுக்கு வரும் உபத்திரவமும், இக்கட்டும், நெருக்கமும் தான். கர்த்தரோ, இவைகள் எல்லாவற்றினின்றும் அவனை விடுவிக்க வல்லவராயிருக்கிறார். உன் காலைத் தள்ளாடவொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார். தாவீது சொல்வதைக் கவனியுங்கள்: ''இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது; ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி'' என்கிறான்



(சங்.119:143). இப்படிப்பட்ட நம்பிக்கை இருக்குமானால் நமக்கு வரும் உபத்திரவங்களிலும் நம்முடைய மன மகிழ்ச்சியை யாரும் கெடுத்துவிட முடியாது. இதைக் குறித்து பவுல் குறிப்பிடுகையில்: ''கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ,பட்டயமோ? இவையெல்லா வற்றிலேயும் நாம் நம்மில் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக் கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், நிகழ்காரியங் களானாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும்,வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித் திருக்கிறேன்''என்கிறான் (ரோம.8:36–39). கிறிஸ்துவானவர் நமக்காக தியாக பலியாக மரித்திருக்கும் போது அவருடைய அன்பையும், அவருக்குள் இருக்கும் மகிழ்ச்சியையும் ஒருவரும் ஒருக்காலும் நிச்சயமாக நம்மைவிட்டு பிரிக்க இயலாது.

வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை. இன்றைய நாட்களிலே எங்கு பார்த்தாலும் சமாதானமில்லை என்றே பேச்சு. நாட்டுக்கு நாடு சமாதானமில்லை, வீட்டுக்கு வீடு சமாதானமில்லை, கணவன் மனைவியிடையே சமாதானமில்லை. இப்படி பல வகையில் மனிதனுக்கு சமாதானமில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? தேவன் மனிதனுக்கு கொடுத்த வேதாகமத்தை ஏற்றுக்கொள்ளாததே! ''வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன் என்கிறார் தாவீது (சங்.119:113). வீணான காரியங்களை வெறுத்து வேதத்திற்கு முதலிடம் கொடுத்து வேதத்தை நேசிப்போம். வேதத்தை நேசிக்கிறவர்கள் ஒருநாளும் வீணாய் போவதில்லை. பல புத்தகங்கள் படிப்பது உடலுக்கு இளைப்பு. ஆனால் வேதம் வாசிப்பதும் அதை நேசிப்பதும் ஆத்துமாவுக்கு ஔஷதம். வேதம் தேவனை அறிகிற அறிவுக்கு நேரே ஒருவரை வழிநடத்தும். முடிவிலே நித்திய ஜீவனையும் கொடுக்கும். ஒவ்வொருவருக்கும் விருப்பம் வானளவில் இருக்கிறது. இந்த விருப்பத்தை நிறைவேற்ற ஒவ்வொருநாளும் மனிதன் படும் பிரயாசத்திற்கு முடிவில்லை. திருவசனத்தில் நம்முடைய வாஞ்சையை வைக்கும் போது எல்லையில்லா சமாதானம் பெற்று நித்தியமானவரோடு வாழும் பெரும் பாக்கியத்தை ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

“என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக்கண்டடைவார்கள் ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு. பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப்பார்க்கிலும் என் வருமானம் நல்லது. என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப் பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும் படிக்கும் அவர்களை நீதியின் வழியிலும் நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்” என்கிறார் (நீதி8:17–21). இத்தனை ஆசீர்வாதங்களையும் கொடுக்கும் கர்த்தர் அருளிய வேதத்தின் மீது வாஞ்சையாயிருங்கள். ஏற்றவேளையிலே உங்கள் தேவைகளை கர்த்தர் சந்திப்பார்.

**கேள்வி நேரம்**

**வேதாகமம் சோறுபோடுமா?**

திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் என்றால் இப்படித்தான் அநேகர் கேள்வி கேட்பார்கள். சாத்தான் ஒரு முறை ஆண்டவர் இயேசுவைப்பார்த்து இப்படியாக கேட்டான் “நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்” (மத்.4:3,4). மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தைகளை கைக்கொள்ளும்போது அதனால் அவன் போஷிக்கப்படுவான். கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறார். வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். “ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்” காட்டு புஸ்பங்களையும் ஆகாயத்து பறவைகளையும் கவனியுங்கள் என்று சொல்லும் கர்த்தரின் சத்தம் கேட்டு முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

**"தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக்கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம்"**
**நீதிமொழிகள் 25:25**



## 22. புதிய வானம் புதிய பூமி
## New Heaven and New Earth

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிய வானம் புதிய பூமி – New Heaven and New Earth. பொதுவாக எல்லோருக்கும் ஒவ்வொரு மாதமும், வாரமும், நாட்களும் புதியவைகளாகவே இருக்கின்றன. புதிய வானத்தையும், புதிய பூமியையும் என்றுதான் காணப்போகின்றோம் என்ற ஏக்கம் அநேகருக்கு இருக்கத்தான் செய்கிறது. ஏனென்றால், நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வானம் மற்றும் பூமி அதே தோற்றத்தோடே இருக்கிறது. சில சமயங்களில் காலத்திற்கேற்ப சில மாற்றங்களைக் காண்கிறோம். இதிலே நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம். ஒருநாள் நாம் காண்கின்ற இந்த வானமும் பூமியும் அழிந்துபோகும். அதன் பின்பு புதிய வானத்தையும் புதிய பூமியையும் நாம் காணலாம். இந்த புதிய வானமும், புதிய பூமியும் எங்கே இருக்கும், அங்கே யாரெல்லாம் இருப்பார்கள், அதில் பிரவேசிக்க நாம் என்ன செய்யவேண்டும், என்ற கேள்விகள் நமக்குள் எழுகிறதல்லவா? ஆம், நாம் இந்த புதிய வானத்தையும், புதிய பூமியையும் பற்றி தெரிந்து கொள்வது மிக அவசியம்.நாளுக்கு நாள் புதிய புதிய கண்டுபிடிப்புகள் பெருகிக் கொண்டேவருகிறதை நாம் அனுதினமும் காண்கின்றோம், மேலும் அதைக்குறித்துக் கேள்விப்படுகிறோம். பரிசுத்த வேதாகமம் மோசே காலமுதற் கொண்டு இருந்து வருகிறது. இது புதியவைகளைப் பற்றியும் பேசிக்கொண்டே வருகிறது. அதிகமாக வேதாகமத்தை மையமாக வைத்தே புதிய புதிய கண்டுபிடிப்புகள் கூட வந்திருக்கிறதை ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்கின்றனர். குறிப்பாக சொன்னால் “கர்த்தர் ஞானத்தை தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்”நீதி.2:6 என்ற வசனத்திற்கேற்ப வேதாகமத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நாட்டிற்காக ஆராய்ந்து கொடுத்ததை நாம் எண்ணிக்கையில் சொல்லிவிட முடியாது அந்த அளவுக்கு அதிகமாக கொடுத்துள்ளனர். இவைகளெல்லாம் தேவனால் உண்டாக்கப்பட்ட மனுஷன், மனுஷனுக்காக இப்பூமியில் விட்டுச்சென்றவைகளே. தேவன் மனுஷனுக்காக இந்த வானத்தையும் பூமியையும் சகலவற்றையும் சிருஷ்டித்தார். நாமும் இன்றுவரை இதில் வசித்து வருக்கின்றோம்.

**1. புதிய வானமும் புதிய பூமியும் எங்கே இருக்கிறது?**

இதைப்பற்றி தெரிந்து என்ன செய்யப்போகிறோம்? பின்னாலே நடப்பதை யார் கண்டது? என்ற சலிப்பான கேள்வி அநேகருக்குள் எழும்பி, இருக்கிற வாஞ்சையையும் குறைத்துவிடுகிறது. அன்பானவர்களே, வாழ்க்கையில் நம்முடைய வெற்றிக்கு குறுக்கே நிற்பது நம்முடைய சோம்பேறித்தனம்தான். இவைகளை முதலில் களைந்து விட்டு எறும்பைப்போல சுறு சுறுப்புள்ளவர்களாய் வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பரிசுத்த வேதம் கூறுகிறது: தேவன் எங்கே இருக்கிறாரோ அங்கே புதிய வானமும் புதிய பூமியும் உண்டு. "அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள்"(வெளி.22:5).

பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதும்போது: "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று எழுதுகிறார் (பிலி.3:20). ஆம், நம்முடைய நிரந்தரமான குடியிருப்போ இங்கே இல்லை. ஏனென்றால், "இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத்தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்திலே குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்"(2கொரி.5:7–9).

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பானேயானால் அவனுக்கு இந்தவிதமான சிந்தை உண்டாயிருக்கும். ஒருவேளை "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்" என்கிறார் பவுல் (2கொரி.5:1,2).

**2. அங்கே யாரெல்லாம் இருப்பார்கள்?**

இன்று கிறிஸ்தவத்தில் கேட்கப்படும் முதல் கேள்வி நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? நல்ல கேள்விதான் ஆனால் வசன ரீதியாக



அநேகர் கேட்பதில்லை. இரட்சிப்பு என்பது நம்முடையதல்ல அது தேவனுடையது, அது தேவனுடைய ஈவாகும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான்" (மாற்.16:16). மேலும், "இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" என அப்.2:47–ல் வாசிக்கிறோம். இப்படி இரட்சிக்கப்படுகிறவர்களே அங்கே இருப்பார்கள். யோவானுடைய தரிசனத்தில், "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது"என்று எழுதியுள்ளார் (வெளி.21:1,2). இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள்.

பூமியிலே வசதிபடைத்தவர்கள் வசதியான இடத்தை பிடித்து விடுகின்றனர். பொய் பேசுகிறவர்கள் ஆயிரம் பொய்யைச் சொல்லி எப்படியாவது ஒரு கலியாணத்தை முடித்துவிடுகின்றனர். இப்படிப் பட்டவர்களை நீங்கள் பூமியிலே பார்ப்பீர்கள். ஆனால், பரலோகத்திலே இப்படிப்பட்டவர்களை பார்க்க முடியாது என வேதம் சொல்லுகிறது. "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" (வெளி.21:27). ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்படுவது என்னாலோ, உங்களாலோ, அல்லது உங்கள் சபை போதகராலோ முடியாது. அது கர்த்தரால் மட்டுமே முடியும். ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் புதிய வானமும் புதிய பூமியுமாகிய பரலோகத்தில் இருப்பார்கள்.

**3. அதில் பிரவேசிக்க நாம் என்ன செய்யவேண்டும்?**

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்கிறார் பேதுரு (யோவா.17:3). தேவனையும், ஆண்டவரையும் அறிகிற அறிவிலே வளருங்கள். தேவன் எப்படிப்பட்டவர், அவருடைய திருசித்தம் என்ன? இயேசுவை பலியாக இவ்வுலகத்திற்கு அவர் ஒப்புக்கொடுத்ததின் காரணம் என்ன? போன்ற கேள்விகளுக்கு ஒரு தனி நபர் பதில் சொல்லிவிட முடியாது. இதற்கு

வேதாகமமே பதில். இவைகளை அறிகிற அறிவில் நாம் தேர்ச்சியடையும்போது நித்திய ஜீவனுக்குள்ளாக வழி நடத்தப்படுவோம். மற்றபடி சுயமுயற்சியினாலோ அல்லது சுய பக்தியினாலோ நித்திய ஜீவனை சம்பாதித்துக் கொள்ள இயலாது. இன்றைய உலகத்தில் உள்ளவர்கள் மற்றவர்களைவிட தான் ஒருபடி உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என நினைத்து போட்டி போட்டுக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். முடிவிலே எல்லாம் மாயையாக போய்விடுகிறது. படித்தவன் பாட்டைக்கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்ற உலகபழமொழிக்கு ஏற்ப நடக்கிறது. ஆனால் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள பணமோ, அழகோ, படிப்போ தேவையில்லை. விசுவாசம் போதுமானது. கர்த்தர் உங்களையும் உங்கள் விசுவாசத்தையும் காண்கிறார். இன்றே விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். ''...விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே'' என ரோம.14:23–ல் படிக்கின்றோம்.

ஆகையால் ''பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்''(கொலோ3:2). பூமிக்குரியவர்கள் பூமிக்குரியவைகளை நாடுவார்கள். நீங்கள் பரத்துக்குரியவர்கள் என்றால், பரத்துக்குரிய காரியங்களை பேசுங்கள், நாடுங்கள். ''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின'' என்ற 2கொரி.5:17–ன்படி உங்கள் ஜீவியம் புதிதாக மாறட்டும். நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருப்பீர்கள், புதிய பூமியில் பிரவேசிக்கவும் தகுதியுடையவராயிருப்பீர்கள். இல்லை என்றால் இன்றே கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்ள பிரயாசப்படுங்கள். ''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது'' என்கிறார் பவுல் (கொலே.1:13,14). இங்கே அவருக்குள் (இயேசுவுக்குள்) அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது.

இச்செய்தியை கேட்கிற சகோதரனே, சகோதரியே, அன்பு நேயரே, நீங்கள் புதிய வானத்தையும் புதிய பூமியையும் குறித்து சற்று சிந்திக்கும்படி உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நேரமில்லை என்று ஒதுக்கி விடாதீர்கள் நேரத்தை நாம் தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சபையோடும், சகல பரிசுத்தவான்களோடும் சேர்ந்து வேதாகமத்தை ஆய்வு



செய்யுங்கள். அப்பொழுது, அதில் பிரவேசிப்பதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கேள்வி நேரம்**

**நாம் காண்கிற இந்த வானமும் பூமியும் என்னவாகும்?**

ஒரு நாளில் இவைகள் எல்லாம் அழிந்துபோகும். ஆனால் அநேகருக்கு நம்பிக்கையில்லை. ஆகையினால் வீட்டிற்கு மேல் வீட்டைக் கட்டுகிறார்கள். தங்களால் எந்த அளவு பூமியில் சம்பாதிக்கமுடியுமோ அந்த அளவுக்கு சம்பாத்தியம் பண்ணவும், உயர்வான வஸ்திரங்களை தரிக்கவும், உயர்வான இடங்களில் தங்கவும் விரும்புகின்றனர். ஆனால் இவையெல்லாம் ஒருநாளில் அழிந்துபோகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ''வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை'' என்றார் (மத்.24:35). அவருடைய வார்த்தை அழியாத ஒன்று. நாம் காண்கிற அனைத்தும் அழிந்துபோகும், கர்த்தருடைய வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. ஏனெனில், அது தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்டு வந்தவை அவைகள் ஒழிந்துபோகாது, ஒருவராலும் அதை அழிக்கமுடியாது. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். உங்களுடைய நம்பிக்கை எங்கே? அழிந்துபோகிற உலகத்தின் மீது உங்களுடைய நம்பிக்கையை வைக்காமல் என்றென்றும் நிலைத்திருக்கிற தேவனுடைய வசனத்தின்மேல் உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். தேவன் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். அதுவே புதிய வானம், புதிய பூமி. அதில் பிரவேசிக்க பிரயாசப்படுங்கள், வல்லமையுள்ள வசனத்தில் நீங்கள் நம்பிக்கைகொண்டால் அது உங்களை பரலோகம் சேர்க்கும்.

**"வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" – நீதிமொழிகள் 28:9**

## 23. வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறீர்கள்
## Ye do err, not knowing the scriptures

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நமது ஆண்டவரும் புதுஉடன்படிக்கையின் இரட்சகருமாகிய இயேசுவின்

தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறவர்களை நாம் அநுதினமும் சந்திக்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் உள்ள புதிய ஏற்பாட்டில் சதுசேயர்களைப்பற்றி வாசிக்கின்றோம். இவர்கள் உயிர்த் தெழுதலும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்று சாதிக்கிறவர்கள் (அப்.23:8). இவர்கள் இயேசுவை சந்தித்து, “போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டும் என்று மோசே சொன்னாரே. எங்களுக்குக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப்போனான் அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன்முதல் ஏழாம் சகோதரன் வரைக்கும் செய்தார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். ஆகையால், உயிர்த்தெழுதலில் அவ்வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம் பண்ணியிருந்தார்களே என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்” என்றார் (மத்.22:24–30). வேதவாக்கியங்களை சரிவர புரிந்துகொள்ளாத இந்த சதுசேயர்களைப்போலவே இன்றும் அநேகர் இருக்கின்றனர்.

சதுசேயர்களுடைய வாயை அடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: “கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே, தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அதற்கு மாறுத்தரமாக ஒருவனும்



அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்று முதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை” என்று மத்.22:42–46 வசனங்களில் வாசிக்கிறோம். சதுசேயர், பரிசேயர் ஆகிய இவ்விரண்டு கூட்டத்தாருமே வேதவாக்கியங்களை அறியாமல் தப்பான எண்ணங் கொண்டிருந்தனர். இவர்களைப் போல இன்று அநேக பெயர் கிறிஸ்தவர்கள் பிரிந்து போய் ஒருவரையொருவர் சாடிவருகின்றனர். சதுசேயர்கள் வாயைஅடைத்தார் என்று பரிசேயர் சந்தோஷப்பட்டார்கள். பரிசேயர்களைப் பார்த்து இயேசு கேட்ட கேள்விக்கு பதில் சொல்லமாட்டாது திணறினார்கள். அதற்கு பின்பு கேள்விகேட்பதையே விட்டுவிட்டனர்.

இன்று இயேசுவைக் குறித்து பிரசங்கிக்கிறவர்கள் இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறார்கள். ஆனால், அவர்கள் மரியாளை இயேசுவின் தாய் என்றும் மரியாள் மூலமே ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும் என்றும் போதித்து மரியாளை ஒரு கடவுளாக மாற்றிவிட்டனர். இப்படி வேதவாக்கியங்களை அறியாமல் தவறான எண்ணம் கொண்டு கோடிக்கணக்கான ஜனங்கள் கிறிஸ்துவின் கிருபையிலிருந்து வழிவிலகிப் போய்க்கொண்டிருக்கின்றனர். பரிசேயர்கள் ஒரு முறை ஆண்டவரிடத்தில் வந்து: “நீர் இவ்விடத்தை விட்டுப்போய்விடும்; ஏரோது உம்மைக்கொலைசெய்ய மனதாய் இருக்கிறான் என்றார்கள். அதற்கு அவர் நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ள வர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன். இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நடமாட வேண்டும்; எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிறதில்லையென்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்”என்றார் (லூக்.13:31–33). கர்த்தர் மரணத்தைக் குறித்து பயப்படவில்லை அதை நிறைவேற்றவே வந்தார். ஆனால் பரிசேயர்களோ வேதத்தை அறியாததினால் தப்பான எண்ணம் கொண்டு கர்த்தருக்கே ஆலோசனை சொன்னார்கள். அதற்கு கர்த்தருடைய பதில் வல்லமையுள்ளதாக இருந்தது எருசலேமுக்கு புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிறதில்லையென்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள் என்றார். அவரோடு பாடுபடுகிறவர்கள் நிச்சயமாக சோர்ந்துபோகார்கள். “ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது” என்ற வசனத்தையும் நினைவு கூருவார்கள் (பிலி.1:29).

இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: ‘‘வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந் திருக்கிறார்கள்: ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்’’ (மத்.23:2–4). இவர்களைப்போல கிறிஸ்தவம் என்ற போர்வையை போர்த்திக்கொண்டு இருக்கிறவர்களை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவர்களுடைய செய்கையின் படி செய்யாதிருங்கள். ஏனென்றால், அவர்கள் ஒருவனை அவர்களுடைய மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறார்கள். அவன் அவர்களுடைய மார்க்கத்தானானபோது அவனை அவர்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறார்கள், இதுவே அவர்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சமுதாயத்தோடு உங்களுக்கு உறவு அவசியமா? அன்பு நேயரே சிந்தியுங்கள் செயல்படுங்கள்!

இயேசுவை குற்றப்படுத்தின பரிசேயர்கள் அவருடைய சீஷர்களையும் குற்றப்படுத்த தொடங்கி, ‘‘இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே என்றார்கள். அதற்கு அவர்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்க வில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர்தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமூகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே. அன்றியும், ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலை நாளாக்கினாலும், குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா? தேவாலயத்திலும் பெரியவர்இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார்’’ என்றார் (மத்.12:2–8). கர்த்தர் இவர்களைப் பார்த்து நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா?என்று இரண்டு முறை கேட்கிறார். ஆம், வேதத்தை வாசிக்காதவர்களும் அதன் அர்த்தத்தை புரிந்துகொள்ளாதவர்களும் எப்பொழுதும் குற்றப்படுத்திக்கொண்டே



இருப்பார்கள். மேலும், கைகழுவாமல் போஜனம் பண்ணினதைக் குற்றப்படுத்தினார்கள். ‘‘உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?...... உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள். மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ, எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்’’ என்று ஆண்டவர் இயேசு பதில் அளித்தார் (மத்15:2–9). இந்த வேதபாரகர் பரிசேயர்களைப்போல பாரம்பரியங்களைக் கைக்கொள்ளுகிறவர்களின் கூட்டம் பெருகிக் கொண்டே செல்கிறது. இவர்களுடைய ஆராதனை வீணானதாகவும், இவர்களுடைய இருதயமோ கர்த்தருக்கு தூரமாகவும் விலகியிருக்கிறது. கர்த்தருடைய போதனை எப்படிப்பட்டதாயிருக்கிறது ‘‘வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்’’என்றார். இப்போதனைக்கு விரோதமாக பேசுகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

கர்த்தருடைய சித்தத்தையும், வேதவாக்கியங்களையும் அறியாமல் தப்பான எண்ணங்கொண்ட வேதபாரகர், பரிசேயர், சதுசேயர்களைப் போல இன்றும் அநேகர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். உங்களுடைய எண்ணம் எப்படிப்பட்டதாக இருக்கிறது. இயேசுவுடன் இருந்த சீஷர்கள் சிலவேளைகளில் புரியாதவர்களாக இருந்தார்கள் அப்படியே நீங்களும் இருக்கிறீர்களா? ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்தி கற்றுக்கொள்ளுங்கள். கர்த்தர் அதற்குரிய ஞானத்தை உங்களுக்கு தந்தருள்வாராக!

### கேள்வி நேரம்

**வேதாகம ஆராய்ச்சி மிக முக்கியமா?**

கர்த்தர் சொன்ன வசனத்தை இங்கு நினைவுக்கு கொண்டுவருவோம் ‘‘ வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே,

என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே'' என்றார் (யோவா.5:39). ஆக, வேத ஆராய்ச்சி மிக முக்கியமானது. வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்ததினாலே தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் பெரோயா பட்டணத்தார்கள் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.

பேதுரு ஒரு முறை இயேசுவை கடிந்து கொண்டான். ''இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத்தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப்பார்த்து; எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்'' (மத்.16:22,23). யாக்கோபும், யோவானும், எருசலேம் நகரத்தார் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிந்து, எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச்சித்தமா என்று கேட்டார்கள். ''அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்'' (லூக்.9:55,56). ஆகையால் வேதாகமத்தை ஆராய்ந்து படித்து கற்றுக்கொள்ளுங்கள்.

**"தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிவர்களுக்கு அவர் கேடகமானவர்" – நீதிமொழிகள் 30:5**

## 24. கொடிய வஞ்சகம்
## Strong Delusion

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நன்மையே செய்யும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொடிய வஞ்சகம் – Strong Delusion. **ம**னிதனுடைய வாழ்க்கையிலே அவனால் தாங்கிக் கொள்ளமுடியாத ஒன்று எதுவென்றால் அது வஞ்சகம். இந்த வஞ்சகம் பல வழிகளில் ஏமாற்றமடைய செய்கிறது. இந்த வஞ்சகத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே வழி சத்தியத்தை விசுவாசிப்பதுதான். சத்தியம் என்றால் என்ன? அதை நாம் எங்கே



காணலாம்? அதை தழுவிக்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்? என்ற கேள்விகள் நமக்குள் எழும்புகிறது. இதைக்குறித்து இச்செய்தியில் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். வஞ்சகம் அதாவது ஏமாற்றம் அநேகருடைய வாழ்க்கையில் ஏற்படக் காரணம் என்ன? வேதம் கூறுகிறது: ''சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்'' (2தெச.2:11,12). சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும் என இவ்வசனம் கூறுகிறது. அன்று முதல் இன்றுவரை மானிடர்கள் உண்மையை ஒதுக்கிவைத்து விட்டு கண்போனபோக்கிலும், மனம்போன போக்கிலும் செல்வதால் தேவன் அவர்களுக்குள்ளே இப்படிப்பட்டதான கொடிய வஞ்சகத்தை அனுப்புகிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்திலே பிலேயாம் என்ற ஒரு தீர்க்கன் இருந்தான். அவனிடத்தில் மோவாபின் ராஜாவாகிய பாலாக் என்பவன் மோவாபின் மூப்பர்களையும், மீதியானின் மூப்பர்களையும் பிலேயாமிடம் அனுப்பி ''பூமியின் விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது; ஆகையால், நீ வந்து எனக்காக அவர்களைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது நான் அவர்களோடே யுத்தம் பண்ணி, ஒருவேளை அவர்களைத் துரத்திவிடலாம் என்று சொல்லச் சொன்னான். அதற்குத் தேவன் பிலேயாமை நோக்கி; நீ அவர்களோடே போக வேண்டாம்; அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம்; அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார்''(எண்.22:11,12). பிலேயாமோ பாலாக்கின் வார்த்தைகளுக்கு இணங்கி பலி பீடங்களில் ஏறத்துணிந்தவனாக அவனுடைய கூலியில் விருப்பப்பட்டான். இதைக் குறித்து யூதா குறிப்பிடுகையில் இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள் என வாசிக்கிறோம். தேவன் ஒரு முறை சொல்லிய காரியத்தை மாற்றுகிறவரல்ல என்பதை முதலாவது நன்கு உணரவேண்டும். பழையஏற்பாட்டு காலத்தில் யூதாவிலிருந்து பெத்தேலுக்கு ஒரு தீர்க்கதரிசியை கர்த்தர் அனுப்பினார். அப்பொழுது அவனிடத்தில் நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் அவனுக்கு எச்சரித்திருந்தார். அவனோ அப்படியே சென்று

யெரொபெயாம் காலத்தில் பெத்தேலுக்கு வந்து, பலிபீடம் வெடித்து சாம்பல் கொட்டுண்டுபோம் இதுவே உம்முடைய ராஜ்யத்திற்கு அடையாளம் என்றான். அப்பொழுது அவனைப்பிடியுங்கள் என்ற ராஜாவின் கை தன்னிடமாக முடக்கக் கூடாதபடி மரத்துப்போயிற்று. ராஜா தீர்க்கதரிசியைப் பார்த்து என் கை முன்போல் இருக்கும்படி உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளவேண்டும் என்றான். அந்தப்படியே அவன் விண்ணப்பம் பண்ணியபோது ராஜாவின் கை சீர்பட்டது.

பின்பு ராஜா என்னோடே கூட வாரும் வெகுமானம் தருகிறேன் என்றான். அதற்கு அந்த தீர்க்கன் கர்த்தரிட்ட கட்டளையை சொன்னான். பின்பு அவன் பெத்தேலுக்கு வந்தவழியாய்த் திரும்பாமல்,வேறுவழியாய்ப் போய்விட்டான். இதை அறிந்த ஒரு கிழவனான தீர்க்கதரிசி அவனை சந்தித்து என்னோடே வீட்டுக்குவந்து அப்பம் புசியும் என்றான் அவனோ கர்த்தருடைய கட்டளையைச் சொன்னான். அதற்கு கிழவனான தீர்க்கதரிசி உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; அவனை அப்பம் புசிக்க அழைத்துக்கொண்டுவா என்று கர்த்தர் என்னோடே சொன்னார் என்று பொய் சொன்னான். அவனோ நம்பிபோய் அப்பம் புசித்து தண்ணீர் குடித்தான் . அப்பொழுது கிழவனான தீர்க்கதரிசியைக்கொண்டு, "......கர்த்தர் உனக்கு கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும் தண்ணீர்குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால் உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்"(1இரா.13:21,22). ஆம், "தேவன் ஒரு விசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத் திருத்துகிறவரல்லவே"(யோபு33:14). கர்த்தருடைய வார்த்தையை பெற்று அப்படியே சொல்லுகிற தீர்க்கதரிசியே இப்படிப்பட்ட வஞ்சகத்திற்குள் அகப்பட்டு மடிந்துபோனதை வாசிக்கின்றோம். ஆகையால் பிரியமானவர்களே, "வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல"என்கிறார் பவுல் (கலா.1:7). ஆனபடியால் கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாக பேசி உங்களை தன்வசப்படுத்துவார்கள். இந்த கொடிய வஞ்சகத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரே வழி நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும்.



**1. அநேகர் சத்தியம் என்றால் என்ன? என்று கேட்கிறார்கள்.**

சத்தியம் என்றால் உண்மை. அந்த உண்மை எங்கிருக்கிறது? பரிசுத்தவேதாகமத்தில் இருக்கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவா.17:17). ஆண்டவர் அருளிச்செய்த வேதமே சத்தியம். இந்த சத்தியத்தை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவேண்டும். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் ஆண்டவர் இயேசுகிறிஸ்து (யோவா.8:32). ஆக, சத்தியத்தை ஒருவன் அறியாமல் அவன் வஞ்சகத்திலிருந்து விடுதலையடைய முடியாது.

**2. இந்த சத்தியத்தை நாம் எங்கே காணலாம்?**

சத்தியத்தை பரிசுத்த வேதாகமத்தில் உள்ள புதிய ஏற்பாட்டிலே மிகத்தெளிவாக காண்கிறோம். "எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17). மேலும், "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா.8:31,32). இந்த சத்தியபரராகிய இயேசுவை அறிவதே நித்திய ஜீவன், அவரே நம்மை பாவத்திலிருந்தும் வஞ்சகத்திலிருந்தும் விடுவிக்கக் கூடியவர். "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும் நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்(இயேசு)" (யோவா.6:40).

**3. சத்தியத்தை நாம் தழுவிக்கொள்ள என்ன செய்யவேண்டும்?**

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் இயேசு (யோவா14:6). இயேசுவையும் அவருடைய வழியையும் பற்றிக் கொண்டு உங்களுடைய பாவத்திற்காக மனந்திரும்பி இயேசுவை அறிக்கையிட்டு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படியே நீங்கள் சத்தியத்தில் நிலை நின்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகைமட்டும் உங்களை பரிசுத்த ஆவிக்குள் காத்துக் கொண்டு கிறிஸ்துவானவர் நியமித்துள்ள அந்த ஒரே வழியிலே நீங்கள் வெற்றிநடை போடுவீர்கள் என்றால் நித்தியஜீவனை சுதந்தரித்துக் கொள்வீர்கள். இதற்கு விரோதமான உபதேசத்தை ஒருவன் உங்களுக்கு

கொண்டுவந்தால் ‘‘அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்’’(3யோவா10).

இச்செய்தியை கேட்கிற சகோதரனே, சகோதரியே, அன்பு நேயரே நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்கிறீர்களா? அல்லது கொடிய வஞ்சகத்தில் தள்ளப்பட்டு உள்ளீர்களா? சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரையும் தேவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார். ஆம், நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள்? பத்து கன்னிகைகளைப் பற்றிய உவமையில் பத்துப்பேரும் மணவாளனை சந்திக்க காத்திருந்தார்கள். மணவாளன் வர தாமதித்தபோது ஐந்துபேர் புத்தியை இழந்து விட்டனர். மணவாளன் அவர்களை அறியேன் என்றார். இன்று சத்தியத்தில் நடக்காமல், தான் அதில் நடப்பதாக கனவு கண்டுகொண்டு கிறிஸ்துவை சந்தித்தோமானால் அவருடைய மறுமொழி இப்படியாகத்தான் இருக்கும். மேலும் பிதாவின் சித்தம் செய்யாதவர் களைப்பார்த்து ‘‘அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்’’ என்கிறார் (மத்.8:23). இங்கு தம்மை பின்பற்றிவந்தும் பிதாவின் சித்தம் செய்யாதவர்களைப் பார்த்தே சொல்கிறார் என்பதை நினைவுகூருங்கள். நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் அவருடைய சபையில் அங்கமாக இருக்கிறேன் என்று பெருமை கொண்டு இருக்கலாம் முடிவு பரியந்தம் நிலைத்திருந்தால் தான் இரட்சிக்கப்பட முடியும். நீங்கள் உலகத்தில் பல வழிகளில் வஞ்சிக்கப்பட்டு இருக்கலாம், அவைகள் எல்லாம் உலகமே. அது உலகத்தோடு முடிந்து போய்விடும். ஆவிக்குரிய சத்தியத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் மறுமைக்குரிய ஆசீர்வாதத்தை இழக்கிறீர்கள். ஒரு மனிதனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல. சத்தியம் ஒருவனை போஷிக்கும், நேசிக்கும், அன்புகூரும், தாங்கும், நித்தியத்திற்கு நேரே வழி நடத்தும். கொடிய வஞ்சகத்திலிருந்து காக்கப்பட முதலாவது சத்தியத்தை விசுவாசியுங்கள். அதற்குரிய ஞானத்தையும் பெலத்தையும் தேவன் உங்களுக்கு கொடுப்பார்.

**கேள்வி நேரம்**

**கொடிய வஞ்சகத்தில் அதிகமாக அகப்படுகிறவர்கள் யார்?**

சத்தியத்திற்கு செவி கொடாதவர்கள், தேவனுக்குப் பயப்படாதவர்கள், மனிதபோதனைகளை உபதேசங்களாக போதிப்பவர்கள்,



கீழ்ப்படியாதவர்கள்... இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். சுருக்கமாக எபிரெய ஆசான் சொல்வதை கவனியுங்கள்: ‘‘எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு’’ (எபி.6:7,8). எவ்வளவு தெளிவாக சொல்கிறார் என்று பாருங்கள். கொடிய வஞ்சகத்தில் அகப்படுகிறவர்கள் முள்செடிகளையும், முள்பூண்டுகளையுமே கொடுப்பார்கள். பிதாவுக்கு ஏற்ற கனிகளை அவர்களால் கொடுக்கமுடியாது. அப்படிப்பட்டவர்களின் முடிவு அழிவு. நீங்கள் எப்படிப்பட்ட நிலம் போலிருக்கிறீர்கள். தன்னிடத்தில் பயிரிடுகிறவர் களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமா? அல்லது முள்செடிகளை முளைப்பிக்கும் நிலமா? உங்களுக்காக ஜெபிக்கிறோம். நல்ல நிலமாக மாறுங்கள்.

**"மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை; புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான்" – நீதிமொழிகள் 17:20**

## 25. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது
## Our sufficiency is of God

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்மை தகுதியுள்ளவர்களாக மாற்றும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது – Our sufficiency is of God. இன்றைய உலகம் தங்கள் தங்கள் தகுதியை குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் இதைக்குறித்து பேசும் போது ‘‘எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காரரா யிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த

உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதா யிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது''என்கிறார் (2கொரி.3:5,6). தான் ஒரு அப்போஸ்தலனாக இருந்தபோதிலும், எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்கிறார்.

இன்றைக்கு தங்களுடைய தகுதிக்காக போராடுகிற ஒரு கூட்டத்தை நாம் பார்க்க முடிகிறது. என் தகுதி என்னாவது? என்னைக்குறித்து மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? என்றெல்லாம் சொல்லி, தான் என்ற ஆணவத்தோடு, தான் செய்ய நினைத்ததை நிலைநாட்ட முயற்சிப்பார்கள். ஆனால் தேவன் சபையை அவருடைய சித்தத்தின்படி செயல்படுத்துகிறார். ''தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவிதமான பாஷைகளையும் ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிகமேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக் கிறேன்'' என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (1கொரி.12:28–31). தேவனானவர் முதலாவது சபையை கிறிஸ்துவின் மூலமாக ஸ்தாபித்து அதிலே இருக்கவேண்டியவர்களைத் தகுதிப் படுத்தினார். ஆகவே சபையானது தேவ திட்டத்தின்படியும் அவருடைய திருச்சித்தத்தின்படியும் முதல் நூற்றாண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. அந்த திருச்சபையானது இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் நிலைத்திருக்கும். ஏனெனில், அது தேவதிட்டத்தின்படியானது.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் சபையிலே தகுதியுடையோர் தகுதியில்லாதோர் என்ற நிலை இல்லை. ஏனென்றால், ''சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை



அமைத்திருக்கிறார்''(1கொரி.12:25). நம்முடைய தேவன் பட்சபாத முள்ளவரல்ல. எல்லாருக்கும் சம்பூரணமான ஆசீர்வாதங்களை அருளிச்செய்கிறவர். அவர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர். சபையிலே கனக்குறைவாயிருக்கிறவர்களுக்கு அதிக கனத்தைக் கொடுக்கிறார். ஒரு ஊழியர் (போதகர்) என்றால் சபையிலே மேன்மையானவர் என்றல்ல. ஊழியக்காரன் என்றால் பணிவிடைக்காரன் என்று பொருள். ''உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்'' என்று ஆண்டவர் போதிக்கிறார் (மத்.20:27,28).

பல வேலைகளை செய்து கொண்டு வந்த அப்போஸ்தலர்களை அழைத்து தம்முடைய திருப்பணிகளை செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்டார். அவர்கள் புறப்பட்டு ஒருவரையும் வேலை கொள்ளாமல் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன் என்ற வசனத்தின்படி நிலைத்திருந்து, சுவிசேஷ வசனத்தை அறிவித்தனர். தங்களுடைய சுய கருத்துக்களையோ சுய விருப்பத்தையோ அவர்கள் நிலைநாட்ட முயற்சிக்கவில்லை. முதல் நூற்றாண்டு சபையிலே பணிபுரிந்து வந்த பேதுருவும் யோவானும் ஒரு முறை தேவாலயத்துக்குப் போகும்போது ஒரு சப்பாணியைக் கண்டார்கள். அவன் தங்களிடத்தில் பிச்சை கேட்கும்போது, பேதுரு அவனை நோக்கி: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி; வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு பிரமித்தார்கள். ''பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன?..... அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது. அவரால் உண்டாகிய விசுவாசமே

உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது'' என்றான் (அப்.3:12–16). இவ்வளவு பெரிய அற்புதத்தை செய்த பேதுரு தன்னுடைய பக்தியையோ அல்லது தன்னுடைய பெலத்தையோ பெருமையாக சொல்லவில்லை. கர்த்தருடைய நாமமே இதை செய்தது என்றான். இவர்களை பெலப்படுத்தினவரும் தகுதிப்படுத்தினவரும் தேவனே.

இயேசுவின் பிறப்பின்போது ''மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான்''(லூக்.1:34–37). இது எப்படியாகும் என்று கேட்ட மரியாளை தகுதிப்படுத்தினார். அந்தப்படியே முதிர்வயதிலே இருந்த எலிசபெத் யோவான்ஸ்நானனை பெற்றெடுத்தாள். ஆம், மனிதனால் கூடாதவைகள் தேவனால் கூடும். இவர்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது. ஆடு மேய்ப்பனாக இருந்து ராஜாவாகிய தாவீதுடைய தகுதியும் தேவனாலே உண்டாயிருந்தது. தாவீது ஒரு முறை கோலியாத் என்ற பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்'' என்று சொல்லி அவனை வீழ்த்தினான் (1சாமு.17:45). பாருங்கள் வெற்றி கர்த்தருடைய நாமத்திலே உள்ளது.

அதுமட்டுமா! பவுல் செய்த அற்புதத்தைக் ஜனங்கள் கண்டு தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள், பவுலை மெர்க்கூரி என்றும் பர்னபாவை யூப்பித்தர் என்றும் சொல்லி பூமாலைகளையும் எருதுகளையும் கொண்டுவந்து, அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தார்கள். அவர்களோ ''மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே;''என்றனர் (அப்.14:15). அவர்களுடைய அறியாமையை பவுலும் பர்னபாவும் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும்



உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் என்றார்கள். பவுலும் பர்னபாவும் தேவனையே மகிமைப்படுத்த விரும்பினர். தங்களுடைய யோசனையையும் அவர்களுக்குச் சொல்லவில்லை. தங்களுக்கு ஜனங்கள் கொண்டு வந்த புகழ்ச்சியையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைக்கு பூமாலை இல்லாத ஒரு நிகழ்ச்சியே இல்லை என்றே சொல்லலாம். தேவன் ஒருவரே கனத்திற்கு பாத்திரராயிருக்கிறார். அவர் ஒருவரே பெரியவர். சில வேளைகளில் நாம் சோர்ந்து போய் தேவன் எங்கே நம்மை பெலப்படுத்துகிறார் என்று சொல்லி சலித்துக்கொள்கிறோம். எலியா என்ற தீர்க்கதரிசி கூட அப்படித்தான் சோர்ந்துபோய் தான் சாகவேண்டும் என்று விரும்பினான். ''போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும், நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின் கீழ்ப் படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்து போஜனம் பண்ணு என்றான். அவன் விழித்துப் பார்க்கிறபோது இதோ, தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன், புசித்துக் குடித்துத் திரும்பப்படுத்துக் கொண்டான். கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்துபோஜனபண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பது நாள் இரவு பகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான்''(1இரா.19:4–8). சாவை விரும்பின எலியாவை கர்த்தர் தம்முடைய தூதன் மூலம் போஷித்து பெலப்படுத்தி அனுப்பவேண்டிய இடத்துக்கு அனுப்பினார். அதைப் போல தேவன் உங்களைக் கொண்டு என்ன செய்ய சித்தமாயிருக்கிறரோ அதுவே நடந்தேறும். உங்களால் ஒன்றும் ஆகாது. உங்களுடைய தகுதியும் உங்களால் உண்டானதல்ல, அது தேவனாலே உண்டாயிருக்கிறது. ஆகையால் உங்களை முழுமையாக ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**தங்களைக்குறித்து மேன்மை பாராட்டுகிறவர்களைக் குறித்து வேதம் போதிப்பதென்ன?**

''அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத்

தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்'' என்கிறார் பவுல் (2கொரி.11:13–15). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினாலே ஏற்படுத்தப்படாத அப்போஸ்தலர்கள் இன்று பெருகியிருக்கிறார்கள். தங்களை தாங்களே அப்போஸ்தலர்கள் என்று பட்டம் சூட்டிக்கொள்ள விரும்புகிறார்கள். அவர்களை இயேசு ஒருபோதும் அப்போஸ்தலர்களாக நியமிக்கவில்லை, அவர்கள் இயேசுவோடு இருக்கவில்லை, இயேசுவின் உயிர்த்தெழுதலைக் காணவில்லை பின்பு எப்படி தான் ஒரு அப்போஸ்தலன் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறார்கள் என்ற கேள்வி எழும்புகிறது. அது ஆச்சரியமல்ல சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே என்று மேற்சொல்லப்பட்ட வசனத்தை நினைவுகூருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 26. உலகம் – The world

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உலக இரட்சகர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உலகம் – The world. **பூ**மியானது பல வகையான ஜந்துக்களையும், ஜாதி ஜாதியான சகலவிதபட்சிகளையும், சகல மரங்களையும், பூண்டுகளையும் மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், பல விதமான பாஷைகளைப் பேசுகிற மனிதர்களையும் கொண்டதாக இருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் தேவனாகிய கர்த்தர் உண்டாக்கினார் என்று திருமறையில் நாம் வாசிக்கின்றோம். அதே திருமறையில் ''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய



சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்''என 1யோவா.2:15–17–ல் எழுதப்பட்டுள்ளது. தேவன் உண்டாக்கினவற்றையும் அவரால் உண்டாக்கப்படாதவற்றையும் நாம் திருமறையிலே வாசிக்கின்றோம். தேவன் உண்டாக்கினதை நாம் தீட்டாக எண்ணக் கூடாது. ஆனால் தேவனால் உண்டாக்கப்படாதவைகள் நம்மை தீட்டுப்படுத்தும், அத்தோடு தேவனிடமிருந்து நம்மை பிரிக்கும். இவைகள் எல்லாம் ஒரு நாள் அழிந்து போகும். தேவனுடைய சித்தம் செய்கிறவனோ நிலைத்திருப்பான். இன்றைக்கு உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராத கிறிஸ்தவர்களை நாம் காண்பது அரிது. ஏனென்றால் முதன் முதலில் பிசாசு தேவனுடைய மனுஷனைக் கொண்டுதான் உலகிற்குப் பாவத்தை அறிமுகம் செய்தான். அன்று ஏவாள் மாம்சத்தின் இச்சைக்குக் கீழ்ப்படிந்தாள். அதனால் பாவம் அவளைப் பற்றிக் கொண்டது. யூதாஸ் பணத்தை இச்சித்தான், பாவம் அவனுக்குள் உட்புகுந்தது. இன்றும் மாம்சத்தின் இச்சைக்கும், கண்களின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் அடிபணிந்து பிதாவின் அன்பைப் பெறாமல் பிசாசுக்கு அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். நல்ல கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்கிறவன், ஆள் அழகு பார்க்கலாமா? அந்தப் பெண்ணை எனக்குப் பிடிக்கவில்லை இந்தப் பெண்ணை எனக்குப் பிடிக்கவில்லை என்றால் அதன் அர்த்தம் என்ன? அவன் கண்களின் இச்சைக்கு அடிமையாயிருக்கிறான். வேதம் கூறுகிறது ''சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்'' (நீதி.31:30). ''புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு''(நீதி.19:14).

உலகம் உலகத்தை சிநேகிக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரை நேசிப்பார்கள். ''...உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்'' (யாக்.4:4). தாவீது யோனத்தானை சிநேகித்தான், இருவரும் கர்த்தருடைய பிள்ளைகள். ஆனால் கிதியோனோ தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்து தன் முழு பெலத்தையும் இழந்தான். தேவனுடைய வார்த்தையை மீறும்போதும், தேவனுக்கு விரோதமாக பொய் பேசும்போதும், தேவ ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனை விட்டு வெளியேறுகிறார். சவுலுடைய வாழ்க்கையில் இது நடந்தது. ஆவியானவர் சவுலை விட்டு நீங்கினார். அனனியாவும் அவன் மனைவியும் ஒருமித்து பொய் சொல்லி முதல்

நூற்றாண்டிலே மடிந்துபோனார்கள். இது கதையல்ல ஒரு கற்பனையுமல்ல உண்மையிலே நடந்த சம்பவம். இதை கண்ட முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பயந்துபோனார்கள். இன்றைக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் எங்கே? அது இல்லாமற்போயிற்று. வேதம் வாசிக்கும் கிறிஸ்தவர்களிலும் இன்று அநேகர் பொய்யர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் பகைஞராகவே இருக்கிறார் என்பதை மறந்துபோகவேண்டாம். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம் ''அநீதியான உலகப்பொருள்களால் உங்களுக்குச் சிநேகிதனைச் சம்பாதியுங்கள்'' என்று சொல்லியிருக்கிறாரே அது எப்படி? ஆம், உலகப்பொருள்களால் உங்களுக்குச் சிநேகிதனைச் சம்பாதியுங்கள் என்றாரே தவிர உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்கச் சொல்லவில்லை. இப்பொழுது புரிந்திருக்கும் என நினைக்கிறேன். உலகத்திலே வாழ்வதிலும் இவ்வளவு சிக்கல் இருக்கிறதா என்று நினைக்கிறீர்கள்! நீங்கள் உலகத்தாராயிருந்தால் சிக்கல் இருக்கும். நீங்கள் கர்த்தருடையவர் களாயிருந்தால் சிக்கல் இருக்காது. இயேசு சொல்கிறார்; ''நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல''(யோவா.17:16). இயேசுவை முழுமனதோடு பற்றிக்கொள்ளும் ஒரு கிறிஸ்தவன் உலகத்தானாக இருக்கமுடியாது. ஏனெனில் அவன் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறான்.

உலகத்திலே இருக்குமட்டும் ஒரு கிறிஸ்தவன் நினைவு கூரவேண்டிய வசனங்கள் அநேகம் உண்டு. அதில் ஒன்று ''உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்'' (1தீமோ.6:7,8). இந்த விசுவாசம் வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும் சாப்பிட்டு வந்த யோவானிடமிருந்தது. நம்மில் அநேகர் நாளைக்காக கவலைப்படுகிறோம், சேர்த்துவைக்கிறோம். காட்டுப் புஷ்பங்களைப் போலவும், ஆகாயத்துப் பட்சிகளைப்போலவும் இருக்க முடியவில்லை. ஆக, நம்மில் விசுவாசமில்லை என்றே சொல்ல வேண்டும். அதற்காக வேதம் தவறு என்றோ அல்லது அது தற்போதைக்கு பொருந்தாத ஒன்று என்றோ, நடைமுறைக்கு ஒத்துவராதது என்றோ சொல்லிவிட முடியாது. ஏனென்றால் ஆண்டவர் குறிப்பிடும்போது ''நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது,



உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது'' என்கிறார் (மத்.11:29,30). கர்த்தருடைய கட்டளைகள் பாரமானவைகள் அல்ல. பொதுவாக ஜனங்கள் சரீர முயற்சியையே விரும்புகின்றனர். இதைக்குறித்து பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது ''சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமாயிருக்கிறது'' என்றான் (1தீமோ.4:8). சரீர முயற்சியை நாடினவர்கள் நன்மையடையவில்லையே. பிறந்தது முதல் இதுவரை சாகாமல் ஒரு மனிதன் உயிரோடு இருக்கிறான் என்று நீங்கள் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? ஆனால் தேவ பக்தியாக இருக்கும் போது உலகத்திலும் நலமாகயிருக்கலாம், இதற்கு பின்வரும் உலகத்திலும் நித்திய சந்தோஷமாயிருக்கலாம். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது நாமும் ஜீவனுள்ளவர்களாக மாறுகிறோம்.

**சரீர முயற்சியிலே மற்றொன்று தன்னைத்தான் ஞானி என்று மெச்சிக்கொள்வது**, இது தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்ள வழிவகுக்கிறது. ''ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும் ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது''(1கொரி.3:18–20). முதலாவது கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். அதைவிடுத்து தன்னைத்தானே ஞானி என்று சொல்லுகிறவர்கள் தேவனுக்கு மேலாக தங்களை உயர்த்துகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பைத்தியக்காரர்கள். ஏனென்றால் தேவனுக்கு முன்பாக அவர்களுடைய ஞானம் அவ்விதமாக இருக்கிறது. பல ஞானிகள் பூமி தட்டை என்றார்கள் காலங்கள் கடந்தது பின்பு பூமி உருண்டை என்றார்கள். இதைக் கண்டு பிடிக்கவே மனிதன் எவ்வளவோ காலத்தை எடுத்துக்கொண்டான். நாள் பார்க்கிறவர்களும், குறிசொல்லுகிறவர்களும், ஞானிகளும் பூமி தட்டை என்று சொன்னவனுடைய நிலையிலே நிற்கிறார்கள். அவர்களுடைய சிந்தனை வீணாயிருக்கிறது என்று கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆகையினாலே

இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது. கடந்துபோன சுனாமியை நினைத்து பார்ப்போம்; கடற்கரையோரங்களில் எத்தனையோ ஞானிகள் இருந்தார்கள், சரீரமுயற்சியினால் கனவு கண்டு கொண்டிருந்தவர்களும் இருந்தார்கள், வந்தது சுனாமி, வாரிக்கொண்டது அவர்களுடைய ஞானத்தையும் கனவுகளையும். அவர்களுடைய ஞானம் எங்கே? அவர்களுடைய சரீர முயற்சி எங்கே? அது அவர்களுக்கு மட்டுமல்ல உலகிலே ஜீவிக்கிற அனைவருக்கும் ஒரு நாள் அழிவு வரும் என்ற எச்சரிப்பு; ‘‘வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை’’(மாற்.13:31).

‘‘உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்’’(யோவா.3:17). அநித்தியமான இந்த உலகத்தில், நித்தியமானவரும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ளுங்கள். இவராலே உலகம் இரட்சிக்கப்படும். இவரில்லாமல் வேறொரு இரட்சகர் இல்லை. நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே, நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார் இயேசு. ஒருவேளை இந்த ஒளியை நீங்கள் பகைப்பீர்கள் என்றால் வசனம் இப்படியாக சொல்லுகிறது, ‘‘பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்’’(யோவா.3:20). ஆனால் ‘‘சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான்’’(யோவா.3:21). நீங்கள் ஒளியை பகைப்பவர்களா? அல்லது ஒளியை நேசிப்பவர்களா? வானொலி நேயரே சிந்தித்து செயல்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**இந்த உலகத்திற்கு முடிவு உண்டா?**

உலகத்திலே, வருவது வரட்டும் நமக்கு மட்டுமா வரப்போகிறது வந்தால் எல்லாருக்குந்தானே வரும் நாமும் அத்தோடு அழிந்துபோவோம் என்று லேசாக பேசுகிறவர்களைப் பார்த்திருப்பீர்கள். நோவா காலத்திலும் அப்படித்தான் பேசிஇருக்கக்கூடும். அக்காலத்தில் தேவன் ‘‘பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த



உலகத்தின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்தார்’’(2பேது.2:5,6). தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த மக்களை அங்கு இரட்சித்தார். இக்காலத்திலும் நம்மை இந்த உலகத்திலிருந்து இரட்சிக்கும்படியாக உலக இரட்சகர் இயேசுவை அனுப்பியுள்ளார். அவரை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்றால் இரட்சிக்கப்படுவீர்கள். அவர் மீண்டும் வரப்போகிறார். அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். இது கடைசிகாலமாக இருக்கிறது. அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

## 27. முதல்வர்
## Pre-emi`nent

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சபையின் முதல்வர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

முதல்வர் – Pre-emi`nent. முதல்வர் என்ற வார்த்தை முதன்மையானவர்களுக்குத் தகும். இந்த வார்த்தை நாட்டின் தலைவர்களுக்கும், கல்விச்சாலை தலைவர்களுக்கும் பொருந்தும். ஆவிக்குரிய சபைக்கு இது பொருந்துமா? பொருந்தாது. ஏனென்றால் ஆவிக்குரிய சபைக்கு தேவன் தலைவர்களை ஏற்படுத்தவில்லை ஒரே ஒரு முதல்வரை ஏற்படுத்தியுள்ளார் அவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. ‘‘அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது, அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்’’ (கொலோ1:17,18). இந்தப் பதவியை ஒருவர் நாடுவாரே என்றால் தேவன் ஏற்படுத்திய தலைவரை கீழே தள்ளிவிட்டு தான் அந்த இருக்கையில் உட்கார முயற்சிக்கிறார் என்றுதான் அர்த்தம். இது வேதாகமத்திற்கு விரோதமான செயலும், தேவ சித்தத்திற்கு முற்றிலும்

புறம்பான எண்ணமும் கூட. இயேசுகிறிஸ்து எல்லாவற்றிற்கும் முந்தினவர். ஒரு மனிதன் எல்லாவற்றிற்கும் நான் முந்தினவன் என்று சொல்லிவிட முடியாது. வானமும் பூமியும் உண்டாக்கப்பட்ட பின்பே மனிதன் உண்டாக்கப்பட்டான். ஆகையால் அவனுக்கும் முந்தினவர் ஒருவர் இருக்கும் போது அவன் சபையில் தன்னைத்தான் உயர்த்தலாகாது.

சபைகளிலே சில முதன்மை விரும்பிகளை நாம் பார்க்கிறோம். இந்த முதன்மை விரும்பிகள் எதற்காக முதன்மையை விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை. நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோ ‘‘அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்’’ என்று வாசிக்கின்றோம் (பிலி.2:6–11). இங்கே இயேசுகிறிஸ்துவானவர் தன்னைத்தான் உயர்த்தவில்லை, அவர் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை, மாறாக சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் அவரை உயர்த்தி சபையாகிய சரீரத்துக்கு தலையாக தந்தருளினார்.

இன்றைக்கு இருக்கிற திருச்சபைகளில் கீழ்ப்படிதலை பார்ப்பதே அபூர்வமாக இருக்கிறது. நான்தான் பெரியவன், இல்லை இல்லை நான்தான் பெரியவன் என்று அடித்துக் கொண்டு முதன்மையை விரும்புகிறார்கள். வேதாகமத்திலேகூட சீஷர்கள் இவ்விதமான வாக்குவாதம் செய்ததை வாசிக்கின்றோம். ‘‘தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று. இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையைஅறிந்து, ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதைத் தமதருகே நிறுத்தி, அவர்களை நோக்கி: இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்;



உங்களெல்லாருக்குள்ளும் எவன் சிறியவனாயிருக்கிறானோ அவனே பெரியவனாயிருப்பான்’’ என்றார் (லூக்.9:46–48). ஒரு மனிதனுக்குள் முதன்மையான எண்ணம் வரும்போது அவன் மற்றவர்களை அலட்சியம் பண்ணுவான் ஆகையினாலே கர்த்தர் இங்கு சீஷர்களுக்குப் புகட்டிய பாடம் என் நாமத்தினிமித்தம் இந்தச் சிறு பிள்ளையை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார். சபைகளிலே இன்று அநேகர் முற்பிதாக்களின் காலத்தில் பாளைத்திற்குபுறம்பே ஒதுக்கப்பட்ட குஷ்டரோகிகளைப்போல ஒதுக்கப்படுகிறார்கள். இது சபையிலிருக்கக் கூடிய சில முதன்மை விரும்பிகளால் வரக்கூடியவை. இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடும்போது ‘‘நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை’’ என்றான் (3யோவா.9). இன்னும் இவ்விதமான சம்பவங்கள் தொடர்கிறது.

சபைகளில் பக்தியுள்ள அநேகர் தள்ளுண்டு போகிறார்கள். வழிநடத்துகிறவர்கள் முதன்மையானவர்களுக்கு அடிபணிந்து அவர்கள் சொற்படி கேட்டு வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும், கர்த்தருடைய பந்தியை பரிமாறவும், காணிக்கை எடுக்கவும் இன்னும் சபையின் அநேக வேலைகளில் அவர்களுக்குத் தருணம் கொடுக்காமல் தாங்களே எல்லாத் தகுதியுமுடைவர்கள் என்று அநேகரை ஒதுக்கிவிடுகிறார்கள். சிலர் இறுமாப்பாய் ஆளுகிறார்கள். நீ அதை செய் நீ இதைச் செய் என்று சொல்லி வேலை ஏவுகிறவர்களாக இருந்து கொண்டு நியாயசாஸ்திரிகளைப்போல தங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்த வேலையைச் செய்ய மாட்டார்கள். கர்த்தர் சொல்லும்போது ‘‘உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்... அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்’’ (மாற்.10:43–45) என்றார். ஊழியம் என்றாலே நாமே முன் வந்து செய்யவேண்டிய காரியம். அவன் செய்யட்டும் இவன் செய்யட்டும் என்று சொல்வதைவிட நாமே அதைச் செய்யவேண்டும். எனக்கு ஒரு சபைபோதகரை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு நாள் மாலை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அக்கூட்டத்திற்கு வருகிற சிறுபிள்ளைகளில் சிலர் சாக்லேட் தின்றுவிட்டு அந்தப்பேப்பர்களை அந்த வளாகத்திலே

போட்டுவிட்டதை அங்கிருந்த சபைபோதகர் பார்த்து அவைகளை பொறுக்கி தன்னுடைய பேன்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டதைப் பார்த்தேன். இக் காரியத்தை ஒருவர் சொல்லி அவர் செய்யவில்லை. அல்லது ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று அவர்களைப்பார்த்து திட்டவும் இல்லை. அந்த வளாகம் சுவிசேஷ கூட்டம் நடைபெறும் வளாகம் அது சுத்தமாக இருக்கவேண்டும் என்று நினைத்து முதலாவது தன்னை ஒரு பணிவிடைக்காரனாக (வேலைக்காரனாக) மாற்றிக்கொண்டார். இது முதன்மைக்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு என நினைக்கிறேன்.

பவுல் குறிப்பிடும்போது "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்"(1கொரி.9:19) என்கிறான். மிகவும் தலைசிறந்த அப்போஸ்தலன் என்று பவுலை சொல்லலாம். ஊழியத்திலே அவன் பட்ட பாடுகளுக்கு அளவே இல்லை. இத்தனை பாடுகளையும் கர்த்தருடைய சபைக்காக சகித்த அவன் நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன் என்கிறானே அவனுடைய ஒப்புக்கொடுத்தல் எத்தனை பெரியது! அதிக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டுமானால் முதலாவது நம்மை நாமே அர்ப்பணிக்க வேண்டியது மிக அவசியம். இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது நம்மை நாமே எல்லாருக்கும் அடிமையாக ஒப்புக்கொடுக்காததே. நான் எப்படி அவனுக்குக் கீழாகவேலை செய்யமுடியும். அவன் நேற்று வந்தவன் நான் பத்து பதினைந்து வருடங்களாக சபையில் இருக்கிறேன் என்று வாக்குவாதம் செய்வீர்கள் என்றால் நீங்கள் தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றமுடியாது. "நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்"(1கொரி.12:27) என்ற வசனத்தை நீங்கள் அனுதினமும் நினைவுகூரவேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் நாமும் ஒரு அங்கம் என்பதை நாம் நினைவு கூருவோமானால் கிறிஸ்துவின் சரீரம் (சபை) செயல்பட ஒத்துழைப்போம். "அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (கலா.1:4). அதைப்போல நாமும் தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படியாக



நம்மை நாமே ஒப்புக்கொடுப்போம். நாம் நம்மை ஒப்புக்கொடுப்பதால் கிறிஸ்துவுக்கு மேலானவர்கள் அல்ல "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல. சீஷன் தன் போதகனைப் போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும்..." (மத்.10:24,25) என்ற வசனத்தின்படி மேற்பட்டவர்களல்ல. அவருடைய மாதிரியின்படி நடப்பதால் அவரைப்போல மாற்றப்படுகிறோம்.

"அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்" (எபி.5:5). தேவனால் சபைக்கு முதல்வராகவும், இரட்சகராகவும், பிரதான ஆசாரியராகவும் கிறிஸ்துவானவர் உயர்த்தப்பட்டிருக்கும்போது சபையானது அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு தேவனை அறிகிற அறிவில் வளர்ந்து பெருகவேண்டும். "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங் களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" என வாசிக்கிறோம் (எபே.3:9,10). ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியவேண்டும். ஏனென்றால் அவரே அதற்குத் தலையானவர் (எபே.5:23,24). "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக"(எபே.3:21) ஆமென்.

**கேள்வி நேரம்**

**இன்றைய சபைக்கு முதல்வர் தேவையா?**

பரலோகத்தின் தேவன் பாவமில்லாத முதல்வரை (கிறிஸ்துவை) ஏற்படுத்தியிருக்கும்போது, நாம் ஒரு முதல்வரை சபையில் நியமிப்பது தேவனுக்கு விரோதமான செயலாகும். உலகத்தையே இரட்சிக்கும் ஒருவர் இந்த உலகத்தில் இருப்பாரேயானால் கிறிஸ்து வரவேண்டிய அவசியமில்லை, அவர் சிலுவையில் இரத்தம் சிந்த வேண்டிய அவசியமும் இல்லை. தேவன் ஆதியிலே திட்டம் கொண்டார். "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்"(ஆதி.3:15). இச்சம்பவம் கிறிஸ்து சிலுவையில் வெற்றி சிறந்தபோது பிசாசை தம்முடைய மரணத்தினாலே

ஜெயித்தார். அன்பானவர்களே இப்படி தன்னையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்த ஆண்டவர் இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்துள்ளார். அவர் சம்பாதித்த சபைக்கு அவரே தலைவர். வேறொரு முதல்வர் தேவையில்லை.

## 28. அவர் உன்னை ஆதரிப்பார்
## He Shall Sustain Thee

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தம்மிடம் வருவோரை ஆதரிக்கும் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவர் உன்னை ஆதரிப்பார் – He shall sustain thee. ஆதரவு இல்லாமல் இன்று அநேகர் அலைமோதுகின்றனர். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்" (சங்.55:22). பூமியானது எவ்வளவு நிறை உள்ளதாக இருக்கிறது! அதையே கர்த்தர் அந்தரத்தில் தொங்கவைத்திருக்கிறார். உங்கள் பாரம் அவர் முன் எம்மாத்திரம். உங்கள் பாரம் எப்பேர்பட்டவையாக இருந்தாலும் சரி அதைக் குறித்து நீங்கள் கலங்கத்தேவையில்லை அதை முதலாவது அவர் மேல் வைத்துவிடுங்கள். எப்படி அவர்மேல் வைப்பது என்றுதானே யோசிக்கிறீர்கள். உலகத்தின் பாவத்தையே சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28) என்று அழைக்கிறார். நீங்கள் ஏன் வருத்தப்படவேண்டும்? அவரிடம் உங்களை முழுமையாக ஒப்புக்கொடுங்கள் உங்களுடைய பாரத்தை எல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள் அவர் உங்களுக்கு மெய்யான இளைப்பாறுதலைத்தருவார். அநேக வேளைகளில் நம்முடைய மனபாரத்தை யாரிடமாவது சொன்னால் மனக்கவலை நீங்கும் என்று நினைத்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சொல்ல ஆரம்பிப்போம் அல்லது நண்பர்கள் உறவினர்களிடம் சொல்லுவோம். இதனால் நம்முடைய மனபாரம் நம்மைவிட்டு நீங்கிவிடுகிறதா? மேலும் அதிகரிக்கவே செய்கிறது. இதற்கு என்ன காரணம்? நாம் யாரிடம் சொன்னோமோ அவர்கள் அதை திரித்து ஒன்றுக்கு இரண்டாக சொல்லி நமக்கு வேதனையை



அதிகப்படுத்துவார்கள். ஏனென்றால் அவர்களும் நம்மைப்போல மனிதர்கள், அவர்களுக்கும் மாம்சத்தில் நம்மைப்போல பாடுகளும் வேதனைகளும் உண்டு. ஆகையால் அவர்களால் நம்முடைய பாரத்தை நீக்கிவிடமுடியாது. நாம் வேண்டுமானால் நினைத்துக் கொள்ளலாம் அந்த மனிதனிடம் சொன்னதால் எனக்கு சற்று மனபாரம் குறைந்திருக்கிறது என்று. உண்மை அதுவல்ல நம்முடைய பாரத்தை ஏற்றுக்கொள்கிறவராகிய கர்த்தரிடம் வைத்துவிடும்போது மெய்யான இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஒரு முறை வயதான விவசாயி ஒருவர் தன்னுடைய நிலத்தில் விளைந்த உருளைக்கிழங்குகளை ஒரு சாக்கில் போட்டு தன் தலையின் மேல் வைத்துக்கொண்டு சந்தையை நோக்கி தார்சாலை வழியாக நடக்க ஆரம்பித்தாராம். அவ்வழியே சென்ற டெம்போ டிரைவர் வயதான அவரைப்பார்த்து ஐயா நாங்களும் சந்தைக்குத்தான் போகின்றோம் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொள்ளுங்கள் உங்களை அங்கே இறக்கிவிடுகின்றோம் என்றாராம். அவரும் சந்தோஷமாக வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். ஆனால் அவர் தன்னுடைய சாக்குமூட்டையை தலையிலிருந்து இறக்கவில்லை அதைப்பார்த்த டிரைவர்: ஐயா, தாங்கள் கஷ்டப்பட்டு சுமந்துவருவதைப் பார்த்துதான் உங்களை ஏற்றிக்கொண்டோம் இன்னும் ஏன் சுமையை சுமந்து கொண்டு உட்கார்ந்து உள்ளீர்கள் என்று கேட்டாராம். அதற்கு அவர்: ஐயா, எனக்கு இடம் கொடுத்ததே பெரிய காரியம், மூட்டையை வேறு ஏன் வண்டிசுமக்க வேண்டும் அதை நானே சுமந்து கொள்கிறேன் என்றாராம். இன்று அநேகர் இப்படித்தான் கர்த்தரிடம் வந்தும் தங்களுடைய பாரத்தை கர்த்தரிடம் கொடுக்காமல் தாங்களே சுமந்து கொண்டு உள்ளார்கள்.

காடுகளில் விறகு பொறுக்கிக்கொண்டு வருகிறவர்களை பார்த்திருப்பீர்கள். அவர்கள் அதை ஒரேகட்டாக கட்டி தலைச்சுமையாக சுமந்துகொண்டு பல மைல் நடந்துவருவார்கள். சற்றே இளைப்பாறும்படி மரத்தண்டை ஒதுங்குவார்கள். அப்பொழுது அவர்கள் ஞானமாக தங்கள் தலையில் உள்ள விறகு கட்டை அந்த மரத்தின் மீது சாய்த்துவைப்பார்கள். அந்த மரம் இவர்களுக்கு இளைப்பாறுதல் தந்து அவர்களுடைய சுமையையும் தானே தாங்கி நிற்கும். அதைப்போல கர்த்தர் முழுபாரத்தையும் ஏற்றுக்கொண்டு இளைப்பாறுதலையும் கொடுக்கிறார். மனபாரத்தினாலும், மனவேதனையினாலும், மனக்கவலையினாலும் மரிக்கிறவர்கள் அநேகர்.

மனிதன் கவலைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. ஆனால் ஒன்றுமே இல்லாத காரியத்தை நினைத்து கவலைகொள்ளுகிறான். “என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்” (மத்.6:25–31).

மனிதன் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டுள்ளான். உலகத்தில் எத்தனையோ விதமான மரங்கள், செடிகள், கொடிகள், மிருகங்கள், கடல்வாழ் ஜந்துக்கள், ஆகாயத்துப் பறவைகள் இருந்தபோதிலும், மனிதன் இவைகளைப் பார்க்கிலும் விசேஷமாகப் படைக்கப்பட்டுள்ளான். அண்டசராசரங்களை போஷிக்கும் கர்த்தர் தம்மால் விசேஷமாக உண்டாக்கப்பட்ட மனுஷனை போஷிக்காமல் விட்டுவிடுவாரா? ஆகையால் கவலைப்படாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். பவுலும் கூட பிலிப்பிய சபைக்கு எழுதும்போது: “நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” (பிலி.4:6,7).



இயேசு ஒரு முறை நாயீன் என்னும் ஊருக்குப் போகும்போது அந்த ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படிகொண்டு வந்தார்கள்: அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்: ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள் “கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்” (லூக்.7:13–15). இந்த விதவை ஒரே மகனை இழந்து ஆதரவற்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டாள். அவளுடைய மனது எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும்! இனி எனக்கு யாரும் இல்லையே என்ற ஏக்கத்துடன் அழுதுகொண்டு பாடைக்கு பின்னாலே சென்றிருப்பாள். இவளுடைய கண்ணீரை கர்த்தர் கண்டு மனதுருகி அவனை உயிரோடு எழுப்பி அவனுடைய தாயினிடத்தில் ஒப்புவித்தார். கர்த்தர் வெறும் வார்த்தையினாலே மட்டுமல்ல, உண்மையிலேயே அவர் உன்னை ஆதரிப்பவர். மனிதன் கவலைப்படாதே என்றுதான் சொல்ல முடியும். ஆனால் அவனால் கவலையைத் தீர்த்து வைக்கமுடியாது. அதேவேளையில் கர்த்தர் அழாதே என்று சொல்லி மரித்தவனை உயிரோடு எழுப்பினார். ஆகையால் உங்கள் பிரச்சனை எதுவானாலும் தேவனுக்கு முதலாவது தெரியப்படுத்துங்கள்.

யோபுவின் வாழ்க்கையில் பயங்கரமான சோதனை வந்தது. நாம் எல்லோரும் பலமுறை யோபுவைப்பற்றிய செய்தியை கேள்விப்பட்டுள்ளோம். அவனுடைய நம்பிக்கை எத்தகையது என்று பாருங்கள்: “அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்” என்றான் (யோபு13:15). நமக்கு வரும் சோதனைகளிலும் இந்த நம்பிக்கை இருக்குமானால் நம்முடைய நடைகள் உறுதிப்படும். “நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை: கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்” (சங்.37:23,24). யோபுவுக்குச் சோதனை வந்தவுடன் அவனுடைய நண்பர்கள் உன் பாவம் பெரிது, நீ அழியப்போகிறீர் என்று சொல்லி அவனுடைய மனதை வருத்தப்படுத்தினார்கள். இன்றும் அநேக தேவ பிள்ளைகள் இப்படிப்பட்ட

ஜனங்களால் அவதூறாகப் பேசப்படுகின்றனர். இவன் என்ன பாவம் செய்தானோ ஆதலால் இவனுக்கு இந்த தண்டனை என்கின்றனர். பிரியமானவர்களே, நீதிமான்களுக்கு அநேக சோதனைகள் வரும் ஆனால் "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்" என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது (நீதி.24:16). ஆண்டவருடைய வசனங்கள் பாரமானவைகள் அல்ல. "நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத்.11:29,30). உங்களுடைய பாரத்தை அவரிடம் கொடுத்து அவர் கொடுக்கும் சுமையை (வசனத்தை) ஏற்று ஆத்துமாவில் இளைப்பாறுதல் பெறுங்கள்.

**கேள்வி நேரம்**

**மனபாரத்திற்கு மருந்து உண்டா?**

நீங்கள் உங்களுடைய பாரத்தையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் அவர் உங்களை ஆதரித்து ஒருபோதும் தள்ளாடாது காப்பார். உங்களை அழைத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள் உங்களுக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவர் மூலமாக தேவனிடம் உங்களுடைய விண்ணப்பங்களை ஏறெடுங்கள். நோய்க்கு மருந்து சாப்பிட்டு நோயிலிருந்து விடுபடலாம். மனநோய்க்கு (மனபாரம்) மருந்து இல்லை. ஆனால் மருத்துவர் இயேசுவிடம் மருந்து உண்டு. என்ன மருந்து என்று கேட்கிறீர்களா? அவருடைய வசனமே அதற்கு ஏற்ற மருந்து, அதை உட்கொள்ளுங்கள். எரேமியா அந்தப்படியாக உட்கொண்டதை வாசிக்கின்றோம். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே; அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருக்கிறது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது" என்றான் (ஏரே.15:16). மனிதர்களிடம் உங்களுடைய மனபாரங்களை சொல்லுவதைவிட கர்த்தரிடம் உங்களுடைய பாரங்களைச் சொல்லி ஜெபியுங்கள் அப்பொழுது தேவ சமாதானம் உங்களைக் காத்துக்கொள்ளும். அவர் உங்களுக்கு ஆதரவாயிருப்பார்.



## 29. அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே
## Add Thou Not Unto His Words

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே – Add thou not unto His words. தேவன் பரிசுத்த வேதாகமத்தை தம்முடைய பரிசுத்தவான்கள் மூலமாக நமக்கு அருளிச்செய்திருக்கிறார்.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என 2தீமோ.3:16,17–ல் வாசிக்கிறோம். தேவனுடைய மனுஷன் தேறினவனாக இருக்க தேவனுடைய வசனம் அவனுக்கு மிக முக்கியம். அவ்வசனத்தை அவன் பாதுகாக்கவும் அவைகளின்படி செய்யவும் மிக கவனமாக இருக்கவேண்டும். அவைகளில் ஒன்றை கூட்டுவதோ அல்லது குறைப்பதோ கூடாது. ஆனால் தங்களுடைய வாழ்க்கையில் எல்லாவற்றையும் கூட்டிப் பழகினவர்கள் இதையும் கூட்டிவிடுகிறார்கள். அப்படிக் கூட்டினால் என்ன நடக்கும் என்பதை இச் செய்தியின் மூலமாக ஆராய இருக்கிறோம்.

வேத வசனங்களோடு ஒன்றைக் கூட்டுமுன் யோசிக்க வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. அதில் சில நாம் அதற்கு உரிமையாளர்களா? நம்மால் அது எழுதப்பட்டதா? என்ற கேள்விகள் எழும்பவேண்டும். "தேவனுடைய செயலைக் கவனித்துப்பார்; அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத்தக்கவன் யார்?" என்கிறான் பிரசங்கி (பிர.7:13). நாமே தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கும்போது உண்டாக்கினவருடைய செயல்பாடுகளில் திருத்தம் செய்வதோ, குறைப்பதோ அல்லது கூட்டிவழங்குவதோ நம்முடைய காரியமல்ல. "தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்" என நீதி.30:5–ல் பார்க்கிறோம். அதில் பழுது ஒன்றுமில்லை. கர்த்தருடைய வசனங்கள் ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிறது. தேவன் சத்தியபரர் அவருடைய வசனங்கள் சத்தியமானவைகள்.

புடமிடப்பட்ட தங்கத்தைப்போல அவருடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள். நாம் அவைகளைப் புடமிட முடியாது. ஏனென்றால் நாம் மண்ணானவர்கள். கர்த்தர் சொல்லுகிறார்: 'வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்'' என்றார் (லூக்.16:17). அப்படியானால் வேதத்தில் உள்ள ஒரு எழுத்தின் உறுப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை சற்று கவனித்துப் பாருங்கள். நம் நாட்டில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு அந்த ஆட்சியின் கீழ் உள்ளவர்கள் எவ்வளவு பயத்துடன் கீழ்ப்படிகிறார்கள்! உலக ஆட்சிக்கு அவர்கள் அப்படிக் கீழ்ப்படியும்போது, ஆவிக்குரிய கட்டளைகளைப் பிதாவிடம் பெற்ற நாம் எவ்வளவு அதிகமாக அக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதை திருத்தம் செய்யவோ மாற்றியமைக்கவோ நமக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. வசனங்களை அப்படியே கைக்கொள்ளவேண்டியது நம்மேல் விழுந்த கடமை.

தாவீது சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே தேவனுக்குப் பயந்து ஜீவித்தான். அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்தவனாகவும் வாழ்ந்தான். ''தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்'' என்ற நீதி.30:5–ன்படி அவரை அண்டிக்கொண்டவனாக இருந்தான். ஒரு முறை கோலியாத் தாவீதை நிந்தித்தபோது, பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் என்று சொல்லி அவனை ஜெயித்தான். இன்று உங்களுடைய பெலத்தோடு போவீர்களானால் வெற்றிபெறமுடியாது. முதலாவது அவரை அண்டிக் கொள்ளுங்கள். உங்களுடைய ஞானத்தையும் பெலத்தையும் தூக்கி எறிந்துவிட்டு தேவனுடைய ஞானத்தையும் பெலத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். பவுலுக்கும், அவனோடிருந்தவர்களுக்கும் வந்த கஷ்டங்கள் அநேகம் எல்லா உபத்திரவங் களிலிருந்தும் அவர்களுக்கு கர்த்தர் கேடகமாயிருந்து பாதுகாத்தார். ''ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம்



வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" என்றார்கள் (2கொரி.1;8–10).

இவர்களுடைய நம்பிக்கையை மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் வைத்தார்கள். இன்று உங்களுடைய நம்பிக்கையை யார்மீது வைத்துள்ளீர்கள்? திருவசனத்தை கூட்டுகிறவர்கள் மீதா? அப்போஸ்தலர்கள் எல்லாரும் தங்களையே பிரசங்கியாமல், மனிதனுடைய பாவத்திற்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தார்கள். குறிப்பாக வசனத்தை கூட்டாது பிரசங்கித்தார்கள். ''நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்......'' என பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (1கொரி.11:23). பவுல் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டதை பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கிறான். ஆக, சுயகருத்துக்களை அப்போஸ்தலர்கள் முதல் நூற்றாண்டு சபைக்கு கொடுக்க முன்வரவில்லை. நாமும் அதைப்போல வேதவசனங்களைக் கூட்டாது எவ்விதமானபாடுகளும், சோதனைகளும் வந்தாலும் மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

எனக்கொரு ஊழியரை ஞாபகத்திற்கு வருகிறது. அவர் தன்னுடைய பிரசங்கத்தில் வெளி.25:10 என்ன சொல்லுகிது என்றால் 'கர்த்தர் வரும்போது உலகத்தில் உள்ள அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள்' என்பார். உடனே ஆகா இப்படியொரு வசனம் இருக்கிறதா! என்று சொல்லி அநேகர் வேதாகமத்தை புரட்டிப்பார்ப்பார்கள். பின்பு தான் தெரியும் அப்படியொரு வசனம் இல்லையென்று. வேதம் சொல்லுகிறது: ''அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே'' என்று (நீதி.30:6). கர்த்தர் சொன்னால் சொன்னதுதான் என்ற முடிவுக்கு வரவேண்டும். அதற்குமேல் சொல்லுவதோ, ஒரு வியாக்கியானம் தேடுவதோ அல்லது மிகைப்படுத்தி சொல்வதோ குற்றமாகும். அத்தோடு ஆராதனையிலும், கிறிஸ்தவ ஜீவியத்திலும் தேவன் சொல்லாத காரியத்தை கூட்டக்கூடாது. அப்படிக் கூட்டுவது அவருடைய வசனங்களோடு ஒன்றைக் கூட்டுவதற்கு சமம்.

உதாரணமாக நாதாபும் அபியூவும் அந்நிய அக்கினையை எடுத்து தேவ சமூகத்தில் தூபம் காட்டி மரித்தார்கள். ஆசாரியன் அதாவது ஒரு தேவ மனிதன் ''வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து

வெளிச்சமில்லை; என ஏசா.8:20—ல் வாசிக்கிறோம். ஆனபடியால் வேதாகமத்தை உற்று நோக்குவது எவ்வளவு அவசியமாயிருக்கிறது. நம்முடைய பிதாக்களோ அவைகளை உதாசினம் செய்து பலர் மரித்துப்போயிருக்கிறார்கள். ஆதாம் முதல் இன்றுவரையும் இனிமேலும் கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது அவருடைய வசனங்களுக்கு கீழ்ப்டிந்து அத்துடன் எதையும் கூட்டாது இருக்கவேண்டும் என்பதே. ஆனால் இஸ்ரவேலோ அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ''என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள்'' (ஓசி.8:12). ஆம், கர்த்தர் நம்மை நேசிக்கிறபடியால் வேதாகமத்தை கொடுத்திருக்கிறார். அதில் அரிய பெரிய பொக்கிஷங்கள் அடங்கியிருக்கிறது. அதை உருக்குலையாமல் பாது காப்பதும், அவைகளோடே ஒன்றையும் கூட்டாமல் இருப்பதும் நமது கடமையாகும். நம்முடைய மூதாதையர் விட்டுச்சென்ற பத்திரங்களையும் உடமைகளையும் எவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கின்றோம். அதைப் பார்க்கிலும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய வேதாகமத்தைப் பாதுகாப்பது அவசியமல்லவா?

''கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்கு கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்'' என பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிடுகிறார் (2பேது.3:16). இன்றைக்கு வேதத்தை சரியாக பகுத்து படிக்காத, உறுதியில்லாத போதகர்கள் பெருகியிருக்கிறார்கள். மேலும் ''இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார்'' என எச்சரிக்கப்பட்டுள்ளோம் (வெளி.22:18). வேத வசனத்தோடு ஒன்றைக் கூட்டினால் கடிந்து கொள்வதோடு வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட வாதைகளையும் தேவன் கூட்டுவார். நீயும் பொய்யனாவாய். பொய்யனானபிறகு வரக்கூடிய முடிவு நித்திய மரணமே. ''பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என வெளி.21:8—ல்



காண்கிறோம். வேதவசனங்களை கூட்டி பொய்யனாகி நித்திய அக்கினி கடலிலே பங்கடையப் போகிறீர்களா? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். வேதாகமத்தோடு கூட்டி பேசுவதை நிறுத்திவிட்டு சொல்லப்பட்டு இருக்கிற வசனத்தை குறைக்காமல் கைக்கொண்டு நடக்க முயற்சியுங்கள். ''தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங் கூடாது; மனுஷர் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச்செய்து வருகிறார்'' (பிர.3:14). ஆகையால் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் நிலைத்திருந்து அவருடைய ஆசீர்வாதத்தையும் அரவணைப்பையும் பெற்றுக்கொள்ள கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

**கேள்வி நேரம்**

**வேதப்புரட்டர்களுக்கு மறுபெயர் என்ன?**

பொய்யர். இந்த பொய்யர் வேதபிரமாணங்களை விட்டு வழி விலகுகிறவர்கள். தங்களுடைய சொந்த கருத்துக்களை ஜனங்களுக்கு சொல்லி இல்லாதவைகளை இருக்கிறவைகளாகவும், இருக்கிறவைகளை இல்லாதவைகளாகவும் சொல்லுவாகள். இவர்களை பற்றி சங்கீதக்காரன் ''உமது பிரமாணங்களைவிட்டு வழி விலகுகிற யாவரையும் மிதித்துப்போடுகிறீர்; அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே'' என்கிறான் (சங்.119:118). தேவன் தமது பிரமாணங்களை விட்டு வழி விலகுகிற எந்த மனிதனையும் நேசிப்பதில்லை. அப்படிப்பட்ட மனிதனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறார். யூதாசை கூட நீ செய்கிறதை சீக்கிரமாய்ச் செய் என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார். அப்படிப்பட்டவர்களை மிதித்துப்போடுகிறார். பிசாசு பொய்யனும் பொய்க்கு பிதாவுமாக இருக்கிறான். அவன் பேசும்போது சொந்தத்திலிருந்து எடுத்துப்பேசுகிறான். அவனைப் பின்பற்றுகிறவர்களும் அவனைப்போல மக்களை வஞ்சிக்கின்றனர். ஆகையால் ''பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக் கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்'' என்று அப்போஸ்தலானாகிய யோவான் எழுதுகிறார். எனவே, வேதப்புரட்டர்களிடமிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 30. மேன்மையான உயிர்த்தெழுதல்
## Better Resurrection

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேன்மையான உயிர்த்தெழுதல் – Better Resurrection. மேன்மை மனிதனுக்கு பல வழிகளில் வருகிறது ஆகையால் மேன்மையடைகிறான். ஆனால் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற ஒரே ஒரு வழி தான் உண்டு. அந்த வழியில் சென்றால் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையலாம். அந்த வழி இதோ! ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' என்று ஆண்டவர் இயேசு சொல்கிறார் (யோவா.11:25,26) . இவ்வசனத்தை நம்பக்கூடிய அனைவரும் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்வார்கள். நீங்கள் இந்த மேன்மையான உயிர்த்தெழுதலை நம்புகிறீர்களா?

அநேகருக்கு உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லை. நாளைக்கு நடப்பதை யார் பார்த்தது? புசித்தோம் குடித்தோம் நல்லபடியாக அனுபவித்தோம் என்று இல்லாமல் உயிர்த்தெழுதலாம், பரலோகமாம், இதையெல்லாம் யார் பார்த்தது என்று அலட்சியப்போக்கிலே உதாசினம் செய்கிறவர்கள் அநேகர் உண்டு. வேதாகமத்திலும் கூட இப்படிப்பட்டவர்களை குறித்து படிக்கின்றோம். ''சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள்'' (அப்.23:8). அப்படியென்றால் மரித்தோர் உயிர்த்தெழ மாட்டார்களா? இதைக்குறித்து பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது, ''மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே, நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய் அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதததற்கேற்ற மேனியைக் கொடுக்கிறார். எல்லா



மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே, வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே; சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும்'' என்கிறார் (1கொரி.15:35–42). செத்துப்போன விதையைக் கவனித்துப் பாருங்கள் அவை விதைக்கப்படும்போது மறுபடியும் முளைக்க ஆரம்பிக்கிறது. அப்படியே, மரித்துப்போன ஒருவன் அடக்கம் செய்யப்படுகிறான், அத்தோடு அவனுடைய கதை முடிந்து விட்டது என்றல்ல. அழிவுள்ள அவனுடைய சரீரம் அழிவில்லாததாய் எழுந்திருக்கும். இது ஒரு மாபெரும் அதிசயம் அல்லவா!

''நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்'' (நீதி.14:32). ஏனென்றால் அவன் தன் நம்பிக்கையைக் கர்த்தர் மீதும் அவர் தமக்காக ஏற்படுத்தியுள்ள நித்தியத்திலும் வைத்திருக்கிறான். இவ்விதமான நம்பிக்கையை அப்போஸ்தலனாகிய பவுல் கொண்டிருந்தார். ஆனபடியினாலே அவர் ''கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்'' என்றான் (பிலி.1:21). மேன்மையான உயிர்த்தெழுதலை நினைக்கும் போது நமக்கு வரும் பாடுகளையும் உபத்திரவங்களையும் ஒரு பொருட்டாக எண்ணமாட்டோம். நம்முடைய முற்பிதாக்களும் இப்படியே இருந்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் **மேன்மையான உயிர்த்தெழுதலை** அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள் என காண்கிறோம். உதாரணமாக, ஏரேமியா போன்ற தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் விடுதலைபெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள். ஒருவேளை உயிருக்கு பயந்துபோய் மறுதலித்திருந்திருப்பார்கள் என்றால் விடுதலை பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்களோ மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலை பெற சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்.

மோசேயும் கூட ''இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை

அதிக பாக்கியமென்று எண்ணினான்'' என்று எபி.11:26–ல் வாசிக்கிறோம். அநேகர் இன்றைய தேவைகளைத்தான் பார்க்கிறார்கள். மோசேயோ இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து வரக்கூடிய நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். இன்றைக்கு நாம் ஒவ்வொருவரும் மேன்மையான உயிர்த்தெழுதலை நினைத்தோமானால் நமக்கு வரக்கூடிய நிந்தையைப் பெரிதாக நினைக்க மாட்டோம். ஏனென்றால் ''இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக் கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற் பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்'' (ரோம.8:18:23).

ஆம், பவுல் சொல்வதைப்போல எப்பொழுது உயிர்த்தெழுவோம், நம்மை தேவனோடு சேர்க்க எப்பொழுது இயேசு வருவார் என்ற ஆவலோடு காத்திருந்து தவிக்கிறோம். நம்முடைய தவிப்பு வீணாய்ப்போகாது. மேன்மையான உயிர்த்தெழுதலை அடைய முதலாவது நம்மை நாமே தாழ்த்தவேண்டும். நம்முடைய ஆண்டவரும் அவ்விதமே தம்மைத்தாமே தாழ்த்தினார். ''அவர் மனுஷருபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் , அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்'' என்று (பிலி.2:8,9) வாசிக்கின்றோம். உன்னதமானவர், வானங்களிலும் பெரியவர், அவரால் எல்லாம் உண்டாக்கப்பட்டது. அப்படிப்பட்ட அவரே தம்மைத்தாமே தாழ்த்தியிருக்கும் போது நாம் எம்மாத்திரம்! சற்று சிந்தித்துப்பாருங்கள். ''மேன்மைக்கு முன்னானது தாழ்மை'' என்கிறார் சாலொமோன் (நீதி.15:33). மேன்மையான உயிர்த்தெழுதலை அடைய வேண்டுமானால், அதற்கு முன் நம்மை நாமே தாழ்த்த வேண்டும். தாழ்மை என்பது தலை குனிந்து நடப்பதல்ல.



மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையாக எண்ணவேண்டும். இதுவே தாழ்மை. ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கொல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள். கர்த்தர் பரிசுத்தர் அவருக்கு முன்பாக நிற்கக்கூடியவன் பரிசுத்தவனாக இருக்கவேண்டும். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிக்கமுடியாது என காண்கிறோம்.

அன்பு நேயரே, **மரித்தோரின் உயிர்த்தெழுதல் நிச்சயமாக நடைபெறும்.** இதிலே எந்தவிதமான சந்தேகமும் உங்களுக்கு உண்டாகாது என்று நம்புகிறேன். ''குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது'' என்றார் இயேசு (யோவா.6:40). இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை அவர் கடைசிநாளில் எழுப்புவார். மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவரா யிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார். உயிர்த்தெழுதலில் பங்குபெற நீங்கள் செய்யவேண்டியது என்ன? நம்முடைய பாவத்திற்காக இயேசு மரித்தார் என நீங்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று உங்கள் பாவங்கள் போக கழுவப்படவேண்டும். இப்படிச்செய்யும்போது அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்படுகிறீர்கள். ''அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்'' என்கிறார் பவுல் (ரோம.6:5) இவர்களே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள். இப்படிப்பட்டவர்கள் இயேசு மறுபடியும் வரும்போது ''முதலாவது எழுந்திருப்பார்கள்'' (1தெச.4:16). மேலும் ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' (1கொரி.15:22). உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்துவுக்குள் நடைபெறக்கூடிய ஒன்று. நீங்கள் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? அல்லது கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கிறீர்களா? இன்றே கிறிஸ்துவுக்குள் அதாவது கிறிஸ்துவை ஏற்று, ஞானஸ்நானம்பெற்று, அவருடைய சரீரமாகிய சபைக்குள் வாருங்கள். இதுவே நீங்கள் கிறிஸ்துவுக்குள் வருவதற்கான வழி. இதையல்லாது நீங்கள்

உங்களுடைய சுய வழியிலோ அல்லது மனித பாரம்பரிய வழியிலோ சென்றால் நீங்கள் மேன்மையான உயிர்த்தெழுதலை சந்திக்க இயலாது. கிறிஸ்து ஒருவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார்.

**கேள்வி நேரம்**

**உயிர்த்தெழுதல் நடைபெறும்போது நாம் மறுரூபமாக்கப்படுவோமா?**

இது குறித்து பவுல் எழுதும்போது; "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர் களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" என்று எழுதுகிறார் (1கொரி.15:51–58). கிறிஸ்துவானவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பின்பு நாற்பது நாட்கள் தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். அவரை விசுவாசிக்கிறவன் அவரைப்போல பிதாவாகிய தேவனால் உயிர்ப்பிக்கப்படுவான். மறுமைக்குரிய தேவமனிதனாகவும் மறுரூபமாக்கப் படுவான். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்"**
**நீதிமொழிகள் 30:5**



# 31. தேவனுடைய நாமம்
# The Name of God

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆதியிலே தேவனோடிருந்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேவனுடைய நாமம் – The name of God. தேவனுடைய நாமம் வல்லமையுள்ளது. அவருடைய நாமத்தை அண்டிக்கொண்டவர்களுக்கு ஒரு குறைவுமில்லை. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். ஆனால் அன்றும் இன்றும் தேவனை அறிந்த மக்கள் மூலமே அவருடைய நாமம் தூஷிக்கப்படுகிறது.

இதற்கு தேவனை அறிந்த ஒரு மனிதன் இடங்கொடுக்கலாமா? கூடாதே. "எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே" என்கிறார் பவுல் (ரோம.2:24). ஆம், இன்றும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக ஜீவிக்காததே இதற்கு காரணமாயிருக்கிறது. வேதம் எதிர்பார்க்கின்ற ஒரு வாழ்க்கையை அநேகர் ஏற்றுக்கொள்ளாமல், சுய இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும் அடிமைப்பட்டு கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது என்ற பழமொழிக்கு ஏற்ப மீண்டும் பழைய வாழ்க்கைக்கே திரும்பிவிடுகின்றனர். உலக சமுதாயத்தில் கிறிஸ்தவர்கள் என்றால் அவர்கள் அமைதியானவர்கள் எந்த பிரச்சனையிலும் தலையிடாதவர்கள் மிகவும் நல்லவர்கள் என்ற பெயரைப் பெற்று வருகிறது. இப்படிப்பட்ட நற்பெயரை சிலர் தூஷிக்கும்படியாக நடந்து கொள்கிறார்கள். இதிலே நனைந்த பாவிகளும் உண்டு நனனையாத பாவிகளும் உண்டு.

குறிப்பாகச் சொல்லப்போனால் பிரசங்கிக்கிறவர்களும் அப்படியே நடந்து கொள்கிறார்கள். வேதம் எச்சரிப்பதை கவனியுங்கள். "இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத் தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா? விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? நியாயப்பிரமாணத்தைக்குறித்து மேன்மை பாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து, தேவனைக் கனவீனம்பண்ணலாமா?" (ரோம.2:21–23). பிரசங்கிக்கிறவன் சரியாய் இருந்தால்தான் அதைக்

கேட்கிறவர்களும் சரியாய் இருப்பார்கள். முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பதைப்போல பிரசங்கியாரே ஒரு விபசாரக்காரனாகவும், கொள்ளைக்காரனாகவும் இருந்தால் அவனைச்சார்ந்த சபை விசுவாசிகள் எப்படியிருப்பார்கள்? இன்றைக்கு புறஜாதிகளில் கிறிஸ்தவத்தை பிடிக்காத ஒரு நபரிடம் ஏனய்யா உங்களுக்கு கிறிஸ்தவம் பிடிக்கவில்லை என்று கேட்டுப்பாருங்கள்! அவருடைய பதில் என்னவாக இருக்கும்? முதல் குற்றச்சாட்டு பிரசங்கியார்மீது தான் இருக்கும். விபசாரம் செய்யக்கூடாது என்று பிரசங்கிக்கிறான் ஆனால் அவனே குடிகாரனாகவும் விபசாரக்காரனாகவும் இருக்கிறான் என்று அடுக்கிக்கொண்டே போவார். இந்நிலைமை என்றுதான் மாறுமோ! கிறிஸ்தவத்தை பிடிக்காதவர்கள் ஒருநாளும் தேவனையோ அல்லது அவரால் அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவையோ குறை சொல்வதில்லை. நன்கு கவனித்துப்பாருங்கள் சமுதாயம் அவரைப் பின்பற்றுகிற கிறிஸ்தவர்களையே குறை சொல்லுகிறது. வேதமும் அப்படியே சொல்கிறது. உங்கள் மூலமாய் புறஜாதிகளுக்குள்ளே தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறதே.

தகப்பனுடைய பெயரை பிள்ளை காப்பாற்ற வேண்டும் என்ற ஏக்கம் எல்லா பெற்றோருடைய மனதிலும் இருக்கிறது. ஆனால் சிலருடைய வாழ்க்கை தாறுமாறாக ஓடுகிற பெண் ஒட்டகம் போல் இருக்கிறதே! அஞ்ஞானிகளுக்குள்ளும் பேசப்படாத விபசாரங்கள் நிறைந்திருக்கிறது. ''ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே'' என்று பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதுகிறார் (1கொரி.5:1). இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை என்ன செய்யலாம்? அவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுங்கள் என்று பவுல் கீழுள்ளவசனங்களில் எழுதுகிறார். முதலாவது தேவனுடைய மனுஷன் அதாவது கிறிஸ்தவன், தான் யார் என்பதை ஒருக்காலும் மறந்துபோகக்கூடாது. தேவனுடைய நாமத்துக்கு ஒருநாளும் மகிமைக்குறைச்சலை உண்டாக்கி விடக்கூடாது. சோதனை எல்லோருக்கும் வரக்கூடியதுதான். அதை சகித்து மேற்கொள்ளவேண்டும். அவனே பாக்கியவான் என்று வேதம் சொல்கிறது. யோசேப்புக்கு சோதனை வந்தது போத்திபாரின் மனைவி அவனை விபசாரத்திற்கு நித்தம் அழைத்தாள் அவனோ ''இந்த வீட்டில் என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கிவைக்கவில்லை; இப்படியிருக்க நான் இத்தனை பெரிய



பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்'' (ஆதி.39:9). என்ன அருமையான கேள்வி, என் தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி? இன்று கிறிஸ்துவுக்கு விரோதமாக விபசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறவர்கள் இதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று யோசேப்பு பாவம் செய்திருப்பானே என்றால் போத்திபாரின் வீட்டிலும், எகிப்து தேசமெங்கும் தேவனுடைய நாமம் எந்த அளவுக்கு தூஷிக்கப்பட்டிருக்கும் என்பதை கற்பனைசெய்துபாருங்கள். அவனோ புறஜாதிகள் நிறைந்த எகிப்து தேசத்திலே தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடங்கொடாதிருந்தான்.

மேலும், பவுல் கொரிந்து சபைக்கு எழுதுவதைக் கவனியுங்கள் ''எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப் படமாட்டேன்'' என்கிறார் (1கொரி.6:12). ''வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜயத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்: ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்'' (1கொரி.6:9–11). ஆகையால் அன்பான தேவ ஜனமே, ஒன்றுக்கும் அடிமைப்படக் கூடாது **சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்** அவருடைய அனுமதியில்லாமல் யாதொருகாரியத்தையும் செய்யலாகாது. ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

ஒரு கிறிஸ்தவனோ, பிரசங்கியாரோ வாய் வீச்சு வீரனாக இருப்பதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை ''மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்'' என்கிறார் பவுல் (1கொரி.9:27). சரீரத்தை ஒடுக்குவதற்கு சிலர் மார்க்கெட்டில் வந்திருக்கிற புதிய புதிய நவீன கருவிகளை நாடுகிறார்களே தவிர இவ்வசனத்தின்படி சரீரத்தை ஒடுக்க முயற்சிப்பதில்லை. ''தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே

உண்டாயிருக்கிறது'' (1கொரி.4:20). கிறிஸ்தவம் சொல்லிலே அல்ல செயலிலே இருக்கிறது. அவ்வாறு செய்யும்போதே தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாது பாதுகாக்கபடமுடியும். ''மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது'' என்று நமது ஆண்டவர் குறிப்பிடுகிறார் (மத்.5:16). இப்படி நற்கிரியைகளை ஒரு கிறிஸ்தவன் செய்யும்போது புறஜாதிகளும் தேவனை ஏற்றுக்கொள்ள வழி ஏற்படும். அப்பொழுது அவருடைய நாமத்தின்மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள். என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ ''உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்'' (யாத்.20:7). வீணிலே வழங்குவது என்பது கர்த்தருடைய நாமத்துக்கு மகிமைக் குறைச்சலை ஏற்படுத்துவதாகும். இவனா இப்படி செய்தான், எந்த புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்று நம்மால் நம்ப முடியவில்லையே! வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பிவிடக்கூடாது என்று ஜனங்கள் பேசும் அளவிற்கு தேவனுடைய நாமத்திற்கு மகிமை குறைச்சலை ஏற்படுத்திவிடக் கூடாது. கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவரவேண்டும்.

சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ போன்றோரின் சாட்சி மற்றும் அவர்களுடைய உறுதி அந்த ராஜ்யபாரத்திற்கே மகிமையைக் கொண்டுவந்தது. ''நேபுகாத்நேச்சார் வசனித்து; சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான். பின்பு ராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்'' (தானி3:28–30). இந்த அருமையான மூன்று தாசர்கள் மூலம் கர்த்தருடைய நாமம் புறஜாதி தேசத்தில் எப்படி



பிரசித்தமாயிற்று பார்த்தீர்களா? அவர்கள் தங்களுடைய சரீரத்தையே சுட்டெரிக்க ஒப்புக்கொடுத்தார்கள். அவருடைய நாமம் மகிமைக்காக நாமும் இவ்விதமாக ஒப்புக்கொடுக்கும் போது உயர்த்தப்படுவோம். ''சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' (ரோம.12:1). தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலம் மகிமைப்படுவதாக!ஆமென்.

**கேள்வி நேரம்**

**தேவனுடைய நாமத்திற்கு எதிர்த்து நிற்பவன் யார்?**

பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது அவர் ஆராய்ந்து முடியாத பெரிய காரிங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் செய்கிறார். தாழ்ந்தவர்களை உயரத்தில் வைத்து, துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார். அவர் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, வெளிநிலங்களின்மேல் தண்ணீர்களை வருவிக்கிறார். அவரோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவன் ஒருவனுமில்லை. மேலும், அவர் யோபுவோடு பேசும்போது, ''சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார். அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறு உத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்கிறேன் என்றான் (யோபு40:2–4). யோபு ஒரு உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன். கர்த்தர் அவனோடே பேசும்போது; அவன் அவருடைய சமுகத்தில் வாயைபொத்திக்கொண்டான். நீங்களும் நானும் எம்மாத்திரம்? தேவனுடைய நாமத்திற்கு பயந்து அவரை நன்றியுள்ள இருதயத்துடன் துதிப்போம். சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாமோ தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம்.

**"கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை" நீதிமொழிகள் 21:30**

# 32. விக்கிரகம்
## Idol

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். விக்கிரகம் – Idol. விக்கிரகங்களும், விக்கிரக வழிபாடுகளும் எப்படி உலகத்தில் தோன்றினது என்பதைக் குறித்து நாம் ஆராய்ந்து பார்க்கையில் ஆதியிலே தேவனோடு பேசிவந்த மனிதன் நாளடைவில் பாவத்தின் விளைவால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான். பாவம் உலகத்தில் பிரவேசித்தது. பாவத்தின் கீழாக்கப்பட்ட மனிதன் பாவத்திற்கு அடிமையானான்.

பாவம் (அதாவது) பிசாசு சத்தியத்திற்கு விரோதமான போதனைகளையும், எண்ணங்களையும் மனிதனில் விதைக்க ஆரம்பித்தான் ''பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்'' (1யோவா.3:8). இதற்கு கீழ்ப்படிந்த மனிதன் இயற்கைகயை வணங்கவும், மிருகங்களை வணங்கவும், சந்திர சூரிய நட்சத்திரங்களை வணங்கவும், கடல்வாழ் சந்துக்களை வணங்கவும், ஊரும் பிராணிகளை வணங்கவும் ஆரம்பித்தான் என்று வரலாற்று பாட நூல்களிலும் படிக்கலாம். ஆதியிலே தேவனோ மனிதனைப் பார்த்து: ''நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்'' (ஆதி.1:28). ஆனால், மனிதனோ அவைகளை விக்கிரகங்களாக செய்து அதை நமஸ்கரித்துவருகிறான். தேவன் ஏற்படுத்திய அனைத்தும் அவனுக்கு ஏதாவது ஒருவகையில் பயனுள்ளதாகவே இருக்கிறது. அவனோ அவைகளை உண்டாக்கிய தேவனை விட்டு விலகி, தேவனால் உண்டாக்கப்பட்டவைகளை தொழுது கொள்ள ஆரம்பித்தான். இப்படியே விக்கிரகங்களும், விக்கிரக வழிபாடுகளும் பூமியில் தோன்ற ஆரம்பித்தது.

பரிசுத்த வேதாகமத்தில் பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது ''உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்'' என்கிறார் (1கொரி.8:4). உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை அதற்கு



ஜனங்களே கனத்தைக் கொடுத்துவைத்திருக்கிறார்கள். கண்ணைக் கெடுத்துவிடும், கையைவாங்கிவிடும், என்று சொல்லி ஜனங்களைப் பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள். வேதம் அதைக்குறித்து தெளிவாக சொல்கிறது: ''விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது, அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது, அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும் அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்'' (சங்.115:4–8). விக்கிரகத்திற்கு எல்லாமே இருந்தும் அவைகளால் ஒன்றும் செய்யமுடியாது. இதை அநேகர் மறுப்பர். அதற்கு சக்தி இருக்கிறது என்பர். இப்படி நினைக்கக்கூடியவர்களில் பெலிஸ்தியர்களும் அடங்குவர்.

அவர்கள் ஒருமுறை கர்த்தருடைய பெட்டியை இஸ்ரவேலரிடமிருந்து பிடித்து அதை தங்களுடைய தாகோனின் கோவிலிலே தாகோனண்டை வைத்தார்கள். மறுநாள் காலமே எழுந்திருந்து வந்து பார்க்கும்போது தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது. அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் வைத்தார்கள். மறுநாள் காலமே எழுந்து பார்க்கும்போது இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடந்தது: தாகோனின் உடல் மாத்திரம் மீதியாயிருந்தது. தேவனுக்கு முன்பாக அவர்கள் உண்டாக்கின கல்லும் மரமும் எம்மாத்திரம்! ''தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்த மேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே'' (2கொரி.6:16). சம்பந்தமில்லாத ஒன்றை தேவனோடு சம்பந்தப்படுத்தக் கூடாது. பெலிஸ்தர் தாகோனின் விக்கிரகத்தோடு கர்த்தருடைய பெட்டியை சம்பந்தப்படுத்தி இதுவும் தேவனுடைய பெட்டி நம் தேவனுடைய கோவிலில் வைப்போம் என்று சொல்லி வைத்திருக்கக்கூடும். அங்கே பெட்டிக்கு

முன்பாக விக்கிரகம் உடைந்தது. அன்பானவர்களே, நாமே அவருக்கு ஆலயம். நம்மில் தேவன் வாசம் செய்கிறார். நம்மோடு உலாவி உறவாடும் தேவன், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணார்.

சாலொமோன் தேவனுக்காக பெரிய ஆலயத்தை எருசலேமில் கட்டினான். அதை கட்டிமுடித்து ஜெபிக்கும்போது; அவன் இப்படியாக சொல்லுகிறான்; ''இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?'' என்று ஜெபித்தான் (1இரா.8:27). ஆம், கர்த்தர் எவ்வளவு பெரியவர். அவருக்கு நிகராக இப்பூமியிலும் வானத்திலும் எதையும் நாம் ஒப்பிடலாகாது. உலக சம்பத்தையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும் பெற்றவன் சாலொமோன், இவனைப்போல ஒரு ராஜா இவனுக்கு முன்னும் பின்னும் எழும்பினதில்லை. இப்படிப்பட்ட சாலொமோன் கடைசியிலே விக்கிரகாராதனை செய்கிறவனாக மாற்றப்பட்டான். ஏன்? எப்படி? என்று கேட்கிறீர்களா? அவனுடைய இச்சையே இதற்கு காரணம். அந்நிய ஸ்திரீகள் மீது ஆசைவைத்தான். அந்தப் பெண்கள் அவன் இருதயத்தை வழிவிலகச் செய்தார்கள். கர்த்தர் இஸ்ரவேலை முன்னமே எச்சரித்திருந்தார். ''நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் **நிச்சயமாக** தங்கள் தேவர்களை பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்'' (1இரா.11:2). எனக்கு அன்பானவர்களே உங்களுடைய ஐக்கியம் யாரோடு உள்ளது? ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது'' (2கொரி.6:14,15). இப்படிப்பட்ட எச்சரிப்பின் சத்தம் கொடுக்கப்பட்டிருக்கும்போது அதையும் மீறி நான் அவர்களை என்பக்கம் மாற்றிவிடுவேன், திருமணத்திற்கு பின்பு கர்த்தரை ஏற்றுக்கொள்வார்கள் என்றெல்லாம் பகல் கனவு காண்பது தவறு. சாலொமோனை அந்தப் பெண்கள் தங்கள் தேவர்களுக்காக மேடைகளைக் கட்டும்படி செய்தார்கள். அந்த ஸ்திரீகளைப் பிரியப்படுத்த அவனும் மோளோகுக்கு மேடைகளைக் கட்டி தேவ கோபத்திற்கு ஆளானான். எப்படி என்றால், ''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டு முறை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்ற வேண்டாம் என்று



கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார்'' என்று வாசிக்கிறோம் (1இரா.11:9,10).

விக்கிரகஆராதனை பாரம்பரியமாகவும், தொன்று தொட்டும் வந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து விடுபட சிலர் முயற்சிக்கின்றனர். அநேகர் அது பாரம்பரியமான ஒன்று அதை நாம் மாற்றக்கூடாது என்கின்றனர். ஓசி.8:14–ல் சொல்லப்பட்டபடி ''இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்'' என்பதைப் போல் இருக்கிறது. முதலாவது தன்னை உண்டாக்கினவரை மறந்தவர்கள் யார்? நம் முற்பிதாக்கள் அல்லவா? அவர்கள் தேவனை மறந்து விக்கிரகங்களை உண்டுபண்ணி நமஸ்கரிக்க ஆரம்பித்தனர். உதாரணமாக மோசே காலத்தில் மோசே தேவனோடு மலையில் பேசி விட்டு வர தாமதித்தபோது ஜனங்கள் ஆரோனை நோக்கி எங்களுக்காக தெய்வங்களை உண்டுபண்ணும் என்று சொல்லி ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதை நமஸ்கரித்தார்கள். இப்படி தேவனை விட்டு பிரிந்த கூட்டத்திலிருந்து வந்தவர்கள் அநேகர்.

ஆனால் இன்று அக்கூட்டத்தை விட்டு வெளியேற யோசிக்கிறதென்ன? நம் தேவன் அன்றே கற்பித்திருக்கிறாரே! ''கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடேபேசினேன் என்று கண்டீர்கள். நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம். மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின்மேல் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்துவாயாக; நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்'' என்றார் (யாத்.20:22–24).

இப்பொழுது நாம் ஆடு மாடுகளை பலியிட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், கிறிஸ்துவே நமக்காக பலியாகிவிட்டார். ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுகிறோம். இன்று நாம் செய்ய வேண்டுவதென்ன அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும்படியாக ஜெபக்குழுக்களை ஏற்படுத்தலாம், உங்கள் வீடுகளில் கூடியிருந்து வேதம் வாசித்து ஜெபித்து கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தலாம். உங்கள் வீட்டு சுவர்களில் வசனத்தை எழுதி அநேகர்

வாசித்து பயன்பெறும்படி செய்யலாம். இப்படி செய்யும்போது உன்னை கர்த்தர் ஆசீர்வதிப்பார். அதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

**கேள்வி நேரம்**

**விக்கிரக ஆராதனையை தேவன் ஏற்றுக்கொள்வாரா?**

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" என்று ஆண்டவர் இயேசு சொல்கிறார் (யோவா.4:24). ஆவிக்குரிய ஆராதனை என்பது ஆவிக்குரியவர்கள் சேர்ந்து ஏறெடுக்கும் ஜெபமாகும். அதில் விக்கிரகத்திற்கு இடமில்லை. ஏனெனில், "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம் என்றார்" (யாத்.20:23). அப்படி மீறி அவருக்கு ஒப்பாக இன்றைய கிறிஸ்தவர்கள் என்று சொல்லும் அநேகர் விக்கிரகங்களை உண்டுபண்ணிவைத்து அவரை தொழுதுகொள்கிறார்கள். அவைகள் வீணான ஆராதனையாகயிருக்கிறது.

"இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்பு கூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக் கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" என்று உபா.10:12,13–ல் வாசிக்கிறோம். பிரியமானவர்களே, தேவன் மனிதர்களுடைய கைகளினால் பணிவிடை ஏற்றுக்கொள்கிறதில்லை. அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ள வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். உங்களை முழுமையாக அவருக்கு ஒப்புக் கொடுத்து அவரைத் தொழுது கொள்ளுங்கள். குறிப்பாக "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக என்று அப்போஸ்தலானகிய யோவான் எழுதுகிறார். சிந்தியுங்கள், செயல்படுங்கள்.

**"பலியிடுவதைப்பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்" நீதிமொழிகள் 21:3**



## 33. கிறிஸ்தவனும் உயிர்த்தெழுதலும்
## A Christian And The Resurrection

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். கிறிஸ்தவனும் உயிர்த்தெழுதலும் – A Christian and the Resurrection. இயேசு சொல்கிறார்: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றார் (யோவா.11:25). இயேசுவை நம்புகிறவர்களுக்கு இந்த நம்பிக்கையிருக்கிறது. இந்த நம்பிக்கை எல்லாரிடத்திலும் இல்லை. இன்று உயிர்த்தெழுதலை நம்பாதவர்கள் இருப்பதுபோல அன்றும் இருந்தார்கள். அவர்கள் யாரென்றால் சதுசேயர்கள்.

இவர்கள் இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் நம்பாதவர்கள். அவர்களில் சிலர் இயேசுவினிடத்தில் வந்து: "போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனான். பின்பு இரண்டாஞ்சகோதரன் அவளை விவாகம்பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்துபோனான். மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம்பண்ணினான். அப்படியே ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணி பிள்ளையில்லாமல் இறந்துபோனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால்

தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்'' என்றார் (லூக்.20:28–36). சரியான பதிலை கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார். இந்தப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலை அடையப் பாத்திரராக எண்ணப்படுகிவவர்களோ அப்படி செய்வதில்லை அவர்கள் தேவதூதருக்கு ஒப்பாகவும், தேவனுக்குப் பிள்ளைகளாகவும் இருப்பார்கள்.

உயிர்த்தெழுதலிலே நம்பிக்கையில்லாத இந்த சதுசேயரைப் போன்றோருக்கு பவுல் எழுதுவதைக் கவனியுங்கள். ''புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார். எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம்வேறே, மிருகங்களுடைய மாம்சம்வேறே, மச்சங்களுடைய மாம்சம்வேறே, பறவைகளுடைய மாம்சம்வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும்வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும்வேறே; சூரியனுடைய மகிமையும்வேறே, சந்திரனுடைய மகிமையும்வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும்வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்'' (1கொரி.15:35–42). விதை விதைக்கும்போது நாம் வெறும் விதையையே விதைக்கிறோம், தேவன் அதற்கேற்ற மேனியைக் கொடுக்கிறார். அதைப்போல மரித்த சரீரங்களை இப்பூமியிலே அடக்கம்பண்ணுகிறோம். தேவன் கிறிஸ்துவுக்குள் மரித்தோரை அவருடைய வருகையிலே எழுப்புவார். அவர்கள் அழிவில்லாதவர்களாய் எழும்புவார்கள். ஜென்மசரீரம் விதைக்கப்படும், கிறிஸ்துவின் வருகையிலே ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.

பவுல் உயிர்த்தெழுதலைக்குறித்து அநேகருடன் போராடி இருக்கிறார். அவர் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேன் என்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன் என்கிறார். மனுஷர்கள்



சிலவேளைகளில் மிருகங்களைப்போல நடந்துகொள்ளுகிறார்கள் ஆகையால் பவுல் இப்படிச் சொல்லுகிறார். இயேசுவும் ஒருமுறை அந்த நரிக்குப்போய்ச் சொல்லுங்கள் என்றார். ஏனென்றால் அந்த நரியைப்போல தந்திரமுள்ளவர்களாக இருப்பதாலே அப்படிச்சொன்னார். நாமும்கூட இப்படிப்பட்ட சமூதாயத்தில் வாழ்ந்து வருகிறோம். மனிதர்களில் சிலர் மிருக குணமுள்ளவர்களாக மாறுகின்றனர். இதனால் பவுல் அப்படிப்பட்ட மனுஷர்களோடு போராடினேன் என்றுசொல்கிறார். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாதவர்கள் இப்படியே இருக்கிறார்கள். ஒரு முறை ஸ்கைலாப் என்ற விண்கலம் விழப்போகிறது என்ற அறிவிப்பு கேட்டவுடன் தமிழகத்தில் உள்ள அநேகர் புசிப்போம், குடிப்போம் என்ற முடிவுக்கு வந்து நாம் நாளைக்கு சாகப்போகிறோம் நல்லபடியாக சாப்பிட்டு எல்லாம் அனுபவித்து சாவோம் என்று சொல்லி குடித்து கும்மாளம் அடித்தார்கள். இப்படிப்பட்ட போதனை அநேகரை இன்னும் அதிகமாக பாவம் செய்யத்தூண்டியது. தவறான உபதேசங்கள் மனிதனை தாறுமாறாக நடக்கப்பண்ணும்.

பவுல் இப்படியாக ஒரு கேள்வியை எழுப்புகிறார்; ''கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லா விட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்ததோர் உயித்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச் சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்'' என்கிறார் (1கொரி.15:12–17). தேவனுக்காக, பவுல் போன்றோர் கிறிஸ்து எழுந்தார் என்று பொய்சாட்சி சொன்னார்களா? அன்றைய நாட்களிலே இயேசு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்திருப்பேன் என்று சொன்ன வார்த்தையின் நிமித்தம் அந்த அரசு அவர் மரித்த பின்பு கல்லறைக்கு பலத்த காவல்போட அனுமதித்தது. அவர்கள் போய் கல்லுக்கு முத்திரைபோட்டு காவல்வைத்தார்கள். ஆனால் தேவதூதர்கள்

கல்லைப் புரட்டிப்போட்டார்கள், அந்தச் சமயத்தில் காவலாளர் அவர்களுக்குப் பயந்து திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். இயேசு தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.

**உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்கள் யார்?** "பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோம.6:4,5). கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்கள் என்று பார்க்கிறோம். ஞானஸ்நானம் உங்களை பாவமற கழுவுகிறது. அவருடைய ராஜ்யத்தின் பிள்ளையாக மாற்றுகிறது. ஆகையால் தான் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக்காணமாட்டான் என்றார். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" என்கிறார் பவுல் (ரோம.6:11).

மேலும் ஆண்டவர் சொல்வதைக் கவனியுங்கள்: "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவா.11:26). உயிரோடிருக்கும் போது அவரை விசுவாசித்து திருமுழுக்கு பெற்றவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. ஆகையால் அவன் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்கிறார். இதைக்குறித்து வெளிப்படுத்தல் 20:6–ல் இப்படியாக வாசிக்கிறோம் "முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம்வருஷம் அரசாளுவார்கள்" இப்பொழுதும் கிறிஸ்து நம்மை அரசாளுகிறார் அவருடைய ராஜ்யம் ஆவிக்குரிய ராஜ்யம். அவருடைய ராஜ்யத்திலே ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம்போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு



காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்" என பேதுரு குறிப்பிடுகிறார்(2பேது3:8). அன்பு நேயரே இந்த உயிர்த்தெழுதலுக்கு நீங்கள் ஆயத்தமா?

**கேள்வி நேரம்**

**உயிர்த்தெழுதல் எப்படி நடக்கும்?**

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும். "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1தெச.4:16–17).

முதலாவது, கிறிஸ்து இயேசுவுக்குள் மரித்தவர்களுக்கு முதலிடம் பின்பு உயிரோடிருக்கிறவர்களும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்" (1கொரி.15:53). இதெல்லாம் எப்படி நடக்கும் என்று சந்தேகப்படுகிறவர்கள் கீழ்க்கண்டவசனத்தை கவனியுங்கள். எசேக்கியேல் தீர்க்க தரிசியைப் பார்த்து கர்த்தர், மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு அவன்: கர்த்தராகிய ஆண்டவரே தேவரீர் அதை அறிவீர் என்றான். நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரை என்றார். உரைத்தபோது எலும்புக்கு உரியவர்கள் உயிரடைந்து மகா பெரிய சேனையாய் நின்றார்கள். புதிய ஏற்பாட்டிலே மரித்து நாலு நாட்களாகிய லாசருவை இயேசு எழுப்பினார். அதைப்போல அவருக்குள் மரித்தவர்களை அவர் மகிமையிலே எழுப்புவார். கிறிஸ்தவனும் அவனுடைய உயிர்த்தெழுதலும் இப்படியே நடைபெறும். இதற்கு உங்களை ஆயத்தப்படுத்திவிட்டீர்களா? இல்லையென்றால் இன்றே கிறிஸ்துவுக்குள் வர முற்படுங்கள். கர்த்தர் உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பாராக!

**"குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்" – நீதிமொழிகள் 21:31**

# 34. எல்லாம் புதிதாயின
# All Things Have Become New

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் எல்லாவற்றையும் புதிதாக்க வல்லவராகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். எல்லாம் புதிதாயின – All things have become new. இந்நாளில் இச்செய்தியின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். புத்தாண்டிலே பல புதிய தீர்மானங்களை எடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தர் அவைகளை ஆசீர்வதிப்பாராக!

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்: பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" **(2கொரி.5:17).** கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது மிகப்பெரிய ஆசீர்வாதம். அப்படி கிறிஸ்துவுக்குள் ஒருவன் இருந்தால் அவன் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். அவனுடைய பழைய சுபாவம், தவறான எண்ணங்கள், கோபம், வைராக்கியம், பொறாமை, களியாட்டுகள் போன்ற அனைத்தும் ஒழிந்துபோய், அவன் கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புதிய மனுஷனாக உருவாக்கப்படுகிறான். அவனைப் பார்க்கும்போதெல்லாம் அவன் மூலமாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்பார்க்கலாம். இப்படிப்பட்டதான ஒரு மாற்றத்தைப் பெற்று இவ்வருடத்தில் நீங்கள் அடியெடுத்து வைத்திருக்கிறீர்களா? அல்லது பழைய மனுஷனோடு பிரவேசித்திருக்கிறீர்களா? புத்தாண்டிலே புதிய வஸ்திரம் தரிக்க பிரயாசப்படுகிறோம். மேலும் புதிய புதிய பொருட்களை வாங்குகிறோம். எல்லாம் புதிதாக இருக்கவேண்டுமென்று விரும்பி இப்படிச் செய்கிறோம். பழையவைகளை புறம்பே தள்ளுகிறோம். அதைப்போல பழைய ஜீவியத்தை புறம்பே தள்ளவேண்டாமா? நாட்களை நினைத்துப்பாருங்கள் ஒரு கதையைப் போல கழித்துப்போட்டீர்கள். இருக்கின்ற நாட்களிலாவது கர்த்தருக்குப் பிரியமாக வாழ்ந்து உங்களால் முடிந்த நற்கிரியைகளை செய்து வருங்கால சந்ததிக்கு காலத்தால் அழியாத சுவடுகளை விட்டுச்செல்லுங்கள்.

இச்செய்தியை கேட்கிற அன்பான சகோதரனே, சகோதரியே, கர்த்தர் உங்களுக்காக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அதை வேதாகமத்தின் மூலம் நீங்கள் தெரிந்துகொள்ளமுடியும். பாவத்துக்கு



அடிமையாயிருந்த உங்களை மீட்டு கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய மனுஷனாக சிருஷ்டித்து உங்களை நித்திய நித்தியமாக தம்மோடு வைத்துக்கொள்ள தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். "சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாகப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" என்கிறார் எபிரெய ஆசிரியர் **(எபி.10:19–22).** இப்பூமியிலே கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக சிருஷ்டிக்கப்பட்ட நாம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக, பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டுபண்ணியிருக்கிறார். ஆகையால்தான் இயேசுவானவர் குறிப்பிடும்போது என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். இந்த மார்க்கம் பழைய மார்க்கமல்ல புதிதும் ஜீவனுமான மார்க்கம் என்று பார்க்கிறோம். அப்படியென்றால் பழையவைகள் ஒழிந்துபோயின இப்பொழுது எல்லாம் புதிதாயின. இம்மார்க்கத்திற்கு ஜீவன் உண்டு. இதோ, மரித்தேன் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார். இவ்வருடத்தில் இம்மார்க்கத்தின் வழியாக உங்களை இணைத்துக்கொண்டீர்களா? இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் மட்டுமே இம்மார்க்கத்தின் வழியாக செல்லமுடியும், அவர்கள் சுத்த ஜலத்தால் கழுவப்பட்டவர்களாகவும், விசுவாசத்தின் பூரண நிச்சயமுள்ளவர்களாகவுமிருக்கிறார்கள். உங்களுக்கு இந்த ஜீவனுள்ள மார்க்கத்தின் வழியாக பிரவேசிக்க விருப்பமாயின் உங்களை முதலாவது கிறிஸ்துஇயேசுவுக்குள் இணைத்துக்கொள்ளுங்கள்.

"அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்கிறார் பவுல் **(எபே.4:22–24).** பழைய மனுஷன் நம்மை மோசம் போக்குகிறவனாக

இருந்தான். அப்படியென்றால் பழைய மனுஷனாகிய நாம் நம்முடைய ஜீவியத்திலே பாவத்துக்கு அடிமைகளாக இருந்தோம். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும். அநேகர் ஆழம் தெரியாமல் காலை விட்டு ஆபத்தில் மாட்டிக் கொள்வார்கள். ஆகையால் பழைய மனுஷனைக் களைந்துபோட்டு, உள்ளத்தில் புதிய பெலனைப்பெற்று புதிய மனுஷனாகிய இயேசுவைத்தரித்துக்கொள்ளுங்கள். இது குறித்து பவுல் எழுதும்போது ‘‘கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்’’ என்கிறார் (கலா.6:17). அண்ணனுடைய போர் உடையை அவனுடைய தம்பி தரித்துப்பார்க்கும்போது அவனுக்குள் ஒருவிதமான வீரம் பொங்கி எழும்புகிறது. இவ்வருடத்தில் கிறிஸ்துஇயேசுவைத் தரித்துக்கொள்வீர்களென்றால் புதுபெலனைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்களை மோசம்போக்கிக்கொண்டிருக்கிற பழைய மனுஷனை களைந்துபோட கால தாமதம் செய்யாமல் களைந்துபோட்டு உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாக மாறுங்கள் கர்த்தருடைய வசனத்துக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

‘‘நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்’’ (எபி.12:22–24). மேற்கண்ட வசனத்தின்படி நீங்கள் சரியான இடத்துக்கு வந்து சேர்ந்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன். சிலர் கிறிஸ்தவத்தைப் பற்றி தவறான கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள். அது சீயோன் மலை, ஜீவனுள்ள தேவனுடைய நகரம், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்கள் இருக்குமிடம், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிறவர்களின் முதற்பேறானவர்களின் சர்வசங்கம். நியாயாதிபதியிருக்குமிடம், நீதிமான்களுடைய ஆவிகள் இருக்குமிடம், உடன்படிக்கையின் மத்தியஸ்தர் இயேசு இருக்குமிடம். இந்த இடத்தில் நீங்கள் இருப்பீர்கள் என்றால் அது ஒரு சாதாரண இடமாக இருக்குமா? சற்று யோசித்துப்பாருங்கள். இப்பேர்பட்ட



ஆசீர்வாதம் நிறைந்த இடத்துக்கு நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். உலகப்பிரகாரமாக ஒரு அதிகாரியின் வீட்டில் வேலை செய்கிறவர்கள், நான் அந்த அதிகாரியின் வீட்டில் வேலை செய்கிறேன். நான் சொன்னால் அந்த அதிகாரிகேட்பார் என்று பெருமையோடு பேசிக்கொள்வார்கள். சர்வ உலகத்தையும் நிர்வகிக்கும் தேவசமூகத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப் போமானால் அது எவ்வளவு மேன்மையாக இருக்கும். அதற்கு நிகரான ஒன்று இப்பூமியில் உண்டா? வானமும் பூமியும் ஒருநாள் அழிந்துபோகும். கர்த்தருடைய வசனமும், அவ்வசனத்தை நம்பினவர்களும் ஒருநாளும் அழிந்து போகார்கள். இப்பேர்பட்ட ஆசீர்வாதமான இடத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால் இன்றே உங்களை ஒப்புக்கொடுத்து புதிய மனுஷனாக மாறுங்கள்.

‘‘சகோதரரே, நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன்; அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே. மேலும், நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன், இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது; ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது’’ என்கிறார் (1யோவா.2:7,8). இங்கே யோவான் அப்போஸ்தலன் ஒரு புதிய கற்பனையை உங்களுக்கு எழுதுகிறேன் என்கிறார். இந்த புதிய கற்பனை நேயர்களாகிய உங்களுக்கு பிரயோஜனமாக இருக்குமென்று நம்புகிறேன். இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது. அந்த ஒளி இயேசுகிறிஸ்து. உங்களுடைய பழைய வாழ்க்கை இருளாக இருந்தது நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருக்குள் வந்தவுடன் இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளியாகிய இயேசுகிறிஸ்து உங்களிலே பிரகாசிக்கிறார். ஒளியிலே இருக்கிற நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்ளுங்கள். இருளிலே இருக்கிற ஜனங்கள் உங்களுடைய வெளிச்சத்தைக்கண்டு உங்கள் மூலம் ஒளியை அவர்களும் பெற்றுக்கொள்ளட்டும். தைபிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். உங்களுடைய வாழ்வில் இயேசு வருவாரானால் நீங்கள் மெய்யான ஜீவஒளியை பெற்றுக்கொள்ளமுடியும். உங்களுடைய வாழ்வு ஒளிமயமான எதிர்காலமாக மாறும். சகேயுவின் வீட்டிற்கு எப்பொழுது இரட்சிப்பு வந்தது. அவன் இயேசுவை நோக்கிப்பார்க்கும்போது, ஆவலோடு அவரையும் அவருடைய உபதேசத்தையும் தேடும்போது. நீங்களும் அந்தவிதமாக

தேடுவீர்களானால், உங்களுடைய வீட்டிற்கும் இரட்சிப்பு தேடிவரும். நீங்களும் உங்களுடைய குடும்பத்தாரும் அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். 'எல்லாம் புதிதாயின' என்ற வசனத்தின்படி உங்களுடைய ஜீவியம் இவ்வருடத்தில் புதிதாகட்டும். பழையவைகளை ஒழித்துப்போடுங்கள். புதிய மனுஷனாக மாறுங்கள். அதற்கு வேண்டிய எல்லாவிதமான ஞானத்தையும் பெலத்தையும் கர்த்தர் உங்களுக்கு தந்தருள்வாராக!

**கேள்வி நேரம்**

**புதிய நாமத்தினால் நாம் அழைக்கப்படவேண்டுமா?**

எல்லாம் புதிதாக்கப்படும்போது நாமும் கூட புதிய நாமத்தினாலே அழைக்கப்படவேண்டும். ஆதியில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு யூதமார்க்கத்தில் இருந்தவர்களை யூதர்கள் என்றும் புறஜாதிமார்க்கத்தில் இருந்தவர்களை புறஜாதிகள் என்றும் வேதம் அழைத்தது. ஆனால் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேசத்தின்படி நடப்பவர்களை வேதம் 'கிறிஸ்தவர்கள்' என்ற புதிய நாமத்தினால் அழைக்கிறது. இது முதன் முதல் அந்தியோக்கியா பட்டணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை உலகமெங்கும் அந்த ஒரே நாமத்தில் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள். எத்தனை ஆசீர்வாதமான நாமம் என்று பார்த்தீர்களா? இந்த புதிய நாமத்தை எல்லோரும் தரித்துக்கொள்ளமுடியாது. அதற்குறிய தகுதிகள் தேவை. முதலாவது இயேசுவை தேவனுடைய குமாரனாக ஏற்று அவர் வைத்துள்ள புதிய உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று, பாவங்கள் போக கழுவப்பட்டு அவருடைய திருச்சபையில் அங்கமாயிருக்கவேண்டும். மேலும் வாரந்தோறும் தேவனைத் தொழுதுகொள்ளவும் அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நினைவுகூறும்படியாக சபையாக கூடிவரவேண்டும். இப்படி கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களை இயேசு தம்முடைய சீஷர்கள் என்று அழைக்கிறார். இவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் பொருந்தும். நீங்கள் எந்த நாமத்தினால் அழைக்கப்படுகிறீர்கள்? புதிய நாமத்தினால் அழைக்கப்பட முயற்சியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக" நீதிமொழிகள் 23:26**



# 35. எல்லோருக்கும் இரட்சிப்பு
# Salvation To All

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உலக இரட்சகர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். எல்லோருக்கும் இரட்சிப்பு – Salvation to all. உலக மக்கள் அனைவருக்கும் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்தியம் அறிவிக்கப்பட்டு வருகிறது. இக்கட்டளையானது உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தக் கட்டளை 2000 வருடங்களாக உலகமுழுதும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது. மனிதன் ஆன்மாவிலும், சரீரத்திலும் விடுதலையடைய வேண்டுமானால் இறைவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவரை ஆராதிக்கவேண்டும். "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" (அப்.2:21). மனிதனை உண்டாக்கின தேவன் அவன் கெட்டுப்போகாமல் மனந்திரும்பவேண்டுமென்று நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார். இச்செய்தியை கேட்கிற நீங்கள் யாரை ஆராதித்து வருகிறீர்கள். ஆராதனை என்பது வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே செலுத்தப்பட வேண்டிய ஒன்று. சிருஷ்டிப்பைத் தொழுதுகொள்ளாமல் நம்மை சிருஷ்டித்த கர்த்தரை தொழுதுகொள்ளவேண்டும். அப்படி தொழுதுகொள்வீர்கள் என்றால் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்.

ஒவ்வொருநாளும் காலை எழுந்ததுமுதல் மாலை சூரியன் அஸ்தமிக்குமட்டும் வேலை செய்கிறார்கள். சிலர் ஓவர் டியூட்டி என்று கண்ணுரக்கமில்லாமல் வேலை செய்து, வாழ்க்கை என்பது ஒரு சான் வயிற்றிற்குத்தான் என்று விடாது வேலை, வேலை என்று வேலைபார்த்து, முடிவிலே தன்னையும் தன்னை உண்டாக்கின தேவனையும் மறந்து நித்திய அழிவாகிய தண்டனையை அடைகின்றனர். "மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக்கொடுப்பான்?" என்கிறார் (மத்.16:26). இன்றைக்கு அநேகருக்கு தன் ஜீவனைக் குறித்து அக்கரை இல்லை. மற்றவர்களைக் காட்டிலும் எவ்விதத்திலாகிலும் ஒரு படி உயர்ந்திருக்கவேண்டும் என்று

நினைக்கிறார்கள், இதனாலே ஆத்துமாவிற்கோ, சரீரத்திற்கோ என்ன நன்மைகிடைக்கிறது? ஒரு நன்மையுமில்லை. இதை சிந்திப்பார்இல்லை.

அன்பான வானொலி நேயரே, சகோதரனே, சகோதரியே, நீ இரட்சிக்கப்படவேண்டும். "இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" என்று நமது ஆண்டவர் சொல்கிறார் (மத்.18:14). ஆகையால் மனிதனை இரட்சிக்கும்படியாக அதாவது (காப்பாற்றும்படியாக) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்பூமிக்கு வந்தார். "மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார்". பொதுவாக ஜனங்கள் கெட்டுப்போன ஒன்றை விரும்பமாட்டார்கள். ஆனால் மனிதனை உண்டாக்கிய கர்த்தர் அவன் கெட்டுப்போகாமல் காக்கப்பட இரட்சிப்பின் வழியை வேதாகமத்தின் மூலம் கொடுத்திருக்கிறார். நான் தான் கெட்டுப்போய்விட்டேன், இனி எனக்கு எதற்கு இரட்சிப்பு என்று சொல்லாதீர்கள். புதுத்துணியில் ஒரு கறை பட்டுவிட்டால் அந்த துணியை அப்படியே தூக்கிபோட்டுவிடுகிறோமா? இல்லையே! அதை தண்ணீரால் துவைக்கிறோம். அதைப்போல உன் பாவத்தைப்போக்க இயேசுவின் பரிசுத்தமான இரத்தம் தேவை. அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல. இன்றே கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள்.

"குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ கர்த்தரால் வரும்" நீதி.21:31– ன்படி இரட்சிப்பு கர்த்தருடைய ஈவு, ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. நாம் செய்கிற நற்கிரியைகளினாலே நாம் இரட்சிக்கப்படமுடியாது. புண்ணியம் செய்தால் கோடி நன்மைகள் என்பார்கள். நன்மையுண்டாகும் உண்மைதான், அதினாலே நாம் இரட்சிக்கப்படமுடியுமா, என்றால் முடியாது. அப்படி சாத்தியப்படுமானால், இன்று உலகத்தையே விலைக்கு வாங்கிவிடுவோம் என்று தன் பணபலத்தினாலே மார்தட்டிக்கொண்டிருக்கும் வசதிபடைத்தவர்கள் பல நன்மைகளை செய்து இரட்சிப்பை சம்பாதித்து விடுவார்கள். இரட்சிப்பு என்பது தேவனுடைய இரக்கத்தினாலே வருகிறது. ஆதாம் பாவம்செய்தபோது தேவசமூகத்திலிருந்து துரத்தப்பட்டான். அதேவேளையில் இரக்கங்களின் தேவன் அவனை கிருபையாய் இரட்சிக்க சித்தமுள்ளவரானார். இந்த கிருபை உலகத்திலே இருக்கிற ஒருசாராருக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே. "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய



பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). இந்த செய்தி இன்னும் அநேகருக்குக் கிடைக்கவில்லை. கிறிஸ்தவர்களுக்கு மட்டுந்தான் கிறிஸ்துவானவர் சொந்தம் என்று நினைக்கின்றனர். அது தவறு. அன்பானவர்களே, அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர். இன்றுவரை ஒருவரும் கெட்டுப்போகாமல் மனந்திரும்பவேண்டுமென்று நீடிய பொறுமையாயிருக்கிறார். கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள். காலம் கடந்துகொண்டுபோகிறது. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொருநாளும் பலவகையில் வளர்ச்சியடைந்தாலும் அவனுடைய ஆயுள் நாட்கள் குறைந்துகொண்டே போகிறது. சென்று போனநாட்கள் திரும்பிவராது. மனிதனுடைய வாழ்நாட்கள் குறுகினது என்று பார்க்கிறோம்.

மோசே என்ற தேவனுடைய தாசன் ஜெபிக்கும்போது "எங்களுடைய ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்" என்று ஜெபித்தார் (சங்.90:10). 969 வருஷம் உயிரோடிருந்த மெத்துசலாவைப் பற்றி வேதாகமத்தில் வாசிக்கிறோம். இவ்வளவு வருஷம் உயிரோடிருந்த மனுஷனின் ஆயுசுநாட்கள் நாளடைவில் குறைந்து கொண்டே வந்து மோசேகாலத்திலே எழுபதும் பெலத்தின் மிகுதியினால் எண்பதுமாகமாறி விட்டது. இப்பொழுதெல்லாம் எந்தவயதையும் நாம் நிர்ணயிக்கமுடிய வில்லை. புல்லின் பூவைப்போல மனுஷனுடைய நாட்கள் ஒழிந்துபோகிறது, மரித்தவன் இனிதிரும்பிவரான். இனி ஒருவரும் ஒருக்காலும் காணமாட்டார்கள். மனிதனுடைய வாழ்நாட்கள் இவ்வளவு குறைந்துகொண்டே போவதால் இங்கே மனிதன் சிந்திக்கவேண்டும். நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் என்னசெய்து கொண்டிருக்கிறோம்? நாம் எங்கே போவோம் என்ற கேள்வி அவனுக்குள் எழும்பவேண்டும். ஏதோ வாழ்ந்தோம் பூமியில் ஜீவித்தோம் என்று இல்லாமல். உலகத்தில் இருக்கக்கூடிய நாட்களிலே நம்மை உண்டாக்கின ஜீவனுள்ள தேவனை அறிந்துகொண்டு அவர் மனிதனுக்கு கொடுத்த கட்டளைகளைக் கைக்கொண்டு அவருடைய திருசித்தம் செய்து அவருடைய சமுகத்திற்கு சொல்லவேண்டும். பக்தியுள்ளவனும் சாகிறான், பாவியும் சாகிறான் என்று சொல்லி நாம் மட்டும் நல்லது செய்து என்னத்தைக் காணப்போகிறோம் என்று

சொல்வோமானால் தேவனுடைய திருசித்தத்தை செய்யமுடியாது. இவ்வுலகத்திலே தேவனால் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் அதனதன் வேலையை தவறாமல் செய்கிறதை நாம் சற்று உற்றுநோக்கவேண்டும். சந்திரன், சூரியன், இன்னும் நட்சத்திரங்கள், மரம், செடி, கொடிகள், ஆகாயத்துப் பறவைகள் யாவும் தேவனை துதிக்கின்றன. அதேவேளையில் கர்த்தருடைய வேலையை அநுதினமும் தவறாமல் செய்துகொண்டே இருக்கிறது. அவைகள் அதனதன் வேலையை செய்யாமற்போனால் மனிதனுடைய நிலைமை என்னவாகும் சற்று சிந்தியுங்கள். தேவனால் படைக்கப்பட்ட இவைகள் சரியாய் செய்யும்போது அவரால் படைக்கப்பட்ட நாமும் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றவேண்டாமா?

இந்த ஜீவியத்திலே மனிதனுக்கு இரட்சிப்பின் திட்டத்தை ஏற்படுத்திய தேவனை, அவன் நினைத்து அவருடைய மெய்யான வழியிலே நடப்பானேயானால் அவன் இரட்சிக்கப்படுவான். இயேசு சொல்கிறார்: ''நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்'' என்றார் (யோவா.10:9). இயேசுவையும் அவர் ஏற்படுத்தியுள்ள மெய்யான மார்க்கத்தையும் கண்டுகொண்டு அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது இரட்சிக்கப்படுவீர்கள். வசனம் இவ்விதமாக சொல்கிறது; ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்.16:16). இன்றே நீங்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரை அறிக்கையிட்டு திருமுழுக்கு அதாவது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். இப்படி இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவருகிறார் என அப்போஸ்தலநடபடிகள் புத்தகத்திலே படிக்கிறோம். சபையானது கிறிஸ்துவின் ராஜ்யமாகவும், அவருடைய ஆளுகைக்கு உட்பட்டதுமாயிருக்கிறது. அவருடைய ஆளுகையின் கீழாக இருக்கிறவர்கள் அவரோடுகூட பரலோகத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள். இந்த இரட்சிப்பின் செய்தியைக் கேள்விப்பட்ட நீங்கள் காலதாமதம் பண்ணாமல் கிறிஸ்துவின் மூலமாக கிடைக்கிற மெய்யான இரட்சிப்பை பெற்று,



இப்பூமியிலே சந்தோஷமாக வாழ்ந்து கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**இரட்சிக்கப்படாதவர்களின் நிலை என்ன?**

இரட்சிப்பு எல்லோருக்கும் அறிவிக்கப்பட்ட ஒன்று. இந்த இரட்சிப்பை ஒருவரும் விலைகொடுத்து வாங்கிவிடமுடியாது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஆண்டவர் இயேசுவின் மூலமே இரட்சிக்கப்படமுடியும்.

இரட்சிப்பு என்பது பாவத்திலிருந்து காக்கப்படுதல். ஒருவர் தன்னுடைய பாவத்தை தானே கழுவிக்கொள்ளமுடியாது. பரிசுத்த இரத்தத்தின் மூலமாக அவருடைய பாவங்கள் கழுவப்படவேண்டும். உலகத்திலே மனிதனை மீட்கும்படியாக வந்த இயேசுவின் இரத்தம் மட்டுமே பரிசுத்தமானது. அவர் மனிதனை மீட்கும்படியாக தம்முடைய சுயஇரத்தத்தை சிந்தி மனிதனுக்கு மீட்பை ஏற்படுத்தினார். இதை நீங்கள் விசுவாசித்து ஏற்று அவருடைய உபதேசத்திற்கு கீழ்ப்படிந்தால் இரட்சிக்கபடுவீர்கள். இந்த உபதேசத்தை தள்ளி அதை ஏற்றுக்கொள்ளாதவர்களை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது அவருடைய வசனமே ஒருநாளிலே அவர்களை நியாயந்தீர்க்கும். உங்களை நாங்கள் பயப்படுத்தும்படியாக இதைச் சொல்லவில்லை. இரட்சிப்பைப் பற்றி சொல்லும் அதே வசனமே கீழ்ப்படி யாதவர்களின் நிலைமையைப் பற்றியும் சொல்கிறது.

''தேவனை அறியாதவர்களும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்தி லிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் வாசிக்கிறோம் (2தெச.1:7–10). கிடைக்கப்பெற்ற இந்த இரட்சிப்பை குறித்து கவலையற்றவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். நீங்கள் இரட்சிக்கப்பட்டவரா? அல்லது இரட்சிக்கப்படாதவரா?

# 36. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன்
# God Who Calls Those Things Which Be Not As Though They Where

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன் – God who calls those things which be not as though they where. அவர் சர்வ சிருஷ்டிகர், சர்வ வியாபி, ஒருவராலும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற தேவன். அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர் ஆலோசனை கர்த்தர், நித்திய பிதா, அவருடைய ஆண்டுகள் முடிந்துபோவ தில்லை.

இந்த தேவனை ஆபிரகாம் என்ற மனிதன் விசுவாசித்து விசுவாசிகளின் தகப்பனானான். ''தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்'' என்று ரோமர்4:17–ல் வாசிக்கிறோம். ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தோமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம் பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு கானானுக்கு அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். அதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய காணியாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது: உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார்.

''உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு



ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்'' (ரோம.4:18). விசுவாசம் என்பது காணப்படாத ஒன்றை நம்புவது அதுவே விசுவாசம். இந்த விசுவாசத்தை உடையவனாக ஆபிரகாம் இருந்தான். அநேக ஜாதிகளுக்கு தகப்பனாவதற்குரிய சாத்தியக்கூறுகள் ஒன்றுமில்லாதிருந்தும் அதை நம்பி விசுவாசித்தான். அவன் வயதானவனாயிருந்தான் ஆனால் விசுவாச விஷயத்திலோ பெலனுள்ளவனாயிருந்தான். எப்படியென்றால் ''அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்'' என்று ரோம.4:19–ல் வாசிக்கிறோம். நாம் அநேக விஷயங்களில் விசுவாச விஷயத்தில் பலவீனப்படுகிறோம். எப்படியென்றால் அது என்னால் நடக்குமா? தேவன் அதை எனக்குச் செய்வாரா?

பிரியமானவர்களே, ஆபிரகாமை இந்த இடத்தில் நன்கு கவனியுங்கள். தன் சரீரம் செத்துப்போனதையும், அவனுடைய மனைவியின் கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். மகிமையின் தேவன், வல்லமையின் தேவன், தம்மோடு இருக்கிறார் என்ற அசையாத நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. இந்த நம்பிக்கை உங்களுக்குள்ளும் இருக்கவேண்டும். இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன், ஒரு முறை எசேக்கியேல் தீர்க்கதரிசியை அழைத்து எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்குக்கு கொண்டு சென்று ''மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்ற கேட்டார்;'' (எசே.37:3). அதற்கு அவன்; கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றான். அவனைப் பார்த்து நீ இந்த எலும்புகளைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்துவந்து, கொலையுண்ட இவர்கள்மேல் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்று சொன்னவுடன், எசேக்கியேல் தனக்கு கற்பிக்கப்பட்டபடி தீர்க்கதரிசனம் உரைத்தான். அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள். அன்பானவர்களே உலர்ந்த எலும்புகள் இங்கு உயிரடைந்து பெரிய சேனையாய் நின்றது. ''மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்'' (லூக்.18:27).

**ஆபிரகாமுடைய விசுவாசத்தில் நாம் கற்றுக்கொள்ளும் மற்றொருகாரியம்** ''தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன்

அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்'' (ரோம.4:20,21). வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவர் என்று கடுகளவும் சந்தேகப்படாமல் விசுவாசித்தான். இன்றைக்கு கர்த்தரை விசுவாசிக்கிற நாம் இந்த விதமான முழு நிச்சயமுடையவர்களாக இருக்கிறோமா? காலம் கடக்க கடக்க நம்முடைய விசுவாசம் சோர்ந்து போகிறது. ஆபிரகாமோ, வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் அதை தன்னுடைய வாழ்க்கையிலே நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தினான். அப்படியென்றால், அவன் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் முன்பே தேவனை மகிமைப்படுத்து கிறவனாயிருந்தான். இன்று நாம் பெற்றுக்கொண்டால்தான் கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம். ஏன்! எல்லோருமே அப்படித்தான். ஆபிரகாமோ ''தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை'' (லூக்.1:37) என்ற திருவசனத்தின்படி அவருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் முழு நிச்சயமாய் நம்பி விசுவாசத்தில் வல்லவனானான்.

ஆபிரகாம் விசுவாச விஷயத்தில் வல்லவனாக இருந்தபடியால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. இன்று நீங்களும் ஆபிரகாமைப்போல பிதாவாகிய தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கும்போது எல்லையில்லா சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடைவீர்கள். இப்படிப்பட்ட ஜீவனுள்ள தேவனை நம்புவதைவிட்டு விட்டு இன்று இருந்து நாளை அடுப்பிலே போடப்படும் அழிந்துபோகக்கூடியவைகளை நாம் நம்புவோமானால் நம்முடைய நம்பிக்கை வீணாகிவிடும். தேவன் ஆவியாயிருக்கிறார் அவரை நாம் காணமுடியாது. கண்டு ஒருவரும் உயிரோடிருக்கமுடியாது. அப்படிப்பட்ட காணாத தேவனை நாம் விசுவாசகண்களால் மட்டுமே காண முடியும். காணாததை நம்புவதே விசுவாசம். ஆபிரகாம் காணாததை நம்பினான். அதாவது இவ்வளவு பெரிய உலகத்தை தேவன் உண்டாக்கினார் என்று விசுவாசித்தான்.

''அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காகமாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற



நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்'' (ரோம.4:23–25). ஆபிரகாம் விசுவாசித்த அந்த தேவனை நீங்களும் விசுவாசிப்பீர்கள் என்றால், ஆபிரகாமின் மூலமாக விசுவாசத்தின் பிள்ளைகளாக மாற்றப்படுவீர்கள். நீங்கள் நீதிமான்களாக்கப் படுவதற்காக இயேசு உங்களுடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும் எழுப்பப்பட்டும் இருக்கிறார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

''கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?'' என்று ஆதி.18:14–ல் தேவதூதன் ஆபிரகாமைப்பார்த்து சொன்னான். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே தேவனால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். ஆதியிலே தேவன் ஒன்றுமில்லாதிருக்கும்போது முதலாவது ''தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று'' (ஆதி.1:3). இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவர் இவைகளை உண்டாக்கினார். இப்படியே ஆறுநாளும் தேவன் வானத்தையும் சகலத்தையும் படைத்தார் என நாம் ஆதியாகம புத்தகத்திலே வாசிக்கலாம். மரித்துப்போனவர்களை நாம் திரும்ப பெறமுடியாது. அவர்கள் உலகத்திலே இல்லாது போகிறார்கள். ஆனால் மரித்துப்போன லாசருவை ஆண்டவராகிய இயேசு எழுப்பினார். இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல, உலகம் அறிந்த உண்மை. அன்று இருந்த யூத ஜனங்களும் புறஜாதிகளும் அதை விசுவாசித்தனர். இந்த விதமான அற்புதத்தை ஒருவரும் இதுவரை செய்யவில்லை என்று சொல்லி இயேசுகிறிஸ்துவிடம் விசுவாசம் வைத்தனர். அவர் லாசருவை எழுப்பப்போகும்போது மார்த்தாள் அவன் செத்து நாலுநாளாகிவிட்டதே நாறுமே என்றாள். இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார். இன்றைக்கும் அநேகருக்கு இப்படிப்பட்டதான கேள்விகள் தான் எழும்புகிறது. மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கினவருக்கு எதை எப்படிவேண்டுமானாலும் செய்ய முடியும். பிரியமானவர்களே, இன்று தேவனை விசுவாசிப்பீர்கள் என்றால் நீங்களும் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

இந்த செய்தியின் மூலமாக விசுவாசத்தின் பிள்ளைகளாக மாற்றப்பட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய விசுவாசம்

ஆபிரகாமுடைய விசுவாசத்தைப்போல வளர்ந்து பெருகட்டும். விசுவாசமில்லாமலும் பரிசுத்தமில்லாமலும் ஒருவரும் கர்த்தரை தரிசிக்க முடியாது. பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன என வேதம் போதிக்கிறது. அவைகளைப்போல விசுவாசித்தால் போதாது. இன்று அநேகர் நாங்களும் விசுவாசிக்கிறோம் என்று சொல்லுகின்றனர். ஆனால் அவர்களுடைய விசுவாசம் இப்படிப்பட்டதாக இருக்கிறது. ஆபிரகாமினுடைய விசுவாசத்தை நாம் என்று பெற்றுக்கொள்கிறோமோ, அப்பொழுதுதான் நாம் விசுவாசத்தின் பிள்ளைகளாக மாற்றப்படுகிறோம். கர்த்தரை முழுவதும் நம்புங்கள், முழுஇருதயத்தோடும் முழுபெலத்தோடும் முழுமனதோடும் அவரை ஏற்றுக்கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள். அப்பொழுது, ''இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' என்று சொன்ன கர்த்தர் உங்களோடு இருப்பாராக!

**கேள்வி நேரம்**

**தேவன் எங்கு இருக்கிறார்?**

இன்றைக்கு அநேகருக்கு இந்த கேள்வி எழும்புகிறது. ''தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை, நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பு நமக்குள் பூரணப்படும்'' என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.4:12). இச்செய்தியை கேட்கிற அன்பு நேயரே, தேவன் பரலோகத்தில் இருக்கிறார். பூமியிலே அன்பு எங்கிருக்கிறதோ அங்கே தேவன் அவர்களோடு உலாவுகிறார். தேவன் அன்பாகவே இருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருள்இல்லை. அவர் பரிசுத்தர். ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்கிறவர். மனிதன் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவன். பாவம் அவனுக்குள் வந்தபடியால் தேவசாயலை இழந்தான். மீண்டும் அவனை அவருடைய சாயலில் உருவாக்க வந்தவர்தான் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. தேவன் இருக்கிற இடத்திற்கு நம்மை அழைத்து செல்ல மீண்டும் வரப்போகிறார். அவர் வருகைக்குள்ளாக நீங்கள் ஆண்டவரையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்று கீழ்ப்படிவீர்கள் என்றால் உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். நீங்கள் ஆண்டவர் இயேசுவோடு பரலோகத்திற்கு கொண்டு செல்லப்படுவீர்கள். இந்த மாபெரும் பாக்கியத்தை பெற்றுக்கொள்ள இதோ அருமையான தருணம் இதைப்பயண் படுத்திக்கொண்டு இரட்சிப்பின் வழி செல்லுங்கள். ஜெபிக்கிறோம்.



# 37. கிறிஸ்துவுக்குள் வெற்றி
# Triumph In Christ

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வெற்றியைக் கொடுக்கும் உன்னதர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் வெற்றி – Triumph in Christ. ஒருவனுக்கு வெற்றி பல வழிகளில் வருகிறது. அவையெல்லாம் உண்மையான வெற்றி ஆகாது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் பெறுகிற வெற்றியே மிகசிறப்பானதும் ஆசீர்வாதமானதுமாகும். ஒருவர் கிறிஸ்துவுக்குள் பெறும் வெற்றி அந்த மனிதரை நித்தியராஜ்யத்திற்கு அழைத்துச் செல்கிறது. மாம்ச சம்பந்தமான வெற்றியோ புல்லின் பூவைப்போல ஒரு நாள் அழிந்து போகக்கூடியது. இந்த வெற்றிக்காக ஒவ்வொருநாளும் மனிதன் தன் முழு முயற்சியோடு போராடுகிறான். இதில் பல வன்முறை சம்பவங்களும் நடக்கிறது. ஒருவன் முன்னேறுவதற்காக மற்றொருவனை கீழே தள்ளுகிறான் அல்லது அவனை அழிக்க முற்படுகிறான். இதற்கு காரணம் என்ன? என்று நாம் தியானிக்கும்போது, மனிதனுக்குள் ஏற்படும் பொறாமையே காரணமாக அமைகிறது. ஆனால் கிறிஸ்துவுக்குள் வரும் வெற்றி அவரால் கிடைக்கும் ஆசீர்வாதம். இது மற்றவர்களை வீழ்த்தி பெறக்கூடிய வெற்றியல்ல. கர்த்தருடைய கட்டளைகளின் படியும், அவருடைய உபதேசத்தின்படியும் நடப்பதால் கிடைக்கும் வெற்றி. இந்த வெற்றியை கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது ''கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' என்று எழுதுகிறார் (2கொரி. 2:14). இந்த பவுல் புதிய ஏற்பாட்டில் 14 நிருபங்களை எழுதியிருக்கிறார். ''எருசலேம் துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்'' என்கிறார் (ரோ.15:19). இவரை கர்த்தர் பிரித்தெடுத்து தம்முடைய ராஜ்யமாகிய சபையில் பயன்படுத்தினார். இவர் கிறிஸ்துவுக்குள் வரும்முன்னே சபையையும் அந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி சிறைச்சாலைகளில் ஒப்புவித்து

மரணபரியந்தம் துன்பப்படுத்துகிறவராயும் இருந்தார். அப்போது கிடைக்காத வெற்றியுள்ள வாழ்க்கை இவருக்கு கிறிஸ்துவுக்குள் வந்த பின்பு கிடைத்தது. ஆகையால் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தார். இந்த பவுலை தேவன் எல்லா இடங்களிலும் கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்கப் பண்ணினார்.

ஒரு முறை குறி சொல்லும் ஆவியைக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ பவுலைத் தொடர்ந்து வந்து இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேக நாள் செய்து கொண்டு வருவதை கண்ட பவுல் சினங்கொண்டு நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொல்ல அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று இதனால் அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயம் அற்றுப் போயிற்று என்று கண்டு பவுலையும் சீலாவையும் பிடித்து அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து இந்த யூத மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம் பண்ணி ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அனுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்று சொல்லி அவர்களை அடிக்கவும் வஸ்திரங்களை கிழித்துப்போடவும் சொல்லி அநேக அடிகள் அடித்த பின்பு சிறைச்சாலையில் அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டிவைத்தார்கள். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப்பாடினார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திரபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று கர்த்தர் இப்படியாக அவர்களை விடுதலை செய்தார். பொழுது விடிந்த பின்பு அந்த மனுஷரை விட்டு விடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள் சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள். ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டுச் சமாதானத்துடனே போங்கள் என்றான். அதற்குப் பவுல் ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலேபோட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும் என்றனர். சேவகர் இந்த



வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள் ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்து அவர்களுடனே தயவாய்ப்பேசி அவர்களை வெளியே அழைத்துக்கொண்டு போய் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள். இப்படியாக கர்த்தர் பவுலைக் கொண்டு பெரிய காரியங்களை செய்தார்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்ற தைரியத்தோடு நாமும் இந்த பவுலைப்போல செயல்படுவோமானால், நம்மையும்கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்கப்பண்ணுவார். கிறிஸ்துவுக்குள் என்று சொல்லும்போது "ஒருவன் கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" (2கொ.5:17). ஆனபடியால் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது அவன் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். அவனுடைய பழைய சுபாவங்கள் ஒழிந்துபோகிறது எல்லாம் புதிதாகிறது பழைய வாழ்க்கை மாற்றப்படுகிறது. கிறிஸ்துவின் சபையை துன்பப்படுத்திக்கொண்டுவந்த சவுல், அனனியா மூலமாக ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குள் புதிய மனுஷனாக, பவுலாக அதாவது புதிய சிருஷ்டியாக மாற்றப்பட்டார். அன்பானவர்களே, நீங்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறீர்களா? பழைய மனிதனாக நீங்கள் இருந்துகொண்டு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியாது. கர்த்தர் பவுலை கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்கப்பண்ணினார். உங்களையும் வெற்றி சிறக்கப்பண்ணுவார். நீங்கள் முதலாவது ஞானஸ்நானத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக மாற முற்படுங்கள். லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து ஒருபோதும் நடவாமல் கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான் அவனைப் பவுல் உற்றுப்பார்த்து இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். இதைக்கண்ட ஜனங்கள் தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச்சொல்லி பர்னபாவை **யூப்பித்தர்** என்றும் பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை **மெர்க்குரி** என்றும் சொன்னார்கள். இப்படியாக கர்த்தர் அவர்களை வெற்றிசிறக்கப்பண்ணினார். மேலும் அந்தியோகியாவிலும்

இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து ஜனங்களுக்குப் போதனைசெய்து பவுலைக் கல்லெறிந்து அவன் மரித்துப்போனானென்று எண்ணி அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கையில் அவன் எழுந்து பட்டணத்திற்குள் பிரவேசித்து மறுநாளில் பர்னபாவுடனே கூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான். நான் அனுதினமும் சாகிறேன் என்று பவுல்சொன்னார் என்றால் வெறும் வார்த்தைகளோடு நின்று விடவில்லை தன்னுடைய வாழ்க்கையில் வந்த துன்பங்களை அந்த விதமாக அனுபவித்திருக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையிலே நாம் வெற்றி சிறக்க வேண்டுமானால் நமக்கு வரக்கூடிய பாடுகளை நாம் அனுபவித்தே ஆக வேண்டும். ''நாம் அவரோடே கூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்'' என்று 2தீமோ.2:11,12–ல் வாசிக்கிறோம். பந்தயத்திலே போராடுகிற எல்லாரும் பந்தயப் பொருளைப் பெற்று வெற்றியடைகிறார்களா? இல்லையே! கடுமையான பயிற்சி எடுத்து பந்தயத்திலே வெற்றியடைகிறார்கள். அதைப்போல கிறிஸ்துவுக்குள் வந்த நமக்கு பலவழிகளில் பாடுகள் வரும், இவைகளைப் பொறுமையுடன் சகித்து அந்தப் பாடுகளை ஏற்று பரம கானானை நோக்கி வெற்றி நடைபோடவேண்டும். ஆதி அப்போஸ்தலர்களும் சீஷர்களும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பாடுகளை அதாவது உபத்திரவத்தை கண்டு பயப்படவில்லை, அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டனர். ''அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப்புறப்பட்டுப்போய் தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (அப்.5:41,42).

இஸ்ரவேலர்களைப் பாருங்கள்: எரிகோ பட்டணத்தை ஒவ்வொருநாளும் ஒருமுறை சுற்றி வந்து, பின்பு ஏழாம்நாளில் ஏழுதரம் சுற்றிவந்து, எக்காளங்களை ஊதி ஆர்ப்பரித்து எரிகோவை வெற்றி கொண்டார்கள். நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த அவர்கள் இப்படிப்பட்ட வெற்றிகளை கர்த்தருடைய நாமத்தினாலே குவித்திருக்கும்போது அதிலும் சிறந்த கிறிஸ்துவின் ஊழியம் அதைப்பார்க்கிலும் மேன்மையுள்ளதல்லவா? ''இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு



உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்கு முன்பாக மகிமைப்பட்டதல்ல அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால் மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்'' என்கிறார் பவுல் (2கொ.3:10,11). ஆக புது உடன்படிக்கையின் கீழ் அதாவது கிறிஸ்துவுக்குள் வருகிற மேன்மையான வெற்றி நித்திய ஜீவனைக்கொடுக்கிறது. இவ்வெற்றியை நீங்கள் பெற வேண்டுமானால் உங்களை முதலாவது கர்த்தருக்கு அர்ப்பணித்து கர்த்தருக்குள் வரப் பிரயாசப்படுங்கள் ''தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே'' (2கொ.1:20) கர்த்தர் வெற்றியுள்ள வாழ்க்கையை உங்களுக்கு கட்டளையிடுவாராக.

**கேள்வி நேரம்**

**வெற்றி தோல்வி எல்லோருக்குமே வருமா?**

பொதுவாக வெற்றி தோல்வி என்பது எல்லோருக்குமே வரக்கூடிய ஒன்றுதான். தோல்வியே இல்லாமல் ஒருவர் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. எல்லாவற்றிலும் ஒருவர் வெற்றி பெற்றுவிட முடியாது. ஏதாவது ஒன்றில் தோல்வியை தழுவியே ஆகவேண்டும். இது மனிதன் தன்னை உயர்த்தாதபடி அவனுக்கு கொடுக்கப்பட்ட ஒன்று. இந்த இடத்திலே நாம் ஒவ்வொருவரும் மண்ணென்று நினைவுகூரவேண்டும். ஆனால் வேதம் சொல்லுகிறது; ''நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்'' என்று (நீதிமொழிகள்24:16). நீதிமான்களுக்கு தோல்வி வரும். இருந்தபோதும் அதற்கு தப்பிக்கொள்ளும்படியான ஒருபோக்கை கர்த்தர் உண்டுபண்ணு கிறார். நீதிமான்களுக்கு அநேக உபத்திரவங்கள் வரும். ஆனாலும் அவர்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். ஒரு நாளும் அவர்கள் வெட்கப்பட்டுப்போவதில்லை. அவர்கள் கர்த்தரையே நம்பியிருக்கிறபடியால் அவர்களுடைய தேவன் அவர்களை எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி அவர்களை இரட்சிப்பார்.

**"நல்யோசனைசெய்து யுத்தம்பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்" நீதிமொழிகள் 24:6**

## 38. எங்களுக்கு என்ன கிடைக்கும்?
## What Shall We Have?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நித்திய ஜீவனைக்கொடுக்கும் இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இயேசுவை பின்பற்றினால் என்ன கிடைக்கும்– What shall we have? என்று கேட்கிற அநேகரை குறித்து கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு தகப்பனை பின்தொடருகிற மகனுக்கு என்ன கிடைக்கும், தகப்பன்விட்டு சென்ற ஆஸ்தி கிடைக்கும். அதைப்போல ஒரு கம்பெனியில் வேலை செய்கிறவருக்கு அனுதினபடி கிடைக்கும். இப்படியே நாம் பார்ப்போமானால் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவருக்கும் அதனதனுக்குரிய பலன் கிடைத்துக்கொண்டே இருக்கிறது. பன்னிரெண்டு சீஷர்களிலே ஒருவனாகிய பேதுருவை நீங்கள் அறிவீர்கள். மற்ற சீஷர்களைப் பார்க்கிலும் ஆண்டவரிடத்தில் கேள்வி கேட்பதில் முந்தினவனாக இருந்தான். அவன் இயேசுவை நோக்கி; "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும்" என்றான் (மத்.19:27). இவன் இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால்; அவர்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது இயேசு அவர்களைக் கண்டு, அவர்களை ஊழியத்திற்கு அழைத்தார். அப்பொழுது உடனே அவர்கள் படவையும், தங்கள் தகப்பனையும் விட்டு இயேசுவுக்குப்பின் சென்றார்கள். இயேசுவோ, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார் (மத்.16:24). இயேசுவை பின்பற்ற விரும்புகிறவன் முதலாவது தன்னைத்தான் வெறுக்க வேண்டும். தன்னை ஒரு பொருட்டென்று ஒருவன் எண்ணுவானேயாகில் அவன் இயேசுவை பின் தொடர்வது மிகக்கடினமாகத்தோன்றும். அவரவருடைய பாடுகளோடு இயேசுவை பின்பற்ற வேண்டும். அன்பானவர்களே, நீங்கள் எவ்விதமாக இயேசுவை பற்றிக் கொண்டிருக்கிறீர்கள்? இயேசுவே உங்களுடைய நேசராக இருக்கட்டும். "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன்



அல்ல" என்கிறார் (மத்.10:37) உங்களுடைய நேசம் யார் மீது இருக்கிறது? அல்லது எதன் மீது இருக்கிறது? இன்றைக்கு வளர்ப்பு பிராணியாகிய நாய் மீது தங்ளுடைய நேசத்தை வைக்கிறார்கள். பூமியில் உள்ளவைகளை ஆண்டுகொள்ளுங்கள் என்று ஆதிபிதாக்களை தேவன் ஆசீர்வதித்தார். இது பூமியின் முடிவுமட்டும் நிலைக்கக்கூடிய ஆசீர்வாதமாக இருக்கிறது. இப்படி ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் தன்னுடைய நேசரை, அதாவது தன்னை சிருஷ்டித்த மெய்யான தேவனை மறந்து, அவரால் உண்டாக்கப்பட்ட பொருட்களையும், மற்றும் அவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கிற விலங்குகளையும், பறவைகளையும் நேசிப்பானேயானால் அவனுடைய நேசம் வீணாய்போய்விடும். குடும்பமும் அந்தவிதமாக ஒவ்வொருவருக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. அந்த குடும்பத்தின் மீது நம்முடைய முழுநேசத்தையும் வைப்போமானால் நாம் ஆண்டவருக்குப் பிரியமானவர்களல்ல. அவரிலும் அதிகமான நேசத்தை, உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் வைக்கக்கூடாது. இப்படி இருப்பீர்கள் என்றால், தேவன் உங்களோடு பிரியமாயிரார். நீங்களும் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் ஆசீர்வாதத்தை அறியாதுபோய்விடுவீர்கள்.

"கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்றார் (லூக்.9:62). ராஜ்யமானது நம்பிக்கைக்குரிய ஒன்று. எப்படி நிலத்தை உழவு செய்யப்போகிறவன் நம்பிக்கையோடே உழவு செய்யும்படியாக தன் கலப்பையின்மேல் கையை வைத்து பின்னிட்டுப்பாராது உழவு செய்வானோ, அதைப்போல ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் பின்னிட்டுப்பாராது அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடந்து செயல்படவேண்டும். லோத்தின் குடும்பம் அழிவிலிருந்து தப்பிக்கொள்ளும்படியாக அழைக்கப்பட்டபோது அவனுடைய மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். அழிவுக்கு தப்பிக்கொள்ளும்படியாக அழைக்கப்பட்ட இவளோ அவிசுவாசத்தினாலும், தன்னுடைய இருதயம் சோதோமின் மேல் இருந்தபடியினால் பின்னிட்டுப் பார்த்தாள். அன்பானவர்களே, இப்படி பின்னிட்டு பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல என்கிறார். கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தை குறித்து கர்த்தர் சொல்லும்போது அவளுடைய விசுவாசம் பெரிது என்றார். "தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என் மகள் பிசாசினாள் கொடிய வேதனைப்படுகிறாள் என்று

சொல்லிக்கூப்பிட்டாள். அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து இவள் நம்மைப் பின் தொடர்ந்து கூப்பிடுகிறாளே இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றபடியல்ல என்றார். அவள் வந்து; ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். அவர் அவளை நோக்கி பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். அதற்கு அவள் மெய்தான் ஆண்டவரே ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்'' (மத்.15:22–28).

இந்த கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தை பாருங்கள்; இயேசுவை விடாது பற்றிக்கொண்டு பின் தொடர்ந்து ஆண்டவரிடத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றாள். எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று சொன்ன சீஷர்களைப்பார்த்து கர்த்தர்: ''மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது என்னை பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான். ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்'' என்றார் (மத்.19:28–30). ஆண்டவர் வானத்திலும் பூமியிலும் அதிகாரம் பெற்றதுபோல மறுஜென்ம காலத்திலே தம்மை பூரணமாய் பின்பற்றி வந்தவர்களை சிங்காசனங்களின்மேல் உட்காரவைக்கவும், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தை கொடுக்கவும் அறிந்திருக்கிறார். மேலும் இம்மையிலே அவருடைய நாமத்தின் நிமித்தம் இழந்தவர்கள் எவர்களோ அப்படிப்பட்டவர்கள், நூறத்தனையாக பெற்று நிலையான ஆசீர்வாதமாகிய நித்திய ஜீவனையும் பெறுவார்கள்.



வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் உள்ள ஏழு சபைகளைக் குறித்து நாம் வாசிக்கும்போது ஏழு சபைகளுக்கும் ஏழுவிதமான ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். **எபேசு சபைக்கு எழுதும்போது:** ''ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பதாகவும்'' **சிமிர்னா சபைக்கு எழுதும்போது;** ''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத்தருவேன் ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன், ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை'' என்றும், **பெர்கமு சபைக்கு எழுதும்போது;** ''ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவ னேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்'' என்றும்,

**தீயத்தீரா சபைக்கு எழுதும்போது** ''ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான் அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்றும், **சர்தை சபைக்கு எழுதும்போது;** ''ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல் என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்'' என்றும், **பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது,** ''ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன் அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்'' என்றும், **கடைசியாக லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது** ''நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட

உட்கார்ந்ததுபோல ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்'' என்றும் எழுதுகிறார். இத்தனை ஆசீர்வாதங்களை நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கும் போது, வேறு என்ன வேண்டும்?

இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே அப்போஸ்தலர்களைப்போல எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று சொல்லுகிறீர்களா? இதோ இவ்விதமான ஆசீர்வாதங்களை நமக்காக வைத்து வைத்திருக்கிறார். ஆனால் ஒன்று ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத்தான் இத்தனை ஆசீர்வாதங்களும்கிடைக்கும். இன்றே இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக உங்களுடைய ஜீவியத்தை மாற்றி அமைத்துக்கொண்டு, ஆண்டவர் இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தை ஜெயித்ததுபோல நீங்களும் உங்களுக்கு வரக்கூடிய பாடுகள், பிரச்சனைகள், பிசாசின் தந்திரங்களுக்கு விலகி உங்களை காத்து பொறுமையுடன் பலன் கொடுங்கள் வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராக இருக்கிறார். அவரையும் அவருடைய வசனங்களையும் பற்றிக்கொள்ளும் போது நூறத்தனையான ஆசீர்வாதங்களைப் பெற்று, நித்தியஜீவனையும் பெறுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**அநேக ஆஸ்தி ஒருவனுக்கு ஜீவனைக் கொடுக்குமா?**

இயேசு சொல்கிறார்: ''பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல'' என்றார் (லூக்.12:15). அழிந்துபோகக்கூடிய இந்த உலக ஆஸ்தியை இன்றைய மானிடவர்க்கத்தினர் பிடித்துக்கொண்டிருக்கின்றனர். இது ஒருவனுக்கு ஜீவனைக்கொடுக்காது என்று எச்சரித்துப் புத்திசொல்லியிருக்கிறார். ஆகையால், வானமும் பூமியும் அழிந்துபோனாலும், அழிந்து போகாத அவருடைய வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு ஆசீர்வதிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"ஐசுவரியவானாகவேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே" நீதிமொழிகள் 23:4**



# 39. ஒத்தவேஷந்தரியாதிருங்கள் Do Not Be Conformed

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒத்த வேஷந்தரியாதிருங்கள் - Do not be conformed. அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்'' என்று எழுதியுள்ளார் (ரோம.12:2). ஒத்த வேஷம் என்று சொல்லும்போது இவ்வுலகத்திற்கு ஏற்றாற்போல தங்களை மாற்றிக் கொள்வது. இங்கே நாம் நினைவுகூரவேண்டிய ஒரு வசனம், ''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்'' (கொலோ.1:13). முழுவதும் பாவத்திலிருந்த நம்மை, அந்த அதிகாரத்தினின்று அதாவது இப்பிரபஞ்சத்தின் அதிகாரியாகிய பிசாசானவனுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபைக்குள் பிரவேசிக்க செய்த நம் பரமபிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாக இருக்கிறோம். இப்படி நம்மை இப்பிரபஞ்சத்திலிருந்து விடுவித்த கர்த்தரை மறந்து உலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கலாமா? எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உன் வாழ்வில் கர்த்தர் கொடுக்க அறிந்திருக்கிறார். ஆகையால் நீங்கள் ஒவ்வொரு நாளும் மறுரூபமாகுங்கள்.

அப்போஸ்தலனாகிய பேதுரு முதல் நூற்றாண்டு காலத்திலே முதல் பிரசங்கியார். அவனுடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவர்கள் ஏறக்குறைய மூவாயிரம்பேர். அவர்கள் அன்றையதினம் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இப்படி வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட பேதுரு மாய்மாலம் பண்ணினதை கலாத்தியர் புஸ்தகத்திலே வாசிக்கிறோம். ''எப்படியெனில் யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ,

விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப்பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூத முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்?'' என பவுல் வினவுகிறார் (கலா.2:12–14). அன்பானவர்களே, இன்றைக்கு இருக்கிற கிறிஸ்தவர்களில் பலர் இவ்விதமாக மாயம்பண்ணுகிறார்கள். கிறிஸ்தவர்களோடு ஒருவிதமான பழக்கவழக்கங்களும், மற்றமக்களோடு வேறுவிதமான பழக்கவழக்கங்களோடும் பழகிவருகின்றனர். இது மாய்மாலத்தையும், இவ்வுலகத்திற்கேற்ற வேஷத்தையும் வெளிப்படுத்துகிறது. ஒரு சபையில் உள்ள மூப்பரை நான் அறிவேன். அவர் வேலை கிடைப்பதற்காக புறஜாதிபெயரை வைத்துக்கொண்டு வேலை வாங்கி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வேலை பார்த்தார். ஆனால் சபையின் மத்தியிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும், அவர் கிறிஸ்தவபெயரை வைத்துக்கொண்டு அழைக்கப்பட்டார். அவர் ஒரு சபைக்கு மூப்பராகவும் இருந்தார். இது எப்பேர்பட்ட வேஷம் பார்த்தீர்களா? இவ்விதமான ஒத்த வேஷம் தரியாதிருங்கள் என்று பவுல் எழுதுகிறார்.

பெண்களுக்கு இருக்கவேண்டிய அலங்கரிப்பைக்குறித்து பேதுரு எழுதும்போது: ''மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது: அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்'' (1பேது.3:3–5). இந்த விதமான அலங்கரிப்புக்கு இன்றைய கிறிஸ்தவ பெண்களில் அதிகமானபேர் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. தங்களைக் காட்டிலும் மற்றவர்கள் சிறப்பாக உடுத்தி விடக்கூடாது என்று நினைத்து உயர்வான வஸ்திரங்களை போட்டியிட்டுக்கொண்டு உடுத்துகிறார்கள். இது எதைக் காட்டுகிறது



புறம்பான அலங்கரிப்பைக் காட்டுகிறது. இவ்விதமான புறம்பான அலங்கரிப்பு பக்திவிருத்தியை உருவாக்காது. மாறாக பொறாமையையே உருவாக்கும். வேத வசனம் சொல்லுகிறதான அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது. ''மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது'' என பேதுரு தமது நிருபத்தில் எழுதுகிறார் (1பேது.1:24). மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டான் ஆகையால் மண்ணுக்கே திரும்புவான். அவனுடைய மாம்சமெல்லாம் புல்லைப்போல காய்ந்து ஒன்றுமில்லாமற்போகிறது. அந்தப்படியே அவனுடைய மகிமையெல்லாம் அதாவது பட்டம், பதவி மற்றும் அவனது பெருமைக்குரியதெல்லாம் புல்லின்பூவைப்போலவும் ஒழிந்துபோகிறது. புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது என்ற வசனத்தின்படியே அவையெல்லாம் ஒன்றுமில்லாமற்போகிறது. ''தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பப்போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு போவதில்லை'' (பிர.5:15). இப்படியிருக்க புறம்பான அலங்கரிப்பு எதற்கு? அன்பான சகோதரிகளே, சற்று சிந்தியுங்கள். சாராளைப்போல கீழ்ப்படிதலுள்ள அலங்கரிப்பைத் தரித்துக்கொள்ளுங்கள். ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' (1பேது.2:9). இப்பேர்பட்ட அழைப்பைப் பெற்ற கிறிஸ்தவ பெண்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? இதை ஒவ்வொருநாளும் நினைத்து மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படவேண்டும். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர் என்பதை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று எப்படிப் பகுத்தறிவது? பவுல் அந்த அதிகாரத்தில் பின்னுள்ள வசனங்களில் தெளிவுபடுத்துகிறார். ''ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன்

புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். **உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக.** தீமையைவெறுத்து, நன்மையைப்பற்றிக் கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்... கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு'' (ரோம.12:7–21). இவையெல்லாம் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவீர்களென்றால் இவைகளைக் கைக்கொள்ளவேண்டும். செய்வீர்களா? செய்தால் உங்கள் மனம் புதிதாகி, மறுரூபப்படுவீர்கள்.

நீங்கள் மறுரூபப்பட பழையவைகள் சாகவேண்டும் அல்லது களையப்பட வேண்டும். ‘‘தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்'' என்கிறார் பவுல் (கலா.2:19,20). நீங்களும் அந்தப்படியே கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டவர்களாக இருக்கிறீர்களா? அப்படி அறையப் பட்டவர்களாக இருப்பீர்களென்றால், உங்களுக்குள்ளே கிறிஸ்துவே வாசம் செய்யவேண்டும். பழையவைகள் ஒழிந்து போயிருக்கவேண்டும். ‘‘அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய



சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்'' (எபே.4:22–24)

அன்பான சகோதரனே சகோதரியே, உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய சித்தம் இன்னதென்பதை வேதவாக் கியங்களுடன் பகுத்து ஆராய்ந்து அறிந்து, ஒவ்வொருநாளும் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழ உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் உங்களோடிருந்து பெரிய காரியங்களைச் செய்வாராக!.

**கேள்வி நேரம்**

**உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிப்பவர்களோடு ஐக்கியம் கொள்ளலாமா?**

கூடாது என்று பரிசுத்த வேதம் போதிக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில் படிக்கிறோம். ‘‘தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர் களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு'' (2தீமோ.3:5). வேஷம் போடுகிறவர்கள் விஷம் போன்றவர்கள். அவர்களோடு எவ்விதத்திலும் நாம் கலந்திருக்கக்கூடாது. ஏனெனில், அவர்கள் தங்களுக்கு கேடுவரத்தக்கதாக ஆண்டவரை மறுதலித்து தீவிரமான அழிவை வருவித்துக்கொள்வார்கள். தேவன் அவர்களுக்காக வைத்திருக்கிற கேபாக்கினையின் பாத்திரத்தில் பங்கடைவார்கள். நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? என்ற வசனத்தின்படி அவர்களுக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கும் ஒருக்காலும் ஐக்கியமில்லை. அப்படியிருக்கும்போது சிலர் அப்படிப்பட்டவர்களோடு ஐக்கியம் கொள்ளுகிறார்கள். திருமணத்தில் மற்றும் தங்களுடைய தொழிலில் ஐக்கியம் கொள்ளுகிறார்கள். இப்படி ஐக்கியம் கொள்ளுகிறவர்கள், நாளடைவில் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதில்லை. தங்களை இரட்சித்த ஆண்டவரை மறுதலித்து தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்கிறார்கள். நீங்கள் தேவ மக்களோடு ஐக்கியம் கொண்டு தேவனால் ஆசீர்வதிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே; அவர்களோடே இருக்கவும் விரும்பாதே" – நீதிமொழிகள்24:1**

# 40. நல்லது
# Good

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவரையும் நல்வழி நடத்தும் நல்லவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நல்லது – Good. வாழ்க்கையில் நல்லது நடைபெறவேண்டுமென்று நினைக்கிறோம். அதற்கு நாம் சில காரியங்களை செய்யவேண்டியுள்ளது அவைகளைக்குறித்து இச்செய்தியின் மூலமாக தியானிப்போம். எரேமியா தன்னுடைய புலம்பல் புத்தகத்திலே “கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது” என்கிறார் (புல.3:26). காத்திருப்பது என்பது அநேகருக்கு கசப்பாகத் தோன்றும். பிரியமானவர்களே, காத்திராமல் நாம் எதையும் பெறமுடியாது. எடுத்துக்காட்டாக பாருங்கள் நிலத்தில் ஏதோ ஒன்றை விதைக்கிறோம், அது பலன் கொடுக்கும்வரை காத்திருக்கிறோம். இப்படி அநேக விஷயங்களுக்காக காத்திருக்கிறோம். நாம் இரட்சிக்கப்படும்படிக்கு நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டுமா? ஆம், காத்து தான் இருக்கவேண்டும். நான் ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு இரட்சிக்கப்பட்டு விட்டேன் இன்னும் நான் ஏன் காத்திருக்கவேண்டும் என்ற கேள்வி உங்கள் மனதில் எழும்பும். “முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்” என்ற வசனத்தை இங்கு நினைவுபடுத்திப்பாருங்கள்.

இரட்சிப்பு என்பது ஒருமுறை கர்த்தரால் கிடைக்கக்கூடிய ஈவு அதை முடிவுபரியந்தமும் காத்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையல்லவா? அப்படி காத்துக்கொள்ளாதிருப்போமானால் இரட்சிப்பை இழக்க நேரிடும். இரட்சிக்கப்படுகிறவர்களை ஜீவபுஸ்தகத்திலே எழுதவும் அதிலிருந்து அவர்களுடைய நாமத்தை கிறுக்கிப்போடவும் கர்த்தர் அதிகாரமுடையவராயிருக்கிறார். ஆகையால் அவருக்குப் பயந்து அவரில் விசுவாசம் கொள்ளவேண்டும். “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்” (எபி.11:6). வானத்தையும்



பூமியையும் சர்வத்தையும் உண்டாக்கின தேவன் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறார். அவருடைய இரட்சிப்பு தாமதிப்பதில்லை. மனிதனை நம்பி, நம்பி அநேகர் மாண்டுபோகின்றனர். அந்த மனிதனைப் படைத்த தேவனிடத்திற்கு ஒருவன் செல்வானேயானால், அவன் மெய்யான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வான். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ கர்த்தராலே வரும் என்று சலொமோன் குறிப்பிடுகிறார். இரட்சிப்பு பரத்திலிருந்து வருகின்ற ஒன்று அது தேவனால் வருகிறது.

பவுல் சொல்வதைக் கவனியுங்கள்: “நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்” (2தீமோ.4:7,8). உலகத்திலே நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தை முடித்த பவுல் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் ஆகையால் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் (இயேசு) அந்தநாளிலே அதை எனக்குத் தருவார் என்ற நம்பிக்கையோடிருப்பதாகவும் தனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அந்த கிரீடத்தை தந்தருளுவார் என்றும் எழுதுகிறார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ அந்த நம்பிக்கையோடிருக்கிறாயா? விசுவாசத்தைக் காத்துக்கொண்டுள்ளாயா? அல்லது உலக கவலைகளினால் சோர்ந்துபோய் இருக்கிறாயா? சங்கீதக்காரனாகிய தாவீது சொல்கிறார்: “கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது” (சங்.130:5,6). உங்களுடைய காத்திருப்பு இப்படிப்பட்டதாக இருக்கட்டும். அப்பொழுது நலமான காரியங்களை கர்த்தருடைய கரத்திலிருந்து பெற்றுக்கொள்வீர்கள்.

வாழ்க்கையில் மூன்று விதமான பருவங்கள் வருகிறது. ஒன்று குழந்தை பருவம், மற்றொன்று வாலிப பருவம், மற்றொன்று வயோதிபப் பருவம். இதிலே வாலிப பருவம் மிக முக்கியமானது. ஏனென்றால் குழந்தை பருவத்திலே மற்றவர்கள் கற்றுக்கொடுக்கக் கேட்கிறோம். வாலிப

பருவத்திலே நாமே அநேக முடிவுகளை எடுக்க முற்படுகிறோம். வயோதிப நிலையில் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கிறோம். வேதம் சொல்லுகிறது "தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது" (புல.3:27). சிலர் பிள்ளைகளை பொத்தி பொத்தி வளர்ப்பார்கள். கஷ்டம், நஷ்டம் தெரியாது வளரும் அந்தபிள்ளைகள் கஷ்ட, நஷ்டங்கள் வரும்போது இரண்டுதரஞ்செத்து வேரற்றுப்போன மரங்களைப்போல வாடிப்போவார்கள்.

அன்பானவர்களே, இளம்பிராயத்தில் கஷ்டங்களை அநுபவிக்க நாம் அனுமதிக்கவேண்டும். அதன்மூலம் நல்ல பாடங்களைக் கற்றுக் கொள்வார்கள். எனக்கு ஒரு சகோதரியைத் தெரியும் அவர்கள் தன் மகனை எந்த வேலையும் செய்யவொட்டாது வளர்த்தார்கள். ஒரு முறை நான் அந்த வாலிப சகோதரனை அழைத்துக்கொண்டு அவனை ஒரு வேலையில் சேர்க்கும்படியாக பஸ்நிலையம் சென்றோம். அப்பொழுது அவனுடைய தாய் அவனுடைய உடைமைகளை அவனை தூக்க அனுமதிக்காமல் தானே சுமந்து கொண்டு பஸ்நிலையம் வரை வந்தார்கள். அவர்கள் சற்றும் யோசிக்கவில்லை. வேலையில் சேர்ந்தபின் தன் மகனுடைய வேலைகளை யார் செய்வார்? அவனோ வேலையில் சேர்த்துவிட்ட ஒரு வாரத்திற்கு பின்பு வீடு வந்து சேர்ந்து, அதன் பின்பு தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணினான்.

உங்கள் பிள்ளைகளை எப்படி நடத்துகிறீர்கள். தேவன் உங்களிடத்திலே முழுபொறுப்பையும் கொடுத்திருக்கிறார். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் உத்தரவாதிகள். அவர்கள் இளம்பிராயத்திலே தனக்கு வரக்கூடிய பாடுகளை சந்திக்க அனுமதியுங்கள். அது அவர்களுக்கும் நல்லது உங்களுக்கும் நல்லது. யோசேப்பை தன்னுடைய சகோதரர்கள் மீதியானியர்களிடம் 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டார்கள். அந்த இளைஞனோ எகிப்திற்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கு போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்தில் இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். Second Sale செய்யப்பட்டான். அவனுக்குத்தான் எவ்வளவு மனக்கவலை இருந்ததோ தெரியவில்லை. தன் தேவன்மீது முழு நம்பிக்கையுள்ளவனாக அவருக்கு பயந்தவனாக இருந்தான் என்று வாசிக்கிறோம். அவன் இளம் பிராயத்திலே தனக்கு வந்த பாடுகளை ஏற்று அநுபவித்தபடியினாலே எகிப்திலே உயர்த்தப்பட்டான்.



அன்பு நேயரே, புதிய ஏற்பாட்டிலே 14 நிருபங்களை எழுதிய பவுல் தன் உடன் ஊழியனாகிய தீமோத்தேயுக்கு எழுதும்போது "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" என்றார் (2தீமோ.4:5). பவுல் தன்னுடைய ஊழியத்திலே பட்ட பாடுகளை நாம் அவர் எழுதிய புஸ்தகங்களின் வாயிலாகவும், மற்றும் அப்போஸ்தல நடபடிகளிலேயும் வாசிக்கிறோம். அதை தன் உடன் சேவகனாகிய தீமோத்தேயுவுக்கும் சொல்ல அவர் தயங்கவில்லை. நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று என்று எழுதுகிறார். வாலிப சகோதரனே, வாலிப சகோதரியே இவ்வசனத்தை நீயும் பற்றிக்கொள். உனக்கு தேவன் அருளிச்செய்த காரியத்தை நிறைவேற்று. பாதியிலே விட்டு ஓடாதே! உனக்கிருக்கிற பெலத்தோடே போ. கர்த்தர் உனக்காக வழக்காடுவார். அவரை நம்பி பற்றிக்கொள். நல்லதே உன் வாழ்வில் நடக்கும் என்ற நிச்சயத்தோடு செல். "நான் உபத்திரவப்பட்டது நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.119:71). நமக்கு வரக்கூடிய உபத்திரவம் நன்மைக்காகவே இருக்கும் அவைகளைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள்.

நல்லதைப் பெற்றுக்கொள்ள தேவசமூகத்திலே யோபைப்போல அமைதலாயிருப்பது நலம். "இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்: என் கையினால் என் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன் நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்" (யோபு40:4,5). இந்த யோபைப்போல நாம் கற்றுக்கொள்ளும்படியாக தேவ சமூகத்தில் என்று அமருகிறோமோ? அன்றைய நாளிலிருந்தே நலமானவைகளைப் பெற்றுக்கொள்வோம். "பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும் அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்" என்கிறார் (நீதி.8:19–21). தங்கத்தை விரும்பாதவர்களே இல்லை என்று சொல்லலாம். ஆண்டி முதல் அரசன் வரை அதையே நாடுகிறான். ஆனால் அதைப் பார்க்கிலும் என் பலன் நல்லது என்கிறார். பவுன் இருந்தால் அதை

அடகுவைத்து நாம் நினைத்த காரியத்தை முடித்துவிடலாம் என்பது 95 சதவீதத்தினரின் நம்பிக்கை. கடன் வாங்காமல் காரியத்தை முடிக்க கர்த்தர் உதவிடுவார் என்பது 5 சதவீதத்தினரின் உறுதியான நம்பிக்கை. ஏனென்றால் சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் அவருடைய வருமானம் நல்லது என்று தாவீது சொல்லுகிறார்: "நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன்" (சங்.119:127). அரசர்கள் பொன்னிற்கும், பெண்ணிற்கும் அடிபணிந்தவர்கள். ஆனால் தாவீதின் விருப்பமோ கர்த்தருடைய கற்பனைகளின் மீது! உங்களுடைய விருப்பம் எதன்மீது? உலகமும் உலகத்திலுள்ளவைகளும் ஒருநாள் அழிந்துபோய்விடும். "அநேகமாயிரம் பொன்வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" என்றார் தாவீது (சங்.119:72). நாமும் அப்படியே சொல்வோமா?

**கேள்வி நேரம்**

**எது நல்லது?**

கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடே காத்திருப்பது நல்லது என்றும், தன் இளம் பிராயத்திலே நுகத்தை சுமக்கிறது நல்லது என்றும், பொன்னைப் பார்க்கிலும் என் பலன் நல்லது என்றும் பார்த்தோம். இவைகளை எல்லாம் எப்படி கைக்கொள்வது என்ற எண்ணம் எழும்பும். சொல்வது எளிது, ஆனால் அதன்படி நடப்பதோ மிக மிக கடினம் என்று மனது சொல்லும். கவலைப்படாதீர்கள் தாவீதைப்போல "என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும். மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்" என்று ஜெபியுங்கள். வேதாகமம் எவைகளை நல்லது என்று சொல்லுகிறதோ அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளைக் கைக்கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அவைகளைக்குறித்துச் எடுத்துச் சொல்லுங்கள். "ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது" (பிர.7:8). ஒரு காரியத்தைத் துவங்கி விடலாம் ஆனால் முடிவுபரியந்தமும் அவைகளைச் செய்வது நல்லது. கர்த்தரிடம் உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே என்று பெயர் எடுக்கவேண்டும். ஆகையால் துவக்கத்தைப்பார்க்கிலும் முடிவு மிக முக்கியமானது. அந்த முடிவு நல்லபடியாக அமைய தேவன் கிருபைசெய்வாராக!



## 41. தேவ பக்தியின் இரகசியம்
## The Mystery of Godliness

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உன்னதத்தின் செய்தியை நமக்கு கொண்டுவந்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

தேவ பக்தியின் இரகசியம் – The mystery of Godliness. இந்த இரகசியத்தைக் குறித்து பலர் பலவிதமான கருத்துடையவர் களாயிருக்கின்றனர். இந்த இரகசியத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது மிகத் தெளிவாக எழுதுகிறார். "தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப் பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப் பட்டார்" (1தீமோ.3:16). காலங்காலமாக பிதாக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் தம்முடைய வார்த்தைகள் மூலம் பேசிவந்த தேவன், இந்தக் கடைசி நாட்களிலே **தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். God was manifested in the flesh.** எப்படி வந்தார்? எப்பொழுது வந்தார்? என்று கேட்கிறீர்களா! தீர்க்கதரிசன புஸ்தகத்திலே சொல்லப்பட்டபடியாக "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத்.1:23). அந்தப்படியாக இயேசு கிறிஸ்துவை மரியாள் பெற்றெடுத்தாள்.

அந்நாட்களிலே உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது. அவருடைய பிறப்பை வைத்து சரித்திரம் இரண்டாகப்பிரிக்கப்பட்டு கி.மு. B.C. என்றும் கி.பி. A.D. என்றும் சொல்லப்படுகிறது. இது ஏதோ ஒரு மூலையில் நடந்த சம்பவம் அல்ல உலகமறிந்த உண்மையாயிருக்கிறது. "ஆகையால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (எபி.2:14). ஆனபடியால், பவுல் இது

குறித்து எழுதும்போது தேவபக்தியின் இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் என்று எழுதுகிறார்.

**அவர், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார் – Justified in the spirit.** "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர்தோன்றி அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் **நீதியின்படி** ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" என்ற ஏசாயா11:1–5–ன்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.

ஒரு முறை "விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவளைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள் இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்



குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்" (யோவா.8:3–11). ஆம், அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நியாயம் விசாரித்து தீர்ப்புச்செய்யக்கூடிய நியாயாதிபதியாக இருக்கிறார்.

**அவர், தேவதூதர்களால் காணப்பட்டார்– Seen by angels.** இயேசுவின் பிறப்பின்போது "அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த க்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் **தூதனுடனே** தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்.2:8–14). இயேசுவினுடைய பிறப்பின் நற்செய்தியை முதன்முதல் தேவதூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள். அந்தநேரமே பரம சேனைகள், அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்தின் தேவனைத் துதித்தார்கள் என்று காண்கிறோம்.

**அவர், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார் – Preached among the Gentiles.** பேதுருவின் தரிசனத்தில்: "நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு கூடு வானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கிவந்தது. அதிலே நான் உற்றுப்பார்த்துக் கவனிக்கிறபோது, பூமியிலுள்ள நாலுகால் ஜீவன்களையும், காட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும், ஆகாயத்துப் பறவைகளையும் கண்டேன். அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தையும் கேட்டேன். அதற்கு நான்: ஆண்டவரே, அப்படியல்ல, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை என்றேன். இரண்டாந்தரமும்

வானத்திலிருந்து சத்தம் உண்டாகி: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதேயென்று மறுமொழி சொல்லிற்று, இப்படி மூன்றுதரம் சம்பவித்த பின்பு, எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது'' அப்.11:5–10. இதை அறிந்த பேதுரு **புறஜாதிகளுக்கும்** கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தான். நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுபோய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்பதும் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த கட்டளை. புறஜாதி மக்களும் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்கின்றனர்.

**அவர், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார். Believed on in the world.** தேவனுடைய ஜனங்களாகிய யூதர்கள் அப்போஸ்தலர்களை ஏற்றுக்கொள்ளாமல் எதிரிடையாய்ப் பேசி விரோதித்துத் தூஷித்தார்கள். ''அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் **பூமியின்** கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். புறஜாதியார் அதைக் கேட்டுச்சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப் பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்'' (அப்.13:46–48). ஆண்டவரை விசுவாசித்தவர்கள் புறஜாதியார் அவருடைய வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு அவரை மகிமைப்படுத்தினார்கள். இயேசுவானவரை தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார். அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்.

**மேலும் அவர், மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார். Received up in glory.** கர்த்தர் அப்போஸ்தலர்களை நோக்கி: ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார், அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர்போகிறபோது அவர்கள் வானத்தை



அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று; கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்'' (அப்.1:8–11). இயேசுவின் வருகையிலே கர்த்தருக்குள்ளாக மரித்தவர்கள் முதலாவது எழுப்பப்படுவார்கள். பின்பு உயிரோடிருக்கிற கர்த்தருடையவர்களும் அப்படியே ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு அவரோடு என்றென்றும் இருப்பார்கள்.

தேவ பக்தியின் இரகசியத்தைத் குறித்து இச்செய்தியின் மூலமாக தியானித்தோம். இந்த இரகசியம் மனுமக்களாகிய யாவருக்கும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அவர் மனிதனாக அவதரித்து மனிதனுடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு நாம் ஜீவனுள்ளவர் களாயிருக்கும் பொருட்டு அவர் எழுப்பப்பட்டும் இருக்கிறார். இதுவே சுவிசேஷம் இதற்கு கீழ்ப்படிந்து உங்களை ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**தேவபக்தியின் இரகசியம் எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறதா?**

ஆம், ''இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை... இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார் பவுல் (எபே.3:8–11). இக்கிருபையை போக்கடிக்காமல் தேவபக்தியின் இரகசியத்தை அறிந்துகொள்ளுங்கள்.

**"துஷ்டர் நியாயத்தை அறியார்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்களோ சகலத்தையும் அறிவார்கள்" – நீதிமொழிகள்28:5**

# 42. நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்கள்
## We Are Members of His Body

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்கள் –We are members of his body. நாம் வாழ்கிற இவ்வுலகில் எங்களுடைய வம்சம் ராஜ வம்சம், எங்களுடைய முப்பாட்டனார் ஒரு பெரிய வணிக வியாபாரி, எண்ணிக்கைக்கு அடங்கா சொத்து எங்களுக்கு இருக்கிறது என்று தங்களைக் குறித்து மிகவும் பெருமையாக பேசிக்கொள்ளும் அநேகரைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் "நாம் அவருடைய (கிறிஸ்துவினுடைய) சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" என்கிறார் (எபே.5:30). உலகப்பிரகாரமாக நாம் இன்னாரின் வாரிசு அல்லது இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதைவிட, நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் எலும்புக்கும் உரியவர்களாக இருப்பது எவ்வளவு பெருத்த ஆசீர்வாதம்!

நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயிருக்கும்போது **பாவத்திலிருந்து மீட்பு கிடைக்கிறது:** "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" என்கிறார் பவுல் (கொலோ.1:13,14). பாவத்தினாலே அடிமைப்பட்டு கிடந்த நம்மை பிதாவாகிய தேவன் அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமற கழுவி, பரிசுத்தப்படுத்தி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யமாகிய அவருடைய சபையிலே பிரவேசிக்கக்கூடிய பாக்கியத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். இவ்விதமாக, "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.



முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களை பரித்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப் படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ.1:20,21). இது அவருடைய ஈவாக இருக்கிறது. நம்முடைய பரிசுத்தத்தினாலோ அல்லது நம்முடைய நற்கிரியைகளினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை, தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் அவருடைய சரீரத்திற்கு உரியவர்கள் என்றால் **கிறிஸ்துவினுடையவர்கள்:** "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே" (1கொரி.6:15). பிரியமானவர்களே, நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களில் ஒன்றாக இருந்தால் அவருடைய சரீரத்திற்கேற்றவைகளை சிந்திக்கவேண்டும். அவைகளை வேசியின் அவயவங்களாக்கிவிடக்கூடாது. "கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்" என்ற 1கொரி.6:17 –ம் வசனத்தின்படி அவருடைய சரீரத்திலே இணைந்தவர்களாகவே இருக்கவேண்டும். சரீரம் தலையின் கட்டுப்பாட்டில் இயங்குவதுபோல சரீரமாகிய சபை தலையாகிய கிறிஸ்துவின் கட்டுப்பாட்டில் செயல்படவேண்டும். "இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்ற எபே.5:31 (ஆதி.2:24) வசனத்தின்படி மணவாட்டியாகிய சபையானது மணவாளனாகிய கிறிஸ்துவோடு அவருடைய சரீரத்தில் உள்ள அவயவங்களில் ஒன்றைப்போல செயல்பட வேண்டும். அவரே அதன் இரட்சகர். ஆனபடியினாலே "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல;" என்றார் (மத்.10:37). சத்திய வசனத்தினாலே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்து, தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி நம்மை சம்பாதித்துக்கொண்டார். ஆகையால் நாம் கிறிஸ்துவினுடையவர் களாயிருக்கிறோம். எனவே, உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய

ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?

**உரியவர்கள்:** என்றால் சொந்தக்காரர். அதனுடைய உடமைக்கு உரியவர் என்று அர்த்தம். "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30). ஆனபடியினாலே "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?..... தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1கொரி.12:13–18). அந்தப்படியாக நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தனித்தனி அவயவங்களாயிருந்துகொண்டு எல்லாவற்றையும் அவருடைய சரீரமாகிய சபையிலே செய்கிறோம். இதிலே நான் பெரியவன், நீ சிறியவன் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவனவனுக்கு தேவன் பகிர்ந்து கொடுத்தபடியாக செயல்படக்கடவன்.

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்" (யோவா.15:5,6). சபையில் நிலைத்திராவிட்டால் அதாவது அவருடைய சரீரமாகிய சபையில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட திராட்சக்கொடியைப்போல உலர்ந்து போவான். அவைகளின் முடிவு அக்கினிக்கு இரையாகும். எடுத்துக்காட்டாக, கையில் எலும்புமுறிவு ஏற்பட்டு மாதங்கள் பல ஆகி விட்டால் அதை திரும்பவும் சேர்ப்பது கூடாதகாரியம். சரீரத்திலே முறிவு ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்படி முறிவு ஏற்படுமாயின் உடனே அதை சரிசெய்ய முற்பட வேண்டும். இல்லையேல் அது புரையோடி சீல் பிடித்து மாதக்கணக்கில் வைத்தியம் செய்தாலும் முடியாமற்போகும். "ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும்,



மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முட்செடிகளையும் முட்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற் கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.6:4–8). ஆகையால் எபிரெய ஆசான் ஒரு நிலத்தை எடுத்துக்காட்டாக சொல்கிறான்: தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். அதற்கு விரோதமாக முள்பூண்டுகளை விளைவிக்கக் கூடிய நிலமோ சுட்டெரிக்கப்படும் என்கிறார். நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்?

"சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன் பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப்போடப்பட்டதென்று சொல்லுகிறாயே நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளை தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு. ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவினாலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்" (ரோம.11:17–22). அன்பானவர்களே, புறஜாதியார்களாகிய நமக்கு கிடைத்த இந்த இரட்சிப்பை விசுவாசத்தின் மூலமாக பெற்று இருக்கிறோம். மேட்டிமை சிந்தையாயிராமல் பயந்திருக்கக்கடவோம். சபையிலே நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமிருக்கிறது. "சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர்

முந்திக்கொள்ளுங்கள். அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்'' என்று வாசிக்கிறோம் (ரோம.12:10,11).

அன்பானவர்களே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை பெற்ற நாம் நற்கிரியை செய்து பிதாவாகிய தேவனுக்கு ஏற்ற கனிகளைக் கொடுப்போம். ''...நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப்பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்'' (கொலோ.1:9–11). நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறபடியால் உயிருள்ள சரீரமாக இருந்து செயல்படுவோம்.

**கேள்வி நேரம்**

**நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருந்தால் அது எதுவாக இருக்கிறது என்று வேதம் போதிக்கிறது?**

''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'' (1கொரி.3:16,17). நாம் தேவனுடைய ஆலயமாக இருந்தால் நம்முடைய சரீரம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்? பொதுவாக ஜனங்கள் நாம் ஆராதிக்கிற இடம் சுத்தமாக இருந்தால் போதும் என்று கருதுகின்றனர். ஆகையால், அதை பலவிதமான வாசனைத்திரவியங்களைக் கொண்டும், பூக்களைக்கொண்டும் அலங்கரிக்க விரும்புகின்றனர். ஆனால் தேவன் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் செய்வதில்லை. இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறார். அந்த ஆலயத்தை தீட்டுப்படுத்தாதிருங்கள்.



## 43. உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்
## Possess Your Souls

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் பிரதான மேய்ப்பராகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள் – Possess your souls. உலகத்திலே மிகவும் விலையேறப்பெற்றது ஆத்துமா ஒன்று தான். அதை எந்த ஒரு மனிதனும் விலை கொடுத்து வாங்கமுடியாது. எல்லா ஆத்துமாவும் கர்த்தருடையது. ஆக, ஆத்துமாவை காக்கிறவர்கள் ஞானமுடையவர்கள். எருசலேமின் அழிவைக் குறித்து கர்த்தர் முன்னுரைக்கும்போது: ''உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்'' என்றார் (லூக்.21:19). மனிதன் ஒவ்வொருநாளும் தங்களுடைய உடைமைகளைக் காக்க மறப்பதில்லை. ஆனால் ஆத்துமாவைக் காக்க மறந்துபோகின்றனர். ஆத்துமாவைக் காப்பது எப்படி? நாம் ஏன் அதைக் காத்துக்கொள்ளவேண்டும்? மேற்கண்ட வசனத்திலே நாம் பார்த்தபடி பொறுமையினாலே ஆத்துமாவைக் காத்துக்கொள்ளமுடியும். பொறுத்தார் பூமியாள்வார் என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நம்முடைய வாழ்க்கையில் பொறுமை மிக அவசியமான ஒன்று. சில காரியங்களை நினைக்கும்போது என்னால் பொறுமையாக இருக்கமுடியாது என்பீர்கள். ஆனால் வேதம் நாம் பொறுமையாயிருக்க கற்றுக்கொள்ளவேண்டும் என்று போதிக்கிறது.

ஒரு சிலருக்குப் பதிலுக்குப் பதில் செய்யாவிட்டால் தூக்கம் வராது, அப்படி பதிலுக்குப் பதில் செய்வதாலே என்ன ஏற்படுகிறது? வன்முறை வெடிக்க ஆரம்பிக்கிறது. இதனால் யாவருக்கும் சமாதான குறைவு ஏற்படுகிறது. பொறுமைக்கு எடுத்துக்காட்டாக வேதாகமத்தில் யோபுவைப் பாருங்கள். ''இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென் கிறோமே! யோபுவின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்: கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவரா யிருக்கிறாரே'' (யாக்.5:11). யோபுவிற்கு இருந்த எல்லாம் பறிபோனபோதிலும் யோபு தன்னுடைய உத்தமத்திலே

உறுதியாயிருந்தார். ‘‘இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை’’ (யோபு 1:22). இன்றைக்கு சின்ன சின்ன பாடுகள் வந்தவுடனே தேவனை துஷிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். யோபுவோ பொறுமையோடிருந்து தேவனுடைய ஆசீர்வாதங்களை இரட்டிப்பாக பெற்றுக்கொண்டார்.

**ஆவிக்குரிய கனிகளிலே ஒன்று நீடிய பொறுமை.** ஒரு கிறிஸ்தவன் குறிப்பாக இந்த ஆவிக்குரிய கனிகள் ஒன்பதையும் பெற்றவனாக இருக்கவேண்டும். இதில் ஒன்று குறைய காணப்படுமேயானால் அவன் தேவசமுகத்தில் குறைவானவனே. அன்பானவர்களே, இந்தக் கனிகளை உடையவர்களாயிருந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறாதீர்கள். ‘‘நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்; மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்திலே நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்’’ (யாக்.1:17–21). பேசுகிறவிஷயத்திலே வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிவிடக்கூடாது. நாம் கர்த்தருடையவர்களாயிருக் கிறபடியால் பேசுகிறதற்குப் பொறுமையாயிருக்க வேண்டும். துதித்தலும் சபித்தலும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது. அதினாலே ஒருவரை சபிக்கிறோம், அதினாலே தேவனை துதிக்கிறோம். நாவை உண்டாக்கினவர் நன்மைக்காகவே உண்டாக்கினார். நல்லவைகளையே பேசவேண்டும். முத்துக்களை சிதறவிட்டால் சேர்ப்பது கடினம் அதைப்போல வார்த்தைகளை விட்டுவிட்டால் சேர்ப்பது கடினம். ஒரு வார்த்தை கொல்லும் ஒரு வார்த்தை வெல்லும் என்பார்கள். Hear much, Speak little. எனக்கு அன்பானவர்களே, உங்களுடைய வாயின் வார்த்தைகளைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.



**ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் செய்கிறவர்கள் தேவனுடைய தாசர்கள்:** ஆகையால் அவர்களுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அடங்கவேண்டுமென்று எபிரெய ஆசான் கூறுகிறார்: ‘‘உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே’’ (எபி.13:17). ஒரு கம்பெனியில் வேலைசெய்கிறவன் அந்தக் கம்பெனி Product –க்காக பரிந்து பேசுகிறான். இது மிக நன்றாக இருக்கும், வாங்கிப் பாருங்கள், ஏதாவது Mistake என்றா நான் Guarantee என்று சொல்லுகிறான். அதைப்போல விசுவாசிகளுக்காக குறிப்பாக அவர்களுடைய ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாக ஊழியர்கள் செயல்படுகிறார்கள். நான் என்ன செய்வது அவன் விழுந்துபோனான் என்று கர்த்தரிடம் ஒரு ஊழியன் சொல்லமுடியாது. அவன் கணக்குக் கொடுக்கவேண்டியவனாக இருக்கிறான். ஆகையால் மந்தையைக் குறித்த கரிசனை ஒரு ஊழியனுக்கு உண்டு.

**ஒருவன் எவ்வளவு காலம் பொறுமையாயிருக்கவேண்டும்?** வசனம் சொல்லுகிறது: ‘‘இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடியபொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே’’ (யாக்.5:7,8). ஒரு நாட்டிற்கு எல்லையுண்டு ஆனால் பொறுமைக்கு எல்லையில்லை. கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக யாக்கோபு ஒரு விவசாயைக் காண்பிக்கிறார்: அவன் விதையை விதைத்து மறுநாளே அவன் அறுவடைக்கு தயார் ஆவதில்லை. ஒவ்வொருநாளும் தான் விதைத்த விதையை கண்காணிக்கிறான், கொத்துகிறான், எருப்போடுகிறான், வேலியடைக்கிறான், நீர்பாய்ச்சுகிறான், காவல்காக்கிறான் இவ்வளவு கடினப்பட்டு, பாடுபட்டு நீடிய பொறுமையோடிருந்து பலனைப்பெறும்படி காத்திருக்கிறான். அந்தப்படியே நீடிய பொறுமையாயிருக்கிறவர்களுக்கு கர்த்தர் வாடாத ஜீவகிரீடத்தைத் தருவார் என்ற நம்பிக்கையோடிருந்து

இருதயங்களை ஸ்திரப்படுத்தவேண்டும். மேலும் ‘‘உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக’’ என்று 1தெச.5:23–ல் பவுல் குறிப்பிடுகிறார். ஆவியிலே நன்றாகத்தான் இருக்கிறோம் ஆவிக்குரிய சபைக்கு செல்கிறோம் என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாகக் காக்கப்படவேண்டும். அப்பொழுது இயேசுகிறிஸ்துவின் வருகையிலே அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படுவோம். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை. அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல ஒவ்வொருவரும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஆகையால் அநுதினமும் பரிசுத்தத்தின் மேல் வாஞ்சையாயிருந்து கர்த்தருக்குள் வளர்ந்து பெருகுங்கள்.

**நம்முடைய ஆத்துமாவை நாம் ஏன் காக்கவேண்டும் என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது அல்லவா?** அதற்கான விடையை நாம் ஆராயும்போது ஆத்துமாக்களைப் பாதுகாக்காமற்போன இரண்டு நபர்களைக் குறித்து கர்த்தர் நமக்கு மிகத்தெளிவாக போதிக்கிறார். ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு; ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். ‘‘தேவனோ அவனை நோக்கி; மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்; அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்’’ (லூக்.12:20). தேவனிடத்தில் ஐசுவரியவான்களாயிராமல், தங்களுக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவர்கள் இப்படியே இருக்கிறார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்?

மற்றொருவனைக் குறித்து நாம் தியானிக்கும்போது; ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்று பேர்கொண்ட ஒரு தரித்திரனும்



இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். ‘‘அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்’’ (லூக்.16:24). இவன் பூமியில் இருந்த காலத்தில் சம்பிரமமாய் வாழ்ந்து தன் ஆத்துமாவைக் காக்க மறந்தான். லாசருவோ ஆத்துமாவைக் காத்துக்கொண்டான். ஆத்துமாவைக் காக்காமற்போனால் ‘‘அங்கே அவர்கள் புழு (ஆத்துமா) சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்’’ (மாற்.9:48). அன்பு வாசகரே, நீ உன் ஆத்துமாவை எந்நிலைமையில் வைத்துள்ளாய். உன் ஆத்துமாவை உன் தேவனுக்கு ஒப்புக்கொடு. அதற்குரிய ஞானத்தையும் முழுப்பலத்தையும் கர்த்தர் உமக்குத் தந்தருளுவாராக!

**கேள்வி நேரம்**

**நம்முடைய ஆத்துமாவில் எந்த அளவு தேவனுக்கு இடம் கொடுக்க வேண்டும்?**

‘‘உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக’’ என்று மாற்கு 12:30–ல் வாசிக்கிறோம். முழுமையுமாக ஒப்புக்கொடுக்கவேண்டும். தேவன் மனிதனை முழுமையானவனாக சிருஷ்டித்தார். அப்படிப்பட்ட தேவனுக்கு உங்களை பாதியாக ஒப்புக்கொடுத்து, பாதியை உலகத்திற்கு ஒப்புக்கொடுத்தால் எப்படி? நீங்களும் உங்கள் ஆத்துமாவும் கர்த்தருக்கு சொந்தமானவைகள். ஆகையால் தான் ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு திரும்புகிறது. இதிலே எந்த ஆவியும் எந்த நபருக்கும் கட்டுப்பட்டதல்ல.

## 44. உன் தேவனை அறிந்துகொள்
## Know Thy God

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உன் தேவனை அறிந்துகொள் – Know thy God. இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தன்னை உண்டாக்கின தேவனை முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். தேவனை அறிந்து கொள்ள மனிதன் பல வழிகளில் முயற்சி எடுக்கிறான். அவனுடைய முயற்சி தோல்வி அடைகிறது. தேவனைப்பற்றி அறிந்துகொள்ள நாம் பரிசுத்த வேதாகமத்திற்கு செல்லவேண்டும். தேவன், தம்மைக்குறித்து பரிசுத்த வேதாகமத்திலே வெளிப்படுத்தியிருக்கிறார். தேவன் நம்முடைய சிருஷ்டிகர். God is our Creater. "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" (ஆதி.1:27). வேதாகமத்தின் முதல் புத்தகத்திலே முதல் அதிகாரத்தில் மனிதன் உண்டாக்கப்பட்ட விதத்தைக் குறித்து படிக்கிறோம். மனிதன் தேவசாயலில் சிருஷ்டிக்கப் பட்டுள்ளான். பூமியில் உள்ள மற்றவைகளைவிட இவன் விசேஷித்த படைப்பாக இருக்கிறான்.

மேலும் பூமியிலுள்ளவைகளையெல்லாம் ஆண்டுகொள்ளும்படியான அதிகாரத்தை தேவன் மனிதனுக்கு கொடுத்திருக்கிறார். அதிகாரத்தை தவறாக பயன்படுத்த அல்ல. தேவன் தம்மைப்போல நற்காரியங்களைச் செய்ய அவனுக்கு சகலத்தையும் ஆண்டுகொள்ளும்படியான அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். தேவன் மனிதனுக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தபோதிலும், தாமே அவனுக்கு ஆசானாக இருக்கிறார். அவன் எந்த விதத்திலும் தேவனை மிஞ்சி எண்ணிவிடமுடியாது. ஏனென்றால் மனிதன் தேவனால் படைக்கப்பட்டவன். உண்டாக்கப்பட்டவன்.

உண்டாக்கினவருக்கு ஆலோசனை சொல்லமுடியாது. இன்றைக்கு அநேகர் இது இப்படியிருந்தால் நலமாக இருக்கும் அது அப்படியிருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்வதைக்



கேள்விப்பட்டிருப்பீர்கள். சொல்லத்தான் முடியும் அதை மாற்றியமைக்கவோ, திருத்தியமைக்கவோ மனிதனுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

தேவன் நம்முடைய ஆசான். God is our Teacher. "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவே புசிக்கவேண்டாம்; அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17). முதலாம் அதிகாரத்தில் சிருஷ்டிப்பைக் குறித்துப் படித்தோம். இரண்டாம் அதிகாரத்தில் அந்த மனிதனுக்கு அவர் ஆசிரியராக இருக்கிறார். தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் நீ புசிக்கவே புசிக்கலாம் ஆனால் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மட்டும் புசிக்கவே புசிக்கவேண்டாம் என்றார். சிருஷ்டிகருக்கு ஆதாம் இந்த விஷயத்தில் கீழ்ப்படியவில்லை. தேவனுக்கு எதிராளியாகிய பிசாசு, ஆதாமின் மனைவியாகிய ஏவாளை ஏமாற்றி, அந்த விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்று சொல்லி அவளை வஞ்சித்தது. இதற்கு கீழ்ப்படிந்த ஏவாள் தான் புசித்து, அதன் பின்பு தன் புருஷனுக்கும் கொடுத்தாள். இதனால் இருவரும் தேவனுடைய கட்டளையை மீறினார்கள்.

தேவனுடைய கட்டளையை மீறுகிற விஷயத்திலே, ஜனங்கள் வருவது வரட்டும் என்று சொல்லி துணிந்து பாவத்தில் இறங்குகிறார்கள். வந்த பின்புதான் அல்லோலபடுவார்கள். வாகன ஓட்டிகளுக்கு சில விதிமுறைகள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பின்பற்றினால் தான் விபத்தை தவிர்க்கமுடியும். வருவது வரட்டும் என்று வாகனத்தை ஓட்டுவாரேயானால் விபத்து துரிதமாக ஏற்படும். அதைப்போல தேவனுடைய கட்டளைகளை ஒரு மனிதன் மீறும்போது அவன் பாவத்தின் கீழ்தள்ளப்படுகிறான். அவனை பாவம் ஆண்டுகொள்ளும். இப்படியாக முதலாவது மனிதனாகிய ஆதாமை பாவம் ஆண்டுகொண்டது. மனிதன் பாவத்திற்கு கீழ்ப்படிந்தபடியால் அவனுக்கு தண்டனையை கொடுத்தார். தவறுசெய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பது பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மை. அப்படி தண்டிக்கப்படவில்லையென்றால் பாவம் பெருகி விடும். தவறுசெய்கிறவர்களும் துணிந்து செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். நாமும் கூட பிள்ளைகள் தவறு செய்துவிட்டால் தண்டிக்கிறோம். எதற்காக? அந்த தவறை மீண்டும் அந்த பிள்ளை

செய்யக்கூடாது என்பதற்காக. அந்தவிதமாக தேவனும் தாம் உண்டாக்கின மனுஷனைத் தண்டித்தார். உலகம் தண்டிக்கிற பிரகாரமாக தண்டிக்கவில்லை. மனிதன் பூமியில் இருக்கும் காலம் வரை அவனை நினைப்பூட்டுகின்ற அளவிற்கு அந்த தண்டனையானது அமைந்திருந்தது. ஏனெனில், அவர் நமது சிருஷ்டிகர், ஆசான், நம்மை நியாயந்தீர்க்கும் அதிகாரம் படைத்தவர்.

தேவன் தண்டனை கொடுத்த வகையில் அவர் முதலாவது சர்ப்பத்தை பார்த்து நீ இதைச்செய்தபடியால் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய் என்றார். ஆதாம் முதலாவது உண்டாக்கப்பட்டபோதிலும், கர்த்தர் தண்டிக்கிறவிஷயத்திலே "ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார். பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய், நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்" (ஆதி.3:16–19). அன்பானவர்களே, தேவன் மனிதனுக்கு கொடுத்த இந்த தண்டனையை அவன் மண்ணுக்கு திரும்புமளவும் அனுபவிக்கிறான். இது தேவனுடைய நியதியாக இருக்கிறது. இதிலே ஏதாவது மாறுதல் செய்யமுடிகிறதா? மனிதனுடைய கண்டுபிடிப்புகள் பலவழிகளில் பெருகிக்கொண்டே சென்றாலும், இந்த விஷயத்திலே அவனால் ஒன்றும் பண்ணமுடியவில்லை.

ஆனால், தேவனை அறிகிற அறிவுக்கு நாம் திரும்புவோமானால். மனந்திரும்பும்படியாக எங்குமுள்ள மனிதருக்கும் கட்டளை கொடுத்திருப்பதை நாம் அறியமுடியும். அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்தில் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போது "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்;



இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்" (அப்.17:30,31). அந்த மனிதன் யார்? அவர் தான் இயேசு கிறிஸ்து. தேவன் அவரை மூன்றாம் நாளிலே உயிரோடு எழுப்பினார். அவர் மனிதருடைய பாவத்தைப் போக்கும் பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார். அவர் சிந்திய இரத்தத்தினாலே மனிதருக்கு பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. இதை நீங்கள் விசுவாசிப்பீர்கள் என்றால் உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி இயேசுவை அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும். அப்பொழுதே இரட்சிக்கப்படுவீர்கள். இல்லையெனில் உங்கள் விசுவாசம், நம்பிக்கை எல்லாம் வீணாகபோய்விடும். ஆபிரகாம் என்ற தேவனுடைய மனுஷன் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தபடியால் ஆசீர்வதிக்கப்பட்டான். அவனோடு சென்ற லோத்தோ சுயமாக தேர்வுசெய்து சுய இச்சைக்கு தன்னை ஒப்புக்கொடுத்தபடியால் அவனுடைய சந்ததியைப் பற்றி சோதோம் கொமோரா பட்டண அழிவுக்கு பின் வேதாகமம் பேசுவதில்லை. ஆனால் ஆபிரகாமின் சந்ததியையோ தேவன் ஆசீர்வதித்தார். இன்றைக்கு இயேசுவை விசுவாசத்தின் மூலமாக அறிக்கை யிடுகிறவர்கள் அவனுடைய சந்ததியாக இருக்கிறார்கள். விசுவாசத்தின் பிள்ளைகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள் என்று வேதம் பேசுகிறது.

ஆபிரகாமுடைய சந்ததிகளாகிய ஏசா, யாக்கோபு விஷயத்தில் வேதாகமம் இப்படியாகச் சொல்லுகிறது: "அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்... அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே. அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல்

உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்கிறார்'' (ரோம.9:7–15). ஆகையால் நாம் முதலாவது தேவனை அறிகிற அறிவுக்கு நேராக நம்மை திருப்ப வேண்டும். பவுல் சொல்லுவதைப்போல: ''தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்'' (2கொரி.10:5). நீங்கள் இந்த விதமாக சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறீர்களா? அப்படி சிறைப்படுத்தி தேவனைப் பற்றி அறிகிற அறிவிலே வளர்ச்சியடையுங்கள். கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பார்கள். ஆம், நாம் கற்றுதேர்ந்துவிட்டோம் என்று எண்ணாது. அவரைப் பற்றி நாம் அறிந்தது கொஞ்சம், அறியவேண்டியது இன்னும் அநேகம் என்ற எண்ணத்தோடு கற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**நாம் தேவனை அறிந்து கொள்வதால் வரும் ஆசீர்வாதம் என்ன?**

''தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி. இச்சையினாலே உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' (2பேது.1:2–4). ஆனபடியினாலே, நீங்கள் வேதாகமத்தை தேடி வாசிக்கும்போது நம்மை சிருஷ்டித்த தேவனை அறிகிற அறிவிலே வளர்ச்சியடையமுடியும். அத்தோடு அவர் நமக்கு கொடுக்கிறதான ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் அறிந்துகொண்டு கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கமுடியும். கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவான்" – நீதிமொழிகள் 29:25**



## 45. நியாயப்பிரமாணம் – கிருபையும், சத்தியமும்
## The Law - Grace and Truth

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நியாயப்பிரமாணம் மற்றும் கிருபையும், சத்தியமும் – The law - Grace and truth. ''நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின'' (யோவா.1:17). இவ்வசனம் யோவானுக்கு பரிசுத்தஆவியானவராலே மிகத்தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நாம் வேதாகமத்தை படிக்கும்போது யார், யாருக்கு, எப்பொழுது என்ற கேள்வியோடு படித்துக்கற்றுக்கொள்ளவேண்டும். மேற்கண்ட வசனத்திலே நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்டது என அறிகிறோம். ஆக, மூன்று கேள்வியில் ஒன்றுக்கு விடை வந்துவிட்டது. இக்கட்டளையைக் கொடுத்தவர் பிதாவாகிய தேவன். யாருக்கு கொடுக்கப்பட்டது? இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்டது. எப்பொழுது? மோசேயின் காலத்தில் கொடுக்கப்பட்டது. இப்பொழுது இவ்வசனத்தின் முற்பகுதியை புரிந்துகொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். பிற்பகுதியில் கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. இதை யார் கொடுத்தது? பிதாவாகிய தேவன் கொடுத்தார். யாருக்கு கொடுக்கப்பட்டது? உலகமெங்கிலுமுள்ள அனைத்து தரப்பினருக்கும் கொடுக்கப்பட்டது. எப்பொழுது கொடுக்கப்பட்டது? கிறிஸ்துவின் காலத்தில் அதாவது முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் மூலமாக கொடுக்கப்பட்டது.

**முதலாவது நியாயப்பிரமாணத்தைக் குறித்து படிப்போம்:** யாத்திராகம புத்தகத்தைப்படிக்கும்போது ''மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்'' (யாத்.24:3). தேவன் மோசேயின் மூலமாக கொடுத்த இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளை இஸ்ரவேலர்கள் ஏற்றுக்கொண்டு அந்த

வார்த்தைகளின்படி செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னதாக வாசிக்கிறோம். இந்த பிரமாணத்தைக் குறித்து புவுல் எழுதும்போது; "....நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் பலிக்கும், வித்தியாசமே இல்லை" (ரோம.3:19–22). இப்பொழுது நாம் இந்தப் பிரமாணத்தின் கீழ் இல்லை. அதைக்குறித்து நியாப்பிரமாணமே சொல்லுகிறது, இதன் மூலம் தேவனுடைய நீதி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்து இயேசுவின் மூலமாக விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

"இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார் அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.31:31–33). அவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையானது பிதாக்களோடு பண்ணின உடன்படிக்கையின்படி இருக்கப்போவதில்லை என்பதை இந்த தீர்க்கன் மூலமாக தெளிவுபடுத்துகிறதை நாம் வாசிக்கிறோம். அதை இருதயத்தில் எழுதப்போவதாக சொல்லியிருக்கிறார். ஆக, அழிந்துபோகாத உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார் என நாம் அறிகிறோம். அந்த உடன்படிக்கைக்கு திரும்பவேண்டும். "மேலும், மீறுதல்



பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (ரோம.5:20,21).

**இரண்டாவதாக கிருபையையும், சத்தியத்தையும் குறித்து படிப்போம்:** நியாயப்பிரமாணம் மோசே மூலமாக கொடுக்கப்பட்டதைப் போல கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலம் உண்டாயின. "மோசே தேவனுடைய வீட்டிலே எங்கும் உண்மையுள்ளவனா யிருந்தது போல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்" என எபிரெய ஆசான் எபி.3:2–ல் குறிப்பிடுகிறார். தேவன் தம்மிடத்தில் கொடுத்த கட்டளையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பூமியிலே நிறைவேற்றினார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும் போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற நியாயப்பிரமாணத்தின்படியான கட்டளைகளை எல்லாம் மாற்றிப்போட்டு தமது மிகுந்த கிருபையினாலே ஜனங்களை இரட்சிக்க திட்டம் கொண்டார். பத்துக்கட்டளைகளில் ஒன்று 'விபசாரம் செய்யாதிருப்பாயாக' என்பது (யாத்.20:14). புதிய ஏற்பாட்டு காலத்திலே இருக்கிற நமக்கு ஆண்டவர் ஒரு சிறப்பான விளக்கத்தைக்கொடுக்கிறார். "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது **பூர்வத்தாருக்கு** உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" என்கிறார் (மத்.5:27,28). பூர்வத்திலே விபசாரஞ்செய்தால் தான் பாவம். புதியஏற்பாட்டு காலத்தில் இருதயத்தில் நினைத்தாலே பாவம். ஆகையால் தான் இது கடினமான உபதேசம் என்றார்கள்.

"ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது" என எபி.8:12,13–ல் வாசிக்கிறோம். பழமையானது என்று

சொல்லும்போது, "நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்" (எபி.7:19). புதிய பிரமாணம் அதிக நம்பிக்கையை நம்மில் ஏற்படுத்துகிறது. அது விசுவாசத்தின் பிரமாணம் என்று அறிகிறோம். விசுவாசிக்கிறவன் பதறான். விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் அது பலிக்கும் வித்தியாசமே இல்லை. அந்த விசுவாசத்தினாலே தேவனிடத்தில் சேருகிறோம். பழையபிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை ஆனால் புதிய உடன்படிக்கையானது அதிக நன்மையான நம்பிக்கையை நம்மிலே ஏற்படுத்துகிறது. இதினிமித்தமாக பழைய ஏற்பாடு அதாவது நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டது.

ஆனபடியினாலே தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவா.8:32). எது சத்தியம்? அவருடைய வசனமே சத்தியம். அந்த சத்தியத்தையும், அவரையும் அறிகிற அறிவிலே ஒவ்வொருவரும் வளர்ச்சியடைய வேண்டும். என்னைக் கண்டவன் பிதாவைக்காண்கிறான் என்கிறார். கிறிஸ்துவையும் அவருடைய வசனத்தையும் ஒருவன் அறியாமல் பிதாவை எப்படி அறிந்துகொள்ளமுடியும்? தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக தம்மை வெளிப்படுத்த சித்தமானார். ஆகையால் பிதாவாகிய தேவன் அவரை முத்திரித்திருக்கிறார். அந்த இயேசுகிறிஸ்துவானவர் மூலமாக கிருபையையும் சத்தியத்தையும் அறிந்து இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள். சுயமுயற்சியினால் அநேகர் இரட்சிக்கப்பட முயலுகின்றனர். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது எனவேதம் போதிக்கிறது. தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. நீங்கள் இரட்சிக்கப்படவேண்டுமானால் முதலாவது உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அவர் "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி.7:25). மேலும் "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என ரோமருக்கு எழுதிய புத்தகத்தில் பவுல் குறிப்பிடுகிறார்.



"இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" (கலா.6:16). அதாவது கிறிஸ்துவானவர் உண்டாக்கின புதுஉடன்படிக்கையின் பிரமாணத்திற்கு செவிகொடுங்கள். அந்த பிரமாணம் ஜீவனுள்ள பிரமாணம், நித்தியமான பிரமாணம், அந்த பிரமாணத்தின்படி நடக்கிறவர்களுக்கு கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார். தமது புதுஉடன்படிக்கையின் இரத்தத்தினாலே அவர்களை பாவமற கழுவி சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்துகிறார். அவர் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள கிருபையுள்ள வசனத்துக்கும் சத்தியத்திற்கும் உங்களை அர்ப்பணியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

**கேள்வி நேரம்**

**நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?**

"வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர்" என்கிறார் பவுல் (கலா.3:19,20). ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே. ஆனபடியால், இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயிருந்தது. விசவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே என்கிறார் பவுல். ஆக, நியாயப்பிரமாணத்தின் நோக்கமெல்லாம் விசுவாச சந்ததிக்கு நேராக வழிநடத்துவதே. அந்த சந்ததி கிறிஸ்துவே. கிறிஸ்து வந்தபடியினாலே நியாயப்பிரமாணத்தின் வேலை முடிந்தது. நாம் கிறிஸ்துவினுடையவர்களாகிறோம்.

**"கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்" – நீதிமொழிகள் 16:6**

# 46. விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது
# Faith is Tested

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது – Faith is Tested. நம்முடைய விசுவாசம் அநேகமுறை பரீட்சிக்கப்படுகிறது. அந்தவிதமான பரீட்சையில் நாம் சில வேளையில் சோர்ந்துபோகிறோம். யாக்கோபு சொல்லுகிறார்; ''என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்'' என்கிறார் (யாக்.1:2,3). நமக்கு வரக்கூடிய சோதனைகளை சந்தோஷமாக ஏற்று அவைகளை மேற்கொள்ள முயற்சிக்கவேண்டும். படிக்கும் மாணவர்களை கவனித்துப்பாருங்கள் பள்ளி சென்றவுடன் அவர்கள் ஒரு நல்ல நிலைமைக்கு வந்துவிடுகிறதில்லை. படிப்படியாக உயர்வகுப்புக்கு வருகிறார்கள். ஒவ்வொருமுறையும் அவர்களுக்கு இறுதித்தேர்வு வைக்கப்படுகிறது. ஏன் இந்தப் பரீட்சை? அவர்கள் நன்கு படித்திருக்கிறார்களா என்பதை ஆய்வுசெய்ய இந்தவிதமான சோதனை நடத்தப்படுகிறது. ஒரு விசுவாசிக்கும் இந்தவிதமான பரீட்சை வருகிறது. அவனுடைய விசுவாசம் எத்தகையது என்பதை ஆய்வுசெய்யும்படியாக நடத்தப்படுகிறது.

''விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்'' என எபி.11:17–ல் வாசிக்கிறோம். இதனால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டான். நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொன்னார். விசுவாசத்தின்



பரீட்சையானது பொறுமையை உண்டாக்குகிறது. பயிற்சி வெற்றிக்கு அறிகுறியாக அமைகிறது. ''சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்'' என்கிறார் யாக்கோபு (யாக்.1:12). நமக்கு வரக்கூடிய சோதனைகளில் வெற்றியடையும்போது அல்லது அவைகளை பொறுமையோடு சகிக்கும்போது, கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப்பெறுவோம். பரீட்சையை நாம் சந்தோஷமாக ஏற்கவேண்டும். நலமான காரியங்களை பெற்றுக்கொள்ளவே இவைகளை நாம் சந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ''நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்?'' (எரே.12:5). இங்கே கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு உணர்த்தும் காரியம். நான் உன்னைக் காலாட்களோடே ஓடப்பண்ணியிருக்கிறேன் இதிலே நீ சோர்ந்துபோவாயானால், குதிரைகளோடே உன்னை ஓடவைக்கப்போகிறேன் நீ எப்படிசேர்ந்து ஓடுவாய்? என கேள்வி எழுப்புகிறார். தேவன் நமக்கு மேன்மையான ஆசீர்வாதங்களை வாக்குபண்ணியிருக்கிறார். அவைகளை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் இவ்விதமான பயிற்சி நமக்கு அவசியமாக இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு எரிகோ பட்டணத்தை கொடுத்தபோது, அதை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளும் முன் சில காரியங்களை அவர்களுக்குச் சொல்லியிருந்தார். அது என்னவென்றால், ''யுத்தபுருஷராகிய நீங்கள் அனைவரும் பட்டணத்தைச் சூழ்ந்து ஒருதரம் சுற்றிவாருங்கள்; இப்படி ஆறுநாள் செய்யக்கடவீர்கள். ஏழு ஆசாரியர் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு போகவேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்; ஆசாரியர் எக்காளங்களை ஊதவேண்டும். அவர்கள் அந்தக் கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காளசத்தத்தைக் கேட்கும்போதும், ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக்கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும்; உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராக ஏறக்கடவர்கள் என்றார்'' (யோசு.6:3–5). ஒரு சிறப்பான பயிற்சியை அவர்களுக்கு கொடுத்ததை

பார்க்கிறோம். இந்தப்பயிற்சியிலே அவர்கள் சோர்ந்துபோய் ஒவ்வொருநாளும் ஒவ்வொருமுறை சுற்றிவந்துவிட்டோம் ஏழாம் நாளில் ஏழுமுறை சுற்றவேண்டுமா? ஒருநாள் மட்டும் சுற்றினால் போதாதா என்று நினைக்கவில்லை. கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டவைகளைச் செய்ய சோர்ந்துபோகாமல் பொறுமையுடன் செய்தபடியினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள். இந்தவிதமான பொறுமை நமக்கும் தேவை. "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்கிறார் பேதுரு (1பேது.1:7). அழிந்துபோகக்கூடிய பொன் அக்கினியினாலே சோதிக்கப்படுமானால் நம்முடைய விசுவாசம் அதைக்காட்டிலும் மேலானது அல்லவா! அந்த விசுவாசம் சோதிக்கப்படும்படியாக தேவன் நம்மை ஒப்புக்கொடுத் திருக்கிறார். தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. பிசாசு அநேகவேளைகளில் நம்மை சோதிக்கும்படியாக உத்தரவு கேட்டுக்கொள்கிறான். ஆகையால் தேவன் பிசாசுக்கு அனுமதி கொடுக்கிறார்.

யோபுவின் விசுவாசம் சோதிக்கப்படும்படியாக கர்த்தர் சாத்தானுக்கு அனுமதிகொடுத்ததை நாம் யோபு புத்தகத்திலே வாசிக்கிறோம். "அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, யோபின் உள்ளங்கால்தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னமும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை" என வாசிக்கிறோம் (யோபு 2:7–10). யோபுவுக்கு வந்தது போல, சோதனை வந்தவுடன் அநேகர் சோர்ந்துபோய் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போகின்றனர். ஆனால், யோபு உறுதியுடனிருந்து இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான்.

விதைவிதைக்கிற உவமையிலே கர்த்தர் சொல்லும்போது; கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே



வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியினாலே, கொஞ்சக்காலமத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள் என்று சொல்லுகிறார். ஆம், எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே, இப்படியே அநேகர் வீழ்ந்துபோகின்றனர். நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை உங்களுடைய இருதயத்தின் ஆழத்தில் வைத்திருக்கிறீர்களா? இருதயத்தின் ஆழத்தில் வைத்து பலன் கொடுங்கள். நல்ல மனுஷன் தன் இருதயமாகிய பொக்கிஷத்தில் வைத்து பலன்கொடுக்கிறான் என்று நாம் பின்னுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். வழியருகே விதைக்கப்பட்ட விதையைப்போல கர்த்தருடைய வசனத்தை உதாசினப்படுத்திவிடாதீர்கள். கர்த்தர் அதற்கேற்ற பலனைக்கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு அவைகளில் நிலைத்திருங்கள். நம்முடைய தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிற தேவன். இஸ்ரவேலின் ராஜாவைப்பார்த்து எலிசா தீர்க்கதரிசிசொன்ன வார்த்தை; "கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்" (2இரா.3:16,17). அன்பானவர்களே, உங்கள் வாழ்நாட்களில் சந்தேகப்படாமல் இந்த அற்புதமான தேவனை நோக்கி விசுவாசத்துடன் கேளுங்கள். அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன்.

சாறிபாத் ஊரிலே இருந்த ஒரு விதவைப்பெண்ணுக்கு ஒரு பரீட்சை வந்தது. என்னவென்றால் எங்கும் வறட்சி. பானையில் ஒரு பிடிமாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே இருந்தது. அதை ஆயத்தப்படுத்தி சாப்பிட்டு செத்துப்போக இரண்டு விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது எலியா தீர்க்கதரிசி இவளிடம் அனுப்பப்பட்டார். அவர் வந்து அவளைப் பார்த்து கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா என்றார். அவள் தன்னுடைய கதையை சொன்னாள். "அப்பொழுது எலியா அவளைப்பார்த்து: பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக்

கட்டளையிடும் நாள்மட்டும் பானையில் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை'' (1இரா.17:13–16). இந்த விசுவாச பரீட்சையிலே சாறிபாத் விதவைப்பெண் சோர்ந்துபோய், எங்களுடைய சாப்பாட்டிற்கு இந்த தீர்க்கன் பங்குபோட வந்துவிட்டான் என்று எண்ணியிருப்பாளேயானால், மரித்துபோயிருப்பாள், தேவஆசீர்வாதத்தையும் பெற தவறியிருப்பாள். தேவனுடைய மனுஷனாகிய எலியாவின் வார்த்தையின்படியே செய்தபடியால் காக்கப்பட்டாள், அவளுடைய குடும்பமும்காக்கப்பட்டது. இவளைப்போல சோர்ந்துபோகாது விசுவாச பரீட்சையில் நிலைத்திருங்கள்.

**கேள்வி நேரம்**

**விசுவாசபரீட்சை எல்லோருக்குமே வருமா?**

''சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்'' என்று யாக்.1:12–ல் வாசித்தோம். பூமியிலே மனுஷனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சோதனை உண்டு. இதை சகிக்க, சரீரத்தில் வரக்கூடிய வேதனைகளை எப்படி சகிக்கிறோமோ அதைப்போல சகிக்கவேண்டும். யாக்கோபு சொல்லுகிறார்; ''என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்'' என்கிறார் (யாக்.1:2,3). வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பார்கள். அதைப்போல நமக்கு வரக்கூடிய சோதனைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும்போது அது நமக்கு வேதனையைக்கொண்டுவரமுடியாது. ஆகையால்தான் பவுல் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்கிறார். நீங்கள் விசுவாச பரீட்சையில் வெற்றி பெற ஜெபிக்கிறோம்.

**"தன் வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம்"**
**நீதிமொழிகள் 14:8**



## 47. நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம்
## Why We are the Member in the Church of Christ

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உலகரட்சகர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம் – Why we are the member in the church of christ. இதற்கான பதிலை வேதாகமத்தில் நாம் பார்க்கிறோம். வேதாகமம் 66 புத்தகங்களைக் கொண்டது. இதில் புதியஏற்பாட்டில் மட்டும் 27 புத்தகங்கள் இருக்கின்றன. நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம்? என்ற கேள்விக்கு என்னால் வேதாகமத்திலிருந்து 66 வசன ஆதாரத்துடன் விளக்கங்களைக் கொடுக்க முடியும். அதற்கு மேலும் கொடுக்க முடியும். ஆனால் நீங்கள் புரிந்துகொள்ளும்படி புதியஏற்பாடு புத்தகங்கள் 27 அதை ஞாபகத்தில் வைத்திருப்பதைப்போல, ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத்தக்கதாக 27 வசன ஆதாரத்துடன் விளக்கங்களைக் கொடுக்க விரும்புகிறேன்.

**1. இது கிறிஸ்துவினால் கட்டப்பட்டது.** ''மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' (மத்.16:18).

**2. தேவன் ஆதியிலே முன்னுரைத்தார்.** ''உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்'' (ஆதி.3:15).

**3. இது தீர்க்கதரிசனத்தின்படியாக முன்னுரைக்கப்பட்டது.** ''கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில்

சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்'' (ஏசா.2:2,3).

**4. கிருபையும் சத்தியமும் இவர்மூலமாகவே உண்டாயின.** ''எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின''(யோவா.1:17).

**5. அவரே வாசல்.** ''நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்'' என்றார் (யோவா.10:9).

**6. அவரே நல்ல மேய்ப்பர்.** ''நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்'' என்றார் (யோவா.10:11)

**7. அவரே உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கும்படி தேவனால் அனுப்பப்பட்டவர்.** ''மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்றான் (யோவா.1:29).

**8. வேறொருவராலும் நமக்கு இரட்சிப்பு இல்லை.** ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' என பேதுரு குறிப்பிடுகிறார் (அப்.4:12).

**9. அவரை அறிவது நித்தியஜீவன்.** ''ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்'' (யோவா.17:3).

**10. அவருடைய வார்த்தைகள் ஒழிந்துபோகாது.** ''வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை'' என்கிறார் (மத்.24:35).

**11. நாம் அவருடைய நாமத்தினாலே கூடிவரவேண்டும்.** ''ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்'' (மத்.18:20).

**12. நாம் எதைச்செய்தாலும் அதை கர்த்தருடைய நாமத்தினாலே செய்யவேண்டும்.** ''வார்த்தையினாலாவது



கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்'' என்கிறார் பவுல் (கொலோ.3:17).

**13. நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறோம்.** ''நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்'' (எபே.5:30).

**14. அவரே அதன் தலைவர்.** ''கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்'' (எபே.5:23).

**15. சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** ''ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்'' (எபே.5:24).

**16. சபையிலே இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே மகிமையுண்டாக வேண்டும்.** ''சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்'' (எபே.3:21).

**17. பிதாவானவர் தம்முடைய குமாரனுக்குச் செவிகொடுக்கும்படியாக சொல்லுகிறார்.** ''இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்'' என்றார் (மத்.17:5).

**18. அவர் தன்னிடத்தில் வருகிறவர்களை புறம்பே தள்ளாதவர்.** ''பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை'' (யோவா.6:37).

**19. அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை.** ''இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று'' (ரோம.9:33).

**20. அவரே சபையில் சேர்க்கிறார்.** ''தேவனைத் துதித்து ஜனங் களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்'' (அப்.2:47).

**21. அவருடைய பிரமாணம் நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கிற்று.** "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோம.8:2).

**22. சாபத்திலிருந்து நம்மை மீட்டுக்கொண்டார்.** "மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா.3:13).

**23. நம்மை ஐசுவரியவான்களாக மாற்ற அவர் தரித்திரரானாரே.** "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2கொரி.8:9).

**24. நாம் அவரை விசுவாசிக்கிறபடியால் மரித்தாலும் பிழைப்போம்.** "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவா.11:25).

**25. நாம் அவருக்குள் மரித்தால் அவருடைய வருகையில் உயிரோடு எழுப்பப்படுவோம்.** "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1தெச.4:16).

**26. அவரில் நிலைத்திருந்து வெற்றி கொண்டால் அவரோடு உட்காரும் பாக்கியம் கிடைக்கும்.** "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளு கிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளி.3:21).

**27. நாம் முடிவு பரியந்தமும் அவரில் நிலைத்திருந்து அவரை மகிமைப்படுத்தினால் நாம் இரட்சிக்கப்படுவோம்.** "முடிவுபரியந்தமும் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்.24:13).

இச்செய்தியை கேட்கும் அன்பர்களே, நாம் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறோம்? என்ற கேள்விக்கு 27 விளக்கங்களை பார்த்தோம். இது மட்டுமல்ல இன்னும் அநேக விளக்கங்கள் இருக்கின்றது. அவருடைய நாமம் மிக முக்கியம். அவருடைய நாமத்தினாலே நாம்



இரட்சிக்கப்படுகிறோம். மற்றபடி நம்முடைய விசுவாசம் விருதா! அவருடைய நாமத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். ஏனென்றால் "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என்கிறார் (யோவா.12:48). பெயரில் என்ன இருக்கிறது என்ற அநேகருடைய அலட்சியப்போக்கு முடிவில் ஆக்கினைத்தீர்ப்பைக்கொண்டுவரும். ஆகையால் இவைகளைக்குறித்து கருத்தாய் தியானியுங்கள்.

**கேள்வி நேரம்**

**பூமியிலே வேறொரு நாமம் கட்டளையிடப்பட்டுள்ளதா?**

"நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என பேதுரு தமது பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார் (அப்.4:12). ஆகையால், ஆதியிலே கூடிவந்த சீஷர்களுக்கு முதல் முதல் அந்தியோகியாவிலே கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது என்று அப்.11:26—ல் வாசிக்கின்றோம். அன்று முதல் இன்றுவரை இனிமேலும் இந்தபெயராலே கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்றே அழைக்கப்படுவார்கள். கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும்போது கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் சபையார் என்றுதான் அழைக்கப்படவேண்டும். முதல் நூற்றாண்டிலே அப்படியே அழைக்கப்பட்டனர் என வசனத்தில் காண்கிறோம். "ஒருவரையொருவர் பரிசுத்தமுத்தத்தோடு வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோம.16:16). அவருடைய நாமத்தினாலே கூடிவருகிற கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவின் சபையார் என்றுதான் பெயர். வானத்திற்கும் பூமிக்கும்மேலான இந்த நாமத்தை மாற்றினால் அல்லது மறுதலித்தால் வெளிப்படுத்தின விசேஷம் 22:19—ல் சொல்லப்பட்டபடி அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.

**"நீதியின் வழியில் உண்டாகும் நரை மயிரானது மகிமையின் கிரீடம்" — நீதிமொழிகள் 16:31**

# 48. மகா தீர்க்கதரிசி
# A Great Prophet

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உன்னதமானவருடைய செய்தியைக் கொண்டுவந்த மகா தீர்க்கதரிசியாகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மகா தீர்க்கதரிசி – A great prophet. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் என்பதை நாம் அறிவோம்.

ஆண்டவர் ஒரு முறை நாயீன் என்னும் ஊருக்குப்போனார்; "அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப்போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊரார்ில் வெகு ஜனங்கள் அவருடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்; வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து: **மகா தீர்க்கதரிசியானவர்** நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று" (லூக்.7:1–17). எந்த ஒரு தீர்க்கதரிசி மூலமாகவும் செய்யப்படாத காரியத்தை இயேசு செய்தபோது, ஜனங்கள் அவரை மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளேதோன்றினார் என்று சொல்லி தேவனை மகிமைப் படுத்தினார்கள் என்று வாசிக்கிறோம்.இச்செய்தியை வாசிக்கும் நண்பரே; இயேசுவானவர்



வானத்திலும் பூமியிலும் முழு அதிகாரம் உடையவராக இருந்தபடியினாலே மரித்தோரை எழுப்புகிற வல்லமை படைத்தவராகயிருந்தார். ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவருமில்லை. ஆனால், இயேசுவை ஜனங்கள் மகா தீர்க்கதரிசியானவர் என்று சொன்னார்கள். "யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள்" (யோவா.10:41). யோவான் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தும் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை என்று பரிசுத்தவேதாகமம் போதிக்கிறது. அப்படியானால் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் ஒவ்வொரு நோக்கத்தோடு பயன்படுத்தப்பட்டார்கள் என நாம் அறிகிறோம். யோவான்ஸ்நானனைப் பொருத்தமட்டில் இயேசுவுக்கு முன்னாக வழியை ஆயத்தம் பண்ணும்படியாக அனுப்பப்பட்டவன் என்று காண்கிறோம். "நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்பாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்" என்றான் (யோவா.3:28). மேலும் இந்தப் பெரிய தீர்க்கதரிசி சொல்லுகிறான்; "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்" என்கிறான் (யோவா.3:30,31).

இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த இந்த யோவான்ஸ்நானகன் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தும் தன்னை பெருமையாக பேசிக்கொள்ளவிரும்பவில்லை தம்மைக்குறித்து பிரசித்தம்பண்ணவுமில்லை ஆனால் அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்றான். இன்றைக்கு யோவானைப் பார்க்கிலும் தங்களை பெரியதீர்க்கதரிசிகளாக நினைத்துக்கொண்டு அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறோம் என்று சொல்லி பூமியை சுற்றி சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள். குருடர் பார்வையடைகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் உயிரோடெழுந்திருக்கிறார்கள் என்று பெரிய பெரிய பேனர்களை கட்டி விளம்பரம் செய்துவருகிறார்கள். ஆனால் யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை என்று வேதம் திட்டமும் தெளிவுமாக சொல்லுகிறது. "யோவான் பிரதியுத்தரமாக: பரலேகத்திலிருந்து ஒருவனுக்கு கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்" என்கிறான் (யோவா.3:27). அன்பு நேயர்களே சிந்தியுங்கள்!

இயேசு தம்முடைய சீஷரை நோக்கி: "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்கும்போது; அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறுசிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்; நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றார் (மத்.16:13–17). இயேசுவை ஜனங்கள் தீர்க்கதரிசிகளில் ஒருவராகவே நினைத்தார்கள். அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய பேதுருவோ நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொன்னான். பிரியமானவர்களே, நீங்கள் இயேசுவை யார் என்று எண்ணுகிறீர்கள். அப்போஸ்தலனாகிய பேருது கூறியது போல, அவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர். ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து. "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:3).

அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த விதமான பிறப்பைப் நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? அவர் தேவாலயத்திலும் பெரியவர் என்று வாசிக்கிறோம். "தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.12:6). ஜனங்கள் சாலமோன் கட்டின தேவாலயத்தை பெரிதும் மதித்துவந்தார்கள். அதை தேவனுடைய வீடாக கருதினார்கள். ஏனென்றால் எருசலேமைக் கர்த்தர் தம்முடைய நகரமாக தெரிந்துகொண்டார். இருந்தபோதிலும் கைகளினால் கட்டப்பட்ட



கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. அந்த ஆலயத்தைக் காட்டிலும் பெரியவர் என்று தம்மை அறிமுகம் செய்து கொள்வதை நாம் வாசிக்கிறோம். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே யோனாவிலும் பெரியவர், சாலமோனிலும் பெரியவர், தேவாலயத்திலும் பெரியவர் என பாட்டு பாடுகிறோம். நாம் அவரை பெரியவராகவே கருதுகிறோமா? ஆம், அவர் மகா பெரிய தீர்க்கதரிசியே. "அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல" என்கிறான் யோவான் (யோவா.1:27).

"ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசுதாமே சொல்லியிருந்தார்" (யோவா.4:44). அந்தப்படியாக யூதர்களும் எருசலேம் நகரத்தார் அனைவரும் அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறம்பாக்கி சிலுவையில் அறையும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். "இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா?" என்று சொல்லி அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். ஆகையால் தான் ஒரு தீர்க்கதரிசி தன் சொந்த ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். கொஞ்சங்குறைய தீர்க்கதரிசிகள் எல்லோரும் குடும்பத்திலிருந்தும், ஊரிலிருந்தும் கர்த்தரால் பிரித்தெடுக்கப்படுகிறார்கள். மோசே ஒரு தீர்க்கதரிசி அவர் தேவனால் மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். எலியா சுழல்காற்றினால் வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். யோவான்ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்டார். இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளைக் கொண்டு திருவுளம் பற்றிக்கொண்டுவந்த தேவன் இந்தக் கடைசி நாட்களில் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாக திருவுளம்பற்றியிருக்கிறார். அவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். அவர் உலகத்தில் இருந்தார் உலகம் அவரை அறியவில்லை. அதைப்போல அவரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளையும் அறியவில்லை. அதைப்போல நம்மையும் அறியவில்லை.

"இப்படியிருக்க பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். வீட்டை

உண்டுபண்ணினவன் வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அதுபோல மோசேயைப்பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்'' (எபி.3:1–3). யூதர்கள் அவரை ஒரு மகா தீர்க்கதரிசி நம்மில் தோன்றியிருக்கிறார் என்று சொல்லி அவரை ஒரு தீர்க்கதரிசியைப்போல எண்ணி அத்தோடு நின்றுவிட்டார்கள். அன்பானவர்களே, நீங்களும் அப்படியே நின்றுவிடாமல். அவர் மோசேயைப் பார்க்கிலும் பெரியவர் என்று அறிந்துகொள்ளுங்கள். ''கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டகுமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டுதலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்'' (எபி.3:6). மேற்பட்டவர் என்று பார்க்கும்போது எல்லாரிலும் மேலானவர். அவருக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. அந்த அதிகாரம் முழுவதையும் பிதாவாகிய தேவன் அவருக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் கர்த்தருடைய வீடாக, அவர் உங்களிலே வந்து வாசம்பண்ணும் வாசஸ்தலமாக மாறுங்கள்.

**கேள்வி நேரம்**

**வேறொரு தீர்க்கதரிசி வரக்காத்திருக்கவேண்டுமா?**

இக்கேள்வியை யோவான் கேட்டார். வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி தம்முடைய இரண்டு சீஷரை அனுப்பினான். அதற்கு கர்த்தர்; நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள். ''குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது'' என்றார் (மத்.11:5). இவ்வளவு அற்புதங்களை எந்த ஒரு தீர்க்கதரிசியும் செய்யவில்லை. ஆகையால் இவரே மகா பெரிய தீர்க்கதரிசி என்றும், உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்க தேவனால் அனுப்பப்பட்ட தேவ ஆட்டுக்குட்டி எனவும் அறிகிறோம். நீங்களும் இவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான்"**
**நீதிமொழிகள் 14:2**



## 49. இயேசு மனதிரக்கமுள்ளவர்
## Jesus Is Compassion

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் மனதிரக்கமுள்ளவர் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இயேசு மனதிரக்கமுள்ளவர் – Jesus is Compassion. ஆண்டவர் இயேசு மனதிரக்கமுள்ளவர் என்பதை நாம் எப்படி அறிந்துகொள்ள முடியும்? பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக நாம் அறிய முடியம். ஒரு முறை இயேசு எரிகோவிலிருந்து புறப்பட்டுப்போகையில் திரளான ஜனங்கள் அவருக்குப்பின் சென்றார்கள். ''அப்பொழுது வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர் இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு, ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்'' (மத்.20:30). இந்த இரண்டு குருடரும் இயேசுவைக் குறித்து அவர் மூலமாக குருடர் பார்வையடைகிறார்களென்றும், சப்பாணிகள் நடக்கிறார்களென்றும், செவிடர் கேட்கிறார்களென்றும் கேள்விப்பட்டிக்கக் கூடும். ஆனபடியினால், இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன் ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் கூட கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, ''வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள் தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்'' என்றார் (மத்.11:3–6). யோவான்ஸ்நானன் முதற்கொண்டு அப்பொழுதிருந்த அனைவரும் இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டார்கள். கேள்விப்பட்ட அவர்கள் அவரை விசுவாசித்து அவரைப் பற்றிக்கொண்டனர். ஒரு

மனிதனுக்கு விசுவாசம் கேள்வியினாலே வருகிறது, கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வருகிறது என்று ரோமர் புஸ்தகத்தில் வாசிக்கிறோம்.

இந்த இரண்டு குருடரும் இயேசு எப்படிப்பட்டவர் என்பதை பார்த்ததில்லை, ஏனென்றால் அவர்களுக்கு பார்வையில்லை. ஆனால் காதார கேள்விப்பட்டார்கள். கேள்விப்பட்ட இவர்கள் அத்தோடு நின்று விடாமல் தாங்கள் எப்படியாவது இயேசுவின் மூலம் பார்வையடையவேண்டும் என்ற ஆவலோடிருந்தபடியால் இயேசுவை நோக்கி கூப்பிட ஆரம்பித்தார்கள். இன்றைக்கு இந்த ஆண்டவர் இயேசுவை நீங்கள் கேள்விப்பட்டிருக் கிறீர்களா? அவர் மனிதனுடைய பாவத்தை போக்கும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது;'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (1தீமோ.1:15). இந்த இரண்டு குருடரும் தங்களுக்கு பார்வையளிக்க அவரால் கூடும் என்று விசுவாசம் கொண்டிருந்தனர். இயேசுவை நோக்கி அவர்கள் கூப்பிடுகையில், ''அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள். அவர்களோ: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்'' என்று மத்.20:31–ல் வாசிக்கிறோம். ஜனங்களுடைய அதட்டுதலுக்கு அவர்கள் பயப்படவில்லை. தாங்கள் எப்படியாவது இயேசுவினால் பார்வையடைய வேண்டும் என்ற நோக்கத்தோடிருந்த படியால் அதிகமாய்க் கூப்பிட ஆரம்பித்தார்கள்.

இன்றைக்கு அநேகர் தேவனை நோக்கி ஜெபிக்க வெட்கப்படுகிறார்கள். நமக்கு நன்மை வேண்டுமானால் நாம் தான் ஊக்கமாக ஜெபிக்கவேண்டும். ஜனங்களைப் பொருத்தமட்டில் அவர்களும் வாழமாட்டார்கள், வாழவிரும்புகிறவர்களையும் வாழவிடமாட்டார்கள். அந்தப்படியாக இந்த குருடர்களுக்கு நன்மைசெய்யவில்லை. நன்மைசெய்கிற இயேசுவைநோக்கி: இந்த குருடர்கள் கூப்பிடும்போது ஜனங்கள் அதட்ட ஆரம்பித்தார்கள். இன்றைக்கும் இந்த நிலை நீடிக்கிறது. ஆனால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் மனிதனுடைய பயமுறுத்தலையும், அச்சுறுத்தலையும், தடையையும் மீறி அவரை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு நன்மைசெய்கிறார். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று சொன்ன கர்த்தர் ''....அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து: நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்



என்றிருக்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்றார்கள். இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்'' (மத்.20:32). என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா!

இயேசுவைக் குறித்து கேள்விப்பட்ட ஒவ்வொருவரும் அவருடைய நாமத்தினாலே எதையாகிலும் கேட்டுப் பெற்றுக்கொள்ள பாத்திரவான்களா யிருக்கிறார்கள். ''நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத்தருவார். இதுவரைக்கும் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் என்று தம்முடைய சீஷர்களை நோக்கி சொல்லியதை நாம் யோவா.16:23,24 வசனங்களில் வாசிக்கிறோம். இன்றைக்கு அநேகர் இயேசுவை பெற்றெடுத்த மரியாளை நோக்கி வேண்டிக்கொள்கிறார்கள். இந்த குருடர்கள் இயேசுவை பெற்ற தாய் மரியாளையும் அறிந்திருந்தனர், இயேசுவோடு வந்த சீஷர்களையும் அறிந்திருந்தனர். ஆனால் இவர்கள் மரியாளையோ அல்லது அவருடைய சீஷர்களையோ நாடவில்லை. இயேசுவை நோக்கி கூப்பிட்டார்கள். இரட்சிக்கக்கூடிய இரட்சகரைநோக்கி கூப்பிடுவதை விட்டு இரட்சகரை பின்பற்றுகிறவர்களை நோக்கி ஜெபிப்பதால் பயன் இல்லை. நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் நாமத்தில் பிதாவைநோக்கி வேண்டிக்கொள்ளமுடியும். படிக்கத்தெரியாதவர்கள் பஸ்நிலையத்தில் ஐயா இந்த பஸ் எங்கேபோகும் பார்த்துச் சொல்லுங்கள் என்பார்கள். படிக்கத் தெரிந்த நபர்கள் யாரையும் கேட்கமாட்டார்கள் பஸ்ஸை பார்த்து போகவேண்டிய இடத்திற்கு பஸ் ஏறி செல்வார்கள். அன்பானவர்களே, இயேசுவைக் குறித்து கேள்விப்பட்ட நீங்கள் அவர் மூலமாக பிதாவை நோக்கி ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய வேண்டுதலுக்கு கர்த்தர் செவிகொடுப்பார். நீங்கள் ஜெபகோபுரத்தையும் நாடவேண்டிய அவசியமில்லை அல்லது Prayer Cell –யும் நாடவேண்டிய அவசியமில்லை. இந்த குருடர்களைப்போல யார் தடுத்தாலும் ஊக்கமாக ஜெபித்து ஆசீர்வதிக்கப்படலாம்.

''சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார். ஒரு பட்டணத்தில் ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப்

பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய், எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணினாள். வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படி தேவன் தம்மைநோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாதிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (லூக்.18:1–8). ஆகையால் அன்பானவர்களே, பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான் என்ற வசனத்தின்படியாக பிதா ஒவ்வொருவரையும் தம்முடைய நிலையான ராஜ்யத்திற்கு தெரிந்துகொள்கிறார். நீங்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கிறிஸ்தவராக இருந்தால் சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள். உங்கள் நம்பிக்கை வீண்போகாது. ஏனென்றால் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ள வராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று நாம் வாசிக்கிறோம். இந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்துகொண்டு தொடர்ந்து ஊக்கமாக ஜெபியுங்கள். கர்த்தர் ஏற்றவேளையில் உங்கள் வேண்டுதலைக்கேட்டு உங்களுக்கு நன்மைகளைச் செய்வார்.

''நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்'' (1யோவா.5:14,15). இந்த விதமான நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? ஒரு தாய் தன் பாலகனை மறப்பாளோ அப்படி அவள் மறந்தாலும் நான் உங்களை மறப்பதில்லை என்று கர்த்தர் சொன்ன வசனத்தை நினைவுகூருங்கள். நாம் வேண்டிக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் அதிகமாய் நமக்கு



நன்மைசெய்கிறவர் தேவன் ஒருவரே.

இச்செய்தியை கேட்கிற எனதருமை சகோதரனே, சகோதரியே ஆண்டவர் இயேசுகிறிஸ்து உலக இரட்சகர். அவர் மூலமாக பிதாவாகிய தேவனை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிற காரியங்களுக்கு பிதாவாகிய தேவன் செவிகொடுத்து உங்களுக்கு அநுகிரகஞ்செய்வார். இயேசுகிறிஸ்து மனதுருக்கமுள்ளவர். நாயீன் ஊர் விதவைக்கு இரங்கினார் ''கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார் அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்'' (லூக்.7:13–15). விதவையின் அழுகையை கண்ட கர்த்தர் அவள்மேல் மனதுருகி ஒரே ஒரு வார்த்தையினால் அந்த வாலிபனை உயிருள்ளவனாக அவனுடைய தாயினிடத்தில் ஒப்புவித்தார். மரித்தோரை உயிரோடு எழுப்புகிற கர்த்தர் இருக்கும்போது கவலை எதற்கு? உன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு. உன் நம்பிக்கை வீண்போகாது. அவர் ஏற்றவேளையில் உனக்கு உதவி செய்வார். நீ அவர்மூலமாக உன் தேவைகளுக்காக தேவனை நோக்கி வேண்டிக்கொண்டே இரு. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

**கேள்வி நேரம்**

**யாரை நோக்கி ஜெபிக்கவேண்டும்? இயேசுவை நோக்கியா அல்லது பிதாவை நோக்கியா?**

இதற்கு இயேசுவே பதில் சொல்லுகிறார்: ''நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்'' (யோவா.16:23). அப்படியானால், நாம் இயேசுவின் நாமத்தில் பிதாவாகிய தேவனை நோக்கி ஜெபிக்கவேண்டும். ''மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' (எபி.7:25). இதை நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? அப்படியானால் இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் கேட்டு ஆசீர்வதிக்கப்படுங்கள்.

## 50. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஏழுவிதமான ஆசீர்வாதங்கள்
## Seven Blessings for Those Who are In Christ

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் திராட்சசெடியாகிய இயேசுவின் உன்னதமான நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஏழுவிதமான ஆசீர்வாதங்கள் – Seven blessings for those who are in Christ. ஆசீர்வாதத்தைத்தேடி அலைந்தோடும் இந்நாட்களில் ஆசீர்வாதம் எங்கே இருக்கிறது, அதைப்பெறுவதற்கான வழிகள் என்ன என்பதைக்குறித்து தியானிப்போம். ஆசீர்வாதங்கள் அனைத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் வைத்திருக்கிறார். அவைகளில் ஏழு விதமான ஆசீர்வாதங்களை இங்கே காண்போம்.

**முதலாவது ஆசீர்வாதம்:** ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது புதுசிருஷ்டியாக மாற்றப்படுகிறான். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என பவுல் கொரிந்துசபைக்கு எழுதுகிறார் (2கொரி.5:17). கிறிஸ்துவுக்குள் என்றால் அவருக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் என்று அர்த்தம். நாம் அவருக்குள் இருக்க என்ன செய்யவேண்டும்? கிறிஸ்துவினுடைய உபதேசத்தை ஏற்று, விசுவாசித்து, அதற்கு கீழ்ப்படிந்து, கர்த்தராகிய இயேசுவை வாயினாலே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டுவருகிறார். இவர்கள் கர்த்தரால் தம்முடைய வசனத்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். இவர்களே புதுசிருஷ்டி என வேதாகமம் போதிக்கிறது.

**இரண்டாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த நாமம் சாதாரண நாமமல்ல. முதல்நூற்றாண்டில் "அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச்சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக்



கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப்.11:26). இந்த சீஷர்கள் ஒரு வருஷகாலமாக சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு தாங்கள் பெற்றுக்கொண்ட ஆன்மீக இரட்சிப்பை எடுத்துச் சொன்னார்கள். இவர்கள் கிறிஸ்துவினுடைய உபதேசத்தில் நிலைத்திருந்தபடியால் இந்த சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இவர்கள் உறுதியாய் நிலைத்திருந்தவர்கள், கிறிஸ்துவினுடைய சிந்தையை பெற்றவர்கள், கிறிஸ்துவின் சரீரமாக இருந்து செயல்பட்டவர்கள் மொத்தத்தில் கிறிஸ்துவை பிரதிபலிப்பவர்களாயிருந்து செயல்பட்டவர்கள். எல்லாருக்கும் இந்த நாமம் கொடுக்கப்படவில்லை. சபையோடே கூடியிருந்த அந்த சீஷர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. ஒருவர் தன்நாட்டைப்பற்றியும், தன் குலத்தைப்பற்றியும் பெருமையாக பேசுவார். ஆனால் அதற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு விஷயம் என்னவென்றால் இந்த அழியாத நாமத்தை பெற்றுக்கொள்வதுதான்.

**மூன்றாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது உங்களுடைய நாமங்கள் பரலோகத்திலே ஜீவபுத்தகத்தில் எழுதப்படுகிறது. ஆண்டவர் தம்முடைய சீஷர்களைப்பார்த்து: "ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்.10:20). பரலோகத்திலே பேர் எழுதப்பட வேண்டுமானால் அது சாதாரண காரியம் அல்ல. பூமியிலே நல்ல பள்ளிகளில் அட்மிஷன் வாங்கிவிடலாம். அல்லது ரயிலில் நல்ல இருக்கைகளை ரிசர்வ் செய்து விடலாம் ஆனால் பரலோகத்தில் உங்களுடைய பெயர் எழுதப்படவேண்டுமானால், நீங்கள் தேவனால் முன்குறிக்கப்பட்டவராகவும், கர்த்தருக்காக வாழ்கின்ற ஒரு மகனாக, மகளாக இப்பூமியிலே சாட்சியுள்ளவர்களாக வாழும்போது உங்களுடைய நாமங்கள் பரலோகத்திலே உள்ள ஜீவபுத்தகத்தில் எழுதப்படும்.

**நான்காவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லலாம். இந்த உறுதியை அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின புத்தகத்தில் 1:21–ல் குறிப்பிடுகிறார். மனிதனுக்கு இரண்டுவிதமான சம்பவங்கள் பூமியில் நடைபெறுகிறது. ஒன்று பிறப்பு மற்றொன்று இறப்பு. பிறக்கும்போது பாவமில்லாமல் பிறந்து, மரிக்கும்போது பாவியாக மரிக்கின்றனர். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக இருந்து மரிப்பானேயானால்

அவன் பாவமில்லாமல் மரிக்கின்றான். அதைத்தான் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லுகிறார். மரணத்திற்கு பின் தேவனோடு நித்திய நித்தியமாக வாழப்போகிறோம் என்ற சந்தோஷத்தில் சாவு எனக்கு ஆதாயம் என்று பவுல் சொல்லுகிறார். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை எழுதிய யோவான் ''பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று'' என்கிறார் (வெளி.14:13). எத்தனை அருமையான ஆசீர்வாதம் என்று பாருங்கள். இது கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்களுக்கு மட்டுமே இருக்கிறதான ஆசீர்வாதம். இதைப்பெற்றுக்கொள்ள கர்த்தருக்குள்ளாக வாழவேண்டும். பெயர் கிறிஸ்தவர்களாக இருந்து மரிப்பதால் பயனில்லை.

**ஐந்தாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது நிலையான ஸ்தலத்தை பெறுவோம். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார். நமக்காக ஜீவனையே சிலுவையில் ஒப்புக்கொடுத்தவர், நமக்காக பரிந்துபேசுகிறவர், நமக்காக நித்திய மீட்பை உண்டுபண்ணினவர் இயேசுகிறிஸ்து ஒருவரே. அவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து சொல்லுகிறார்; ''நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்'' என்றார் (யோவா.14:3). எவ்வளவு அருமையான வாக்குத்தத்த வார்த்தை என்பதைப்பாருங்கள். கண்ணீரோடு இருக்கிற சிறுவனை பார்த்து அழாதே, நான் உனக்கு நலமானதைச் செய்வேன் என்றால் அச்சிறுவன் அதைநினைத்து எவ்வளவு ஆனந்தம் கொள்ளுவான். அதைப்போல ஆண்டவர் இவ்வுலகத்திலே மிகவும் வேதனையோடு போராடிக்கொண்டு இருக்கும் தம்முடைய சீஷர்களை பார்த்து உங்களுக்காக ஒரு ஸ்தலம் உண்டு என்னோடு அங்கிருப்பீர்கள் என்றால் அது எத்தனை அருமையான ஆசீர்வாதம்! இந்தவிதமான நம்பிக்கை வேறு எங்காவது உண்டா? அன்பானவர்களே, கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நலமானவைகளைக் கொடுக்க அறிந்திருக்கிறார்.

**ஆறாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது அவர் நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். கர்த்தர்



தம்முடைய ஜனங்களை அறிவார். ஆகையால் ''தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' (எபி.7:25). மனிதன் இரட்சிப்புக்காக கடல்கடந்து செல்லுகிறான், ஏறாத மலைகளிலெல்லாம் ஏறுகிறான். தேவனால் தெரிந்தெடுத்த இயேசுவையும் அவருக்குள் இருக்கும் இரட்சிப்பையும் அறியாமல் போய்விடுகிறான். பிதாவாகிய தேவன் மனுஷகுமாரனாகிய இயேசுவை முன்குறித்திருக்கிறார். இவரைக்கொண்டு உலகங்களை உண்டாக்கினார். இவர் மூலமாக உலகத்தின் பாவத்தைப்போக்கும்படியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்து தமது வல்லமையுள்ள கரத்தினால் அவரை உயிரோடு எழுப்பினார். ஆகையால் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இயேசுவானவர் அவருக்குள் இருப்பவர்களை இரட்சிக்கவும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக எப்பொழுதும் வேண்டுதல் செய்கிறவராயிருக்கிறபடியால் அவர்களை எந்த சூழ்நிலையிலும் இரட்சிக்கவும் அதாவது காப்பாற்றவும் வல்லவராயிருக்கிறார்.

**ஏழாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது அவர் உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. நான் பூரணமாயிருக்கிறேன் என்று சொல்லத்தக்கவன் இல்லை. ஏனென்றால், எல்லாம் அநுபவித்த சாலொமோன் ராஜா தனது பிரசங்கி புத்தகத்தில்; ''இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையையும் காண்பதில்லை; எல்லாரும் ஒரே இடத்துக்குப் போகிறார்கள் அல்லவா? (பிர.6:6,7). ஆக, மனிதன் குறையோடு எல்லாவற்றையும் விட்டு மண்ணுக்கு திரும்புகிறான். படித்தவன், பாமரன், ஏழை, பணக்காரன், வியாதியுள்ளவன், வியாதியற்றவன், கடன்காரன், கடனில்லாதவன் என்ற வித்தியாசமில்லை எல்லாரும் ஒரே இடமாகிய மண்ணுக்குத்திரும்புகிறார்கள். ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு திரும்புகிறது. அவன் கிறிஸ்துவுக்குள் வாழ்வானேயானால் அவனுடைய குறைபாடுகள் மகிமையிலே பார்த்துக்கொள்ளப்படும். இதைத்தான் பவுல் ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்''என்கிறார் (பிலி.4:19).

இந்தப்படியே ஏழு விதமான ஆசீர்வாதங்களை ஏழு சபைகளுக்கு ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். **1. எபேசு சபைக்கு எழுதும்போது;** ''ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது என்கிறார்'' (வெளி.2:7). **2. சிமிர்னா சபைக்கு எழுதும்போது;** ''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்கிறார்'' (வெளி.2:10). **3. பெர்கமு சபைக்கு எழுதும்போது;** ''புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது என்கிறார்'' (வெளி.2:17). **4. தியத்தீரா சபைக்கு எழுதும்போது;** ''விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் என்கிறார்'' (வெளி.2:26–28). **5. சர்தை சபைக்கு எழுதும்போது;** ''ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் என்கிறார்'' (வெளி.3:5). **6. பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது;** ''என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந் திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் என்கிறார்'' (வெளி.3:12). **7. லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது;** ''நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன் என்கிறார்'' (வெளி.3:21). கிறிஸ்துவுக்குள் இருந்துகொண்டு வரக்கூடிய ஏழு ஆசீர்வாதங்களையும் பெற ஆயத்தப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**இந்த ஆசீர்வாதத்திற்கு புறம்பே யாரெல்லாம் இருப்பார்கள்?**

''நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்'' (வெளி.22:15). நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? அல்லது கிறிஸ்துவுக்கு புறம்பாக இருக்கிறீர்களா? இன்றே தீர்மானம் செய்யுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 51. காலை, மாலை, மதியம்
## Evening, Morning, and Noon

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நேரங்களை நமக்கு உண்டாக்கிக்கொடுத்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காலை, மாலை, மதியம் – Evening, Morning and Noon. காலை மாலை மதியம் இவ்வேளைகளை கர்த்தர் உண்டாக்கினார். இந்த மூன்று வேளைகளிலும் கர்த்தருக்கு துதி ஸ்தோத்திரம் செலுத்தி ஜெபம்பண்ணின நம்முற்பிதாக்களைக் குறித்து இவ்வேளையில் தியானிக்கவுள்ளோம். நாம் மூன்றுவேளை எதற்காக சாப்பிடுகிறோம்? நம்முடைய சரீரம் சோர்ந்துபோகாதிருக்கவும், சரீரத்தில் நல்ல திடகாத்திரமாக இருந்து உழைக்கவும் தினமும் மூன்றுவேளையும் சாப்பிடுகிறோம். அதைப்போல நம்முடைய ஆத்துமாவில் நாம் சோர்ந்துபோகாதிருக்க தினமும் மூன்றுவேளை ஜெபிக்கவேண்டியவர் களாயிருக்கிறோம் அப்பொழுது நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூரும். தாவீது தமது சங்கீதத்தில் சொல்லியிருக்கிறார் ''அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக்கேட்பார்'' என்றார் (சங்.55:17). நாமும் மூன்றுவேளையும் ஜெபிக்கக்கற்றுக் கொள்ளும்போது தாவீதைப்போல கர்த்தருக்குள் திடமனதாய் இருந்துகொண்டு தேவனை துதித்துப்பாடவும், மகிழ்ச்சியாயிருக்கவும் முடியும். தாவீது எழுதின சங்கீதத்தை வைத்து இன்றுவரை நாம் தேவனை துதித்துப்பாடுகிறோம் அது நம்முடைய ஆத்துமாவிற்கு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவருகிறது.

தாவீதின் வெற்றிக்கும் அவனுடைய ராஜ்யபாரம் நிலைத்திருந்ததற்கும் பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று, அவனுடைய மூன்றுவேளை ஜெபமாகும். மூன்றுவேளையும் தேவனுடைய சமுகத்திற்கு போவது என்பது சாதாரண விஷயம் அல்ல. நாம் அதற்கான வேளைகளை ஒதுக்குவது மிகக்கஷ்டமான ஒன்றுதான். அவ்வாறு ஜெபிக்க நினைக்கும்போதுதான் நம்மை பார்க்க யாராவது வந்துவிடுவார்கள் அல்லது வீட்டில் ஏதாவது ஒரு பிரச்சனை எழும்பும், அதனால் ஜெபிக்க

முடியாமற்போய்விடும். இதெல்லாம் நாம் தேவனிடத்தில் நெருங்கி சேராதிருக்க ஏற்படும் தடைகள். இவைகளைக் கடந்து தேவனிடம் நாம் மன்றாடவேண்டும். வாழ்க்கையில் நாம் பலவகையில் போராடவேண்டியவர்களாகயிருக்கிறோம். போராடாமல் வெற்றியைக் காணமுடியாது. “நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்... மேலும் எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினால் மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதுகிறார் (எபே.6:11,18). தாவீதுக்கு எவ்வளவோ துன்பங்கள் இருந்தது. ஆடுமேய்ப்பனாக இருந்தகாலத்தில் விலங்குகளிடமிருந்து மந்தையைக்காத்தான். கோலியாத்தினிடமிருந்து இஸ்ரவேலை காத்தான். சவுலோ இவனை கொலைசெய்துபோடும்படி பின்தொடர்ந்தான் தாவீதோ கர்த்தர்மேல்வைத்த நம்பிக்கையில் காக்கப்பட்டான்.

இச்செய்தியை வாசிக்கும் அன்பான தேவ ஜனமே, நீ உன் தேவனை நோக்கி தாவீதைப்போல தினமும் மூன்றுவேளையும் ஜெபிக்கக் கற்றுக்கொள். உன் கண்களுக்கு நித்திரையை வரவொட்டாமல் தினமும் மூன்றுவேளை ஜெபி, அப்பொழுது தாவீதுக்கு அருளிச்செய்த காரியங்களை கர்த்தர் உங்களுக்கும் அருளிச்செய்வார். நமதாண்டவரும் தம்முடைய சீஷர்களைப்பார்த்து சொல்லும்போது; “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்”(மத்.26:41). நன்கு ஜெபிக்கவேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது ஆனால் மாம்சமோ அதற்கு இடமளிப்பதில்லை இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகின்றன. ஆகையினாலே நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு எழுதும்போது “இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்” என்று எழுதுகிறார் (1தெச.5:17). இடைவிடாமல் என்று சொல்லும்போது தொடந்து ஜெபிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு நிலத்தை வாங்கி அதில் பயிர் செய்துள்ளீர்கள். அதை தினமும் சென்று பார்த்தால்தான் அது எந்த அளவு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளமுடியும். அதைப்போல நீங்கள் நன்மைகளை தேவனிடத்தில்



இருந்து பெறவேண்டுமானால் உங்களுக்கும் தேவனுக்கும் தொடர்பு இருந்துகொண்டேயிருக்கவேண்டும். வருடத்திற்கு ஒரு முறை ஜெபிக்கும்படியாக தேவாலயத்திற்கு செல்வதோ அல்லது மாதம் ஒரு முறை சபைக்கு செல்வதோ உங்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டுவராது. நீங்கள் முதலாவது இடைவிடாமல் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பழையஏற்பாட்டு புத்தகத்திலே தானியேலை பற்றி படிக்கிறோம்: “தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்” என்று தானி.6:10–ல் காண்கிறோம். இவன் ஒரு ராஜ்யபாரத்தின் கீழாக இருந்தபோதிலும் அந்தக்கட்டளைகளுக்குப் பயப்படாமல், தான் இராஜாதி இராஜாவாக யாரைக் கொண்டிருந்தானோ அந்த தேவனுக்கு பயந்து தன் வேண்டுதலை மூன்றுவேளையும் தெரியப்படுத்தினான். அன்பு பயத்தை புறம்பே தள்ளும் என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார். இந்த அன்பு தானியேலுக்கு அதிகமாய் இருந்தது.

தானியேலைக் குற்றப்படுத்தும்படியாக பிரதானிகளும், தேசாதிபதிகளும், கூட்டங்கூடி ராஜாவினிடத்தில் போய்; எந்த மனுஷனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக்குறித்து விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்படவேண்டும் என்று நீர் கட்டளைப்பத்திரத்தில் கையெழுத்து வைத்தீர் அல்லவா என்றார்கள். அதற்கு ராஜா: அந்தக் காரியம் மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படி உறுதியாக்கப்பட்டதே என்றான். ஆனால், சிறைபிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன் உம்மையும் நீர் கையெழுத்து வைத்துக்கொடுத்த கட்டளையையும் மதியாமல், தினம் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணுகிறான் என்றார்கள். ராஜா இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன்னில் மிகவும் சஞ்சலப்பட்டு, தானியேலைக் காப்பாற்றும்படிக்கு அவன்பேரில் தன் மனதைவைத்து, அவனைத் தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்கு மட்டும் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த மனுஷர்

ராஜாவினிடத்தில் கூட்டமாய் வந்து: ராஜா கட்டளையிட்ட எந்தத் தாக்கீதும் கட்டளையும் மாற்றப்படக்கூடாதென்பது மேதியருக்கும் பெர்சியருக்கும் பிரமாணமாயிருக்கிறதென்று அறிவீராக என்றார்கள். அப்பொழுது ராஜா கட்டளையிட அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து, அவனைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்.

ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான். அந்தப்படியாக தினமும் மூன்றுவேளையும் ஜெபித்துக்கொண்டுவந்த தானியேலை சிங்கங்களின் வாய்க்கு தேவன் தப்புவித்தார். அன்பானவர்களே, கடுமையான சட்டத்தின் மத்தியில் இருந்த தானியேல் பயப்படவில்லை தான் பண்ணும் ஜெபத்தை தொடர்ந்து செய்தான். அதனால் அவன் தேவனால் காக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டான். இன்று மனிதர்களுக்காக அல்ல, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஆசீர்வதிக்கப்பட நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு நீடித்திருக்க மூன்றுவேளையும் ஜெபிக்க மறவாதிருங்கள்.

முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்கள் சீஷர்கள் கூட்டத்தை வரவழைத்து : நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணைசெய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் ''நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்'' என்றார்கள் (அப்.6:4).

அன்பானவர்களே, ஜெபம் மிகவும் முக்கியமான ஒன்று. ஆகையால் இதை ஒரு ஊழியமாக வைத்து செயல்பட்டு உள்ளனர். ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீட்டிற்கு சமம். ஜெபத்தினாலே தான் நாம் பெரிய காரியங்களை சாதிக்கமுடியும். இதிலே முதல் நூற்றாண்டு சபையார் மிகவும் உறுதியுடனிருந்திருக்கிறார்கள். ''அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப்.2:42). ''நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்'' என்று பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.12:12). ஜெபத்தினால் கூடாதது ஒன்றுமில்லை.



ஜெபத்தினால் அநேக காரியங்கள் கேட்கப்படுகிறது. **ஒன்று** ''கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்'' (யோவா.16:24). **இரண்டாவது** ''விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்'' (யாக்.5:15). **மூன்றாவது** ''பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்'' பேதுருவை கர்த்தர் விடுவித்தார் என்று அப்.12:5–ல் வாசிக்கிறோம்.

அன்பானவர்களே, மூன்று முறை ஜெபிப்பதால் அநேக நன்மைகள் நமக்கு உண்டாகிறது. தாவீது, தானியேல் போன்றோர் மூன்றுமுறை ஜெபித்து முன்னேறினர். கர்த்தர் அவர்களை காத்து வழிநடத்தினார் தேவன் அவர்களோடு இருந்தார். இன்று நம்மோடு இருக்க இவ்விதமாக நாமும் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மூன்றுவேளை மாத்திரமல்ல அதற்கு மேலும் நாம் ஜெபிக்க மறந்துவிடாதிருப்போம். நம்முடைய தேவைகளுக்காக, வியாதியுள்ள தேவமனிதர்களுக்காக, பலவிதமான உபத்திரவத்தினால் கட்டுண்டவர்களுக்காக நாம் அநுதினமும் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ''முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது'' பிர.4:12–ம் வசனத்தின் படி இணைந்து ஜெபிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும்.

### கேள்வி நேரம்

**விழித்திருந்து ஜெபிக்கவேண்டுமா?**

ஆம், ஆண்டவர் தம்முடைய சீஷர்களோடு கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு ஜெபிக்க கடந்துசென்றபோது; ''நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்'' (மத்.26:41). உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு என்று சொல்லுவார்கள். அநேகர் தூக்கத்தின் காரணமாக ஜெபிக்க முடியாமற்போய்விடுகின்றனர். இயேசுவோடு சென்ற சீஷர்களும் அவ்விதமாகவே நித்திரைமயக்கத்தினால் ஜெபிக்கமுடியாமல் தூங்கிக்கொண்டிருந்தனர். இவைகளை மேற்கொள்ள விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று கர்த்தர் சொல்லியபடி ஆவியில் உற்சாகமுள்ளவர்களாக விழித்திருந்து ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்'' நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 52. என்னைப்போலாகுங்கள்
## Become Like Me

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்

என்னைப்போலாகுங்கள் – Become like me. என்னைப் போலாகுங்கள் என்ற தலைப்பைப் பார்த்தவுடன் இது என்ன நாம் இவரைப்போல மாறவேண்டுமா? என்று நினைத்து விடாதீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதிய நிருபத்தில் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார். ‘‘சகோதரரே, என்னைப் போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நான் உங்களைப்போலுமானேனே, எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை’’ என்றார் (கலா.4:12). இந்த வார்த்தை அநேகருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும். இவரைப்போல என்றால் இவர் திருமணம் ஆகாதவராயிருந்தார். நாமும் இவரைப்போல திருமணமாகாமல் இருக்கவேண்டுமா? அல்லது இவரைப் பின்பற்றவேண்டுமா? என்ற கேள்வி எழுப்பலாம். அன்பானவர்களே, பவுல் ஒரு காரியத்தைக் குறித்துப் போதிக்கிறார் என்றால் அது நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு எழுப்புதலைக் கொண்டுவரும். என்னைப்போலாகுங்கள் என்ற வார்த்தையை அநேகர் பயன்படுத்தவில்லை. ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் பயன்படுத்தியிருக்கிறார். அவர் அந்த அளவுக்கு கிறிஸ்துவைப் பின்பற்றியிருக்கிறார் என்பது தெரியவருகிறது. மேலும், அந்த வசனத்தின் பின்பகுதியில் நான் உங்களைப்போலுமானேனே என்கிறார். அப்படியென்றால் அவர் முதலாவது அவர்களைப்போல தன்னை மாற்றியிருக்கிறார் என்பது தெளிவாக புரிகிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகத்தை இரட்சிக்க மனிதனாக இப்பூமியில் அவதரித்தார். ‘‘பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்’’ (எபி.2:14). அந்தப்படியே அப்போஸ்தலனாகிய பவுல், அநேகரை இரட்சிக்கும்படி எல்லாருக்கும் எல்லாமானேன் என்கிறார். ‘‘யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு



யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன். நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன். பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்’’ என்கிறார் (1கொரி.9:20–22). சிலர் இவ்வசனங்களை தவறாக புரிந்துகொண்டு குடிகாரர்களை எப்படியாவது இரட்சிக்க வேண்டும் என்று நினைத்து அவர்களோடு சேர்ந்து நானும் குடிக்க ஆரம்பித்தேன் ஆனால் என்னசெய்வது இப்பொழுது நான் அதிலிருந்து விடுபடமுடியவில்லையே. பாவத்தில் விழுந்த ஒரு மனிதனை இரட்சிக்கப்போய் நானும் அந்தப்பாவத்தில் விழுந்துவிட்டேனே என்பார்கள். பாவம் நிறைந்த உலகத்தில் இருக்கிறோம். ஆனால் பாவம் நமக்குள் போகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பாவ வழியில் இருக்கிறவர்களுக்கு சுவிசேஷம் சொல்லவேண்டுமே ஒழிய, நாமும் பாவம் செய்துகொண்டு சுவிசேஷம் அறிவிக்கவேண்டும் என்பதல்ல. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். ஆனால் அவர் பாவம் செய்யவுமில்லை, அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை.

மேலும் பவுல் சொல்லுகிறார்; ‘‘நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையதினம் நீங்களெல்லாரும் தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ள வனாயிருந்தேன்’’ என்கிறார் (அப்.22:3). இன்றைக்கு அநேகருக்கு தன்னுடைய இனத்தைக்குறித்த பெருமையும், படிப்பைக்குறித்த பெருமையும் இருக்கிறது. பவுல் ஒரு சாதாரண மனிதன் அல்ல. எப்படியெனில் வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டவன், வைராக்கியமுள்ள ஒரு தேவமனிதன். இப்படியிருந்தபோதிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக தன்னையே முழுவதுமாக ஒப்புக்கொடுத்து எல்லாருக்கும் எல்லாமானேன் என்கிறான். பவுல் தன்னைக்குறித்து

மேன்மையாக எண்ணியிருப்பாரேயானால் இந்த மாபெரும் ஊழியத்திற்கு தன்னை அர்ப்பனித்து இருக்கமுடியாது. கொரிந்து சபையாருக்கு எழுதும்போது: “நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்” என்கிறார் (1கொரி.11:1). அப்படியென்றால் அதனுடைய அர்த்தம் தான் என்ன? அவர் எப்படி கிறிஸ்துவைப் பின்பற்றுகிறாரோ அந்தப்படியாக நாமும் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறார். அவர் எப்படி கிறிஸ்துவை பின்பற்றினார்? “கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்” என்றார் (கலா.6:17). ஜெராக்ஸ் காப்பி எடுக்கிறோம் எந்தவிதமான மாற்றமில்லாமல் நாம் கொடுத்த பிரதியின் நகல் அப்படியே காப்பியாகி வருகிறது. அதைப்போல கிறிஸ்துவினிடத்தில் காணப்பட்ட அனைத்து நற்கிரியைகளும் நம்மில் காணப்படவேண்டும். நடக்கை, பேச்சு, ஜீவியம் எல்லாம் அப்படியே பிரதிபலிக்கக் கூடியவராக பவுல் காணப்பட்டார். ஆகையால் தான் கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் என்கிறார்.

பேதுருவும் இது குறித்து குறிப்பிடும்போது: “இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்” என்கிறார் (1பேது.2:21). அடிச்சுவடுகளை அடிபிறழாமல் பின்பற்றவேண்டும். அதற்காகவே நம்முடைய ஆண்டவர் மாதிரியை பின்வைத்துப்போயிருக்கிறார். பவுலோ, பேதுருவோ அல்லது மற்ற அப்போஸ்தலர்களோ வேதாகமத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு விரோதமாகவோ அல்லது மாற்றியோ போதிக்க முயற்சிக்கவில்லை. கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டவைகளை பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு போதித்தனர். மேலும் பவுல் சொல்லுகிறார்: “நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்



கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்” என்றார் (பிலி.3:9–11). என்னைப்போலாகுங்கள் என்றால் அவர் முதலாவது கிறிஸ்துவைப் போலுமானார். கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி எல்லாவற்றையும் நஷ்டமென்றும், குப்பையுமாக எண்ணினார். எதற்காக? எப்படியாயினும் கிறிஸ்துவின் வருகையின்போது மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியுடையவனாக மாறவேண்டும் என்பதற்காக அப்படிச்செய்தார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ கிறிஸ்துவுக்காக எதை இழந்திருக்கிறாய்? கிறிஸ்துவை நீ பிரியப்படுத்த வேண்டுமானால் இந்த உலக காரியங்களில் சிலவற்றை நீ வெறுத்து தள்ளியாகவேண்டும். உலகமும் வேண்டும், இயேசுவும் வேண்டுமென்பாயாகில் நீ கிறிஸ்து இயேசுவைப்பிரியப்படுத்த முடியாது.

பவுல் என்னைப்போலாகுங்கள் என்று சொல்வதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் மற்றொன்று; “நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல” (1கொரி.15:9). மனிதன் எதைவிட்டுக்கொடுத்தாலும் தன்னுடைய பதவி, பட்டத்தை விட்டுக்கொடுக்கமாட்டான். ஆனால் பவுல் இங்கே நான் அப்போஸ்தலன் என்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல என்கிறார். இது அவருடைய தாழ்மையைக் காட்டுகிறது. அவர் இந்த மார்க்கத்திற்கு விரோதமாக செயல்பட்டபடியால் அதைநினைத்து நான் இதற்கு தகுதியானவன் அல்ல என்கிறார். ஆனால் தகுதியற்றவர்களை தேவன் தகுதிப்படுத்துகிறார். இது கர்த்தருடைய செயலாக இருக்கிறது. மேலும், “சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ” என்கிறார் (1கொரி.9:16). சுவிசேஷப்பணி ஒரு மேன்மையான பணி. இருந்தபோதிலும் இதிலே மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்னுடைய கடமை என்று குறிப்பிடுகிறார். “நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே” (1கொரி.9:17). உக்கிராண உத்தியோகம் என்று சொல்லும்போது பிறர் பொருளை தன்பொருள்போல்

பாவித்து, பாதுகாப்பது அந்தவிதமான உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டு இருக்கிறதே என்கிறார். ஆகையால் நான் சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவன். நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல நீங்களும் என்னைப்பின்பற்றுங்கள் என்று நம்மை சுவிசேஷ விஷயத்தில் உற்சாகப்படுத்துகிறார். மேலும், பவுலுக்கு இருந்த சிந்தை சுவிசேஷத்தை செலவில்லாமல் ஸ்தாபிப்பது. பவுல் ஆசியா முழுமைக்கும் சுவிசேஷம் அறிவித்து இருக்கிறார். அவருடைய நோக்கமெல்லாம் சுவிசேஷத்தை செலவில்லாமல் சொல்லி, சபையை ஸ்தாபிப்பதே. இந்தவிதமான நோக்கம் இன்று நம் திருச்சபைகளின் மத்தியில் எழும்பவேண்டும். சுவிசேஷப்பணி என்பது கர்த்தருடைய பணி அதற்காக நாம் ஒரு சம்பளத்தை எதிர்பார்ப்பது அவ்வளவு சிறந்ததாக நான் கருதவில்லை. நம்மை பாவத்திலிருந்து மீட்டு, நித்திய வாழ்வை கொடுப்பேன் என்று சொல்லியவருக்கு ஊழியம் செய்ய முதலாவது நம்மை நாமே பவுலைப்போல அர்ப்பணிப்போம்.

**கேள்வி நேரம்**

**பவுலைப்போல ஒரு ஊழியர் எழும்ப முடியுமா?**

முடியும் என்பதாலே என்னைப்போலாகுங்கள் என்று சொல்லியிருக்கிறார். பவுலைப்போல ஆத்துமாக்களுக்கு செலவு செய்வதில் உற்சாகமடைவோம், பதவி பட்டங்களை மேன்மையாக எண்ணாமல் கொடுக்கப்பட்ட உக்கிராண உத்தியோகத்தை நிறைவேற்ற பாடுபடுவோம், கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக எண்ணுவோம், கிறிஸ்துவினுடைய அச்சடையாளங்களை சரீரத்திலே தரித்துக்கொள்வோம், அதிக ஜனங்களை ஆதாயம் செய்ய நம்மை முதலாவது நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுப்போம், எல்லாருக்கும் எல்லாமாவது என்பது ஒரு சதாரண விஷயமல்ல. நம்மை முழுவதுமாக தாழ்த்தும்போது எல்லாருக்கும் எல்லாமாக முடியும். பவுல் அந்தவிதமாக தன்னை முழுவதுமாக தாழ்த்தினார். நீங்கள் பவுலைப்போல மாற உங்களை கிறிஸ்துவின் அடிச்சுவடுகளுக்கு நேராக திருப்புங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய ஞானத்தை உங்களுக்கு தருவாராக! உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்" நீதிமொழிகள் 13:20**



## 53. ஆத்துமாக்களுக்கு மேய்ப்பர்
## Overseer of Souls

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆத்துமாக்களுக்கு ஒரே மேய்ப்பராகிய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆத்துமாக்களுக்கு மேய்ப்பர் – Overseer of souls. நம்முடைய ஆத்துமாக்களுக்கு ஒரு மேய்ப்பர் இருக்கிறார் அவரைக்குறித்து இந்நாளில் தியானிக்க உள்ளோம். பொதுவாக ஒரு நிர்வாகத்திற்கு முதன்மையானவர், வழிநடத்துனர்கள் அல்லது சபையின் கண்காணிகள் அதாவது மூப்பர்கள் என்று அழைக்கப்படும் மேய்ப்பர்களைக்குறித்து கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்களுக்கெல்லாம் மேற்பட்டவராக ஆண்டவர் இயேசுகிறிஸ்து ஆத்துமாக்களுக்கு மேய்ப்பராக இருக்கிறார். இவரைக்குறித்து நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

பேதுரு எழுதும்போது; ‘‘சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்’’ என்று எழுதுகிறார் (1பேது.2:25). மனிதன் பாவத்தின் விளைவால் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டவனாக இருந்தான். ஒருவேளை நீங்களும் அப்படிப்பட்ட ஒருவராக இருக்கலாம். நீங்கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பராக இருக்கிற இயேசுவிடம் திரும்பவேண்டும். அவர் ஒருவரே ஆத்துமாக்களுக்கு மேய்ப்பராக இருக்கிறார். ஒரு மந்தை சிதறடிக்கப்படாமல் பாதுகாக்கப்பட அதற்கு கண்காணிகள் அதாவது மேய்ப்பர்கள் தேவை.

அவர்கள் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக இருந்துகொண்டு, அந்த மந்தையை சரியான பாதையில் வழிநடத்தி, இரவுபகலாக அதைப் பாதுகாத்து, மழையையும் குளிரையும் பொருட்படுத்தாமலும், ஓநாய், நரி போன்ற கொடியவிலங்குகளுக்கும், அவைகளின் தந்திரங்களுக்கும் அவைகளை தப்புவித்து பாதுகாக்கிறார்கள். ஏனெனில், இவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணியும் அதுவே. ஆனால், இவர்களால் ஒரு ஆத்துமாவை திருப்தி செய்யவோ அல்லது அதை பாவத்திலிருந்து இரட்சிக்கவோ முடியாது. அதைச் செய்ய வல்லவர் இயேசு ஒருவரே. அவரே ஆத்துமாக்களின் பிரதான மேய்ப்பராக இருக்கிறார். அவரிடத்தில் திருப்பப்பட்டுள்ள நீங்கள் அவரின்

சத்தம்கேட்டு அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட அவருக்கு உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா?

"நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்" என பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (எபே.2:2). இதையாரும் மறுக்கமுடியாது. நமக்கென்று ஒரு போதகர் இல்லாமல், நம் இஷ்டப்படியும், நமக்கு நாமே சில திட்டத்தை வகுத்துக்கொண்டு, கட்டவிழ்த்து விட்ட கோவில் மாடுகளைப்போலவும், மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போலவும், தேவனற்ற ஜனங்களாகவும் இருந்தோம் என்பதை நினைத்துப்பாருங்கள். அப்பொழுது நம்முடைய வாழ்வில் சந்தோஷம் இல்லை, சமாதானமில்லை, வருத்தத்தையும் வேதனைகளையும் அநுபவித்து வந்தோம். தேவனோ நம்மில் இரக்கங்கொண்டு நம்மை மீட்கும்படியாக ஆத்துமாக்களின் மேய்ப்பராகிய இயேசுவை அனுப்பினார். அவருக்கு நீங்கள் செவிகொடுக்கவேண்டும். மேலும் "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்" (எபே.2:12). இப்படியிருந்த நாம் இப்பொழுது மெய்யான மேய்ப்பரிடத்தில் திருப்பப்பட்டுள்ளோம். அவர் நம்மை வழிநடத்துகிறவரும் போஷிக்கிறவருமாயிருக்கிறார்.

நம்முற்பிதாக்கள் காலந்தொடங்கி அவர்களை வழிநடத்தி வருகிறார். அவரை அறிந்தவர்கள் சொற்ப ஜனங்களே. அவர் எருசலேமைப்பார்த்து; "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்று சொல்லுகிறார் (லூக்.13:34). முதல் நூற்றாண்டில் பிரசங்கித்த ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டான் என்பதை நாம் அறிவோம். பவுலும் கூட அநேகந்தரம் கல்லெறியுண்டேன் என்கிறான். தங்களிடத்தில் கர்த்தர் அனுப்புகிற தீர்க்கதரிசிகளின்



வார்த்தைக்குச் செவிகொடுக்காமல் அவர்களை கல்லெறிந்து கொன்றார்கள். அவர்களுக்கு, மனந்திரும்ப மனதில்லை. ஆகையால் அனுப்பப்பட்டவர்களை கல்லெறிந்து கொன்றார்கள். இன்று வாயின் வார்த்தைகளினால் கர்த்தரால் அனுப்பப்பட்டவர்களைக்கொல்லுகிறார்கள்.

இவர்களைக்குறித்து யூதா இப்படியாக சொல்லுகிறார்; "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள். இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 11–13). இன்றைக்கு இவ்விதமாக தங்களைத் தாங்களே மேய்த்துக்கொண்டு எங்களுக்கு ஒரு போதகர் தேவையில்லை, எங்களுக்கு ஒரு சபை தேவையில்லை, எங்களை நாங்களே பார்த்துக்கொள்வோம் என்று துணிவாய்ப்பேசுகிற அநேகரை நாம் காணமுடிகிறது. அப்படிப்பட்டவர்களில் ஒருவராக நீங்கள் இருக்கிறீர்களா? தேவனுக்குதான் அது எத்தகைய மனவேதனையைக் கொண்டுவரும். முதலாவது கிறிஸ்துவினிடம் திருப்பப்பட்ட ஒருவன் தான் எந்நிலையிலிருந்து திருப்பப்பட்டுள்ளோம் என்பதை சிந்திக்கவேண்டும். அதைவிட்டு மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களைப்போல இருப்பார்களேயானால் அவர்களுடைய முடிவு நித்தியமான அழிவாகவே இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது என்று யூதா குறிப்பிடுகிறார்.

ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்ட ஒருவன் முதலாவது அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். இயேசு சொல்கிறார்; "நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு;

அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்'' (யோவா.10:14–16). இந்த உலகத்தில் உள்ள எல்லா ஆத்துமாக்களும் அவருடையவைகளே. அவர் எல்லோரையும் இரட்சிக்கும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். அவருடைய சத்தம் கேட்கும் ஆடுகளை மீட்டு தம்முடைய தொழுவத்தில் சேர்க்கிறார். அவருக்கென்று ஒரு தொழுவமுண்டு அந்த தொழுவத்தில் உள்ளவைகளையல்லாமல் வேறே அநேக ஆடுகளும் அவருக்கு உண்டு என்று சொல்லுகிறார். அந்த ஆடு ஒருவேளை நீங்களாக இருக்கலாம்! ஓ தேவனுடைய மனுஷனே, அவருடைய வார்த்தையின் சத்தம் கேட்டு அவருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, அவர் ஏற்படுத்தியுள்ள மந்தையில் சேரும்படியாக பிரயாசம் எடு. அந்த மந்தைக்காக தமது ஜீவனை தியாகபலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அவர் ஆத்துமாக்களின் மேய்ப்பராக இருக்கிறபடியால் தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்து, பாவத்தைப்போக்கும் பலியாக சிலுவையிலே வெற்றிசிறந்தார். பாவத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தம்முடைய மரணத்தினாலே வென்றார். ''நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'' என்கிறார் (யோவா.10:9–10). அவர் வழியாக உட்பிரவேசிக்கப்பிரயாசப்படுங்கள். அப்பொழுது நீங்கள் மெய்யான மேய்ச்சலையும், மெய்யான சந்தோஷத்தையும் அவர்மூலமாக பெற்று இரட்சிக்கப்படுவீர்கள்.

இன்றைக்கு அநேகர் மெய்யான மேய்ப்பரை அறியாது ஆடுகளை தின்றுபோடுகிற மேய்ப்பர்களிடம் சிக்கிக்கொள்கிறார்கள் அல்லது கூலிக்காக வேலைசெய்கிறவர்களுடைய மந்தையில் இருக்கிறார்கள். வேலியே பயிரை மேய்ந்துபோட்டால் எப்படியிருக்கும்? இன்றைக்கு அந்தவிதமான மேய்ப்பர்களை நாம் கேள்விப்படுகிறோம், பார்க்கவும் செய்கிறோம். இப்படிப்பட்டவர்கள் தங்கள் வயிற்றுக்காக ஊழியம் செய்யும் மேய்ப்பர்கள். வசனத்தில் சொல்லப்பட்டபடியாக திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் நனோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அதுபரிபூரணமடையவும் வந்தேன் என்று நமது ஆண்டவர் இயேசு சொல்கிறார். நீங்கள் பரிபூரணமான



ஆசீர்வாதங்களைப் பெறவும், உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையவும், நித்தியமான வாழ்வைப்பெறவும் பிரதான மேய்ப்பருக்குச் செவிகொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**ஒரு மேய்ப்பன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும்?**

பேதுரு சொல்கிறார்; ''உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்; உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' என்கிறார் (1பேது.5:1–6). கர்த்தருடைய சபையானது தேவனுடைய திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்டது. இது கி.பி.33–ல் மூவாயிரம் அங்கத்தினர்களைக் கொண்டு எருசலேமில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த சபையிலே மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த மூப்பர்களுக்குரிய தகுதிகளைக் குறித்து நாம் 1தீமோத்தேயு மற்றும் தீத்து புத்தகங்களில் அதிகமாக வாசிக்கின்றோம். இவர்கள் ஆண்டவருக்கு அடுத்தபடியாக இருந்து செயல்படுகிறவர்கள் என்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்டவர்களை இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரவான்களாக எண்ணவேண்டும். இவர்கள் மந்தையைக்குறித்த கரிசனையுடன் மந்தைக்கு மாதிரியாக செயல்பட்டு, உலகம் கொடுக்கிற புகழ்ச்சியை விரும்பாமல் தேவசித்தம் செய்யவேண்டும்.

**"தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தினால் திருப்தியடைவான்"**
**நீதிமொழிகள் 12:11**

## 54. பாவமும் அதன் விளைவும்
## Sin and It`s Consequences

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உலகத்தின் பாவத்தைப்போக்க வந்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாவமும் அதன் விளைவும் – Sin and it`s consequences. ‘‘ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று’’ என்று வேதம் போதிக்கிறது (ரோம.5:12). இந்தப் பாவம் எப்படிவந்தது? என்ற கேள்வி எல்லோருக்கும் எழும்புகிறது. பாவம் இச்சையினால் வந்தது. ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியை இச்சித்து புசித்தபடியால் பாவம் அவர்களுக்குள் வந்தது. இச்சை பிசாசினால் உண்டானவை, ‘‘மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்’’ (1யோவா.2:16). இந்த பாவம் எப்படி மனுஷனுக்குள் வந்தது என்றால், கண்களின் இச்சையினாலே ஆதாமும் ஏவாளும் தேவனுடைய எச்சரிப்பை மீறி விலக்கப்பட்ட கனியை பறித்து புசித்து பாவத்திற்குட்பட்டனர். ஆகையால், ‘‘மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது;...’’ (ரோம.5:14). இந்த பாவத்தின் விளைவால் மனுஷனுக்கு மரணம் வந்தது. ‘‘பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்’’ (ரோம.6:23). அதே வேளையில் கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே வந்தது. ‘‘பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது’’ என பவுல் குறிப்பிடுகிறார் (ரோம.5:21). இச்செய்தியை கேட்கிற நீங்களும் நானும் இந்த கிருபைக்கு கீழ்ப்படிவோமானால் மரணத்துக்கு விலகி பாதுகாக்கப்படுவோம்.



‘‘அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்’’ என்கிறார் பவுல் (ரோம.6:11). கிறிஸ்துவின் கிருபையுள்ள சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர்கள் ஞானஸ்நானத்திலே பாவத்திற்கு மரித்தவர்களாக, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவரில் நிலைத்திருக்கிறார்கள். நீங்கள் அப்படிப்பட்டவர்களாக இருப்பீர்களென்றால், இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் சிலுவையில் பழைய மனுஷனையும் அவனுடைய செய்கைகளையும் அறைந்திருக்கிறீர்களா? அப்படி அறையவில்லை என்றால் இன்றே பழைய மனுஷனை சிலுவையில் அவரோடு அறைந்து கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய மனுஷனாக இருக்கப் பிரயாசப்படுங்கள். ‘‘மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே’’ என்று ரோம.6:7–ல் வாசிக்கிறோம். மேலும், ‘‘கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே’’ என்கிறார் பவுல் (ரோம.8:2).

பாவத்தின் கீழாக அடைபட்டிருந்தவர்களை கிறிஸ்து இயேசுவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் விடுதலைசெய்கிறது. எப்பொழுது என்றால், அதற்கு ஒரு மனிதன் அதற்கு கீழ்ப்படியும்போது. ‘‘உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது’’ என்கிறான் ஏசாயா தீர்க்கன் (ஏசா.59:2). அன்பு நேயரே, பிசாசு கொண்டுவந்த பாவத்தின் விளைவால் மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான் என அறிகிறோம். அந்த பாவம் அவனுக்குள் இருக்கும் வரை, அவன் தேவனிடத்தில் மன்றாடும்போதெல்லாம், தேவன் அவனுக்கு செவிகொடாதபடி அந்தபாவம் அவருடைய முகத்தை மறைக்கிறது.

**யாரெல்லாம் பாவத்திலே விழுகிறார்கள்:** ஒன்று, தேவனை அறியாதவர்கள். ‘‘பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்’’

(1யோவா.3:8). இரண்டு, தேவ எச்சரிப்பைப் பெற்றும் கீழ்ப்படியாதவர்கள் பாவஞ்செய்கின்றனர். எடுத்துக்காட்டாக ஆதாமும் ஏவாளும் தேவனால் எச்சரிக்கப்பட்டும் விலக்கப்பட்ட கனியைப்புசித்து பாவத்திற்குள்ளானார்கள். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17). இதை அறிந்தும் விலக்கப்பட்ட கனியைப் பறித்து புசித்து பாவம் செய்தனர். அதைப்போல, தாவீதை நாம் அறிவோம், அவன் இஸ்ரவேலின் இரண்டாவது ராஜா. தேவன் இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலின் ராஜ்யபாரத்தை பிடுங்கி தாவீதுக்கு கொடுத்தார். தாவீதோ மோசேயின் பத்துக்கட்டளையில் சொல்லப்பட்ட 'பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக' என்ற கட்டளையை அறிந்த இவர் அக்கட்டளையை மீறி உரியாவின் மனைவியை இச்சித்து எடுத்து பாவத்திற்குட்பட்டார்.

புதிய ஏற்பாட்டுக்கு வருவோமேயானால் அனனியா சப்பீராளைக்குறித்து படிக்கிறோம். இருவரும் முதல் நூற்றாண்டு கர்த்தருடைய சபையிலே அங்கத்தினராயிருந்தனர். தங்கள் காணியாட்சிகளை விற்றதில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து இருவரும் ஒரே விதமாக பொய்சொன்னார்கள்.

இதனால் அப்போஸ்தலனாகிய பேதுரு அனனியாவின் மனைவி சப்பீராளைப் பார்த்து: "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்" (அப்.5:9). இவர்கள் அனைவருமே, தேவனுடைய கட்டளையை மீறி பாவம் செய்தனர்.

இன்றைக்கும் அநேகர் தேவனுடைய கட்டளைகளை ஒவ்வொருநாளும் மீறி பாவத்துக்கு உட்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து வேதம் எச்சரிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். இதை அறிந்து பாவத்திற்கு விலகவேண்டும். "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபி.10:26,27).



**பாவத்தை ஜெயித்தவர்களைக்குறித்து வேதாகமம் போதிக்கிறது:** ஆம், வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் வாசிக்கிறோம். "அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தவர்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளி.7:13,14). இவர்கள் கர்த்தருக்காகவும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்கு சாட்சிகளாகவும் விளங்கியவர்கள். ஏழாவது சபையாகிய லவோதிக்கேயா சபைக்கு சொல்லும்போது; "நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் என்கிறார் (வெளி.3:18). இங்கே பாவக்கறைகள் உள்ள வஸ்திரத்தை வெறுத்து தள்ளி வெண்வஸ்திரத்தை என்னிடத்தில் வாங்கிக்கொள் என்கிறார். இச்செய்தியை கேட்கிற அன்பான சகோதரனே, சகோதரியே நீ எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறாய்? அவருடைய வல்லமையுள்ள வசனத்தினாலே பாவத்தை ஜெயித்துக்கொண்டு வருகின்றாயா? தேவனுக்குப் பயந்து பாவத்தை விட்டு விலகு. யோசேப்பு கனி தரும் செடி என்று தன் தகப்பன் யாக்கோபினால் ஆசீர்வதிக்கப்பட்டான். ஒரு முறை இவனுக்கு வந்த பாவத்தை எதிர்த்து "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்றான்" (ஆதி.39:9). தேவனுக்குப் பயப்பட்டபடியால் இப்படிச் சொன்னான்.

இன்றைக்கு தேவனுக்குப் பயப்படுகிறோம் என்று சொல்லுகிறவர்கள் தங்களுக்கு எதிராக வரக்கூடிய பாவத்தை இந்தவிதமாக எதிர்த்து போராடவேண்டாமா? மேலும், யோபுவைக்குறித்து படிக்கிறோம். "என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி? அப்பொழுது உன்னதங்களிலிருந்து தேவன் அளிக்கும் பங்கும், உன்னதத்திலிருந்து சர்வவல்லவர் கொடுக்கும் சுதந்தரமும் கிடைக்குமோ? என்கிறார் (யோபு31:1,2). தேவனுடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொள்ளுகிற நீங்களும் நானும் கண்களோடே உடன்படிக்கை பண்ணியிருக்கிறோமா? மேலும் புதிய

ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுலைக்குறித்துப்படிக்கிறோம். ''அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்'' என்றார் (பிலி.3:11). கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவருக்குப் பிரியமானதைச் செய்யவும், தேவனுடைய திருச்சித்தம் செய்யவும் தன்னை முழுவதுமாக கர்த்தருடைய பணிக்காக அர்ப்பணித்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். அவர் தனக்காக வாழாமல் கர்த்தருக்காகவும் அவருடைய ராஜ்யம் பரம்பி மகிமைப்படவும் வாழ்ந்தவர். ஆசிய முழுமைக்கும் சுவிசேஷம் அறிவித்தவர். புதிய ஏற்பாட்டில் அதிக நிருபங்களை எழுதியவர். பாவத்திற்கு தம்மை முழுவதும் விலக்கி பரிசுத்தத்தை வாஞ்சித்தவர். ஆகையால் எல்லாவற்றையும் நஷ்டமென்றும் குப்பையுமாக எண்ணுகிறேன் என்கிறார். இன்றைக்கு அநேகர் குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கின்றனர். அதிலிருந்து குப்பைதான் வரும். மேலான ஆசீர்வாதத்தை நோக்கி நிற்கிற நாம் இவர்களைப்போல பாவத்திற்கு எதிர்த்து நின்றுபோராடி, தேவ ஆசீர்வாதம் பெறுவோம்.

**கேள்வி நேரம்**

**எப்படிப்பட்ட மனிதன் பாவத்திற்கு தன்னை விலக்கிக் காத்துக்கொள்வான்?**

''தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்'' (1யோவா.3:9). ஏனெனில், தேவனுடைய வசனமாகிய வித்து அவனுக்குள் இருக்கிறபடியால் அவன் பாவஞ்செய்யமாட்டான். அதினாலே நாம் தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசினுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் அறிந்துகொள்கிறோம். சில கிறிஸ்தவர்கள் பாவம் செய்கிறார்களே அது எப்படி என்று நீங்கள் கேட்கக்கூடும். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற எல்லோரும் கிறிஸ்தவர்கள் அல்ல என்பதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவை உடையவனே கிறிஸ்தவன். ஒரு வருடமாக கர்த்தர் ஏற்படுத்தின சபையோடே கூடியிருந்த சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டதாக அப்போஸ்தல நடபடிகள்11:26–ல் வாசிக்கிறோம். இவர்களே கிறிஸ்தவர்கள், இவர்கள் அவருடைய வசனத்தினால் மறுபடியும் பிறந்தவர்கள். இப்படிப்பட்டவர்களை பொல்லாங்கன் தொடான். வனமாகிய அவருடைய வித்து அவர்களுக்குள் இருக்கிறது. உங்களுக்குள்ளும் இருக்க ஜெபிக்கிறோம்.



## 55. முதலிடம் யாருக்கு?
## To Whom The First Place?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

முதலிடம் யாருக்கு? – To whom the first place?. இன்றைய உலகில் முதலிடம் யாருக்கு கொடுக்கிறார்கள் என்று நாம் தியானிக்கும்போது அநேகர் உலகத்திற்கும், உலகத்தில் உள்ள எஜமான்களுக்கும் கொடுக்கிறார்கள். சிலர் குடும்பத்திற்கும், குடும்ப அங்கத்தினர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மொத்தத்தில் அவர்கள் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கிய கர்த்தருக்கும், அவருடைய வல்லமையுள்ள வார்த்தைக்கும் முதலிடம் கொடுக்காமல், தேவனை மறந்து சதா உலகம், உலகம் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்துதான் என்ன சாதிக்கப் போகிறார்கள்? ஒன்றுமில்லை. ''தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய்வந்தான்; வந்ததுபோலவே; நிர்வாணியாய்த் திரும்பப் போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு போவதில்லை. அவன் வந்தபிரகாரமே போகிறான், இதுவும் கொடுமையான தீங்கு; அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன?'' என்கிறார் பிரசங்கி (பிர.5:15,16). இப்படியிருக்கும்போது மனிதன் படும் பிரயாசத்திற்கு அளவேயில்லை. இச்செய்தியை கேட்கிற அன்பான நேயரே, மற்றும் சகோதர, சகோதரிகளே நீங்கள் இப்பூமியில் யாருக்கு முதலிடம் கொடுக்கின்றீர்கள்?

நம்மை உண்டாக்கிய தேவனுக்கு நாம் முதலிடம் கொடுக்கவேண்டும். அவரை எல்லாவிதத்திலும் கனம்பண்ணவேண்டும். ஏனென்றால் அவரே நம்முடைய சிருஷ்டிகர். நாம் அவரால் உண்டாக்கப்பட்டவர்கள். ஆகையால் எல்லாவகையிலும் அவரை உயர்த்தி, அவருக்கும், அவருடைய வல்லமையுள்ள வார்த்தைக்கும் முதலாவது செவிகொடுக்கும்போது அநேக நன்மைகளை அவருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்வோம். நம்முடைய முற்பிதாக்களுக்கு, விளைச்சல்களில் முதற் கனியை கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டுவரும்படியாக

சொல்லப்பட்டது (யாத்.23:19). அவர்கள் அந்தவிதமாக முதற் கனியை கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவந்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அந்த நிலத்தையும் அதில் விளைந்த கனிகளையும் யார் கொடுத்தது? கர்த்தர் அல்லவா கொடுத்தார். ஆகையால் அவருக்கு முதலில் கொடுத்துவிட்டு பின்பு வரக்கூடிய ஆசீர்வாதங்களை தாங்கள் அநுபவிக்கவேண்டும் என்று எண்ணி சந்தோஷமாக கொடுத்தார்கள். அதைப்போல தலையீற்றானவைகள் கர்த்தருடையது என்ற லேவி.27:26–ன்படி தலையீற்றனைத்தையும் கர்த்தருக்கு படைத்தார்கள். ஆகையால் தேவன், இஸ்ரவேலை ஆசீர்வதித்துக்கொண்டு வந்தார்.

எலியாவினுடைய நாட்களில் இருந்த பஞ்சத்தை அறிவீர்கள். அந்நாட்களில், எலியா சாறிபாத் ஊருக்கு அனுப்பப்பட்டான். அங்கே அவனை பராமரிக்கும்படி ஒரு விதவையை தேவன் ஆயத்தப்படுத்தினார். ''அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்; அந்தப் பட்டணத்தின் ஒலிமுகவாசலுக்கு அவன் வந்தபோது, அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள்; அவன் அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா என்றான். கொண்டுவர அவள் போகிறபோது அவன் அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா என்றான். அதற்கு அவள்: பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனால் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்'' என்றான் (1இரா.17:10–13). பசி பட்டிணியில் இருந்து கொண்டு கடைசி உணவை சாப்பிட்டுவிட்டு செத்துப்போகும்படியான தீர்மானத்தை எடுத்த அந்த ஏழை விதவை பெண்ணிடம் எலியா சொன்ன வார்த்தையைக் கேட்டீர்களா! முதலாவது அதிலே ஒரு சிறு அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம் என்றான். பசியில் இருக்கிற அவள், அவளுடைய குமாரனையும் பொருட்படுத்தாமல், தேவ மனிதனுடைய



வார்த்தைக்கு முதலிடம் கொடுத்து அடையைப் பண்ணிவந்து கொடுத்து, கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். இது எப்படிப்பட்ட அற்புதம் பார்த்தீர்களா? அவருடைய நாமத்தினிமித்தம் அவருடைய ஊழியக்காரர்களுக்கு முதலிடம் கொடுக்கும்போது குடும்பத்தோடு ஆசீர்வதிக்கப்படுவோம்.

இன்றைக்கு தேவன் கொடுத்தவைகளை அநுபவித்துக்கொண்டிருக்கிற அநேகர் கர்த்தருக்காக நாம் எதையாவது செய்யவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை எடுப்பதில்லை. அப்படியே எடுத்தாலும் அதில் நிலைநிற்பதில்லை. எந்த ஊழியக்காரருக்கு என்ன இல்லாமலாயிருக்கிறது என்று சொல்லி, தேவமனிதர்களை கனம்பண்ணாமற் போய்விடுகின்றனர். நாம் முதலாவது எதைச்செய்தாலும் ஆண்டவரின் நாமத்தினிமித்தம் செய்யவேண்டும். தேவன் நமக்கு செய்த நன்மைகளை நாம் எண்ணிப்பார்ப்போமானால், நாட்கள்போதாது. அவ்வளவாய் நன்மை செய்திருக்கிறார்.

தானியேலை நீங்கள் அறிவீர்கள். அவனுடைய நாட்களில் ''முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம்பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனைபண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இப்போதும் ராஜாவே மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படியே, அந்தத் தாக்கீது மாற்றப்படாதபடி நீர் அதைக் கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டும் என்றார்கள். அந்தப்படியே ராஜாவாகிய தரியு அந்தக் கட்டளைப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைத்தான். தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்'' (தானி.6:7–10).

இங்கே தானியேலுடைய நாட்களில் 30 நாட்கள் வரை கடுமையான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டளையை அறிந்தபோதும் கர்த்தர்மேல் கொண்டுள்ள அன்பினிமித்தமாக தானியேல் அந்தக் கட்டளைக்குப் பயப்படாமல் முதலிடத்தை தேவனுக்கு கொடுத்து தான் வழக்கம்போல் செய்துவரும் ஜெபத்தை ஏறெடுத்தான். அதனால் வரக்கூடிய விபரீதங்களை அறிந்தவனாக இருந்தபோதிலும் அவன் அந்தக் கட்டளைக்குப் பயப்படவில்லை. சிங்கங்களின் கெபியிலே தூக்கிப்போடப்பட்டான். அவன் ஆராதித்து வந்த நம்முடைய தேவனாகிய கர்த்தர் அந்த சிங்கங்களின் வாய்க்கும், அவனுக்கு எதிராக செயல்பட்டவர்களுடைய வாய்க்கும் தப்புவித்தார். ஒருவேளை இவன் மற்றவர்களிடம் சென்று ஆலோசனை கேட்டிருப்பானேயானால் இவனுக்கு என்ன ஆலோசனை கொடுத்திருப்பார்கள். நமக்கேன் வம்பு நாமும் 30 நாள்வரை தேவனை நோக்கி ஜெபிக்கவேண்டாம். பின்பு ஜெபித்துக்கொள்ளலாம் என்று ஆலோசனை சொல்லியிருப்பார்கள். தானியேலோ ஒருவருடைய ஆலோசனையையும் கேட்காமல் தன் வீட்டுக்குள்ளே சென்று தன்வீட்டு மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க வழக்கம்போல் ஜெபித்தபடியாக ஜெபித்துவந்தான். இன்றைக்கு அநேகருக்கு ஜெபிக்க நேரமில்லை ஆனால், உலகவேலைகளை செய்ய நேரம் இருக்கிறது. அதைவாங்கவேண்டும், இதைவாங்கவேண்டும் என்று அலைகிற மக்களை நம்முடைய அநுதின வாழ்க்கையில் காண்கிறோம். அழிந்துபோகிற உலககாரியங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தால் அழியாத ஜீவனைப்பெற ஆயத்தமாயிருக்கிற ஒவ்வொருவரும் விழித்திருந்து ஜெபிக்கவேண்டாமா? நீங்கள் நடத்தும் கடையாக இருக்கட்டும், அலுவலகமாக இருக்கட்டும், அரசு பணியாக இருக்கட்டும், அல்லது புதிதாக கட்டப்பட்ட கட்டிடமாக இருக்கட்டும் முதலாவது தேவனுக்கு நன்றி சொல்லி ஜெபித்துவிட்டு அதைத் துவக்குங்கள். எல்லாவற்றிலும் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக செயல்படுங்கள். அப்பொழுது தானியேலை உயர்த்தின தேவன் உங்களையும் உயர்த்துவார்.

எஸ்றா என்ற தேவ மனிதன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான்; அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்தது. "முதலாம் மாதம் முதல்தேதியிலே அவன் பாபிலோனிலிருந்து பிரயாணமாகப் புறப்பட்டு, ஐந்தாம் மாதம் முதல்



தேதியிலே தன் தேவனுடைய தயவுள்ள கரம் தன்மேலிருந்ததினால் எருசலேமுக்கு வந்தான். கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" என வாசிக்கிறோம் (எஸ்.7:9,10). அநேகர் சபை வெகுதூரத்தில் இருக்கிறது அதனால் நான் சபைக்கு வரமுடியவில்லை என்ற சாக்கு போக்கு சொல்வதுண்டு. இங்கே எஸ்றா முதலாம் மாதம் முதல் தேதியிலே எருசலேமுக்குப் பயணத்தை துவக்கி ஐந்தாம் மாதம் முதல்தேதியிலே வந்திருக்கிறான் என்றால் அவனுடைய பயண நாட்களை கணக்கிட்டுப்பாருங்கள். இன்றைக்கு வாகன வசதிகள் உள்ள நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். காலையில் புறப்பட்டால் மாலையில் வெளிநாட்டில் இருக்கலாம் அந்த அளவு வசதிவாய்ப்புகளைப் பெற்றுள்ளோம். ஆனாலும் அநேகருடைய சாக்குபோக்கு என்னவாக இருக்கிறது? வெகு தூரம், அல்லது வரநேரமில்லை என்பதே. இரவு பகலை அதாவது ஒரு நாளைக்கு 24 மணிநேரத்தை உண்டாக்கின தேவனுக்கு நேரம் உண்டு, மனிதர்களுக்கோ நேரமில்லை. இதை எங்கே போய் சொல்வது? அன்பானவர்களே, இந்த எஸ்றாவைப்போல வேதத்தை ஆராய்ந்துபார்க்க முதலிடம் கொடுங்கள்.

## கேள்வி நேரம்

**கர்த்தருக்கு முதலிடம் கொடுக்கும்படியாக முதலாவது நாம் யாருக்கு போதிக்கவேண்டும்?**

நம்முடைய பிள்ளைகளுக்கு. உங்கள் பிள்ளைகளுக்கு கருத்தாய்போதிக்கவேண்டும் என்ற கட்டளையை இஸ்ரவேலர் பெற்றிருந்தார்கள். "அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக" என்றார் (உபா.11:20,21). தேவனுடைய ஜனங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளை கருத்தாய் போதிக்கிறீர்களா? முதலிடத்தை கர்த்தருக்கு கொடுத்து முழுமையாக ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**"கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" – நீதிமொழிகள் 18:10**

# 56. பாரம்பரியம் நம்மை இரட்சிக்குமா?
# Will Tradition Save Us?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவரையும் இரட்சிப்பின் பாதையில் வழிநடத்தும் வல்லவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பாரம்பரியம் நம்மை இரட்சிக்குமா? – Will tradition save us?. பாரம்பரிய பழக்கங்கள் இன்று அநேக மனிதர்களைக் கட்டிவைத்திருக்கிறது. பாரம்பரியம் ஒருபோதும் மனிதனை இரட்சிக்காது. இதனால் தேவனுடைய இரட்சிப்புக்கேற்ற கற்பனையை மனிதன் அறியாது போகிறான். இயேசு தம்மிடத்தில் வந்த வேதபாரகர் மற்றும் பரிசேயரைப் பார்த்து: "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்" என்றார் (மத்.15:6). எவ்வளவு உண்மையான வார்த்தை பாருங்கள்! இன்று அநேகர் பாரம்பரியங்களைக் கைக்கொண்டு தேவனுடைய கற்பனைகளை அவமாக்கிப்போடுகிறார்கள். இப்படிச் செய்வதற்கான காரணம் என்னவென்று நாம் கீழுள்ள வசனங்களில் படிக்கும்போது; இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறானே என்றார்.

அன்பானவர்களே, இன்றைய பாரம்பரிய மக்களிடம் இவைகளை நாம் காணமுடிகிறது. உதடுகளினால் தேவனை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தருக்கு ஏற்றதாக இல்லை. மேலும் மனுஷனுடைய கற்பனைகளும் கட்டளைகளும் அங்கே காணப்படுகிறது. அவைகள் எல்லாம் முதல் நூற்றாண்டிலே தன்னைப் பின்பற்றும்படி எழும்பின தெயுதாஸ், மற்றும் யூதாஸ் போன்றோரால் ஏற்படுத்தப்பட்ட கற்பனைகளாகவும் கட்டளைகளாகவும் இருக்கிறது. அவர்கள் ஒழிந்தவுடன் அவர்கள் ஏற்படுத்தின மார்க்கமும் ஒழிந்தது. அந்தவிதமாக இன்று மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அநேக மதம் என்று சொல்லப்படுகிற மார்க்க பாரம்பரியங்களைப் பிடித்துக்கொண்டு அதை நாம் எதற்காக செய்கிறோம்? ஏன் செய்கிறோம்? அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்விகளை



எழுப்பாமல் தொடர்ந்து அதைச் செய்து கொண்டு வருகிறார்கள். அதனால் அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படுமா? பாரம்பரிய பழக்கவழக்கங்கள் முதலும் முடிவும் இல்லாதவைகள். அவைகளை நம்பி ஏமாந்து போய்விடாதீர்கள். முதலாவது வேதத்தின் பக்கம் உங்கள் சிந்தனையை திருப்பும்படியாக உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" என்று வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் (லூக்.21:33). நாம் பார்க்கிற இவைகள் எல்லாம் ஒருநாள் அழிந்துபோம் ஆனால் கர்த்தருடைய வசனங்களோ ஒருக்காலும் ஒழிந்துபோகாது. அந்த வார்த்தை வல்லமையுள்ள வர்த்தை, அதை நாம் விசுவாசிக்கும்போது அது நமக்குள்ளே புதிய பெலத்தை கொண்டுவரும். பாரம்பரிய பழக்கங்களோ ஒன்றுக்கும் உதவாமற்போகும் சாரமற்ற உப்பைப் போலாகும்.

சிலருடைய பெருமை என்னவாக இருக்கிறதென்றால், நாங்கள் பரம்பரை பரம்பரையாக இந்த பக்தியின் மார்க்கத்தில் இருக்கிறோம் என்று சொல்லி பெருமையடித்துக்கொள்வார்கள். அன்பு நேயரே, உங்களுடைய தாத்தாவாக இருந்தாலும் அல்லது பாட்டியாக இருந்தாலும், அவர்கள் நல்ல வழியில் நடந்ததால்; நாம் இரட்சிக்கப்பட முடியாது? ஏனென்றால், பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் யோவான்ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற வந்து ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று சொன்னார்கள். அதற்கு அவன்: "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிராமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" என்கிறான் (மத்.3:9,10). நாம் ஆபிரகாமின் பிள்ளைகளானாலும், யாக்கோபின் பிள்ளைகளானாலும் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகொடுக்க வேண்டும். இல்லையேல் வெட்டுண்டு அக்கினியில் போடப்படுவோம் என திருவசனம் நம்மை எச்சரிக்கிறது. விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு இந்தக் கல்லுகளினாலே பிள்ளைகளை உண்டு பண்ண கர்த்தர் வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். குறிப்பாக இதை பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும் மக்களுக்கு யோவான்

எடுத்துரைக்கிறார். ஏலியின் பிள்ளைகளை அறிவீர்கள். அவர்கள் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி கர்த்தருடைய பணியைச் செய்கிற ஒரு ஆசாரியன். ஆனால் அவனுடைய குமாரர்களோ கர்த்தரை அறியவில்லை. இன்றைக்கு இப்படிப்பட்ட குடும்பங்கள் நிறைய இருக்கிறது. இவர்கள் எல்லாம் தங்கள் தகப்பன் ஒரு போதகர் என்று பெருமையாக சொல்லிக்கொள்ளும் கூட்டுக் குடும்பத்தார்கள். ஆனால் கர்த்தருடைய கட்டளையின்படியும், கற்பனையின்படியும் ஒருநாளும் நடக்கமாட்டார்கள். ஏலியின் பிள்ளைகளுடைய பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். ஏனென்றால், ஏலியின் பிள்ளைகள் பலவந்தமாய் கர்த்தருடைய காணிக்கையை எடுத்துக்கொண்டார்கள். இதை அறிந்த ஏலி தன்னுடைய பிள்ளைகளை "என் குமாரரே, வேண்டாம்; நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல; கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே. மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ்செய்தால், நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள்; ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்வானேயாகில், அவனுக்காக விண்ணப்பஞ் செய்யத்தக்கவன் யார் என்றான்; அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமற்போனார்கள்; அவர்களைச் சங்கரிக்கக் கர்த்தர் சித்தமாயிருந்தார்" என வாசிக்கிறோம் (1சாமு.2:24,25).

ஆகையால், அன்பானவர்களே தகப்பனுடைய நீதி நம்மை தப்புவிக்காது. அதேபோல தகப்பனுடைய பாவம் நம்மை பற்றிக்கொள்ளவும் செய்யாது. ஏனெனில், "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்கிறார் (எசே.18:4). நாம் சென்ற வாழ்நாட் காலத்திலே புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்து கொண்டபோது; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர் இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச் செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம். இப்பொழுது அந்த பாரம்பரிய பழக்க வழக்கத்திலிருந்து விடுவிக்கப்படுகிறோம். எப்படியென்றால், உலகத்தின் பாவத்தை மீட்க வந்த இயேசுவில் விசுவாசம் கொண்டு அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.



சுவிசேஷத்தை கேட்டதினால் இரட்சிப்பு வருகிறது. "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" (எபே.1:13). இந்தவிதமான பாக்கியம் நம்முடைய பாரம்பரியத்தினால் நமக்கு கிடைக்கவில்லை. நாம் சுவிசேஷத்தைக் கேட்டதினாலே வருகிறது. நீங்கள் இந்த சுவிசேஷத்தைக் கேள்விப்படவில்லை என்றால், இன்றே கேள்விப்பட்டு இரட்சிக்கப்பட முயற்சி எடுங்கள். கேள்விப்படுதலோடு நின்றுவிட்டால் போதாது, இந்த சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறவேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று பார்க்கிறோம் (மாற்.16:16). மேலும், கிருபையினாலே இரட்சிப்பு வருகிறது. "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;" (எபே.2:4–9).

இது தேவனுடைய திட்டம். இந்த திட்டத்தின்படி நீங்கள் இரட்சிக்கப்பட்டால் நித்தியமான வாழ்வை கர்த்தராலே பெறுவீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய் போய்விடும். நம்முடைய தானதர்மங்களோ புண்ணியங்களோ நம்மை இரட்சிக்காது. பலர் இதற்காகவே பல புண்ணியங்களை செய்கிறார்கள். கர்த்தருடைய வசனம் மிகத் தெளிவாக நமக்கு போதிக்கிறது. என்னவென்றால், "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்.3:5). தேவனோ உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் தமது மிகுந்த இரக்கத்தினாலே அவருடைய திருவசனத்தின்

மூலமாக அதாவது “அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே” என்கிறார் பேதுரு **(1பேது.1:23–25).** வேதவசனம் அழியாத வித்து; அதை எடுத்து ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அது அவனுக்குள் பலன்கொடுக்கிறது. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறான். நீங்கள் எப்படிப்பட்ட இருதயமுடையவர்களாக இருக்கிறீர்கள்? இன்றைய உலக மக்கள் காணாதவைகளில் துணிவாய் நுழைந்து, தங்கள் மாம்சசிந்தையில் வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உங்களுடைய பந்தைய பொருளை இழக்கச்செய்வார்கள். இச்செய்தியை கேட்கிற நண்பா, பிதாவாகிய தேவன் நம்மில் ஒருவருக்கும் தூரமானவர் அல்ல. நீ அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அவர் ஏற்படுத்தியுள்ள இரட்சிப்பின் திட்டத்தை, வேதவாக்கியங்களைக் கொண்டு ஆராய்ந்து, அதற்கு கீழ்ப்படிவாயானால் நீ இரட்சிக்கப்படுவாய். வீணான பாரம்பரிய பழக்கவழக்கங்களை நாடி உன் வாழ்நாட்களை வீணாக்கிப்போடாதே. கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு இரட்சிக்கப்பட பிரயாசப்படு. உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

**கேள்வி நேரம்**

**கர்த்தருக்கு விரோதமான பாரம்பரியம் ஒரு மனிதனை எங்கே கொண்டு செல்லும்?**

பாதாளம் வரை கொண்டு செல்லும். ஐசுவரியவான் லாசரு சம்பவத்தில் அதைத்தான் பார்க்கிறோம் **(லூக்.16:19–31).** அந்த ஐசுவரியவான் பாதாளத்திலே வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். பாதாளத்தில் அக்கினிஜூவாலையில் வேதனைப்படுகிற அவன் ஆபிரகாமை நோக்கி: லாசருவை தன்னிடம் அனுப்பும்படி வேண்டினான். ஆபிரகாமோ அது கூடாதகாரியம் என்றார்.



# 57. தேவன் நம்மை விட்டு ஏன் விலகுகிறார்?
# Why Does God Leave Us?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சதா காலங்களிலும் நம்மோடு இருக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேவன் நம்மை விட்டு ஏன் விலகுகிறார்? – Why does God leave us?. இஸ்ரவேலை தமக்கு சொந்தமான ஜனமாக தெரிந்துகொண்ட தேவன் அவர்களை விட்டு விலகினார். ஏன்? என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. “அவர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சைபார்த்து, அவருக்குக் கோபம் மூட்டி, அவருடைய சாட்சிகளைக்கைக்கொள்ளாமற்போய், தங்கள் பிதாக்களைப்போல வழிவிலகி, துரோகம்பண்ணி, மோசம் போக்கும் வில்லைப்போல் துவண்டு, தங்கள் மேடைகளினால் அவருக்குக் கோபம் மூட்டி, தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சல் உண்டாக்கினார்கள். தேவன் அதைக் கேட்டு உக்கிரமாகி, இஸ்ரவேலை மிகவும் வெறுத்து, தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டுவிலகி, தமது பலத்தைச் சிறையிருப்புக்கும், தமது மகிமையைச் சத்துருவின் கைக்கும் ஒப்புக்கொடுத்து, தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி, தமது சுதந்தரத்தின்மேல் கோபங் கொண்டார்” என்று ஆசாப் தமது சங்கீதத்தில் சொல்லியிருக்கிறார் **(சங்.78:56–62).** இன்றைக்கும் தேவன் நம்மை விட்டு விலகுகிறார் என்றால் ஏதாவது ஒரு காரணம் இருக்கும். அவைகளை நாம் ஆராய்ந்து பார்த்து நம்மை சரிசெய்துகொள்ளவேண்டியது அவசியம். சிலர் வருவது வரட்டும் என்று சொல்லக்கூடும். ஒருவேளை நம்முடைய நண்பர்கள் நம்மை விட்டு விலகலாம். ஆனால் நம்மை நேசித்து, நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனையே ஒப்புக்கொடுத்த தேவன் நம்மை விட்டுவிலகுவாரேயானால் நாம் அநேக ஆசீர்வாதங்களை இழக்கநேரிடும்.

**இஸ்ரவேலர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்.** அவரை பரீட்சைபார்ப்பதற்கு மனிதன் எம்மாத்திரம்? அதை உணராது பரீட்சை பார்த்தார்கள். “அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து,

சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்'' என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிரூபத்தில் வாசிக்கிறோம் (1கொரி.10:9,10). தேவன் ஒருவனை விட்டு விலகுவதற்கு பல காரணங்கள் உண்டு அவைகளில் இதுவும் ஒன்று. தேவன் உங்களை விட்டு விலகாதிருக்க அவரை பரீட்சை பாராதிருங்கள். விசுவாசத்தினாலே வராதயாவும் பாவமே என ரோமர் புஸ்தகத்தில் படிக்கிறோம்.

**இரண்டாவது, அவருக்குக் கோபம் மூட்டினார்கள்.** பல வகைகளில் நாமும் தேவனுக்கு விரோதமாக ஈடுபட்டு கோபம் மூட்டுகிறோம். சவுல் இஸ்ரவேலில் முதல் ராஜா. அவன் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல் கொள்ளையின்மேல் விருப்பமுற்று கர்த்தருடைய கட்டளையை மீறி பாவம் செய்தான். ஆகையால் சாமுவேல் அவனைப்பார்த்து: ''இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்த படியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்'' (1சாமு.15:23). கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையை ஒருவன் புறம்பே தள்ளும்போது அவருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறான். அந்தப்படியாக சவுல் கர்த்தருடைய வார்த்தையை புறம்பாக்கி போட்டபடியால் கர்த்தருடைய ஆவியானவர் அவனைவிட்டு விலகினார்.

**மூன்றாவது, அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளாமற் போனார்கள்.** ''வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை'' என்று ஏசாயா தீர்க்கன் மூலம் திருவுளம்பற்றுகிறார் (ஏசா.8:20). வேதாகமம் அநேக சாட்சியாகமங்களை உள்ளடக்கிய ஒரு புத்தகமாக இருக்கிறது. அது தேவனுடைய கட்டளைகளை வெளிப்படுத்தும் பரிசுத்த வேதமாக இருக்கிறது. இதை ஒருவன் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவனுக்கு விடியற்காலத்து வெளிச்சம் இல்லை. இதை அறிந்த இஸ்ரவேலர்கள் அதைக் கைக்கொள்ளாமற்போனார்கள். ஆகையால் தேவன் அவர்களை விட்டுவிலகினார். அப்போஸ்தலனாகிய யோவானும்; ''ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான



நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்'' என்று எழுதுகிறார் (1யோவா.1:1,2). இவ்வளவு திரளான சாட்சிகள் நிறைந்த வேதாகமத்திற்கு திரும்புவது எவ்வளவு அவசியமான ஒன்று.

**நான்காவது, தங்கள் பிதாக்களைப்போல வழிவிலகினார்கள்.** ஆதாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் வழிவிலகி பாவம் செய்தான். லோத்து, யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். ஆகையால் அந்தப் பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள். இப்படித்தான் அநேகருடைய தேர்வுகள் சரியில்லாமல் போய், முடிவில் வழிவிலகிபோய்விடுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் சிலரும் பாரம்பரியமாக வருகிற முற்பிதாக்களின் வழியை தெரிந்து கொண்டு வீழ்ந்து போகிறார்கள். ஆனால் ஆபிரகாமுடைய தேர்வு எப்படிப்பட்டதாக இருந்தது? கர்த்தர் காண்பித்த இடத்தை தெரிந்துகொண்டான். அதனால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டான்.

**ஐந்தாவது, துரோகம் பண்ணினார்கள்.** மனிதனுக்கு மனிதன் துரோகம் பண்ணுவான் அதைத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இஸ்ரவேலரோ கர்த்தருக்கே துரோகம் பண்ணினார்கள். தன்னை உண்டாக்கினவரை மறந்து அவருக்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்தனர். ஆண்டவர் இயேசு பன்னிரெண்டு சீஷர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்று பெயரிட்டார். அதிலும் ஒருவன் துரோகியானான். அவனைக்குறித்து லூக்கா எழுதும்போது; ''யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே'' என்று எழுதுகிறார் (லூக்.6:16). இன்றைக்கும் திருச்சபையிலும் குடும்பங்களிலும் இந்த விதமாக துரோகியான யூதாசுகள் இருக்கிறார்கள். தன்னை பாவத்திலிருந்து மீட்கவந்த அந்த பரிசுத்த இரத்தத்தை காட்டிக்கொடுத்தானே என்றால் அது எப்படிப்பட்ட துரோகம்? இந்த விதமாக இஸ்ரவேலரும் தேவனுக்கு விரோதமாக துரோகம் பண்ணினார்கள்.

**ஆறாவதாக, மோசம் போக்கும் வில்லைப்போல துவண்டுபோனார்கள்.** வேட்டையாடுகிறவனுக்கு வில் எவ்வளவு முக்கியம் அது துவண்டுபோனால் அதனால் அவன் வேட்டையாட முடியமா? இஸ்ரவேலர் இவ்விதமாக வில்லைப்போல துவண்டுபோனார்கள்.

உன்னதமான தேவன் இவர்களை வைத்து பெரிய காரியங்களைச் செய்ய திட்டமிட்டார். இவர்கள் ஒன்றுக்கும் உதவாமற்போகும் வில்லைப்போல துவண்டுபோய், நாங்கள் எகிப்திலே இருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லி எகிப்தை பின்னிட்டு பார்க்க ஆரம்பித்தனர். அநேகர் இப்படித்தான் பின்னிட்டு பார்த்து லோத்தின் மனைவியைப்போல உப்புத்தூண்களாக மாறிக்கொண்டு வருகின்றனர். ''கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல'' என்று ஆண்டவர் இயேசு சொல்லுகிறார் (லூக்.9:62). நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மோசம் போக்கும் வில்லைப் போல துவண்டு எதிராளி உங்களை மேற்கொள்ளும் அளவிற்கு போய் விட்டீர்கள் என்றால் தேவன் உங்களை விட்டு விலகினார் என்று அறியுங்கள்.

**ஏழாவதாக, தங்கள் மேடைகளினால் அவருக்கு கோபம் மூட்டினார்கள்.** தேவனுக்கு விரோதமான பாவங்களில் ஒன்று விக்கிரக ஆராதனை. இதைச் செய்து தேவனுக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். ''இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்; யூதா அரணான பட்டணங்களைப் பெருகப்பண்ணுகிறான்; ஆனாலும் நான் அதின் நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன்; அது அவைகளின் கோவில்களைப் பட்சிக்கும்'' என்று ஓசியா தீர்க்கன் மூலம் எச்சரித்தார் (ஓசி.8:14).

**எட்டாவதாக, தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சல் உண்டாக்கினார்கள்.** கர்த்தருக்கு எரிச்சல் உண்டாக்கக்கூடிய விக்கிரகங்களை இஸ்ரவேலர் துணிந்து செய்தனர். மோசே தேவனுடைய சமூகத்திற்கு சென்று இருந்தபோது ஜனங்கள் அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை உண்டுபண்ணும் என்று சொல்லி ஒரு கன்றுக்குட்டியை உண்டாக்கி அதை நமஸ்கரித்தார்கள். ''அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்'' என்றார் (யாத்.32:7).

இத்தனை பாவங்களையும் இஸ்ரவேலிலே கண்ட தேவன் அவர்களை மிகவும் வெறுத்து, தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டுவிலகி தமது பலத்தைச் சிறையிருப்புக்கும், தமது மகிமையை சத்துருவின் கைக்கும் ஒப்புக் கொடுத்து, தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி, தமது



சுதந்தரத்தின்மேல் கோபங்கொண்டார். அன்பானவர்களே, இப்படிப் பட்டதான காரியங்கள் உங்களில் காணப்படுமானால் உன்னதமான தேவன் உங்களை விட்டுவிலகி சத்துருவாகிய பிசாசுக்கு உங்களை ஒப்புக்கொடுப்பார். தேவன் உங்களை விட்டுவிலகாதிருக்க வேண்டுமானால், நீங்கள் புதிய தீர்மானங்களை எடுத்து, கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். ''ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழுஇருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (யோவேல் 2:12). நீங்கள் மனந்திரும்பினால் தேவன் உங்களோடு இருப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இன்றும் என்றும் இருப்பதாக!

**கேள்வி நேரம்**

**தேவன் நம்மோடு இருக்கும்போது நமக்கு வரும் ஆசீர்வாதம் எப்படிப்பட்டது?**

''ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்'' என்று ஆதியாகமம்26:12–ம் வசனத்தில் படிக்கிறோம். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் நூறுமடங்கு ஆசீர்வாதம் கிடைத்தது. இதை அறிந்த அந்நாட்டு பெலிஸ்திய ஜனங்கள் நிச்சயமாய் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம்; ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும் என்று நாங்கள் நிர்ணயம் பண்ணினோம் என்றார்கள். ஒரு மனிதனோடு கர்த்தர் இருக்கும்போது அவன் ஆசீர்வதிக்கப்படுகிறான். மேலும் அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதான உடன்படிக்கை பண்ணுவார்கள் என காண்கிறோம். தேவன் உங்களோடு இருக்க இந்த ஈசாக்கைப்போல கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியுங்கள்.

**"கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது" – நீதிமொழிகள் 19:23**

## 58. நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?
## Who Do You Say That I Am?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆதியும் அந்தமுமாகிய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? – Who do you say that I am?. இந்தக் கேள்வியை ஆண்டவர் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்துக்கேட்டார். ஏன் கேட்டார்? எதற்காக கேட்டார்? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. அந்நாட்களில் இயேசுவை ஜனங்கள் யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொன்னார்கள். ஆகையால் தம்முடைய சீஷர்களைப் பார்த்து நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக; ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்'' (மத்.16:16). அன்பானவர்களே, நம்மிலே அநேகர் இயேசுவை ஒரு மதபோதகராகவும், மகான்களில் ஒருவராகவும் கருதுகின்றனர். பரிசுத்த வேதாகமம் இவரைக்குறித்து என்ன சொல்லுகிறது? இவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தன்னை குறித்து எப்படி வெளிப்படுத்துகிறார் என்பதைக்குறித்து இந்நாளில் தியானிக்க உள்ளோம். இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே; ''வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் **என்னுடைய நேசகுமாரன்**, இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது'' (மத்.3:17).

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனை உலகிற்கு இவ்விதமாக வெளிப்படுத்தினார். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவானும் இப்படியாக சொல்லுகிறார்; ''நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றார்''



(யோவா.1:33,34). அதைத் தொடந்து அநேகர் இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்து அநேக நன்மைகளை இயேசுவின் மூலமாக பெற்றுக்கொண்டனர். இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு வாசகரே, நீங்கள் இயேசுவை யார் என்று நினைக்கிறீர்கள்?

அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தம்மைக்குறித்து வெளிப்படுத்துகையில்; ''**...மரித்தோரிலிருந்து எழுந்ததில் முதற்பிறந்தவரும்**'' என்கிறார் (வெளி.1:5). உலகம் உண்டானது முதல் மரித்தோரிலிருந்து ஒருவர் உயிரோடு எழுந்திருக்கிறார் என்ற செய்தியை நீங்கள் கேள்விப்பட்டிருக்க வாய்ப்பே இல்லை. இயேசு ஒருவரே மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர். இயேசுவானவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டபோது, முதல் நூற்றாண்டு சீஷர்கள் மரித்தோரிடத்தில் இயேசுவைத் தேடினார்கள். தேவதூதர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் ஜீவனுள்ளவரை மரித்தோரிடத்தில் தேடுவது என்ன? என்று கேட்டார்கள். மேலும் இயேசு தம்மைக்குறித்து வெளிப்படுத்துகையில் ''மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்'' என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.1:18). அவர் பாவிகளை இரட்சிக்கும்படி மனிதனாக பிறந்ததும், சர்வலோகத்தின் பாவத்தைப்போக்கும் பலியாக சிலுவையில் மரித்ததும், அதைப்போல அவர் உயிர்த்தெழுந்ததும் சதாகாலங்களிலும் உயிரோடிருப்பதும் உண்மை. எப்படியென்றால், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினால் எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்கிறார். மேலும், தம்முடைய சீஷர்களுக்கு கட்டளைகொடுத்து உலகமெங்கும் அனுப்பும்போது இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். அன்பு நேயரே, நீர் இதை நம்புகிறாயா? உன் நம்பிக்கையை கர்த்தர் மீது வை. அவர் உனக்காக இரத்தம் சிந்தியுள்ளார். உன் விசுவாசம் கர்த்தர் மீது இருக்கட்டும். அவர் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவஆட்டுக்குட்டி. மனிதனுடைய பாவத்தை போக்க வாய்திறவாத ஆட்டைப்போல இருந்தார். அவர் சிந்திய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப்பெற்றுக்கொள்கிறோம்.

மேலும், அவர் **பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி** என்று வெளி.1:5–ல் வாசிக்கிறோம். அவராலே பூமியின் ராஜாக்கள் ஆட்சிசெய்கிறார்கள். இஸ்ரவேலின் முதல் ராஜா சவுல் என்பதை அறிவீர்கள்.

அவனை ஏற்படுத்திய கர்த்தர் அவனுடைய நடபடிகள் சரியில்லை என்று கருதி அவனை புறம்பே தள்ளி தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக தெரிந்து கொண்டார். பார்த்தீர்களா? "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்" என்று சாலொமோன் ராஜா நீதிமொழிகள் 21:1–ல் குறிப்பிடுகிறார். ஆம், ஆண்டவர் இயேசுகிறிஸ்து பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி. மேலும், யூதா கோத்திரத்துச் சிங்கம் என்று வெளி.5:5–ல் படிக்கிறோம். உலகரட்சகர் தீர்க்கதரிசன நிறைவேறுதலின்படி யூத கோத்திரத்தில் பிறந்தார் என்ற செய்தி பிரசித்தமான ஒன்று. அந்நாட்களில் அநேகர் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று மிகுந்த சந்தோஷத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். மேலும் இவரைக்குறித்து நாம் 'கர்த்தாதி கர்த்தா ராஜாதி ராஜா' என்றும் வெளி.17:14–ல் படிக்கிறோம். அரசர்களுக்கெல்லாம் ஒரே அரசர் இயேசு ஒருவரே. ஆகையால்தான் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தம்முடைய சீஷர்களைப்பார்த்துச் சொன்னார்.

அவர் **பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும்** என்று வெளி.3:7–ல் வாசிக்கிறோம். ஆம், பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். இவர் பரித்தமுள்ளவராகையால் இவரைக் கொண்டு பாவத்தில் கிடக்கும் தமது ஜனத்தை பரிசுத்தப்படுத்தி ஒப்புரவாக்கிக் கொண்டார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார். அவரே வழி, அவரே சத்தியம், அவரே ஜீவன். அவர் இல்லாமல் ஒருவரும் பரலோகத்தில் இருக்கிற பிதாவினிடம் செல்லமுடியாது. ஆகையால் நான் பரிசுத்தர் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என வேதத்தில் எழுதியிருக்கிறது. பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை. மேலும் சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்கிறார். நீங்கள் சத்தியத்தின் மேல் வாஞ்சையாயிருப்பீர்களென்றால் சத்தியபரராகிய இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு செவிகொடுங்கள். இவருக்கு மற்றொருபெயர் ஆமென். ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது. நீங்களும் நானும் ஒரு காரியத்தை சொன்னால் அது அப்படியே நடந்துவிடாது. ஆனால், கர்த்தர் சொல்லும்போது அது அப்படியே ஆகும்.



காற்றையும் கடலையும் பார்த்து இரையாதே அமைதலாயிரு என்றார் அது அப்படியே ஆயிற்று. மரித்த லாசருவின் கல்லறையை பார்த்து லாசருவே வெளியே வா என்றார். மரித்தவன் வெளியே வந்தான். அவர் உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவராயிருக்கிறார் (வெளி.3:14). உங்களுடைய வாழ்க்கையில் ஆமென் என்பவர் வரவேண்டுமானால், நீங்கள் முதலாவது அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுங்கள்.

யோவான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்ததாக எழுதுகிறார் (வெளி.1:17). அப்பொழுது கர்த்தர்: பயப்படாதே, நான் **முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்** என்றார். அன்பானவர்களே, ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை என்று யோவா.1:1–3,–ல் வாசிக்கிறோம். இயேசு பிறந்து 2000 வருடங்கள்தான் முடிந்து இருக்கிறது பின்பு எப்படி அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் என்று கணக்குப் போடுகிறார்கள். அவர் முந்தினவர். உலகத்தின் இறுதியில் வரப்போகிறவரும் அவரே! "நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" என்கிறார் (வெளி.22:13). அல்பா என்பது கிரேக்க எழுத்தின் முதல் எழுத்து ஓமெகா என்பது கிரேக்க எழுத்தின் கடைசி எழுத்து. இந்த எழுத்திற்கு முந்தின எழுத்து ஒன்று இல்லை அதைப்போல இந்த எழுத்திற்கு பிந்தின எழுத்து என்று ஒன்று இல்லை. கிரேக்க கலாச்சாரம் உலக முழுமையும் பரவிய கலாச்சாரம். பரிசுத்த வேதாகமம் கிரேக்கு எபிரெயு என்னும் மூலபாஷை களிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது. வெளிப்படுத்தல் புத்தகத்தில் கிரேக்க நடையை நாம் அதிகமாக காணலாம்.

ஆகையால் அன்பானவர்களே, இயேசு யார் என்பதை இப்பொழுது புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். மேலும் அவர் தம்மைக்குறித்து சொல்லும்போது ; "...சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் **தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன்** என்கிறார்" (வெளி.22:16). முற்பிதாக்களில் பலர் வானத்தின் நட்சத்திரங்களை நமஸ்கரித்து

தொழுதுகொண்டுவந்தார்கள். இவைகளையெல்லாம் தேவன் காலக்கணிப்புக்காக நியமித்தார். விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறவர் உறங்குவது மில்லை தூங்குவதுமில்லை. தியத்தீரா சபைக்கு சொல்லும்போது ஜெயங்கொள்ளுகிறவனுக்கு விடிவெள்ளி நட்சத்திரத்தையும் கொடுப்பேன் என்கிறார். மேலும், இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூடஇருப்பதாக. ஆமென்.

**கேள்வி நேரம்**

**இயேசு யோசேப்பின் குமாரரா?**

அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர். தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்டபடியே யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட மரியாள் கர்ப்பவதியாகி தன் முதற்பேறான குமாரனைப் பெற்றாள். அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். ஆகையால் இயேசுவை ஜனங்கள் ''இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? என்றார்கள் (மத்.13:55). மனிதனை அவனுடைய பாவத்திலிருந்து மீட்கும்படியாக தேவனால் அனுப்பப்பட்டவர் இயேசுகிறிஸ்து. அவர் மாம்சத்தில் பிறந்து பாவமறியாத ஆட்டைப்போல பலியிடப்பட வேண்டியதாகையால், யோசேப்பின் குடும்பத்தில் பிறந்தார். ஆகையால் அவர் யோசேப்பின் குமாரன் என்றும் அழைக்கப்பட்டார்.

வெளிப்படுத்தின விசேஷம் 22-ம் அதிகாரம் 13-ல் இப்படியாக திருவுளம்பற்றுகிறார். ''நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்'' என்கிறார். உலகத்தின் துவக்கமும் அவரே உலகத்தின் முடிவும் அவரே. ''அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்'' (யோவா.1:2). அவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உடையவராயிருக்கிறார். அவரைப் பற்றிக்கொள்ளுங்கள் அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்க்கும்" – நீதிமொழிகள் 20:27**



# 59. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்
# Resist The Devil

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் பிசாசை சிலுவையில் ஜெயித்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் – Resist the devil. யாக்கோபு சொல்லுகிறார் ''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்'' (யாக்.4:7). பொதுவாக பிசாசு என்றாலே எல்லோருக்கும் பயம். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் போது பிசாசுக்குப் பயப்படவேண்டியதில்லை. எப்படியென்றால் ''தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' என்று 1யோவா.5:4-ல் வாசிக்கிறோம். நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பாவத்திற்கு செத்து நீதிக்குப்பிறந்தவர்களாயிருந்தீர்களென்றால் பிசாசையும் அவன் கொண்டுவரும் அனைத்தையும் நீங்கள் ஜெயிக்கமுடியும். நான் பலவருடங்களாக கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழ்ந்துவருகிறேன் இன்னும் நான் பிசாசையும் அவன் கொண்டுவரும் உபத்திரவத்தையும் மேற்கொள்ளமுடியவில்லையே என்பீர்களாகில் உங்களுடைய விசுவாசத்தை சீர்தூக்கிப்பார்க்கவேண்டும் அல்லது மறுபரிசீலனை செய்யவேண்டும். ஏனெனில் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாசமற்றவர்களாயிருந்துகொண்டு பிசாசை ஜெயிப்பது கூடாத காரியம்.

**பாவம் ஒரு மனிதனுடைய வாழ்வில் பல வழிகளில் வருகிறது.** யூதாசைப் பற்றிசிந்திப்போமானால் அவன் பிசாசுக்கு இடம் கொடுத்தான். எப்படியென்றால், அவனுக்குள்ளாக இச்சையிருந்தது. ஒரு முறை ''மரியாள் இயேசுவுக்கு விலையேறப்பெற்ற கலங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு ராத்தல் கொண்டுவந்து இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன்

தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச்சொன்னான்'' என்று வேதம் நமக்குப்போதிக்கிறது (யோவா.12:3–6). இவனுக்குள்ளாக பணஆசை இருந்தபடியால், பிசாசு அதன்மூலம் அவனுக்குள் புகுந்தான். ஆனபடியினாலே, ''பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான் என்று லூக்.22:3–ல் தெளிவாக வாசிக்கிறோம். உங்களுக்கு பாவக்காரியங்களில் ஈடுபடும் பழக்கம் கடுகளவுயிருந்தால் போதும், பிசாசு அதன்வழியாக உங்களுக்குள் புகுந்துவிடுவான். பின்பு பாவம் உங்களை ஆண்டுகொள்ளும். அந்தப்படியாக பிசாசு, யூதாசை ஆண்டுகொண்டான். அவனுடைய முடிவை எல்லோரும் அறிவார்கள். அவனோ, நான்றுகொண்டு செத்தான். பாவம் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

ஆனால், ''தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்'' என திருமறை அப்படிப்பட்டவனைக் குறித்து சாட்சியிடுகிறது (1யோவா.3:9). எப்படியெனில் ஒருவனுக்குள் தேவனுடைய வசனமாகிய வித்து தரித்திருக்கும்போது அவன் பாவம் செய்யான். அது அவனை எச்சரிக்கிறது, பாவத்திற்கு தப்புவிக்கிறது, அவனைச்சுற்றி வேலியடைக்கிறது. தாவீது என் நாவிற்கு காவல் வையும் ஆண்டவரே என்கிறான். அப்படியென்றால் அவரே அதற்கு காவல்வைக்கமுடியும். கர்த்தர் காவாவிட்டால் காவலாளிகளின் கண்விழிப்பு விருதா! என காண்கிறோம். ''நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது'' என வேதம் போதிக்கிறது (ரோம.6:14). ஒருவன் கிருபையுள்ள வசனத்தை ஏற்று அதற்கு கீழ்ப்படியும்போது அப்படிப்பட்டவனை அந்தக்கிருபை காக்கிறது. அவன் பாவம் செய்யமாட்டான். பொல்லாங்கன் அப்படிப்பட்டவனை தொடான். தேவனாகிய கர்த்தர் அப்படிப்பட்டவனைக் காக்கிறார். ''மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே'' (ரோம.6:7). அவன் நீதிக்கு அடிமையாயிருப்பதால் பாவம் அவனை மேற்கொள்ளாது. நாம் முன்னே பாவத்துக்கு அடிமையாயிருந்த



காலத்தில் அதற்கு அடிமைகளாயிருந்தோம். இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்களே என பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கிறார்.

மேலும், யாக்கோபு சொல்லுகிறார்: **பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.** இன்றைக்கு அநேகர் எதிர்த்துநிற்க முடியாமல் சோதனை காலத்தில் பின்வாங்கிப் போகின்றனர். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவையும் பிசாசு சோதித்தான். ''நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான்'' (மத்.4:9–11). இவ்விதமாக நாமும் வசனத்தை வைத்துக்கொண்டு பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்போமானால் அவனை ஜெயிப்போம்.

பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு சொல்வதைக் கவனியுங்கள்: ''நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள், ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். **சத்தியம்** என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், **நீதியென்னும்** மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; **சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய** ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக **விசுவாசமென்னும்** கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

**இரட்சணியமென்னும்** தலைச்சீராவையும், **தேவவசனமாகிய ஆவியின்பட்டயத்தையும்** எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே **ஜெபம்பண்ணி,** அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்'' (எபே.6:11–18). நாம் பிசாசின் தந்திரங்களோடு போராடி ஜெயிக்க ஒரு யுத்த புருஷனைப்போல சத்தியத்தையும், நீதியென்னும் மார்க்கவசத்தையும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையையும், விசுவாசமென்னும் கேடகத்தையும், இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொண்டு, எல்லாவற்றிற்கும் மேலாக ஜெபம்பண்ணி விழித்துக்கொண்டிருங்கள் என்ற ஆலோசனைகளை பவுல் எடுத்துச்சொல்லுகிறார். அவைகளை நாம் மிகவும் கருத்துடன் கவனித்து, வேதாகமம் சொல்லுகிறதான இவ்விதமான ஆயுதங்களைத் எப்பொழுதும் தரித்தவர்களாயிருக்க வேண்டும். இவைகளின்படி நடப்பது மிகவும் கடினம் என்று சொல்லி பதிலுக்கு பதில் செய்ய முயற்சிப்பதும், வருவது வரட்டும் என்று சொல்லி பிசாசினுடைய கிரியைகளின்படி செய்யும்போது பிசாசு உங்களை ஆட்கொள்ளுவான். ''நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்'' என்கிறார் (எபே.4:26,27).

நீங்கள் உங்களுடைய சுயபோதனைக்கு கீழ்ப்படிவீர்கள் என்றால் பிசாசுக்கு இடம்கொடுக்கிறீர்கள் என்று அர்த்தம். அந்தபோதனையின் வழியாக உங்களுக்குள்ளே வருவான். நாம் எல்லாம் தெரிந்தவர்கள் அல்ல கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பார்கள். தேவனையும் அவருடைய வசனங்களையும் அறிந்து அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் உங்களை அற்பணியுங்கள்.

ஏனெனில், ''உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்'' என எச்சரிக்கிறார் பேதுரு (1பேது.5:8). யாருடைய கண்களுக்கு தப்பினாலும் பிசாசினுடைய கண்களுக்கு தப்புவது என்பது மிக கடினம். அவன் இறைக்காக அலைந்துதிரியும் ஒரு சிங்கத்தைப்போல சுற்றிவருகிறான். எப்படி சிங்கம் பதுங்கியிருந்து இறையை



வேட்டையாடுகிறதோ அதைப்போல அவன் பெலீனமான ஆத்துமாக்களை வேட்டையாட சுற்றி சுற்றி வருவான். ஆகையால் தான் வசனம் இப்படியாக சொல்லுகிறது. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். தன்னிடத்தில் பட்டயம் இருக்கும்போது ஒரு யுத்தவீரனுக்கு பயம் இல்லாமற்போய்விடுகிறது. அதைப்போல தேவனுடைய சர்வாயுதமாகிய வல்லமையுள்ள வசனமாகிய பட்டயம் ஒருவனிட மிருக்கும்போது இருக்கும்போது அவனுக்கு பயமில்லை. அவனை பிசாசு மேற்கொள்ள முடியாது. ஏனெனில் அவனிடம் வல்லமையுடைய கர்த்தரின் வசனம் இருக்கிறது. அதை அவன் தரித்தவனாயிருக்கிறான். நாம் தேவைப்படும்போது வசனத்தை எடுக்கிறவர்களாக இருக்கக்கூடாது அதை நம்முடைய சரீரத்தில் தரித்தவர்களாயிருக்கவேண்டும். வேஷம்போடுகிறவர்கள் தான் அவ்வப்போது நிகழ்ச்சிக்கேற்ப வேஷம்போடுவார்கள் நாம் அப்படியிருக்கக்கூடாது. கர்த்தராகிய இயேசுவின் அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் என்று பவுல் சொல்வதைப்போல நாமும் எப்பொழுதும் இயேசுவையும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தையும் தரித்தவர்களாயிருக்கவேண்டும். அப்பொழுது பிசாசையும் அவன் கொண்டுவருகிற பொல்லாப்புகளையும் மேற்கொள்ள முடியும்.

### கேள்வி நேரம்

**பிசாசு குறிப்பாக யாரை குறிவைக்கிறான்?**

தேவனுடைய ஜனங்களையும், ஆண்டவருக்கு ஊழியம் செய்யும் சகோதர, சகோதரிகளையும் குறிப்பாக பிசாசு குறிவைக்கிறான். எந்தெந்த வகையில் அவர்களுக்கு தொல்லைகள் கொடுக்கமுடியுமோ அத்தனை தொல்லைகளையும் கொடுக்கிறான். ஆகையால் தான் இயேசு சொல்கிறார்; "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்கிறார் (யோவா.10:10). ஆகையால் பிசாசை ஜெயிக்க கர்த்தருடைய வழியைத் தெரிந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை; புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை" – நீதிமொழிகள் 21:30**

# 60. நீதியின் கிரீடம்
## The Crown Of Righteousness

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நீதியின் கிரீடத்தை அந்நாளில் கொடுக்கும் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நீதியின் கிரீடம் – The crown of righteousness. நீதியின் கிரீடம் யாருக்கு, எப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்கும்? என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பும். அப்போஸ்தலனாகிய பவுல் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்று எழுதுகிறார் (2தீமோ.4:7,8). இந்த நீதியின் கிரீடம் ஒரு சாராருக்கு மட்டுமல்ல யாவருக்கும் வைக்கப்பட்டுள்ளது. இதைப்பெற்றுக்கொள்ள நாம் செய்யவேண்டுவதென்ன?

**முதலாவது நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும்.** அது என்ன நல்ல போராட்டம் என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கான பதிலை பவுல் எழுதிய கொரிந்து புஸ்தகத்தில் வாசிக்கிறோம். ''பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்'' என்கிறார் (1கொரி.9:24–27). நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வது சதாரண விஷயம் அல்ல. அதற்கு இச்சையடக்கம் தேவை. உலகப்பிரகாரமான பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களே மிகவும் கவனத்துடன் இருந்து



எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருக்கும்போது வாடாத ஜீவகிரீடத்தை அதாவது நீதியின் கிரீடத்தை பெறவிரும்புகிறவர்கள் இச்சையடக்க மாயிருக்க வேண்டியது எத்தனை அவசியம்!

நல்ல போராட்டம் பண்ணும்போது **அநேக பாடுகள் வருகிறது.** எடுத்துக்காட்டாக பாருங்கள் பவுலின் வாழ்க்கையில் அநேக பாடுகள்; ''அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்;... நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும்போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவை களையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது'' என்கிறார் (2கொரி.11:23–28). இன்றைக்கு கஷ்டப்பட்டவுடன் அப்பப்பா எவ்வளவு கஷ்டம் என்று சலித்துக்கொள்கிறோம். பவுலுடைய வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், நாம் என்ன துன்பத்தை அநுபவித்திருக்கிறோம்?

நல்லபோராட்டம் பண்ணும்போது **அநேக சோதனைகள்கூட வரும்.** ஆண்டவர் இயேசுவின் நாட்களில் ''சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் உம்மைக்குறித்துக்

கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று



**மேலும், 2தீமோ.4:8–ல் வாசிக்கிறோம்; 'இது முதல் நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது'** ஒரு கிறிஸ்தவனுக்கு அழியாத நம்பிக்கையுண்டு. அது எதுவாகத்தானிருக்க முடியும்? தேவனோடு வாழும் பாக்கியம். உலகத்தில் மனிதன் பிறக்கும்போது நிர்வாணியாய் பிறக்கிறான் நிர்வாணியாய் மரிக்கிறான் . அவன் பிரயாசப்பட்டது ஒன்றையும் கொண்டுபோகான். ஆனால், அவனுடைய ஆத்துமா தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்த ஆத்துமா நல்லபோராட்டத்தை போராடின ஆத்துமாவாகவும், ஓட்டத்தை முடித்த ஆத்துமாவாகவும், விசுவாசத்தைக் காத்துக்கொண்ட ஆத்துமாவாகவும் இருக்கும் போது அது நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்ள தகுதியுள்ள ஆத்துமாவாக மாறுகிறது. கர்த்தர் அந்நாளிலே அதை தந்தருளுவார் என பவுல் எழுதிவிட்டு நாம் கவனிக்கவேண்டிய ஒரு கருத்தைச் சொல்லுகிறார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். தேவன் பட்சபாதமற்றவர். நீதியின் கிரீடத்தை யாரெல்லாம் விரும்புகிறார்களோ அவர்கள் யாவருக்கும் அதைத்தந்தருளுவார். அந்த வாடாத ஜீவகிரீடத்தை பெறத்தக்கதாக முயற்சியுங்கள்.

**கேள்வி நேரம்**

**எவர்களுக்கு நீதியின் கிரீடம் கிடைக்கும்?**

உண்மையுள்ளவர்களுக்கு நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. நூறு சதவீதம் நம்பிக்கையூட்டும் வசனத்தை வாசிக்க கேளுங்கள்: ''நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப் படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'' என்கிறார் (வெளி.2:10). ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை. நீங்கள் சேதப்படாமல் காக்கப்பட பவுலைப்போல நல்லபோராட்டத்தைப் போராடுங்கள். உங்களுக்காக நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை உங்களுக்குத் தந்தருளுவார்.

**"கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி" நீதிமொழிகள் 6:23**

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

வழங்கும்

ரேடியோ மற்றும் தொலைக்காட்சி

நிகழ்ச்சிகள்

## உங்கள் வானொலியில்





இலங்கை ஆசிய சேவை

SW 25 மற்றும் 41 மீட்டரில்

ஒவ்வொரு சனிக்கிழமை மாலை

5.30 மணி முதல் 5.45 மணி வரை

கேட்டு பயன்பெறுங்கள்



## உங்கள் தொலைக்காட்சியில்

தமிழன் டிவி

ஒவ்வொரு திங்கள் கிழமை காலை 6.00 மணி

மற்றும் சனிகிழமை மாலை 6.15 மணி

Please Contact

THE WORD OF CHRIST

P.O.Box.5, Batlagundu -624 202, South India.

E-mail:arjunanglory@gmail.com

Our Website:thewordofchristindia.com

Our Phone:04543 263278,Mobile :9443558041